
திரவிய வனத்தில்
திருக்குறள் மகாநாடு






POST CARD
CEYLON
THREE CENTS
ADDRESS HERE
KOPAY
B
20 AU.
53

K. Muthusamy, Teacher
Pelmadulla Group
School
Kahawatta

K.Muthusamy
Shcool Master
Pelmadulla Group
KAHAWATTA.


20.8.53

அன்பு மிக்க தம்பி அறிவது நாங்கள்
எல்லோரும் நல்ல சுகமாயிருக்கிறோம்
அது போல் நீயும் சுகமாய் இருக்கக் கடவுள்
அருள் புரிவாராக. மேலும் நீ அனுப்பிய சீலை வா
ங்கிக் கொண்டேன் சந்தோஷம் மற்றவர்களும்
வாங்கிக் கொண்டார்கள் தம்பியும் தங்கச்
சியும் மாமா எப்ப வருவார் என்று கேட்டபடி
வழி காத்து இருக்கினம் நாங்கள் வீடு பிடி
ங்கி முன்னுக்குத் தள்ளிக் கட்டுகிறோம்
நாலாம் திகதி வியாழக்கிழமை வளவை
கட்டப் போகிறோம்



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
23 - ஆவது குரு மகா சன்னிதானம்
**சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்**

திருவாவடுதுறை - 609 803
நாகை மாவட்டம்
தொலைபேசி எண்: 04364 - 232021

நாள்: 7.7.2010

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

<u>அருள் வாழ்த்துரை</u>

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

.... - அப்பர் தேவாரம்.

இலங்கைத் தமிழறிஞராகிய திருவாளர் கே. வி. குணசேகரம் அவர்கள் திருவருட்பயன் சாத்திரம் குறித்தும், மாலை குறித்தும் கதைகளுடன் கூடிய விளக்கங்கள் தந்து நூல்கள் வெளியிட்டிருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

அரிய தத்துவக் கருத்துக்களை கதைகள் மூலமாக விளக்கி எளிதாக்குவதும், மனதில் நிலையாகத் தங்கி வழிவகுப்பதும் பாராட்டுக்குரிய முயற்சி. பல இடங்களில் கதைகளும், கருத்துக்களும் பொருத்தமுற அமைந்துள்ளன. நுட்பமான தத்துவங்களைப் படிப்படியாக விளக்கித் தெளிவாக்குவதில் நூலாசிரியர் திறமை மிக்கவராக விளங்குகிறார். மேலும் ஆராய்ந்து தெளிய வேண்டிய செய்திகளும் உள்ளன.

இலங்கைத் தமிழறிஞர் திருவாளர் கே.வி. குணசேகரம் அவர்களின் சைவத் தமிழ்ப்பணிகள் மேன்மேலும் சிறந்து தழைக்க வேண்டுமென நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானபெருங்குத்தன் திருவடி மலர்களை சிந்தித்து வாழ்த்துகிறோம்.

இணைப்பு: திருநீற்றுச்செல்வம்.

பெறுநர்: திரு.கே.வி. குணசேகரம் அவர்கள்,
பிள்ளையார் கோவிலடி,
கோப்பாய் மத்தி,
ஸ்ரீலங்கா.

திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை



# என்னுரை

திருக்குறளுக்கு 2000 ஆண்டுகளாகக் கதை எழுதப்படவில்லை. நான் ஒரு குறளுக்குப் பல கதைகளை எழுதி எனது இணையமான www.gunasegaram.com இல் சேர்த்துள்ளேன். எனது தந்தையைப்பற்றி நான் எழுதிய நூல்களிலெல்லாம் எழுதியுள்ளேன். எனது தாயார் எனக்கு விருத்தெரியாத பருவத்தில் இறந்தமையால் அவரைப்பற்றிய எந்தத் தகவலும் எனக்குத் தெரியாது. புகைப்படமும் இல்லை. அதனால் எந்த நூலிலும் எனது தாயாரைப்பற்றி எழுதவில்லை. எனது தாயாரின் பெயர் திரவியம். அவரது தந்தையின் பெயர் கதிரேசன். அதனால் எனது கதைகளில் அவரை முக்கிய பாத்திரமாக எழுதியுள்ளேன். எனது தாயாரின் சகோதரர் இரத்தினபுரியில் ஆசிரியராகப் பணியாற்றியபோது அவருக்கு எனது தாயாரின் சகோதரன் எழுதிய கடிதம் ஒன்று எனக்குக் கிடைத்துள்ளது. அதை இந்நூலில் இணைத்துள்ளேன். திருக்குறளைப் புதிய புதிய கோணங்களில் ஆய்வுசெய்து எழுதி வருகிறேன். அதை யாரும் விமர்சிப்பதில்லை. திருவள்ளுவருக்கு நடைபெற்றவை எனக்கும் நடைபெறுகின்றன. திருக்குறளைப் போல எனது கதைகளும் ஆய்வும் காலங்கடந்தும் நின்று சமூகத்தை வழிநடத்தும் என்ற நம்பிக்கை உண்டு.

வளம்மிகுந்த வலிகாமம் கிழக்கில் (கோப்பாய்) நீர்வேலி என்ற புகழ்பூத்த மண்ணில் பெருமையோடும், புகழோடும், மகிழ்வுடனும் வாழும் பவளவிழாக் கடந்த சமூகஜோதி, சமாதான நீதவான், மக்கள் தொண்டன் தர்மலிங்கம் பரராஜசிங்கம் அவர்கள் எழுதி வெளியிட்ட "வளம் மிகுந்தது வலிகாமம் கிழக்கு" என்ற நூலை பெற்று வாசித்தேன். மிக மிக ஆச்சரியத்தக்க நிகழ்வுகள் உரிய ஆதாரங்களுடன் வெளியிட்டுள்ளார். திரு. த. பரராஜசிங்கம் இந்நூலில் கல்வி, கலை, பண்பாடு, பிரதேச வாதங்கள் தொடர்பான அத்தனை விடயங்களையும் உரிய ஆதாரங்களுடன் வெளியிட்டிருப்பது ஆச்சரியத்தைத் தருகிறது.

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரான இவர், அக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க உபதலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர் பதவிகளை அலங்கரித்து அப்பதவிகளுக்கான உச்சக்கட்டச் சேவையைச் செய்து மகிழ்ந்தவர். நீர்வேலிக் கிராமத்தின் கலை பண்பாடுகள் மிகவும் சிறப்புற வெளிப்படுத்தி பேரும் புகழும் பெற்றவர். அத்துடன் நீர்வேலி காமாட்சியம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தாவாக இருந்து பெரும் சமயத் தொண்டாற்றியவர். இவர் எழுதிய புகழ் பூத்த நீர்வேலி என்ற நூல் நீர்வேலியின் புகழை உலகளாவச் செய்தது. அதைத்தொடர்ந்து இந்நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அப்போதைய வலிகாமம் கிழக்கு பிரதேச செயலரும், தற்போதைய மேலதிக அரசாங்க அதிபருமான மரியநாயகம் பிரதீபன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தபோது சமூகத்தொண்டன், சமாதான நீதவானான திரு பரராசசிங்கம் அவர்கள் எனது செயலகமான வலிகாமம் கிழக்குப் பகுதியின் கலை, பண்பாடு வளங்களைப் பற்றி



ஆராய்ந்து நூலாக வெளியிட வேண்டும். அதற்கான அனைத்து தகுதிகளும் அவரிடம் நிறைந்துள்ளது. அவர் அதைக் கட்டாயம் எழுதி வெளியிடுவார் என்று உறுதியாகக் கூறுகிறேன் என்றவர். அவரது வாக்கைச் சிவ வாக்காக எண்ணிய பரராசசிங்கம் அவர்கள் அந்நூலை மிகவும் சிறப்பாகவும், விரிவாகவும், இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் எழுதி 2023ஆம் ஆண்டு மாசி மாதம் வெளியிட்டுள்ளார். சிறப்புக்கள் பலவும் கொண்ட அருமையான ஓர் ஆய்வு நூல்; அவர் ஒரு பட்டதாரியாக இருந்திருந்தால் அவருக்கு உடனே கலாநிதிப் பட்டம் வழங்கியிருப்பர். இந்நூல் பல சிறப்புக்களையும் புகழையும் பெறும். கௌரவ கலாநிதிப் பட்டமும் பெறத்தக்க சிறப்பும் தரமும் மிக்க நூல். ஓர் ஆய்வாளரின் உச்சக்கட்ட தரமான ஆய்வு இது. இந்நூலின் ஆய்வுக்கென எடுத்துக் கொள்ளப்பட்ட தலைப்புக்கள் மிகவும் கடினமானவை. ஆய்வாளர் தனது முழுக்கவனத்தையும் அர்ப்பணிப்புடன் செயற்படுத்தியுள்ளார். வலிகாமம் கிழக்கின் ஊர்ப்பெயர்கள், நிர்வாகவளம், வழிபாட்டுத்தலங்கள், பாடசாலைகள், கமம் சார்ந்த அமைப்புக்கள், சாலைகள், கைத்தொழில்கள், வைத்தியசாலைகள், மூலிகைத்தோட்டங்கள், கூட்டுறவு மையங்கள், விருந்தோம்பல், போக்குவரத்து விளையாட்டுக் கழகங்கள், மயானங்கள், ஊர்ப்பெரியவர்கள் என்பன மிக மிக விரிவாகவும் ஆழமாகவும் ஆராயப்பட்டுள்ளன.

முதலில் பத்தொன்பது ஊர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அப்பெயர்கள் ஏன் வந்தமைந்தது என ஆசிரியர் பழைய தோப்புக்களைப் புரட்டிச் சரியாக எழுதியுள்ளார். வலிகாமத்தின் சிறப்பு மிக்க பத்தொன்பது ஊர்களின் பெயர்களும் படிப்பவர்களைச் சிந்திக்க வைப்பதோடு அவ்வூரவர்களுக்கு அவற்றை விளக்குகின்றன. அடுத்து வலி கிழக்கின் நிர்வாகம் பற்றி ஆசிரியர் விரிவாக ஆய்வு செய்துள்ளார். 1930ஆம் ஆண்டில் இருந்து 2023ம் ஆண்டு வரை எவ்வாறு வலிகாமம் கிழக்கு நிர்வகிக்கப்பட்டது என்பதும் மிகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இந்தவகையில் செயலகத்துள் புதிதாக நியமிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பெயர்களும் காரியாலயங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. கிராமசேவகர் பிரிவு, அலுவலக முகவரி என்பனவும் இந்நூலில் உள்ளன.

அடுத்து வலிகாமம் கிழக்கில் உள்ள கோவில்களின் விபரமும், பெயர்களும் அப் பெயர்கள் வந்தமைக்கான காரணங்களும், தல வரலாறுகளும் மிகவும் விரிவாகவும், சிறப்பாகவும், ஆணித்தரமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன. 101 சைவக் கோவில்களின் தல வரலாறு விரிவாக எழுதப்பட்டுள்ளது. இது ஓர் ஆச்சரியமான விடயம். இங்கிருந்தோரும், வெளிநாடுகளில் இருப்போரும் அறிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை. இன்னும் ஆயிரம் வருடங்களுக்குப் பின்பும் அழியாதிருந்தது. ஆய்வுகளுக்கு இந்நூல் துணை செய்யும். இத்துடன் ஒன்பது கிறிஸ்தவ தேவாலயங்களின் வரலாறுகளும் குறிக்கப்பட்டுள்ளது.



கோப்பாய்த் தொகுதியில் உள்ள பாடசாலைகள் நாற்பதின் வரலாறும் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பாடசாலை, அதன் தரம், தற்போது கடமையிலுள்ள அதிபரின் பெயர், ஆசிரியர் தொகை, மாணவர்களின் தொகை என்பனவும் அவற்றின் நிறுவனர்களின் பெயர்களும், குறிக்கப்பட்டுள்ளன. அத்துடன் கோப்பாய் ஆசிரிய கலாசாலை கோப்பாயில் அமைந்த யாழ்ப்பாணக் கல்விவலயம், கோட்டக்கல்வி வலயம் என்பவற்றின் தகவல்கள் அனைத்தும் உள்ளன. பாடசாலைகளின் வரலாற்றில் தற்போது கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் என்ற பெயரில் உள்ள பாடசாலை கோப்பாய் இந்து தமிழ் கலவன் பாடசாலை என்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் வரலாறு முதன்மை பெறாவிட்டாலும் ஆரம்பிக்கப்பட்ட காலத் தகவல்களை அறியக்கூடியதாக உள்ளது. இதுவரை காலமும் அப்பாடசாலை அமைந்த காணியை ஒரு குடும்பம் ஆட்சியுறுதி வைத்து உரிமை கொண்டாடி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். அது இப்போதும் முடிவுறாத நிலையில் உள்ளது. ''வளம் மிகுந்த வலிகாமம் கிழக்கு'' என்ற நூலின் ஆசிரியர் அப் பாடசாலை அமைந்த காணியை சேனாதிராய முதலியாரின் இனத்தவரான கந்தப்பர் என்பவர் அன்பளிப்பாக வளங்கினார் என்ற தகவல் உள்ளது. இவ்வாறான பல பயன்தரும் தகவல்கள் இந்நூலில் அடங்கியுள்ளன.

இவை தவிரக் கோப்பாய்ப் பிரதேசத்திலுள்ள முன்பள்ளிகள் எண்பத்தெட்டினதும் விரிவான தகவல்கள் சேர்க்கப்பட்டுள்ளது. அத்துடன் இப் பிரதேசத்திலுள்ள அறநெறிப் பாடசாலைகள் பதினேழு பற்றிய தகவல்களும் உள்ளன. அத்துடன் இப் பிரதேசத்தில் இயங்கும் சனசமூக நிலையங்களின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றோடு கோப்பாய் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட 94 குளங்களின் பெயர்கள் கிராமசேவகர் பிரிவுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் வாழ்ந்த கலைஞர்களின் பெயர்கள், அவர்கள் ஆற்றிய கலைத்தொண்டுகள் பற்றிய குறிப்புக்களும் உண்டு. அத்துடன் பிரதேச செயலகத்தால் கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட ''செம்புலக் குருசில்'' கலாபூஷண விருது பெற்ற கலைஞர்களின் விபரமும் உண்டு.

இப்பிரதேசத்தில் இயங்கிவரும் கைத்தொழில்கள், கமத்தொழில்கள், சுகாதார வசதிகள் பற்றிய தகவல்களும் உண்டு. அக்காலத்தில் செயற்பட்ட சித்த வைத்தியர்களின் விபரங்களும், விபரமாக உள்ளது. அத்துடன் இங்கு வளர்க்கப்பட்ட மூலிகைகள் பற்றிய விபரங்களும், கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய விபரங்களும் விரிவாக அடக்கப்பட்டுள்ளன. முன்பு யாத்திரிகர்களுக்கு உணவளிக்கப்பட்ட விருந்தோம்பல் மண்டபங்களும் அதன் விபரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இங்கு செயற்பட்ட விளையாட்டுக் கழகங்கள் 63இன் பெயர்கள் உள்ளன. அத்துடன் கிராமசேவகர்கள் பிரிவுகளில் உள்ள மயானங்கள் 41. அதன் பரப்பளவும் உண்டு.



இவற்றுடன் இப்பிரதேசத்தில் வாழ்ந்த அறிஞர்கள், புலவர்கள், எழுத்தாளர்களின் விபரங்களில் அவர்களாற்றிய இலக்கிய சேவைகளும் விபரமாக உள்ளது. மொத்தத்தில் இந்நூல் வலிகாமம் கிழக்கில் அமைந்துள்ள அனைத்தினதும் விபரங்களைச் சுவையாகவும், எளிமையாகவும் கூறுகிறது. மொத்தத்தில் இது ஓர் இமாலய சாதனையாகும்.

எனது பரம்பரையினர் சுமார் 150 வருட காலமாக கற்ற பாடசாலையின் நிலத்தை இனாமாகக் கொடுத்தவரான கந்தப்பர் என்பவரை 150 ஆண்டுகளுக்குப் பின்னர் கண்டுபிடித்துக்கொடுத்த திரு.த.பரராசசிங்கம் எனது குலதெய்வமாக வெள்ளெருவை விநாயகர் என்றே கருதுகின்றேன்.

நன்றி

**கே. வி. குணசேகரம்**

**(கோட்டக் கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)**



# திரவிய வனத்தில் திருக்குறள் மகாநாடு

## (1)

திரவிய வனத்தின் அரசனான முதுபெரும் தமிழ் அறிஞர் கதிரேசன் என்ற யானையின் தலைமையில் திரவிய வனத்தில் திருக்குறள் மகாநாடு நடைபெறவிருந்தது. அம் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாடுகளில் உள்ள அறிஞர்கள் வந்திருந்தனர். அவர்களை பெருமகிழ்வுடன் கதிரேசன் வரவேற்றார். அவ்வனவாசிகள் அங்கு வருகைதந்த அறிஞர்களுக்கு மலர்மாலைகள் சூட்டி மகிழ்ந்தனர். மங்கள பேரிகைகள் முழங்கின. காட்டில் வாழும் பெண்கள் தம்மை பூரணமாக அலங்கரித்துத் தாளலயம் பிசகாது நடனமாடி அறிஞர்களை மகிழ்வித்தனர். காட்டின் பல்வேறு பகுதிகளிலும் மேடைகள் அமைத்து மேளக்கச்சேரிகளும், இன்னிசை நிகழ்வுகளும் நடைபெற்றன.

கதிரேசன் அறிஞர்களையும், பிரமுகர்களையும் விழா நடைபெறும் மேடைக்கு அழைத்துவந்ததும் காட்டின் பல்வேறு இடங்களிலும் மேடையமைத்து நடைபெற்ற நிகழ்ச்சிகள் யாவும் நிறுத்தப்பட்டன. அங்கு கூடியிருந்து நிகழ்ச்சியை நடாத்திய கலைஞர்களும், பார்வையாளர்களும் மேடையமைக்கப்பட்ட பெரிய மைதானத்தில் வந்து தமக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர். கதிரேசன் மாநாட்டிற்கு வந்திருப்பவர்களைப் பார்த்தார்.

எல்லோரும் அமைதியாக மகாநாட்டை முழுமையாக ரசிக்கும் நோக்குடன் மிகவும் அமைதியாக அமர்ந்திருந்தனர். கதிரேசன் கண்களை மூடி அக்காட்டில் குடிகொண்டு அருள்பாலிக்கும் விநாயகரை நினைந்து மனதுள் வணங்கி, ‘‘விநாயகா இக்காட்டில் வசிப்பவர்களையெல்லாம் காத்து, அவர்களின் குறைகளைப் போக்கி பாதுகாக்கும் நீ தொடர்ந்து பல நாட்களுக்கு நடைபெறவுள்ள திருக்குறள் மகாநாட்டை நல்லமுறையில் நடாத்த உதவி செய்’’ என்று வணங்கிவிட்டு தலைமை உரையாற்றினார்.

‘‘பல்வேறு வனங்களில் இருந்து எமது அழைப்பை ஏற்று இங்கு வந்திருக்கும் அறிஞர்களே, கல்விமான்களே, பிரமுகர்களே, இலக்கிய விரும்பிகளே, எமது வனத்திற்கு அருகே உள்ள நாடுகளில் உள்ள காடுகளில் வசிக்கும் பெருமக்களே, எம்காட்டு மக்களே, அனைவர்க்கும் எம் வனத்தின் சார்பாக மகிழ்வுடன் வரவேற்று, சிரம்தாழ்த்தி வணங்குகின்றேன்’’.

‘‘எம்முன்னோர் இவ் வனத்தில் வாழ்ந்த ஒரு முதறிஞரின் பெயரைச் சூட்டவே விரும்பினர். ஆனால் அந்த மூதறிஞர் ‘‘இந்த வனத்தில் திரவியங்களுக்கு ஒருபோதும் தட்டுப்பாடு ஏற்படுவதில்லை. திரவியம் என்று சொல்லும்போது அது மனிதர்களுக்குப் பொன், பொருள், காணி பூமி, மாணிக்கம், வைரம் என்பவற்றையே குறிக்கும்.



வனவாசிகளான எமக்கு அவை பயன்படாத பொருட்கள். இக்காட்டில் எமக்குத் தேவையான திரவியங்கள் யாவும் கொட்டிக் கிடக்கின்றது. எமது திரவியம் காய், கனி, இலை, குழை, கிழங்கு, நீர் என்பனவாகும். இவை யாவும் எமது தேவைக்கு அதிகமாக இருப்பதால் இவ் வனத்திற்குத் திரவியவனம் எனப்பெயர் சூட்டுங்கள். அது இரண்டு வகையில் பயன் தருகிறது. ஒன்று எனது தாயாரின் பெயர் திரவியம். அடுத்து இங்கு ஒருபோதும் எமக்குதவும் திரவியங்களுக்குப் பஞ்சமேற்படாது'' என்றார்கள்.

''நாம் பெரும் தமிழறிஞரான அவரின் பெயரைச் சூட்டவே விரும்பினோம். ஆனால், அவர் கூறியது மிகவும் பொருத்தமாக இருந்தமையால் அப்பெயரைச் சூட்டினோம். எமது காட்டு விநாயகனின் அருளால் எமக்கு இதுவரை எந்தக் குறைபாடுகளும் ஏற்படவில்லை. இனியும் ஏற்பட காட்டு விநாயகன் விடமாட்டார். இன்று எம் வனத்தில் இத் திருக்குறள் மகாநாட்டை உலகமெங்கும் உள்ள காட்டில் வாழும் அறிஞர்களை அழைத்து ஏன் கொண்டாடுகின்றோம் என நான் உங்களுக்குக் கூற வேண்டும்.''

''எம் மக்களே, இன்று சாதி, மதம், மொழி ஆகியவற்றைக் கடந்து உலகப் பெருமறையாக விளங்குவது திருக்குறள். அது தமிழில் எழுதப்பட்ட பெருமைமிக்க நூல். உலகத்தவர் எல்லோரும் திருக்குறளைத் தமது வேதநூல் என்று ஏற்று அதைப்படித்து ஆய்வு செய்யும்போது தமிழர் என்று தம்மைச் சொல்வோர் அதை மிகவும் கேவலமாக விமர்சிக்கின்றனர். தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் திருக்குறள் தங்கத்தட்டில் வைக்கப்பட்ட மலம் என்கிறார். தமிழ் அறிஞர்கள் பலர் அதைச் சமணநூல் என்கின்றனர். இந்தக் கேவலமான நிலையை நீக்கவே நாம் இம் மகாநாட்டை ஏற்பாடு செய்தோம். மதத்தையும், மொழியையும் தமிழர்கள்தான் பழிக்கின்றனர். ஏனையோர் போற்றுகின்றனர். இங்கு வந்துள்ள அறிஞர்கள் நான் சொன்னவற்றைச் சீர்தூக்கி ஆராய்ந்து உண்மைநிலையை வெளிப்படுத்த வேண்டும்.''

**(2)**

''அறிஞர்களே அடுத்துப் பேரறிஞருமானார் பேசுவார்'' என்றுகூறி அமர்ந்தார். சபையோர் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தமையால் ஒரு கணம் மகிழ்ச்சியாரவாரம் செய்தனர். பேரறிஞரான மேடைக்கு வந்து சிரந்தாழ்த்தி வணங்கினார். பின்பு ''அறிஞர்களே, சபையோரே இம் மகாநாட்டின் தலைவராக கதிரேசனர் தனது தலைமை உரையில் கூறியதை எம்மைச் சந்தித்தபோதும் கூறி அவற்றை விபரமாகச் சபையோருக்கு விளக்குமாறு கூறினார். எம்மைப்பற்றியோ, எமது பழந்தமிழ் நூல்களைப் பற்றியோ, சமயம் மொழி பற்றியோ, அன்னியர் ஒருவர் கூறினால், உண்மைநிலையை அவருக்கு எடுத்துரைக்கலாம். தமிழைக் கற்றவர்கள், அரசியல் லாபம்தேட நினைப்பவர்கள் கூறினால் எவ்வாறு திருத்துவது. கண்களை மூடி நித்திரைபோல் பாசாங்கு செய்பவனை எவ்வாறு தட்டி எழுப்புவது?.



"யாரும் எதையும் கூறலாம் என்ற கருத்துச் சுதந்திரம் இருக்கிறது என்பதற்காகப் பெற்றதாயை விபச்சாரி என்று கூறலாமா? தாய் விபச்சாரியாக இருந்தாலும் பொது மேடைகளில் கூறலாமா? என்று புரியாதவர்களுடன் பேசிப் பயனில்லை. யாரும் எதையும் கூறட்டும். அதை ஆராயாது நம்பித் தமது நலனுக்காகப் பேசும் அறிஞர்களை எப்படித் திருத்துவது?"

"திருக்குறளில் எந்தத் தவறும் இல்லை. திருவள்ளுவர் தமக்கு முன்பு எழுதப்பட்ட சகல நூல்களையும் நன்றாக விளங்கிக் கற்றபின்பே திருக்குறளை எழுதினார். அதற்கு உரை எழுதியவர் எழுதியதையே இன்றும் நல்லுரையாகக் கருதுகின்றனர். முதலாவது குறளில் உள்ள 'ஆதி பகவன்" என்ற பதம் எந்தவிதமான சந்தேகத்தையும் கொடுக்கவில்லை. சைவர்கள் சிவபெருமான் தான் ஆதி பகவன் என்கின்றனர். அதற்கு உதாரணமாகச் சிவபுராணத்தைக் கூறுகின்றனர். ஆனால் வைஷ்ணவர்கள் மகா விஷ்ணுவைத்தான் 'ஆதி பகவன்' என்கின்றனர். திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் சைவ மக்களுக்கும், வைணவ மக்களுக்குமிடையே யார் பெரிய கடவுள் என்ற சர்ச்சை இருந்தது. அதனால் இரு பகுதியினரும் பெரும் சண்டைகளில் ஈடுபட்டனர். அதை உணர்ந்த திருவள்ளுவர் புராணங்கள் சிவனையும், விஷ்ணுவையும் ஆதி பகவன் என்று கூறுவதால் அச்சொல்லையே பாவித்தனர்.

"ஆதி பகவன் என்பது கடவுளைக் குறிப்பிடும் பெயரல்ல. ஏனென்றால் அன்று பிரபலமாக இருந்த சைவசமயமும், வைஷ்ணவ சமயமும் தமிழ்மக்களின் நன்மைக்காக ஒவ்வொரு செயலுக்கும், ஒவ்வொரு தெய்வங்களைக் குறிப்பிட்டுள்ளனர். கல்விக்குச் சரஸ்வதி என்றும், செல்வத்திற்கு லக்குமி என்றும், வீரத்திற்குத் துர்க்கை என்றும் குறிப்பிட்டதோடு அட்டதிக்குகளுக்கும் பொறுப்பானவர்கள் இன்னார் இன்னார் என்று குறிப்பிட்டுள்ளனர். அப்படிக் குறிப்பிட்ட மதங்கள் உலகிற்கு முதல்வன் கடவுள் என்பதை ஏற்குமா?"

உலகில் வாழும் பூச்சிபுழுக்களுக்குக் கூடப் பெயர்கள் உண்டு. எறும்புகளில், மீன்களில், பாம்புகளில் பலவகை உண்டு. அத்தனைக்கும் தனித்தனிப் பெயர்கள் உண்டு. பாம்புகள், மீன்கள், எறும்புகளுக்கே தனித்தனிப் பெயர்கள் இருக்கும்போது பல கடவுளை உடைய சைவ, வைணவ சமயக் கடவுள்களுக்குப் பெயர்கள் இல்லையா..? சகல அறிவும் உள்ள ஒருவன் எக்காலத்திலும் வாழ்ந்ததில்லை. அவருக்கு ஏதாவது ஒரு குறை இருக்கும். திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் குறளின் உரையில் பல இடங்களில் தவறு விட்டிருக்கிறார். அதை உணர்ந்தவர்கள் திருத்தும்போது அதை ஏற்க வேண்டும்".

"உலகில் பல சமயங்கள் உள்ளன. பலநாடுகள் உள்ளன. ஒவ்வொன்றிற்கும் பெயர் உண்டு. சைவ, வைணவத் தெய்வங்களுக்கு



இலட்சக்கணக்கான பெயர்கள் உண்டு. அப் பெயர்களைச் சொல்லித்தான் இலட்சார்ச்சனை செய்கின்றனர். அவ்வாறிருக்கத் திருவள்ளுவர் கடவுளின் பெயரைக் குறிப்பிடாது விடுவாரா? ஆதிபகவன் என்றொரு பெயர் இருந்தமையால்தான் திருவள்ளுவர் அதைக் குறிப்பிட்டார். புராணங்களும், சைவ, வைணவநூல்களும் ஆதிபகவன் என்று ஒருவரைக் குறிப்பிட்டு வெளிப்படையாகவே சொல்லியுள்ளன. அவ்வாறிருக்க வள்ளுவர் ஆதிபகவன் எனக் குறிப்பிடாது கடவுள் என்றே குறிப்பிட்டிருக்கலாம் தானே?’’

‘‘பல்வேறு நாடுகளில் வாழும் மக்களை, மக்கள் என்றா குறிப்பிடுவார். நீங்கள் திரவியம் வனத்தைச் சேர்ந்தவர்கள். நான் மருதவனத்தில் வாழ்பவன். அதுபோல இங்கு வந்துள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு வனத்தில் வாழ்கிறோம். அதைவிட்டு விட்டு வனவாசிகள் நாம் என்று சொன்னால், அது எப்படிப் பொருந்தும்?.

அப்போது கரகோசம் வானையே அதிரவைத்தது. மூதறிஞர் குரங்கார் ஓர் அழகிய மாலையைக் கொண்டுவந்து மானாருக்கும் சூட்டிவிட்டுச் சொன்னார், ‘‘பேரறிஞரே, எனக்கும் வெகுநாட்களாக ஆதிபகவன் கடவுள் அல்ல என்ற நினைவு மனதில் இருந்தது. அதைப் பலரிடம் சொன்னபோதும் யாரும் அக்கறைப்படவில்லை. இன்றைய மகாநாடு எனக்கு மிகுந்த மகிழ்வைத் தருகிறது. அருமையாக விளக்கினீர்கள். வாழ்த்துக்கள்’’ என்று கூறி வணங்கிவிட்டுச் சென்று மேடையில் தனக்கென ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்தார். முதறிஞர் பலரின் முன்னிலையில் தன்னைப் புகழ்ந்தமையால் மானார்மிக்க மகிழ்வுடன் சிரித்தபடி முதறிஞரை வணங்கினார்.

அப்போது சபையில் இருந்த புறா சொன்னது, ‘‘பேரறிஞரே, ‘‘நான் இலக்கியம் சம்பந்தமான மகாநாடுகளைத் தவறவிடுவதில்லை. எல்லோரும் பேசியதைத்தான் திரும்பத் திரும்பப் பேசுவர். ஆனால் இங்கு புதுமையாகத் துணிந்து மானார் பேசியுள்ளார். வாழ்த்துக்கள் இன்னும் புதிய தகவல்களைப் பேசுங்கள். பழையவையாவும் எமக்குத் தெரியும். அதனால் பேசியவற்றைப் பேசாதீர்கள்’’.

**(3)**

‘‘இந்த மகாநாட்டில் புதியபுதிய ஆய்வுகளைச் செய்யவேண்டும் என்று தலைவர் கூறியுள்ளார். அதனால்தான் துணிந்து பேசினேன். இனியும் பேசுவேன். பழைய தகவல்கள் பலவற்றைத் தற்போது வாழ்வோர் மூடநம்பிக்கை என்கின்றனர். அவற்றைப் பிறநாட்டினர் கூறினால் அவற்றை அரிய விஞ்ஞானப் புதுமைகள் என்கின்றனர். பழந்தமிழ் நூல்களும், புராணங்களும் சகல அண்டங்களைப் பற்றியும், அவற்றின் செயற்பாடுகள் பற்றியும், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மிகவும் நேர்த்தியாகக் கூறிவிட்டன.



‘‘பவிஷ்ய புராணத்தை சுமந்து என்ற முனிவர் இயற்றினார். அதில் சூரியனது வரலாறு முழுமையாகக் கூறப்பட்டுள்ளது. அதில் ஆதிபகவன் சூரியன் என்றும், அவன் உதிக்காவிட்டால் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐம்பூதங்களும் மாசடைந்து இயங்காது விட்டுவிடும் என்றும், நிலத்தில் உள்ள நீர் ஒருபோதும் வற்றாது என்றும், அந்நீரிலிருந்து பெரும் தொகையான விஷக்கிருமிகள் உருவாகிப் பூமியை அழித்துவிடும் என்று கூறுகிறது. நீர் மாசடைந்து விடும், தீயை மூட்ட முடியாது. காற்று மாசடையும். சில சமயம் அதன் வேகம் அதிகரிக்கும், முற்றாகவும் அழிந்துபோய்விடும் என்றும் ஆகாயம் ஒளியின்மையால் இருண்டு மாசடைந்துவிடும் என்று கூறுகிறார்’’.

‘‘இது நூறுவீதம் உண்மையான கூற்று. பத்து வருடங்களுக்கு முன்பு திரவிய மனத்தில் தொடர்ந்து பத்துநாட்கள் பெருமழை பெய்தது. காடு வெள்ளக்காடாகிவிட்டது. அங்கு எவராலும் வாழமுடியவில்லை. ஆறு அடி வெள்ளம் எங்கும் பரந்து நின்றமையால் அங்கு வாழ்ந்த அனைவரும் இடம்பெயர்ந்து பல இடங்களுக்குச் சென்றுவிட்டனர். கதிரேசனும் வேறு பலரும் நாம் வாழும் வனத்திற்கு வந்தனர். பதினைந்து நாட்கள் தங்கியிருந்துவிட்டுத் தமது வனத்திற்குத் திரும்பியபோது நானும் அவர்களுடன் சென்றேன். மழைவிட்டுப் பத்து நாட்கள் கழிந்ததும் வெள்ளம் வற்றவில்லை. அதன்பின் சூரியஒளியால் வெள்ளம் வற்றி நிலம் சேறும் சகதியுமாக இருந்தது. அதன்பின் பத்து நாட்கள் கழிந்ததும், வனம் முன்பு இருந்ததுபோல வந்துவிட்டது. பயன்தரு மரங்களும், புல்பூண்டுகளும், பயிர்களும் முற்றாக அழிந்துவிட்டன. காடுமுழுவதும் துர்நாற்றம் வீசியது. வெள்ளநீருக்குள் பல்வேறு வகையான பூச்சி புழுக்களும், கிருமிகளும் இருந்தன. அவை இயல்புநிலையை அடைய மேலும் பல நாட்கள் சென்றன’’.

‘‘குற்றம் குறைகள், மாசுமறுக்கள், துன்பங்கள், துயரங்கள் யாவற்றையும் நீக்கி இன்பமளிப்பவன் சூரியன் என இருக்குவேதமும், புராணங்களும் கூறுகின்றன. அதனால் உலகிற்கு முதல்வன் சூரியன். உலகம் படைக்கப்பட்டபோது சூரியன் இருக்கவில்லை. பூமி முழுவதும் நீரால் நிறைந்திருந்தது. அதனால் ஆதிபகவானாகச் சிவபெருமான் தேவர்களின் வேண்டுகோளை ஏற்றுச் சிவசூரியனாக வானத்தில் பிரகாசித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. அதனால் ஆதிபகவன் சிவனான சூரியனே. இதை வைணவர்கள் மகாவிஷ்ணு என்று கூறுகின்றனர். ஒவ்வொரு தெய்வங்களையும் குலதெய்வமாகக் கருதி வழிபடுவோரை நாம் இன்றும் காண்கிறோம். சைவர்கள் சிவனைச் சூரியனாகக் கொண்டதுபோல வைணவர்கள் மகாவிஷ்ணுவைச் சூரியனாகக் கொண்டனர். இதை உணர்ந்த வள்ளுவர் பிரிவினையைத் தூண்டக்கூடாதென்பதற்காகவே ‘ஆதி பகவன்’ என்ற பெயரைப் பாவித்தார்’’.



“பேரறிஞரே, நீர் சொல்வது சரிபோலத் தெரிகிறது. ஆனால் இதை யாரும் ஏற்பார்களா...? இங்குள்ள எல்லோரும் விதண்டாவாதம் பேசுவர்” என்றது எருமை.

“இதை சரியென்றோ, ஏற்குமாறோ நான் கூறவில்லை. இது ஓர் ஆய்வு மகாநாடு. அதில் எனது கருத்தை நான் விரிவாகக் கூறியிருக்கிறேன். யாரும் ஏற்கவேண்டும் என நான் வற்புறுத்தவில்லை. கருத்துக்களைக் கூறலாம்; கூறாமலும் விடலாம் என்றார் பேரறிஞர். கூட்டத்தில் கல்வியாளன் கடவுளையும், குருவையும் வணங்காது எவ்வாறு கற்பான். தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுவரை என்றொரு முதுமொழியுண்டு. அதைவிட அக்காலத்தில் வாழ்ந்த கற்றவர்கள் கடவுள் இல்லை என்று கூறியதாக எந்தப் பழந்தமிழ் நூலும் குறிப்பிடவில்லை”.

“நூல்கள் குறிப்பிட்டிருந்தால் இதை ஏற்கலாம். அதைவிடக் கடவுள் இல்லை என்று பேசினால் அரசன் தண்டிப்பான். அப்படியாவது தண்டித்த வரலாறும் எந்த நூல்களிலும் இல்லை. அவ்வாறு இருப்பின் சபையோர் அதைக் கூறலாம் என்று கூறிவிட்டுப் பேரறிஞர் சற்று நேரம் அமர்ந்திருந்தார். யாரும் எதுவும் கூறாமையால் அவர் சொன்னார் ‘கடவுள் இல்லை என்று யாரும் கூறாதபோது வள்ளுவர் ஏன் இவ்வாறு கூறினார் என்று உரை ஆசிரியர் சிந்திக்கவில்லை. அந்நாளில் கற்றவர்கள் அனைவரும் தம்மைவிட அறிவாளிகள் யாரும் இல்லை என்ற திமிருடனேயே வாழ்ந்தனர். இதைப் பல பழந்தமிழ் நூல்கள் மிகமிக விரிவாகக் கூறுகின்றன. சிவபெருமான் தருமிக்கு எழுதிக்கொடுத்த செய்யுளைத் தருமி அரசசபையில் வாசித்தபோது நக்கீரர் என்ற புலவர் அச் செய்யுள் தவறானது என்றார். சபையில் இருந்த புலவர்கள், அறிஞர்கள் கருத்துச் சொல்லாது நக்கீரரின் பக்கம் சார்ந்தனர். அதன்பின் சிவபெருமான் அரச சபைக்கு வந்தபோது நக்கீரரை அச் செய்யுளைத் தவறானது என்று திமிருடன் வாதிக்கச் சிவபெருமான் தன்னை வெளிப்படுத்த நெற்றிக்கண்ணைக் காட்டினார். ‘நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றம்தான்’ என்றார் நக்கீரர்.

“நான் திறமையானவன், கல்விமான், அரசன் என்ற திமிருடன் ஒரு செயலை அவதானிக்காது அதை ஆராய வேண்டும். ஆராயாது குற்றம்கண்டு கேலி செய்யும் மரபு அக்காலத்தில் தமிழ்நாட்டில் இருந்தமைக்குப் பல சான்றுகள் உண்டு. ஒரு செய்யுளை விரிவாக ஆராய வேண்டும். ஆராயாது பல புலவர்கள் பேசியமையைக் கண்ட வள்ளுவர் கற்றவர்கள் ஏனைய கற்றவர்களை மதிக்க வேண்டும். அவர்களது சாதி, தன்மை, வாழ்க்கைமுறைகளைப் பாராது அவர்கள் எழுதிய செய்யுளின் தன்மையை ஆராய வேண்டும் என்பதற்காகத்தான் இரண்டாவது குறளைப் பாடினார். வாலறிவன் என்பது வாண்மையுள்ளவனையே குறிக்கும்.”

“இப்போதும் கற்றவர்கள் கற்றவர்களை மதிப்பதில்லை. எமது வனத்தில் ஓர் உயர்தரப் பாடசாலை இருக்கிறது. அங்கு நூறு ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். ஆரம்ப



வகுப்புக்களில் கற்பிப்பவர்களை உயர்தர வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தரக்குறைவாகவே எண்ணுகின்றனர். தாய்மொழி, சமயம், சமூகக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களைத் தம்மைவிட அறிவு குறைந்தவர்கள் என்று பட்டதாரி ஆசிரியர்களும், கணித, விஞ்ஞான, ஆங்கில ஆசிரியர்களும் எண்ணுகின்றனர். ஆரம்ப வகுப்புக்களில் ஆசிரியர்கள் முறைப்படி கற்பிக்காவிட்டால் மேல் வகுப்புக்களில் மாணவர் பின்தங்குவர். இதைக் கற்றவர்கள் அன்று தொடக்கம் இன்றுவரை உணர்வதில்லை. அத்திபாரம் பலமிழந்தால் மாடி வீடும் பாறி விழுந்துவிடும்''. பேரறிஞர் பேசிக் கொண்டிருக்கும்போது சபை கலவரப்பட்டது. கைதட்டும் ஓசை வானை எட்டியது.

''அன்பானவர்களே எனது பேச்சு உங்களைக் கவர்ந்தமையால் தான் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கிறீர்கள். அதை நினைத்து நான் மிகவும் மகிழ்கின்றேன். திருமந்திரம் தோன்றி எண்ணாயிரம் ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.''

''ஒருவர் ஒரு செயலைச் செய்யுமுன் கடவுளை வணங்குவது தொன்றுதொட்டு நடைபெற்று வருகின்றது. திருமூலர் சிவனை வாழ்த்தி ஐம்பது பாடல்களைப் பாடியபின்புதான் திருமந்திரத்தைப் பாடினார். நான் அறிந்தவரையில் கடவுளை வணங்காது யாரும் எச்செயலையும் செய்யவில்லை. முக்கியமாகப் புலவர்கள் எல்லோரும் கடவுளை வாழ்த்திப்பாடிய பின்பே செய்யுள்களை எழுதினர். விவசாயிகள் விதைக்குமுன் கடவுளை வணங்கிவிட்டே விதைத்தனர். இதுபோல ஒவ்வொரு செயலின்போதும் கடவுளை வணங்காது எதுவும் செய்யப்படவில்லை. அரசர்கள் கடவுளை வணங்கிய பின்பே போரைத் தொடங்கினர். இப்படியிருக்க வள்ளுவர் இரண்டாவது குறளை பரிமேலழகர் எழுதிய உரைப்படி எழுதுவாரா? அறிஞர்களே சிந்தித்துப் பாருங்கள்.''



(4)

“சபையோர்களே, வள்ளுவனைப் பொய்யாமொழிப்புலவர் என்று புலவர்கள் சொல்லியுள்ளனர். இதற்கு அர்த்தம் என்ற என்று யாராவது யோசித்துப் பார்த்தீர்களா....? திருவள்ளுவர் சொன்ன கருத்துக்களில் எப்பிழைகளும் இல்லை. அவை பொய்யான கருத்துக்களைக் கூறவில்லை. அவர் கூறிய குறள்கள் யாவும் மெய்யானவை என்றே அப்போதைய அறிஞர்கள் கருதினர். திருக்குறளில் 1330 பாடல்கள் உண்டு. இதில் தவறானது என்று ஒன்றைக்கூற முடியுமா..? எல்லாக் குறள்களும், வேதங்கள், உபநிடதங்கள் போல உண்மையானவை. உறுதியான கருத்துக்களைக் கூறுபவை. உரையெழுதியோர் சில குறள்களுக்குப் பொருத்தமில்லாத உரைகளை எழுதியுள்ளனர்.”

ஒன்பதாவது குறள் எண்குணங்களையுடைய கடவுளை வணங்காதவர்களின் தலை பயனற்ற தலை என்றும் அது கேட்காத செவிகளைப் பார்க்காத கண்களை உடையவர்களைப் போன்றது என்றும் உரையாசிரியர் உரை எழுதியுள்ளார். சில அறிவாளிகள் தாம் ஆராய்ந்து கண்ட முடிவென்று திருக்குறளைச் சமண நூலென்கின்றனர். சைவசித்தாந்த நூல்களனைத்தும் சிவன் எண்குணங்களை உடையவன் என்கின்றன. மூத்த நூலான திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக் கொண்ட சைவசித்தாந்தப் பெருநூல். அது நூற்றுக்கு மேற்பட்ட பாடலடிகளில் சிவன் எண்குணத்தவன் என்று கூறுகிறது. வேறு சமய நூல்கள் எண்குணங்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. அப்படியிருக்கும்போது திருக்குறள் எவ்வாறு சமண நூலாகும்.

“இன்று திருக்குறளை மொழி, சமயம் என்பன பாராது பெரும்பான்மையான உலகநாடுகள் தத்தமது மொழிகளில் மொழிபெயர்த்து தமது மாணவர்களுக்கு வழங்கியுள்ளன. இது தெரியாத மூடர்கள் திருக்குறளைத் தங்கத்தட்டில் வைக்கப்பட்ட மலம் என்கின்றனர். அதைப்பல அரசியல் தலைவர்கள் ஏற்றுள்ளனர். பதில் சொல்லவேண்டிய அறிஞர்கள் பேசாதிருக்கின்றனர். சொந்த நலனுக்காக நல்ல நூல்களையும், புலவர்களையும் பற்றிக் குறைகூறும் ஒரு பிரிவினர் சங்ககாலத்திற்கு முன்பே வாழ்ந்துள்ளனர். அதைப் போற்றி இலாபம் தேடுவோர் பலர் இப்போதும் வாழ்கின்றார்கள். நல்லவற்றை யார் சொன்னாலும் ஏற்கும் பண்பு மேலைத்தேசத்தவர்-களிடம் உண்டு. மேலைத்தேச நாகரிகங்களைப் போற்றிப் பின்பற்றிக் கெட்டழிவோர் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.”

“கடவுள் வாழ்த்தை அடுத்து வள்ளுவர் வான்சிறப்புப் பற்றிக் கூறுகிறார். கடவுளின் அருளால்தான் மழை பெய்கிறது. மழை பெய்யாதுவிட்டால் என்ன நடக்குமென்று வள்ளுவரே கூறுகிறார். மழைபெய்யாவிட்டால் மரம், செடி, கொடிகள் யாவும் அழிந்துவிடும். மழைநீர் தானும் உணவாகி, உணவையும் உற்பத்தி செய்கிறது. மழை பெய்யாவிட்டால் உணவுப் பொருட்கள் கிடையாது. கோடி கோடியாகத்



திரவியங்களை வைத்திருந்தாலும், அந்தநேரம் ஒரு பிடி அரிசி உதவுவதைப்போலப் பொன், வெள்ளி, மாணிக்கம், மரகதம், பணம் உதவாது. மனிதர்கள்தான் பொருளால்தான் உலகம் இயங்குவதாக நினைத்துப் பொருட்களைத் தேடிச் சேகரிக்கிறார்கள். எமக்கு எவையும் தேவையில்லை. நாம் விதைப்பதும் இல்லை, அறுவடை செய்வதும் இல்லை. பொன் பொருளைத் தேடுவதும் இல்லை. நாளை என்ற ஒன்று இருப்பதை நாம் ஒருபோதும் நினைத்ததில்லை. கடவுளை நம்பி நிம்மதியாக உறங்குகிறோம். விடிந்ததும் தேவையான உணவுகள் யாவும் கிடைக்கின்றன. ஒவ்வொரு உயிரும் பற்றுக்களைவிட்டுக் கடவுளிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு வாழ்ந்தால் தேவையானவை அனைத்தும் கிடைக்கும்''.

''சபையோர்களே, மழை பெய்தும் அழிக்கும், பெய்யாமலும் அழிக்கும். பெய்து அழித்தால் சில நாட்களில் நிலைமை சீராகும். பெய்யாது அழித்தால் நாடு வழமைக்குத் திரும்பப் பல வருடங்கள் எடுத்தாலும் எடுக்கும். ஒருமுறை எமது வனத்தில் பத்து நாட்கள் தொடர்ந்து பெருமழை பெய்தது. நாம் எல்லோரும் பக்கத்தில் உள்ள வனத்திற்குச் சென்று தங்கினோம். மழைவிட்டுச் சில நாட்களானதும், வெள்ளம் வற்ற இயல்புநிலை திரும்பியது. நாம் மீண்டும் வந்து எமது வனத்தில் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழத் தொடங்கினோம். மழைபெய்யாது விடுமானால் பூமியில் உள்ள புல், பூடு முதல் உயிர்கள்வரை அழிந்துவிடும்''.

''ஒருமுறை சேது வனத்தில் சுமார் பத்து வருடங்களாக மழைபெய்யவில்லை. ஆனால் ஒரு ..... வுக்கே பஞ்சம் உண்டானது. பசி வந்தால் உணர்வுகள் பத்தும் பறந்துவிடும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். எந்தத் துன்பத்தையும் தாங்கலாம். பசித் துன்பத்தைத் தாங்கவே முடியாது. பசிவந்தால் மானம், ரோசம், குலப்பண்பு, கற்பு யாவும் இருந்த இடம் தெரியாமல் ஓடி மறைந்துவிடும். ஒழுக்கம்தான் உயிர்களின் உயிராகும். ஒரு வகையில் ஒழுக்கமும் உயிரும் ஒன்றாகும். இரண்டும் ஓர் உயிரைவிட்டு நீங்கினால் பின் எத்தனையாயிரம் கோடி பொன் கொடுத்தாலும் திரும்பி வராது''.

''சேது வனத்தில் வாழ்ந்த பலர் இடம்பெயர்ந்து விட்டனர். இடம் பெயர்ந்தவர்களுக்கும் உரிய தொழில்கள் கிடையாமையால் மிகவும் துன்பப்பட்டனர். அவ்வாறு துன்பப்பட்டவர்களுள் சௌமியா என்ற அழகான மானும் ஒன்று. அது கன்னியாக இருந்தபோது ஆண்மான்கள் அதன்மீது காதல் கொண்டன. சௌமியா தனது பெற்றோரால் நிட்சயிக்கப்பட்ட ஓர் அழகான மானைத் திருமணம் செய்து இன்பமாக வாழ்ந்து வந்தது. பத்து வருடங்கள் மழை பெய்யாமையால் இடம்பெயர்ந்து சௌமியா மிகவும் கஷ்டப்பட்டது. மூத்த மகனுக்கு காய்ச்சல் நோய் வந்தது. மருத்துவரிடம் காட்டப் பணம் இல்லை. அதனால் பெரும் துன்பப்பட்ட சௌமியா, தான்கன்னியாக இருக்கும்போது தன் பின்னால்வந்து காதல்மொழி பேசித் தன்னைத் திருமணம் செய்யுமாறு வற்புறுத்திய ஒரு பெரும் வர்த்தகரான மானிடம் உதவி கேட்க நினைத்தது''.



“அதைக் கணவனிடம் சொன்னபோது அவன் அவ்வாறு செய்ய வேண்டாம் என மறுத்தான். இருந்தும் மகனின் மீது கொண்ட அன்பின் காரணமாக சௌமியா அந்த வர்த்தகனிடம் சென்று உதவி கோரினாள்.” வர்த்தகரே பணக்காரரான உம்மை நான் திருமணம் செய்திருந்தால் இந்தநிலை எனக்கு வந்திராது. அந்த நேரம் வாலிபமிடுக்கில் உம்மை உதாசீனம் செய்துவிட்டேன். அதற்காக நான் மிகவும் வருந்துகின்றேன். இப்போது நானும் எனது பிள்ளைகளும் ஒரு நேரக் கஞ்சிக்குக்கூட வழியில்லாமல் தவிக்கிறோம். எனது மூத்த மகன் நோய்வாய்ப்பட்டுள்ளான். எனக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது” என்று அழுதாள்.

“சௌமியா, வாழ்க்கை எப்போதும் இனிமையானதாகவும், மனநிறைவாகவும் இருக்காது. பெரும் இன்பம் வரும்போது மிக்க மகிழ்வடையும் நாம், துன்பங்கள் வரும்போது மனம் குழம்பாது இருக்க வேண்டும். மனம் குழம்பினால் வாழ்க்கை வெறுத்துவிடும். அதன்பின் விபரீதமான முடிவுகளை எடுக்க மனம் தூண்டும். இன்பங்களையும், துன்பங்களையும் ஏற்று அதற்கேற்றவாறு வாழ வேண்டும். உன்னை நான் உயிருக்கு உயிராக நேசிக்கிறேன். உன்னை விரும்பிய மனத்தால் இன்னொரு பெண்ணை விரும்ப முடியவில்லை. உனக்குத் தேவையான உதவிகளையெல்லாம் நான் செய்கிறேன்”.

“சௌமியா அதிர்ந்து போனாள். தனது நினைவோடு அவன் இருப்பதை எண்ணி அதிர்ந்து போனாள். அவன் விரும்பியதைக் கொடுக்கவும் விரும்பினாள். அவன் சொன்னான் ‘ஒரு ஆண் பெண்களைத் தாயாகவும், சகோதரியாகவும் எண்ண வேண்டும். எந்த நிலையில் உள்ளவர்க்கும் நீர் இல்லாவிட்டால் வாழ்வு சிறக்காது. வானம் பொய்த்தால் எல்லாம் அழிந்துவிடும். பெண்களிடம் உள்ள கற்பு எவ்வேளையிலும் உறுதியாக இருக்க வேண்டும். அவ்வாறு உறுதியாக இருப்பவள்தான் மேலான பெண். அவள் பெண் தெய்வம். நீ எனக்கு எந்த உதவியும் செய்ய வேண்டாம். உன் நினைவு என் மனதில் இருந்து எப்போதும் இனிமையான உணர்வுகளைத் தருகிறது. அதுவே போதும்” என்றான்.

“சபையோர்களே, இதை ஏன் நான் சொன்னேன் என்றால், மழைபெய்யாவிட்டால் உயிர்வாடும். அத்துடன் உயிரைப்பேண வேண்டிய ஒழுக்கங்-களையும், மறைத்துவிடும். இவ்வாறு இயல்பாக சாதாரண விடயங்களைக்கூட வள்ளுவன் குறளில் மிகச் சிறப்பாகவும், மனதைக் கவரக்கூடியதாகவும் கூறியுள்ளான். இப்படியான கருத்துக்கள் ஒவ்வொரு குறள்களிலும் இருப்பதால் தான் உலகில் உள்ள பல்வேறு இன, மத மக்களிடையேயும் குறள் செல்வாக்குப் பெற்றது. இவ்வாறிருக்க பெரும் அறிவாளிகள் என்று தம்மைத் தாமே கூறும் தமிழர்கள் குறளை ஏற்றுக் கொள்வதில்லை. இன்னும் சில காலங்களில் திருக்குறள் சமணநூல் என்று சொல்வதைப்போல, உலக மக்கள் தத்தமது சமய வேதநூல் என்று கூறுவர். அது மிக விரைவில் நடைபெறும்.”



## (5)

மதிய உணவுக்குப்பின் மாலையில் மகாநாடு தொடங்கியது. மகாநாட்டிற்குத் தலைமைதாங்கும் கதிரேசன் எழுந்துவந்து பேசினார். ‘‘சபையோர்களே, காலையில் மகாநாடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பேரறிஞரான மானார் மிகவும் அழகாகவும், கவர்ச்சியாகவும், சபையோர் விரும்பிக்கேட்கும் வண்ணமும் பேசினார். அடுத்து முதுபெரும் வித்தகரான குதிரையார் உரையாற்றுவார். அவர் திரவிய வனத்தில் வாழும் பேரறிஞர். சிறந்த ஒழுக்கமுடையவர். பற்றுக்களை விட்டவர். பல நூல்களை எழுதியவர். ஒவ்வொரு குறளுக்கும் கதை எழுதியவர். பிறப்பு, பிறவாமை என்ற இரு நிலைகளையும் ஆராய்ந்து துறவை மேற்கொண்ட பெருந்தகை. மனவலிமை என்ற அங்குசத்தால் ஐம்பொறிகளான மதயானைகளையும் அடக்கியவர். இங்கு வாழ்வோர் பலர் அவரைத் தெய்வமாக மதிக்கின்றபோதும், சிலர் பொறாமை காரணமாக அவர் பொய்யர், நடிக்கிறார் என்று கூறுவர்’’.

‘‘தேவவனத்தில் வாழ்ந்த கவிஞரான யானையாருக்கு அவர் மீது பொறாமை உண்டானது. அதனால் அவரை அவமானப்படுத்த எண்ணி திரவிய வனத்தில் உள்ள சில அறிஞர்களுடன் சேர்ந்து வந்து அவரைச் சந்தித்து, ‘‘முதுபெரும் புலவரே, உம்மைச் சந்தித்ததைப் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். நான் உமது அபிமானி. அதனால் நான் வெளியூருக்குச் சென்றபோது பெறுமதிமிக்க ஒரு மாணிக்கக்கல்லை வாங்கி வந்தேன். அதைத் தங்களுக்கு எனது நினைவாகத் தர விரும்புகின்றேன்’’ என்றுகூறி அப் பெறுமதிமிக்க மாணிக்கக்கல்லை நீட்டினார். சூரிய ஒளியில் அது பளபளத்தது. அதைப் பார்த்தோர் அதன் பெறுமதியை மதிக்க முடியாது தவித்தனர். குதிரையார் அதை வாங்கிப் பார்த்தார். பின்பு, ‘‘பெரியவரே இந்த மண் கட்டியையா பெறுமதிமிக்கது என்றீர்கள்’’ என்றபோது சபையில் இருந்த ஒரு மாணிக்க வியாபாரி எழுந்துவந்து அதை வாங்கிச் சில நிமிடங்கள் பார்த்துவிட்டு, ‘‘பெரியவரே இதன் பெறுமதி கணக்கில் அடங்காதது. பெற்றுக் கொள்ளுங்கள். நான் அதைப் பலகோடி ரூபா கொடுத்து வாங்குகிறேன்’’ என்றான்.

‘‘குதிரையார் கனைத்துவிட்டு, யானையாரே, ஒருவரது தேவையைப் பொறுத்தது தான் பெறுமதி. இது எனக்குத் தேவையில்லை. அதனால்தான் மண்கட்டி என்றேன். வியாபாரிக்கு அது தேவை. அதனால்தான் அவர் அதன் மதிப்பைச் சொன்னார். பெரியவரே, ஒரு நாயிடம் இதைக் கொடுத்துப் பாருங்கள். அதுவும் விரும்பாது. அது விரும்பும் உணவைக் கொடுத்துப் பாருங்கள் மிக்க மகிழ்வுடனும், நன்றியுடனும் வாலை அசைத்தவாறு உண்ணும். நீர் நான் உண்ண ஒரு பழம் கொண்டு வந்திருந்தால் மகிழ்வுடன் உண்டிருப்பேன். நான் அணிந்திருக்கும் உடையே எனக்குப் பாரமாக உள்ளது. அந்நிலையில் எனக்கேன் மாணிக்கம்?’’ என்று வணங்கியவர். அப்படியானவர் தான் எழுதிய நூல்களை உங்களுக்குத் தந்துள்ளார். அவை வெறும்



வாசகங்கள் அல்ல, மந்திரங்கள். அவற்றை வாசித்துப் பயன் பெறுங்கள். இப்போது அவர் பேசுவார்'' என்று கூறி அமர்ந்தார் கதிரேசன்.

குதிரையார் எழுந்துவந்து பணிவுடன் சபையை வணங்கினார். பின், ''பெரியோர்களே, உங்களைக் காண, உங்களுடன் பேச நான் முற்பிறப்பில் தவம் செய்திருத்தல் வேண்டும். அடியேனின் பேச்சைக் கேட்பதற்காகப் பெருந்திரளாகத் தூர இடங்களில் இருந்து வந்திருக்கிறீர்கள். நீங்கள் எல்லோரும் திருக்குறளில் கொண்ட பெரு விருப்புக்காரணமாகவே வந்திருக்கிறீர்கள். அத்துடன் திருக்குறளின் பெருமைகளையும், சிறப்புக்களையும் அறிந்தமையால்தான் இன்றும் திருக்குறளைப் பற்றி மேலதிகமாக அறிய வந்துள்ளீர்கள். குறளுக்கு உரிய கருத்தை மிகவும் சரியாக யாரும் கூறமுடியாது. அது ஊற்றுநீர் போன்றது. ஊற்றுநீரை இறைக்க முடியாது. ஏனெனில் இறைத்தவுடன் அது மீண்டும் ஊறித் தனது முன்னைய நிலையை அடைந்துவிடும். அதுபோலத் திருக்குறளின் கருத்தைக் கேட்க கேட்க புதுப்புதுக் கருத்துக்கள் உருவாகிக் கொண்டேயிருக்கும்''.

''ஆரம்ப காலத்தில் நான் உரையை நம்பினேன். பெரும்பாலான உரைகளில் எந்த மாற்றமும் இல்லை. சொற்களை இடம்மாற்றி எழுதினார்களே தவிர வேறு எதையும் செய்யவில்லை. நான் குறளுக்குக் கதைகளை எழுத ஆரம்பித்தேன். அதன்பின்பு ஒரு குறளுக்குப் பத்துக்கு மேற்பட்ட வெவ்வேறு கதைகளை எழுதினேன். ஆனால் யாரும் அவற்றை விமர்சிக்கவில்லை. விமர்சிக்கும் பண்பு படிப்படியாகக் குறைந்து இப்போது அப்பண்பு மறைந்துவிட்டது. நான் அறத்துப்பாலுக்குக் கதைகளை எழுதி விலங்குப் பல்கலைக்கழக பேராசிரியரிடம் அவற்றைக் கொடுத்தேன். நாட்கள் கழிந்தனவே தவிர விமர்சனம் கிடைக்கவில்லை. இறுதியாகச் சென்றபோது என்னை இருக்குமாறு கூறிவிட்டு ஒரு விமர்சனத்தை எழுத்தித் தந்தார். அதற்கும் கதைகளுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இதுதான் இன்றைய நிலையாகும்''.

''சபையோர்களே நிலத்தைத் தோண்டத் தோண்ட நீர் பெருகுவதுபோல திருக்குறளை வாசிக்க வாசிக்கப் புதுப்புதுக் கருத்துக்கள் தோன்றும். நாம் எல்லோரும் அறத்தைப் பேண வேண்டும். ஒருவருக்கு அறத்தைவிட நன்மையளிப்பது வேறு எதுவும் இல்லை. மனத்தூய்மைதான் அறம். பற்றில்லாது வாழ்வது அறவாழ்வு எனப்படும். ஒவ்வொருவரும் செய்த பாவ புண்ணியங்களுக்கேற்பவே வாழ்வு அமையும். அதனால் எவற்றின்மீதும் பற்றில்லாது இறை உணர்வுடன் வாழ்ந்தால் தேவையானவை எல்லாம் தேடிவரும். இதை நான் நேரிற் கண்டுள்ளேன். இவ் மகாநாட்டுக்குத் தலைமைதாங்கும் கதிரேசனுக்குப் பற்றில்லை, பாசமில்லை, விருப்பில்லை, வெறுப்புமில்லை. ஒரு நாள் அவர் சந்தைக்குச் சென்றபோது அதிஷ்டலாபச்சீட்டு விற்பவன் ஒருவன் அவரின் அருகே வந்து ஒரு அதிஷ்டலாபச் சீட்டைக் கொடுத்துவிட்டு,'' பெரியவரே, தாங்கள் கடவுள் பக்தி மிக்க உத்தமர். இன்றுதான் நான் தொழிலை ஆரம்பித்துள்ளேன். முதலாவது சீட்டைத் தங்களுக்கு விற்கவே விரும்புகின்றேன்'' என்று கூறியவாறு சீட்டை நீட்டினான்.



கதிரேசன் செய்வதறியாது திகைத்துப் போனார். கோவிலில் பொங்குவோர் பிரசாதமாகக் கொடுப்பதைத் தவிர வேறு எதையும் அவர் கைநீட்டிப் பெறமாட்டார்''.

''ஐயா, நான் தொழிலை இன்று ஆரம்பிக்கின்றேன். மறுக்காமல் வாங்குங்கள். உங்களிடம் ஆசிபெற்ற அனைவரும் மிக்க மகிழ்வுடன் வசதியாக வாழ்கின்றனர். அதுபோல வாழ எனக்கும் வழிசெய்யுங்கள்'' என்று கூறி அவரது கைக்குள் அதிஸ்டலாபச் சீட்டை வைத்துவிட்டு விழுந்து வணங்கினான். கதிரேசன் பனையோலையால் செய்யப்பட்ட கொட்டைப்பெட்டியை (பேர்ஸ்) திறந்து ஒரு தாளை எடுத்தார். அது நூறு ரூபா அதைக் கொடுத்துவிட்டு சுற்றிவரப் பார்த்தார். ஊரில் கூலி வேலைசெய்யும் கெங்காதரன் என்ற எருமை, சந்தை வியாபாரிகளின் காய்கறிப் பொதிகளைத் தூக்கிச் சென்று கொண்டிருந்தது. அதற்கு ஏழு பிள்ளைகள். ஐவர் பெண்கள், ''கெங்கா, இங்கை வா'' என்றதும் கெங்காதரன் தோளில் சுமந்த காய்கறி மூட்டையை இறக்கி வைத்துவிட்டு அருகில் வந்தான். கதிரேசன் அந்தச் சீட்டை அவனிடம் கொடுத்துவிட்டு, ''நாளைக்கு அதிஷ்டலாபச் சீட்டை உருட்டுவார்கள். பத்திரிகையைப் பார்'' என்று கூறினார்.

சீட்டின் விலை பத்து ரூபா கதிரேசன் நூறு ரூபா கொடுத்தார். அவர் மிகுதியை வாங்கமாட்டார் என்று தெரிந்து கொண்ட அதிஷ்டலாபச் சீட்டை விற்றவன் மீண்டும் அவரை வணங்கிவிட்டுச் சென்றான். கெங்காதரன் அவரின் அருகே வந்து, அவரை வணங்கிவிட்டுச் சொன்னான். ''ஐயா, அதிகாலையில் நான் சிவன்கோவிலுக்குச் சென்று சிவனை வணங்கியபின் குருக்களிடம் திருநீறு பெற்றேன். அவர், கெங்கா இனி உனது வாழ்வு மேம்படும். நீ பெரும் சிவபக்தன். நேர்மையானவன், உண்மையானவன். அதனால் சிவன் உன்னை வாழவைப்பார்'' என்று வாழ்த்தியவர். அது நடந்து விட்டது. கட்டாயம் எனக்குப் பரிசு கிடைக்கும்'' என்றான்.

''அதுபோல அவனுக்கு முதற்பரிசு கிடைத்தது. பல இலட்ச ரூபாய்க்கு அவன் அதிபதியானது உங்களுக்குத் தெரியும். அதனால் கதிரேசனைப் போலவும், கெங்காதரனைப் போலவும் வாழுங்கள். அப்படி வாழ்ந்தால் குபேரனைப்போல வாழலாம். தினமும் அறஞ் செய்யுங்கள். பின்பு செய்யலாம் என்று நினைக்காதீர்கள். பசித்தவனுக்கு உடனே உணவு கொடுக்க வேண்டும். பின்பு கொடுக்கலாம் என்று நினைக்கக் கூடாது. அவ்வாறு வாழ்ந்தால் பிறவிகளும் வராது. துன்பங்களும் வந்து சேராது. அறஞ்செய்வதால் சகல இன்பங்களும் தேடிவரும். அது வரக் காலதாமதமானால், பெருகிவரும் என்று நினைத்தல் வேண்டும். இது உண்மை மட்டுமல்ல, சத்தியமும்கூட. சிவன்தான் வள்ளுவராக அவதாரம் எடுத்தவர். அதனால் வள்ளுவர் சொன்னதெல்லாம் உண்மையான வாக்கியங்கள், மந்திரச் சொற்கள்''.



“என்னைவிடப் பெரும்பெரும் அறிஞர்களும், பேராசிரியர்களும், பண்டிதர்களும் வந்து சபையில் அமர்ந்து அடியேனின் பேச்சைக் கேட்கிறார்கள். இது நான் செய்த புண்ணியம். அதற்காக நான் கதிரேசனுக்கு நன்றி கூறுகிறேன். நாட்டில் பல இடங்களில் திருமந்திரம், திருக்குறள், சிவஞானபோதச் சொற்பொழிவுகளும், மகாநாடுகளும் நடைபெறுகின்றன. ஆனால் உரியவர்கள் அழைக்கப்படுவதில்லை. கதிரேசன் பேரறிஞர், அம்பலவாணர் பண்டிதர் திருமந்திரத்தைக் கரைத்துக் குடித்தவர். இவர்களையெல்லாம் அழைக்காது தமக்கு வேண்டியவர்களையும், தமக்குப் பயன்தரக்கூடியவர்களையும் அழைத்து நன்மைகளைப் பெறுகின்றனர். இந்நிலை மாறவேண்டும்” அப்போது கதிரேசன் எழுந்து வந்து, உங்களுக்கு கொடுக்கப்பட்ட தலைப்பிலிருந்து தயவுசெய்து விலக வேண்டாம்’ என்று இரகசியமாகக் கூறிவிட்டுச் சென்றார்.



**(6)**

முதுபெரும் அறிஞரான குதிரையார் தொடர்ந்து உரையாற்றினார், ‘‘பெரியோர்களே, வள்ளுவர் ஒவ்வொரு குறளையும் மிகவும் அவதானமாக எழுதியமையால் அதில் ஓர் அணுவளவு பிழையையும் கண்டுபிடிக்க யாராலும் முடியாது. சில அத்தியாயாங்கள் நேரில் காண்பது போலவும், வாழ்ந்து காட்டுவது போலவும் உணர்ச்சிபூர்வமாக எழுதப்பட்டுள்ளன. இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணைநயம், மக்கட்பேறு என்ற அதிகாரங்களில் ஒவ்வொரு குறளும் ஒவ்வொரு காவியமாக மிளிர்கின்றது. இல்வாழ்க்கைதான் மனித மேம்பாட்டின் உச்சமான நிலையாகும். முறையான இல்வாழ்க்கை மூலந்தான் உலகம் படைக்கப்படுகிறது. மனக்கலக்கம், மனக்குழப்பம் இல்லாத ஒரு இல்வாழ்வானிடம்தான் உலகின் முன்னேற்றம் தங்கியுள்ளது. மனக்கலக்கம் வாழ்வில் வரும் அனைத்து நன்மைகளையும் கெடுத்துவிடும். அதனால் குடும்பத்தலைவன் அஞ்சா நெஞ்சமுடைய தையரியமானவனாக இருத்தல் வேண்டும்.

‘‘உலகில் இரு அறங்கள் உள்ளன. ஒன்று இல்லறம், அடுத்தது துறவறம். துறவிகளையும், ஏனைய உயிர்களையும் காத்து இரட்சிப்பவன் இல்வாழ்வான். அதனால் அவனே உலகில் சிறந்தவனாவான். அறவழியிற் பொருளைத்தேடி, அதை அறவழியில் செலவு செய்பவனுக்கு இணையாகத் தேவர்களைக்கூடக்கூற முடியாது. அறம் என்று சிறப்பித்துக் கூறுவது இல்லறத்தையே ஆகும். உலகில் வாழவேண்டிய நெறிமுறைகளின் படி வாழ்பவன் தெய்வம் என மதிக்கப்படுவான் என்று வள்ளுவர் சொல்கிறார்’’.

‘‘அது உண்மை, நான் திரவிய வனத்தில் பிறந்தவன். நெடுங்காலமாக இங்கு வாழ்பவன். கதிரேசன் ஒரு பெரும் இல்வாழ்வான். அவருக்கு இறைவன் எந்தக் குறைகளையும் வைத்ததில்லை. ஒரு முறை ஒரு பெரும் தவவலிமைபடைத்த முனிவரான பேரம்பலனார் இமயமலையில் இருந்து புறப்பட்டு ஒவ்வொரு வனமாகச் சென்று பக்தர்களைச் சந்தித்து, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றை நீக்கி வந்தார். ஒவ்வொரு வனத்திலும் அவரைத் தரிசிக்க ஏராளமானோர் கூடினர். அவரின் அருகிற் செல்ல முடியவில்லை. அவர் மேடையில் இருந்தவாறே குறைகளைக் கேட்டு அவற்றை நீக்குவார். அவர் எமது வனத்திற்கு வருகை தரவுள்ளதாக அறிவித்தார். அறிவித்த நாள் முதல் நாமெல்லோரும் அவரை வரவேற்கத் தயாரானோம்’’.

‘‘வழக்கமாக அவர் வரும்நாளை அறிவித்துவிட்டே வருவார். அவர் வருமுன் அவரது சீடர்கள் வந்துவிடுவார்கள். சீடர்கள் வந்தால் வனம் திருவிழாக்கோலம் கொள்ளும். மிகுந்த எதிர்பார்ப்புடன் நாம் தினமும் அவரை எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாற்றத்துக்கு உள்ளானோம். இறுதியில் அவரின் வரவை மறந்து விட்டோம். ஒரு நாள் அதிகாலை தேவார ஓசையும், மங்கள வாத்தியங்களின் ஓசையும் காட்டை நிரப்பின.



நாம் ஆச்சரியத்துடன் வெளியே வந்தபோது முனிவர் கதிரேசனுடன் வந்து கொண்டிருந்தார். முனிவரின் கழுத்தில் மாலைகள் இல்லை. கதிரேசனது முகத்தை மறைக்குமளவிற்கு மாலைகள் போடப்பட்டிருந்தன.

"சிவன் கோவிலுக்கு வந்து சிவனை வணங்கிய முனிவர் சொன்னார், "அடியார்களே, கதிரேசன் பூமியில் வாழ்பவர்களுக்கு மட்டும் சொந்தக்காரரல்ல. வானுலகத்தில் உள்ளவர்களுக்கும், நரகலோகத்தில் உள்ளவர்களுக்கும் சொந்தக்காரர். உலகில் வாழவேண்டிய முறைப்படி வாழும் இல்வாழ்வான். பூமியில் உயிருடன் வாழும் தெய்வமாவான். அதனால்த்தான் அத்தெய்வத்தைக் குடிகொண்டிருக்கும் கோவிலுக்குச் சென்று வணங்கி ஆசிபெற்றுவிட்டு அழைத்து வந்தேன். அவரது மனைவி மாண்புமிக்கவள், நற்பண்புகள் அனைத்தும் உடையவள், கணவனைத் தெியவமாக நினைப்பவள். குடும்பத்திற்கு மங்கலம் நற்குணம் மிக்க மனைவி. அவள் பெறும் நன்மக்கள் உலகிற்கு நல்லாசான்களாவர்".

"பதினைந்து வருடங்களுக்கு முன்பு கதிரேசனைச் சோதிக்க விரும்பிய நான் அவரது வீட்டுக்குச் சென்று, அவரை வணங்கி, "பெரியவரே, நான் ஓர் அரிய பூசை செய்ய விரும்புகின்றேன். அதற்கு ஓர் உத்தமியின் தாலி வேண்டும். நான் அறிந்தவரை உமது மனைவிதான் உத்தமி, பதிவிரதை" என்று நான் சொன்னபோது, "அது எனது பாக்கியம்" என்று கதிரேசன் சொல்ல, அதைக் கேட்டுக் கொண்டிருந்த அவரது மனைவி தனது கழுத்தில் இருந்த தாலியைக் கழற்றிக் கதிரேசனிடம் கொடுத்தாள்."

"மகளே, அவசரப்படாதே, நான் சொல்வதைக் கேட்டுவிட்டு முடிவெடு. நான் பூசை செய்தால் ஒரு மாதத்துள் தாலியைத் தானம் செய்தவள் இறந்து விடுவாள் என்றேன். கதிரேசன் எதுவும் பேசவில்லை. அவரது மனைவி சொன்னாள், "முனிவரே, எதையும் அறியாதவர் போலப் பேசுகிறீர்கள். இத்தாலியின் புண்ணியத்தால் தான் உயிர் இவ்வுடலில் தங்கியுள்ளது. இதற்குமுன் எத்தனை உடல்களை எடுத்ததோ தெரியாது. பிறந்தன்றே இறப்பும் குறிக்கப்படுகிறது. அதனால் குறிக்கப்பட்ட ஒன்று குறிக்கப்பட்ட நேரம் நடந்தே தீரும். அதைத் தடுக்க யாராலும் முடியாது. நடப்பது நடக்கட்டும். நான் அஞ்சவில்லை" என்றாள். அத்தகைய உத்தமியும், உத்தமரும் உலகிற்குத் தெய்வம் போன்றவர்கள். அதனால்தான் அவர் இருக்கும் கோவிலுக்குச் சென்று இருவரையும் வணங்கி அழைத்து வந்தேன்" என்றார்.

"சபையோர்களே, ஒருவன் பெறவேண்டிய செல்வங்களுள் அரிய செல்வம் நன்மக்களைப் பெறுதலே. எப்போதும் பிறருக்காக வாழ்கின்ற பிள்ளைகளைப் பெற்றவர்களைத் தொடர்ந்து வரும் ஏழுபிறவிகளிலும் எத்துன்பமும் வந்து வருத்தாது. இத்தன்மை வினைப்பயனாலேயே வந்தமையும் என்பார்கள். அது கதிரேசனைப் பொறுத்தளவில் நூறுவீதம் உண்மை. அவரது மூத்தமகன் கஜேந்திரன் புலமைப்பரிசில்



பெற்று வைத்திய மேல்படிப்புக்காக அமெரிக்காவுக்குச் சென்றுள்ளான். அங்கும் அவன்தான் முதன்மை மாணவன். அவன் தனது வைத்தியப் படிப்பை நிறைவு செய்துவிட்டு நமது காட்டிற்கே திரும்பிவர வேண்டும். அதனால் எமது வனத்தில் வாழ்வோர் பயனடைய வேண்டும். இப்போது வெளிநாடுகளுக்குக் கற்பதற்காகச் செல்வோர் திரும்பி வருவதில்லை. அங்குள்ள சுகபோக வாழ்க்கையை விட்டுவிட்டு இங்குவர விரும்புவதில்லை. ஆனால் கஜேந்திரன் கட்டாயம் திரும்பி வருவான் என்று கதிரேசன் கூறுகிறார்''.

''அவரது இரண்டாவது மகன் பெரும் வர்த்தகன். அதனால் எமது வனப்பகுதிக்கு ஒரு போதும் உணவுத் தட்டுப்பாடு உண்டாவதில்லை. சில வருடங்களுக்கு முன்பு தொடர்ந்து பத்து நாட்கள் மழை பெய்தமையால் வனப்பகுதி முழுவதும் வெள்ளக் காடானது. பத்து நாட்களும் மூன்றுநேர உணவையும் இவ்வனவாசிகள் அனைவருக்கும் இலவசமாக வழங்கியவன் கதிரேசனது இரண்டாவது மகன் துவாரகன். இரு மகன்களும் பெரும் அறிவாளிகள். பெரும் கொடைவள்ளல்கள். அதனால் கதிரேசனது மனைவி அவர்களைப் பெற்றபோது மகிழ்ந்ததைவிட நூறு மடங்கு அதிகமாக மகிழ்கிறாள். இந்நிலை எம்மவர் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். தம்மைவிட தம் மக்களை உயர்ந்த அறிவுடையவராக்குவது பெற்றோரது கடமையாகும். அந்த அறிவு உலகத்தவர் அனைவருக்கும் இன்பத்தைக் கொடுக்கும் என்று கதிரேசன் சொல்வார். அது உண்மை.''

''இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக்குவது அன்பு. உயிர்களுக்கும், உடல்களுக்கும் உள்ள மிகப்பலமான உறவு அன்பாகும். அதுவும் இல்வாழ்வாக இருந்தால் பெரும் நன்மைகளையும், சிறப்புக்களையும் தரும். அன்பானவர்களை உலகில் உள்ள உயிர்கள் யாவும் நேசிக்கும். அன்பு அமைதியானது என்று கொள்ளக்கூடாது. அன்பு வீரத்திற்கும் காரணியாகும். ஒருமுறை முனிவர் ஒருவர் காட்டுவழியாகத் தனது சீடர்களுடன் சென்று கொண்டிருந்தார். வழியில் ஒரு சிங்கம் அம்பு பட்டமையால் பலமாகச் சத்தமிட்டுக் கொண்டிருந்ததைப் புலவர் கண்டார். அவர் சிங்கத்தின் அருகே சென்று பார்த்தார். சிங்கம் வேதனையுடன் பார்த்தது. தனக்கு உதவிசெய் என்று கண்களால் இரந்தது. முனிவர் அதன் அருகே செல்வதைச் சீடர்கள் விரும்பவில்லை. அவரைத் தடுத்தனர். முனிவர் இரக்கம் மிக்கவர். சிங்கம் கொல்லும் தன்மை வாய்ந்தது. ஆனால் அதற்கும் இரக்கம், அன்பு, பண்பு என்பன இருக்குமென்று சீடர்களுக்கு கூறிவிட்டுச் சிங்கத்தின் அருகே சென்றார். சிங்கம் பசுவைப்போலப் படுத்திருந்தது. அதை அன்புடன் தடவினார். அம்பை எடுத்துவிட்டுப் பச்சிலைச் சாற்றைக் காயத்தில் பிழிந்துவிட்டுச் சீடர்களிடம் அதைத் தூக்கிவந்து ஆச்சிரமத்தில் ஒப்படைக்குமாறு கூறினார்''.



‘‘பத்துத் தினங்களில் சிங்கம் குணமடைந்து விட்டது. அதன்பின் பகல்வேளைகளில் அது உணவுதேடச் செல்லும். இரவானதும் ஆச்சிரமத்தில் வந்து படுத்துவிடும். ஒருமுறை முனிவருக்கு நோய் வந்துவிட்டது. அதனால் அது இரவு பகலாக முனிவரின் அருகில் படுத்திருந்தது. அன்பு பகைவரையும் கவரும். ஆதலால் அன்புள்ளவர்களாக அனைவரும் வாழவேண்டும் என்று வள்ளுவர் சொல்கிறார் என்று கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்’’ என்று முதுபெரும் பேரறிஞரான குதிரையார் தனது உரையை நிறைவு செய்தார்.

அடுத்து தலைவரான கதிரேசன் மேடைக்கு வந்து, ‘‘பெரியோர்களே, இத்துடன் முதல்நாள் மகாநாடு நிறைவடைகிறது. எல்லோரும் தமக்கென ஒதுக்கப்பட்ட மண்டபத்தில் சென்று தங்குங்கள். தேவையானவை யாவும் உங்களுக்கு வழங்கப்படும். நாளை காலை எட்டு மணிக்கு வந்து கூடுங்கள்’’ என்றதும் அனைவரும் கலைந்து சென்றனர்.



## (7)

மறுநாட் காலை ஏழு மணிக்கே மகாநாட்டிற்கு வரவேண்டிய அனைத்துப் பிரமுகர்களும் வந்து மண்டபத்தில் கூடியிருந்தனர். எட்டுமணிக்கு கதிரேசன் மகாநாட்டை ஆரம்பித்துத் தலைமையுரையை ஆற்றினார். ‘‘சபையோர்களே, நேற்றைய மகாநாடு மிகவும் பயனுள்ளதாக அமைந்ததென உலகில் உள்ள பல தேசத்து அறிஞர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். உலகெங்கும் நேரடியாக ஒளிபரப்புச் செய்தமையால் உலக மக்கள் பலர் கருத்துத் தெரிவித்துப் பாராட்டியுள்ளனர். அவர்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். இன்றைய மகாநாட்டில் கலாநிதி சுந்தரமூர்த்தியவர்கள் ஆரம்ப உரையை நிகழ்த்துவார். கலாநிதி சுந்தரமூர்த்தி ஒரு விவசாயி. சைவசமயத்தின் மீதும், தமிழின் மீதும் கொண்ட பற்றுக்காரணமாக அவர் பழந்தமிழ் நூல்கள், சைவசமய நூல்கள் பலவற்றை ஆய்வுசெய்து அவற்றைச் சிறுவர்களுக்காகக் கதைகளாக்கியுள்ளார். திருமந்திரம், திருக்குறள், சிவஞானபோதம், திருவருட்பயன், பகவத்கீதை இவ்வாறான பல நூல்களை ஆய்வுசெய்து அவற்றைக் கதைகளாக்கி உலகிற்குபெரும் நன்மைகள் செய்துள்ளார். பல்வேறு பல்கலைக்கழகங்கள் அவரது ஆய்வுநூல்களைப் பாராட்டி அவருக்கு கலாநிதிப் பட்டங்கள் கொடுத்துள்ளன. அவரை உரையாற்றுமாறு அழைக்கின்றேன்.’’

‘‘சபையோர்களே, இவ்வாறான விழாக்களிலில் கலந்து கொள்ளும் நாட்கள்தான் நான் விரும்பும் நாட்களாகும். திருக்குறளைப் போன்றதொரு நூலோ, அதற்குச் சமமான நூலோ இதுவரை எந்த மொழிகளிலும் தோன்றவில்லை. அதனால்த்தான் திருக்குறளை ஒவ்வொரு நாட்டவர்களும் தத்தம் மொழிகளில் மொழிபெயர்த்துக் கற்கின்றனர். அத்தகைய பெருமைமிக்க குறள்களைப் பல்வேறுபட்ட தலைப்புக்களில் நான் ஆய்வு செய்து நூல்களை வெளியிட்டு வருகிறேன்’’.

‘‘விருந்தோம்பல் என்பது இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து ஜீவராசிகளுக்கும் உரிய ஒரு பண்பாகும். ஓர் இல்வாழ்வான் குடும்பத்தவர்களுடன் இருந்து வாழ்வது என்பது விருந்தினை மகிழ்வுடன் வரவேற்று உபசரிப்பதாகும் என்று வள்ளுவர் கூறுகிறார். அமிர்தமாக இருந்தாலும் அதை தான் மட்டும் உண்ணாது ஏனையோருக்கும் கொடுத்து உண்பதே விருந்தோம்பலாகும். அப்படியானவர்களது வீட்டில் மகிழ்வுடன் திருமகள் கூடியிருந்து உதவிக் கொண்டேயிருப்பாள். இதை நான் எனது கண்களால் கண்டுள்ளேன். நான் வாழும் வனகத்தில் பரமேஸ்வரன் என்ற மானார் தனது குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார். அவரது குடும்பம் மிகவும் பெரியது. பரமேஸ்வரனின் மனைவி தனது கணவனின் பெயருக்குக் களங்கமேற்படாதவாறு வாழும் பத்தினி. ஒரு நாள் மதியநேரம் சில சிவனடியார்கள் அவர்களின் வீட்டிற்கு மிகுந்த பசியுடன் வந்தனர். தான் சமைத்து வைத்திருந்த உணவு முழுவதையும் எடுத்துவந்து சிவனடியார்களுக்குக் கொடுத்து விட்டார். கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் உணவு எஞ்சியிருக்கவில்லை. அப்போது சிவனடியார் ஒருவர் அவளை அழைத்து ‘‘மகளே,



இன்று இரவு நாங்கள் இங்கு தங்கிவிட்டு விடிந்த பின்புதான் புறப்படுவோம். அதனால் இரவு உணவையும் நீதான் எமக்குத் தரவேண்டும்'' என்றார்.

''வீட்டில் ஒருபிடி அரிசிகூட இல்லை. என்ன செய்யலாம் என்று யோசித்தபோதே சிவனடியார்கள் அங்கு தங்கப் போவதாகக் கூறினர். அதற்காக அவள் கவலைப்படவில்லை. கவலைப்பட்டால் செய்த புண்ணியங்களால் பலனேற்படாது என்று அவளது தாயார் கூறியுள்ளார். அதனால் அவள் கவலைப்படாது ஒரு பையை எடுத்துக் கொண்டு சந்தைக்குப் புறப்பட்டாள். அவளிடம் இருந்தது அவளது கணவன் கட்டிய தாலி மட்டுமே.''

''சந்தையில் புதிதாக ஓர் அழகிய பெண்வரிக் குதிரையொன்று அரிசி, மரக்கறி, பழங்கள் முதலியவற்றை விற்பனை செய்து கொண்டிருந்தது. பரமேஸ்வரனின் மனைவி சந்தைக்குச் சென்றபோது, அவளைக் கண்ட வரிக்குரிரை அவளை அழைத்தது. ''பெண்ணே உன்னைப் பார்க்க மகாலட்சுமி போலத் தோன்றுகிறாய். அப்படியிருந்தும் உனது முகம் கவலைகளால் கறுத்துள்ளது. என்னென்று சொல் நான் உதவி செய்கிறேன். உனக்குத் தேவையான பொருட்களையெல்லாம் எடுத்துக்கொள். பணத்தைப் பின்புதா'' என்றாள்.

''அவளை ஆச்சரியத்துடன் பார்த்த பரமேசுவரனின் மனைவி ''அம்மா உங்களிடம் வாங்கும் பொருட்களுக்குத்தர என்னிடம் இந்தத் தாலியைத் தவிர எதுவும் இல்லை. இதைப் பெற்றுக்கொண்டு பொருட்களைத் தாருங்கள்'' என்றாள்.

''பெண்ணே, கணவன் கட்டிய தாலியை ஒரு கற்புள்ள பெண் கணவன் இறந்தபின்பு தான் கழற்ற வேண்டும். நான் உன்னை நம்புகின்றேன். அப்படியிருக்க நீ ஏன் கவலைப்படுகிறாய்?'' என்று கேட்டவாறு அவளுக்குத் தேவையான பொருட்களைக் கொடுத்தாள். அவள் வீட்டுக்கு வந்தபோது சிவனடியார்கள் எவரும் இருக்கவில்லை. வீடு முழுவதும் மூட்டை மூட்டையாகப் பொருட்கள் இருந்தன. பானை சட்டிகளில் சோறும் கறியும் இருந்தன. இவை யாவும் திருமகளின் அருளாலேயே நடைபெற்றன. அதனால் யாரும் அஞ்சாது மகிழ்வுடன் வரும் விருந்தினரை மகிழ்வுடன் வரவேற்று விருந்து கொடுங்கள்''.

''சபையோர்களே, தான தர்மம் செய்வோர் ஒருபோதும் துன்பங்களை அனுபவிப்பதில்லை. அவர்களுக்குத் துன்பங்கள்வர இறைவன் விடமாட்டான். சில வருடங்களுக்கு முன்பு நாம் வாழும் வனமான பூங்காவனத்தில் தொடர்ந்து இரண்டு வருடங்களாக மழை பெய்யவில்லை. அதனால் மரம், செடி, கொடிகள் யாவும் பட்டுவிட்டன. வயல்கள் வெடித்துப் பிளந்து விட்டன. வனவாசிகள் இடம்பெயரத் தொடங்கினர். அப்போது பரமேசுவரனின் சகோதரனான திருச்செல்வந்தான்



எல்லோருக்கும் உதவினார். தன்னிடம் இருந்த நெல்லைக் கொடுத்ததோடு, வேறு வனங்களில் இருந்தும் தானியங்களைப் பெற்றுக் கொடுத்தார். திடீரென்று ஒருநாள் பெருமழை பெய்தது. அதனால் விவசாயிகள் விதைக்க ஆரம்பித்தனர். ஆனால் ஒருவரிடமும் விதை தானியங்கள் இருக்கவில்லை''.

''திருச்செல்வம் தன்னிடமிருந்த விதை தானியங்களைப் பங்கிட்டு விவசாயிகளுக்குக் கொடுத்துவிட்டுச் சொன்னார். ''அன்பானவர்களே, ஒருவரால் முடிந்த உதவிகளை மாத்திரமே செய்ய முடியும். என்னிடமிருந்த விதைதானியங்களைப் பங்கிட்டுத் தந்துள்ளேன். அவற்றை விதையுங்கள். விருந்தினரைப் போற்றி உபசரித்து தானதர்மம் செய்வோரின் விவசாய நிலங்கள், விதையிடாத இடங்களும் விளையுமென்பார்கள். அதனால் என்னிடமிருந்த விதைதானியங்களை உங்களுக்குத் தந்துள்ளேன் என்று கூறினார். அவர் ஆயிரம் ஏக்கர் வயல் நிலத்திற்குச் சொந்தக்காரர். இரு நூறு ஏக்கர் வயல் நிலத்திற்குக்கூட விதைக்கக்கூடிய நெல் அவரிடம் இருக்கவில்லை. பதப்படுத்திய நிலத்தில் விதைக்காது விடுவது ஒரு கன்னிப் பொண்ணுக்குத் திருமணம் செய்து கொடுக்காததைப் போன்றது என்று சொல்லும் அவர், தன்னிடம் இருந்த நெல்லைத் தனது ஆயிரம் ஏக்கர் வயல்நிலத்தில் விதைத்தார்''.

''மூன்று, நான்கு அடி தூரத்திற்கு ஒரு நெற்பயிரே நின்றது. அவை மட்டம் வெடித்து ஒன்றோடொன்று சேர்ந்து வெற்றிடமில்லாது நிரப்பின. பின் அறுவடையின்போது முன்னைய வருடங்களைவிட இரு மடங்கு நெல் விளைந்திருந்தது. அதனால் வித்திடாத நிலமும் பெரு விளைச்சலைக் கொடுத்திருந்தது. தானதர்மம் செய்பவன் பொருளை யாரிடமும் இரந்து பெறத் தேவையில்லை''.

''அடுத்து இனியவை கூறல் என்ற அதிகாரத்தை வள்ளுவர் நன்கு அனுபவித்துச் சொல்கிறார். எல்லா அதிகாரங்களும் அனுபவித்துச் சொன்னபோதும் அவற்றைவிட இவ்வதிகாரம் மிகமிக முக்கியமான செயல்களைக் கூறுகிறது. எல்லோருடனும் மிகமிக இனிமையான சொற்களைப் பேசுபவன் மண்ணுலகில் நடமாடும் தெய்வமாகப் போற்றப்படுவான். ஒருவருக்கு, அவர் விரும்பிய பொருட்களைக் கொடுப்பதைவிட மகிழ்வுடன் இனிய சொல் பேசுவது மேலானது. எமது வனத்தில் பெரும் தனவந்தர் வாழ்ந்து வருகிறார். அவருக்குத் திடீரென்று ஒரு பெரும் நோய் வந்துவிட்டது. அவரைப் பார்த்து சுகம் விசாரிக்க வந்தவர்கள் எல்லோரும் அந்த நோயைப்பற்றித் தாம் முழுமையாக அறிந்தவர்கள்போல் பேசினர். உங்களைப்போல நோய் வந்த ஒருவர் சேது வனத்தில் இருந்தார். அவரைப் பார்த்து சுகம் விசாரிக்க வந்தவர்கள் அவருக்குப் பெரும்நோய் ஏற்பட்டுவிட்டதென்றும், அவர் சிலகாலம் தான் உயிர்வாழ்வாரென்றும், கூறினர். பின் அந்நோயின் அறிகுறிகளைக் கூறினர். தலைவலி, வாந்தி, தலைச்சுற்று, மயக்கம் முதலியன வந்தால் ஆபத்து என்றும் கூறினர். அவர் மிகவும் பயந்து விட்டார். அவருக்கு ஐந்து பிள்ளைகள். ஐவரும் சிறுவர்கள். அதனால் அவர் மிகமிகப் பயந்து போனார். அதன்பின் அவ்வூரில் வாழ்ந்த ஒரு இனியமொழி பேசுபவர் தவவேடம் பூண்டுவந்து ஒரு சரையைக் கொடுத்துவிட்டு, ''நான்



இமயமலையில் இருந்து வருகிறேன். உமக்கு எந்த நோயும் இல்லை. முறையாகக் கடவுளை வணங்குங்கள். செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக்கிழமையும் ஏழைகளுக்கு உணவளியுங்கள். ஒரு மாதத்தில் நோய் குணமாகும் என்று சொல்லிவிட்டச் சென்றார். அவர் கூறியபடி அவரது நோய் குணமாகிவிட்டது''.

''நான் அந்தப் பெரும் வணிகரைச் சந்தித்து அந்த இனியசொல் பேசுபவரின் கதையைக் கூறினேன். அதற்கு அவர் சொன்னார். என்னை நலம் விசாரிக்க வருவோர் பெறுமதியான உணவு வகைகளைக் கொண்டுவந்து தந்துவிட்டு, நோயைப் பற்றிக் கூறிப் பயமுறுத்துகின்றனர். எனக்கு எதற்குப் பொருள். வருபவர்கள் அன்பாகப் பேசினாலே நோய் குணமாகிவிடும்'' என்றார். எனவே அன்பான வார்த்தைகளைப் பேசுங்கள், மறந்தும் தீயசொற்களைக் கூறாதீர்கள்''.

''அவ்வாறு இனிமையான சொற்களைப் பேசினால், செய்த பாவங்கள் யாவும் அற்றுப்போய் விடும். புண்ணியம் கிடைக்கும். மறுவாழ்வும் இன்பமாக அமையும். பயனில்லாத சொற்கள் ஒருவனை அச்சுறுத்தி நோய்களைவிட அதிகமான துன்பங்களைக் கொடுக்கும். இதை விரிவாகச் சொன்ன வள்ளுவன் கடவுளாவான்.

## (8)

''சபையோர்களே, ஓர் அருமையான பேச்சைக் கேட்டீர்கள். இம் மகாநாட்டில் பேசப்படும் பொருளை மட்டும் விமர்சனம் செய்யுங்கள். அதுவும் எழுத்துமூலம் செய்யுங்கள். குறளை விமர்சித்தவர்களின் விமர்சனங்கள் எழுத்து வடிவில் இருந்தமையால் திருவள்ளுவர் மாலையில் சேர்க்கப்பட்டுள்ளது. அதில் சேர்க்கப்பட்ட விமர்சகர்கள் பலர் அன்று பெரும்பெரும் நூல்களை எழுதியதாக அரசர்களாற் தெரிவிக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் எழுதிய எந்தநூலும் இப்போது காணக்கிடைப்பதில்லை. திருக்குறளை விமர்சித்தமையால், அவர்கள் திருவள்ளுவர் மாலையில் உயிர் வாழ்கின்றனர். இந்நிலை சங்ககாலம் முதல் இன்றுவரை நடைமுறையில் உள்ளது. அதனால் கலாநிதிகள், பேராசிரியர்கள், இலக்கியவாதிகள் விமர்சியுங்கள். அதை நாம் நூலாக்க எண்ணியுள்ளோம். அடுத்துப் பேராசிரியர் நந்தனனார் என்ற கவிராயர் பேசுவார். அவர் பல நூல்களை எழுதியபோதும், பரிசுகளோ, விருதுகளோ கிடைக்கவில்லை. பரிசுகள், விருதுகளாகக் கிடைக்கவேண்டுமானால் சங்ககால நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். அது கவிராயருக்கு விருப்பமில்லை. இப்பொழுது அவர் பேசுவார்'' என்று கூறி விடைபெற்றார் கதிரேசன்.

''சபையோர்களே, தலைவர் அவர்கள் நல்ல விமர்சகர். நான் எழுதிய நூல்கள் அனைத்தையும் விமர்சிப்பார். விமர்சித்துவிட்டு அருமையான விளக்கங்களுடன் கூடிய சிறந்த நூல். இவற்றிற்கெல்லாம் இங்கு மதிப்புக் கொடுக்க மாட்டார்கள். நீங்கள் எமது தாய்ப்பூமியான தமிழ்நாட்டில் உள்ள சைவ ஆதீனத்திற்கு அனுப்புங்கள்.



அங்கிருந்துதான் பல புலவர்கள் செய்யுள்களைப் பாடியுள்ளனர். முக்கியமாகத் திருமூலர், மாணிக்கவாசக சுவாமிகள் போன்றோர் அமைத்த ஆதீனம் அது. அவர்கள் உண்மையான விமர்சனத்தை உங்களுக்கு அனுப்புவார்கள்'' என்றார். அதன்படி எனது நூல்களை அனுப்பினேன். சிறந்த விமர்சனம் கிடைத்தது. அந்நூல்களுக்கு எமது வனத்தவர் விமர்சனம் கூடச் செய்யவில்லை. விருதும் தரவில்லை. ஒரு நூலை இயற்றிவிட்டு பிடிக்க வேண்டியவர்களின் கால்களைப் பிடித்தால் விருதும், விமர்சனமும், புகழும் கிட்டும். அவை யாவும் சில நாட்களில் இருந்த இடம் தெரியாது அழிந்துவிடும்.''

''தேவையில்லாதவற்றை நான் பேசிவிட்டேன். அதற்காக என்னை மன்னியுங்கள். வள்ளுவன் சொல்லாத எவையும் இதுவரை உலகில் நிகழ்ந்ததில்லை. இனியும் நிகழப் போவதில்லை. அவன் கூறிய அனைத்தும் சத்திய வாக்குகள். உபநிடதப் போதனைகளைவிடப் பல மடங்கு மேலான போதனைகள். ஒவ்வொருவரும் தேவையில்லாதவற்றைப் பேசி நினைத்துத் துயரப்படுகிறார்கள். பெரியோர்களின் நல்லுரைகளைக் கேட்கிறார்கள், வாசிக்கிறார்கள், நேசிக்கிறார்கள். அப்படியிருந்தும் கழிந்துபோன துயரமான சம்பவங்களையே நினைத்து நினைத்து வருந்துகிறார்கள். எதுவும் நிரந்தரமானதல்ல. அதனால் ஒழுக்கமாக வாழ்ந்து செய்நன்றி மறவாது வாழ்பவனுக்கு எந்தத் துன்பங்களும் வரக் கடவுள் விடமாட்டார் என்று உறுதியாகக் கூறுகிறார்''.

''எமது வனத்தில் நடைபெற்ற ஓர் உண்மைச் சம்பவத்தை இப்போது கூறுகிறேன். இது வள்ளுவரின் குறளால் உண்டான சம்பவம். இவ்வாறு பல ஆயிரம் சம்பவங்கள் தினமும் உலகில் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. ஒரு நாள் பெரும் வர்த்தகரும், சிறந்த அரசியல் பிரமுகருமான காந்தன் என்ற மானின் இளைய மகன் கண்ணன் காட்டுவழியாகச் சென்று கொண்டிருந்தான். நடுவழியில் ஒரு முதிய மான்நின்று அவனை வழிமறித்தது. இரக்கசுபாவமும் நல்லெண்ணங்களும் கொண்ட கண்ணன் வாகனத்தை நிறுத்திவிட்டு கீழே இறங்கிவந்து 'பெரியவரே, ஏன் என்னை வழிமறித்தீர்கள்' என்று கேட்டான்''.

''தம்பி, பாதை ஓரமாக வேலி அமைக்கப்பட்டுள்ளது. அதில் மின்சாரம் பாய்ச்சப்பட்டுள்ளது. எனது நண்பராகிய குரங்குகள் வேலியைத் தாண்டிச்சென்று மனிதர்களின் தோட்டங்களை நாசமாக்குகின்றன. அதற்காகத்தான் மின்வேலி அமைத்துள்ளனர். இது உள்ளூரவர்களுக்குத் தெரியும். வெளியூரவர்களுக்குத் தெரியாது. அதனால் பலர் உயிரிழந்துள்ளார்கள். நானும் எனது மகனும் அபாயம் என்று எழுதி ஒரு விளம்பரத்தைத் தொங்கவிட்டோம். அதை மனிதர்கள் அகற்றி விட்டனர். சிறிது நேரம் இங்கிருங்கள். நான் ஒரு விளம்பரத்தை எழுதி வருகிறேன் என்று கூறிய முதியமான் சென்று ஒரு விளம்பரத்துடன் திரும்பி வந்தது.''



“மகனே, சில இடங்களில் மரக்கிளைகள் இவ்வேலிமீது சாய்ந்திருக்கின்றன. அதனால் மரங்களைத் தொடுவதோ அல்லது அருகே செல்வதோ ஆபத்தானது” என்றது முதியமான்.

“முதியமான் கூறியதைக்கேட்ட கண்ணனுடன் கூடிவந்த சாந்தன் என்ற குரங்கு பயத்துடன் வந்து முதிய மானுக்குச் சொன்னது, “பெரியவரே, வேலியோரமாக நிற்கின்ற மரத்தின்மீது திராட்சைக்கொடி ஒன்று படர்ந்துள்ளது. அதில் ஏராளமான பழங்கள் உள்ளன. போகும்போது அவற்றைப் பறித்து உண்ணலாம் என நினைத்தேன். கடவுள்வடிவில் வந்து என்னைக் காப்பாற்றிவிட்டீர்கள். எதையும் நன்கு தெரிந்து கொள்ளாமல் ஒரு செயலைச் செய்யக்கூடாது என்று புரிந்து கொண்டேன்”.

“இப் பாதையால் செல்பவர்கள் மிகுந்த பயத்துடன்தான் செல்கின்றனர். சில நாட்களுக்கு முன் வேலிக்கு மின் இணைப்புச் செய்த மனிதனின் உறவினன் வேலியைக் கடக்க முயன்றபோது மின்சாரத்தால் தாக்கப்பட்டான். உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றதால் தப்பிவிட்டான். அதற்காகக் காவல்துறையினர் அம் மனிதன்மீது வழக்குத் தொடர்ந்துள்ளனர். இருப்பினும் பெரும்பாலான மனிதர்கள் தீயவர்கள். யார் சொன்னாலும் அதைக் கவனத்தில் எடுக்கமாட்டார்கள். அந்த மனிதனை நம்பமுடியாது. அதனால் நாம் மிகமிக அவதானமாகவே இருக்கிறோம்” என்றது முதியமான்.

“பெரியவரே, நான் இவ்வழியால்தான் செல்கிறேன். எனது வாகனத்தில் ஏறுங்கள் உங்களை உங்கள் வீட்டில் கொண்டு சென்று விடுகிறேன்”. என்று கண்ணன்கூற முதியவர் வாகனத்தில் ஏறினார். வீட்டுவாசலில் இறங்கிய முதிய மான், “தம்பி வீட்டுக்கு வாரும் ஏதாவது சாப்பிட்டுவிட்டுப் போகலாம்” என்றார். சாந்தன் வீட்டைப் பார்த்தான். மிகமிகச் சிறிய வீடு. அவ் வீட்டு முற்றத்தில் நின்ற மாமரத்தின் மீது திராட்சைக்கொடி படர்ந்திருந்தது. அதில் நிறையப் பழங்கள் இருந்தன. சாந்தனுக்கு நாவூறியது. திராட்சைப் பழங்களையும், மாம்பழங்களையும் வயிறார உண்ணவேண்டும் போல் இருந்தது. கண்ணன் புறப்படத் தயாரானான். “நண்பா, இவர் இல்லாவிட்டால் நான் திராட்சைப் பழங்களைப் பறிப்பதற்காக மரத்தில் ஏறி இருப்பேன். தற்செயலாக வேலியில் மின்சாரம் பாய்ச்சப்பட்டிருந்ததால் நான் எரிந்து கரிக்கட்டியாகியிருப்பேன். என்னைக் காப்பாற்ற முயன்று நீயும் இறந்திருப்பாய். இவரைப் போன்ற நல்ல உள்ளம் படைத்தவர்களைக் காண முடியாது. அதனால் அவருடனும், அவர் குடும்பத்தினருடனும் நாம் நட்புப்பூண வேண்டும்” என்றது.

அதைக் கேட்ட கண்ணன், “நீ சொல்வது சரி, வா, உள்ளே செல்வோம்” என்று கூறி உள்ளே சென்றனர். அது ஒரு மிகச்சிறிய வீடு. ஆனால் அழகாகவும்,



சுத்தமாகவும் இருந்தது. முற்றத்தில் பல்வேறு வர்ணரோஜாக்கள் பூத்திருந்தன. ‘‘ஜானகி, இங்கே வாம்மா’’ என்று முதியமான் அழைக்க தேவதைபோல ஒரு அழகிய பெண்மான் அங்கு வந்தது. ‘‘அம்மா, இவர்களுக்குச் சாப்பிட பழங்கள் கொண்டு வா’’ என்றதும், ஜானகி உள்ளே சென்று ஒரு தட்டில் விதம் விதமாக பழங்களைக் கொண்டு வந்து அவர்களின் முன் வைத்தது. ‘‘அப்படி ஒரு அழகான பெண்ணை இதுவரை கண்ணன் கண்டதில்லை. அவளை வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். பெற்றோரின் சம்மதத்தைப் பெற்று, ஜானகியைத் திருமணம் செய்ய வேண்டும் என்று நினைத்தான். பிரியவேண்டும் என்ற நினைவில்லாமல் இருந்த அவனைச் சாந்தன் புறப்படுமாறு தெண்டிக்க, மனமின்றிப் புறப்பட்டான் கண்ணன்’’.

‘‘அவர்கள் புறப்பட்டபோது, ஜானகி இரண்டு கூடைகளில் பழங்களை நிரப்பி எடுத்துவந்து இருவரிடமும் கொடுத்துவிட்டு, ‘‘வழியில் பசிக்கும், அப்போது சாப்பிடுங்கள்’’ என்றாள். மதுரமான வீணையின் ஓசைபோல் இருந்தது அவளின் குரல. ‘‘மகனே, இவ்வழியால் மீண்டும் செல்ல நேர்ந்தால் இங்கு வந்து செல்லுங்கள்’’ என்றது முதியமான். ‘‘நீங்கள் சொல்லாவிட்டாலும் நான் வருவேன். கண்ணன் பெரிய வர்த்தகன். அயற்காட்டில் அவனது வியாபார நிலையங்கள் உள்ளன. அதனால் வாரத்தில் ஒருமுறையாவது வருவோம்’’ என்றான் சாந்தன். போகும்போது கண்ணனின் உதடுகள் எதையோ சொல்லத் துடிப்பதை ஜானகி உணர்ந்தாள். ஆனால் கண்ணன் எதுவும் பேசவில்லை.’’

‘‘கண்ணன் சென்ற பின்பு ஜானகிக்கு அவனின் நினைவு வரவில்லை. ஆனால் கண்ணன் அவளின் நினைவாகவே இருந்தான். அடுத்த வாரம் அவன் வந்தபோது, ஒரு விலையுயர்ந்த தங்கச் சங்கிலியைக் கொண்டுவந்து அவளுக்குக் கொடுத்தான். அவள் வாங்காது நின்றாள். உங்களை யாரென்று எனக்குத் தெரியாது. பிறரிடம் இருந்து எவற்றையும் வாங்கக் கூடாது என்று தாத்தா சொல்வார். அவர் மிகவும் நேர்மையானவர். ஒழுக்கமாக வாழ்பவர். அவருக்குத் தெரியாது இதுவரை நான் எதையும் எவரிடமிருந்தும் பெற்றதில்லை’’ என்று கூறிவிட்டுப் பழங்களைக் கொண்டுவந்து கொடுத்தாள். அப்போது தாத்தா வந்தார். நடந்ததை அறிந்து கொண்டார்’’. மகனே, நாம் மிகவும் வசதியற்றவர்கள். எனினும் எப்பொருட்களையும் விரும்பாதவர்கள். உங்களை எமக்குத் தெரியாது. தெரிந்தவர்களிடமே நான் எதையும் கேட்டோ, இலவசமாகவோ பெற்றதில்லை’’ என்றார்.

‘‘பெரியவரே, நான் தங்களைப்பற்றி ஊரில் விசாரித்து விட்டேன். உங்களது பேர்த்திக்குத் திருமணம் பேசுவதாகக் கேள்விப்பட்டேன். நான் அயல்வனத்தில் வாழும் பெரும் வர்த்தகரான தணிகாசலத்தின் மகன்.....’’ என்றபோது முதியமான், ‘‘அப்படியா.....?



அவர் பெரும் வர்த்தகர், ஒழுக்கமானவர், கொடைவள்ளல் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், அவரைக் கண்டதில்லை’’.

“பெரியவரே, நான் எனது மனதில் உள்ளவற்றைச் சொல்கிறேன்’’ என்று கண்ணன் சிறிதுநேரம் யோசித்துவிட்டு சொன்னான், “உங்கள் பேர்த்தியின் அழகும், குணமும் என்னைக் கவர்ந்து விட்டது. அதனால் அவளைத் திருமணம் செய்ய விரும்புகிறேன். தாங்களும் இதை விரும்பினால் முறைப்படி வந்து பெண் கேட்கிறேன்’’ என்றபோது, முதியவர் திகைத்துப்போனார். அவரால் பேசமுடியவில்லை. தடுமாறினார், மூச்சு வேகமாக வெளிப்பட்டது. அவரால் பேச முடியவில்லை’’.

“சொல்லுங்கள்’’ என்றான் கண்ணன். “தம்பி, எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை, தணிகாசலம் பெரிய கோடீஸ்வரர். இக் குடிசையில் வாழும் அபலையை மருமகளாக ஏற்பாரா.....?’’

“அதைப்பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். அவர் எனக்குத் திருமணம் செய்து வைப்பதற்காகப் பெருமுயற்சி எடுத்து வருகிறார். நான்தான் விரும்பவில்லை. இப்போது நான் ஜானகியை விரும்புவதை அம்மாவுக்குச் சொல்லிவிட்டேன். அவாவுக்கு பூரண விருப்பம். அம்மாவின் சொல்லை அப்பா தட்டாமற் கேட்பார். அதனால் சொல்லுங்கள். அம்மா, நான் ஜானகியை விரும்பியதை ஏற்றுத்தான் இந்தத் தங்கச் சங்கிலியைத் தனது மருமகளுக்குக் கொடுக்குமாறு தந்தவர்’’.

“எனது பேர்த்திக்கு இப்படி ஒரு அதிஷ்டம் வரும் என்று நான் கனவுகூடக் காணவில்லை. எனக்கு விருப்பம் தம்பி’’. திருமணநாள் குறிக்கப்பட்டது. திருமணத்திற்கான ஏற்பாடுகள் பெருமெடுப்பில் நடந்து கொண்டிருந்தன. அப்போது காட்டில் ஒருவகைக் கொடிய உண்ணிகள் பரவின. அந்த உண்ணிகள் ஜானகியைக் கடித்தமையால் அதன் முடிகள் உதிர்ந்து விட்டன. அதனால் அதன் அழகு முழுமையாகக் கெட்டுவிட்டது’’.

“கண்ணனின் வீட்டார் திருமணத்தை நிறுத்தி விட்டனர். அதனால் தாத்தாவும், கண்ணனும், ஜானகியும் பெரும் கவலைப்பட்டனர். தாத்தாவுக்கு உலகே வெறுத்துவிட்டது. ஜானகி பல நாட்களாக உணவு உண்ணாதிருந்தாள். கண்ணனும், சாந்தனும் ஜானகியின் வீட்டுக்கு வந்தபோது ஜானகி எழுந்து வராது படுத்திருந்தாள். தாத்தா பெரும் துயரத்துடன் அழுதவாறு இருந்தார். ஜானகியைக் கண்ட சாந்தன், அவளை மறந்துவிடுமாறு கூறினான்’’.



“தாத்தா, இப்பொழுது என்ன நடந்துவிட்டதென்று கவலைப்படுகிறீர்கள். ஒருவருக்கு நோய் வந்தால் அதைக் குணப்படுத்த வேண்டுமே தவிர அவரை வெறுத்து ஒதுக்கக் கூடாது. நான் திருமணம் செய்தபின் ஜானகிக்கு இவ்வாறான நோய் வந்திருந்தால், அவளை ஒதுக்கிவைக்க முடியுமா? எனது பெற்றோரும், நண்பர்களும் ஜானகியை விட்டுவிடும்படி கூறுகின்றனர். அப்படி என்னால், விட்டுவிட முடியாது. நான் முதன்முதலில் உங்களைக் கண்டபோது வேலியில் மின்சாரம் பாய்ச்சப்பட்டிருக்கும் என்றீர்கள். அதன்பின் நான் இங்கு வரும்போதெல்லாம் உணவும், பழங்களும் தந்து அன்போடு ஆதரித்தீர்கள். அதைவிட ஜானகியைக் கட்டாயம் திருமணம் செய்வேன் என்றுகூறியதை நம்பி என்னோடு அவளை மகிழ்வுடன் பழகவிட்டீர்கள். அதன் பின்பு நான் ஜானகியை விட்டுவிட்டு இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்தல் நியாயமா?”

“அப்போது சாந்தன் எதையோ சொல்ல முற்பட்டான். அதை உணர்ந்த கண்ணன் சொன்னான்”. நீ சொல்வதை நான் கேட்க மாட்டேன். எனது பெற்றோரின் விருப்பத்தை நினைவூட்ட விரும்புகின்றாய். நான் இவர்களுக்கு எந்த உதவியும் செய்யாதபோதும், அவர்கள் கைமாறு கருதாது செய்த உதவிகளுக்கு விண்ணுலகையும், மண்ணுலகையும் கொடுத்தாலும் அதற்கு ஈடாகாது. ஒருவர் செய்த உதவி சிறிதாக இருந்தாலும், அது அவசியமான வேளையில் செய்யப்படுமானால் அது உலகைவிடப் பெரியதாகும். ஆபத்தான வேளையில் துணையாக இருந்தவர்களின் உறவு கடவுளோடு கொண்ட உறவுக்குச் சமமானது. அதை எடுக்கும் பிறவிகள் தோறும் மறக்கலாகாது. அதைவிட உதவி செய்த ஒருவர் பெரும் துன்பங்களைச் செய்தாலும், முன் செய்த உதவிக்காக அதைப் பொறுத்தல் வேண்டும். எந்தத் தீமையைச் செய்தாலும் அதற்கு மன்னிப்பு உண்டு. ஆனால், செய்நன்றி மறந்தவர்களுக்கு மன்னிப்பே கிடையாது. இது தான் விதியென்று நான் நினைக்கிறேன்” என்றான் கண்ணன். அதைக்கேட்ட தாத்தாவுக்குப் பெருமகிழ்ச்சி உண்டானது”.

“இவ்வாறு வள்ளுவர் கூறியமையால் தான் குறள் உலக வேதமானது. தற்போது இடைவேளை நேரம் வெளியே சென்று விரைவாக வாருங்கள்” என்றார் கவிராயர். சபை கலைந்தது. சிறுசிறு கூட்டமாகக் கூடி மகாநாட்டில் பேசப்பட்ட கருத்துக்களை விமர்சித்தனர்.



## (9)

இடைவேளைக்கான நேரம் முடிவடைந்ததும் மகாநாடு மீண்டும் ஆரம்பமானது. கவிராசரே தொடர்ந்து பேசினார். ‘‘செய்நன்றி அறிதல் பற்றிய கருத்துக்களை வள்ளுவர் கூறிய கருத்துக்களைக் கதைமூலமாக எடுத்துரைத்தேன். அதில் ஏதாவது தவறுகள் இருப்பின் நீங்கள் கூறலாம்’’ என்று கூறிவிட்டுக் கவிராயர் சில நிமிடங்கள் கருத்திற்காகக் காத்திருந்தார். சபை அமைதியாக இருந்தமையால் அவர் மீண்டும் பேச்சை ஆரம்பித்தார்’’.

‘‘உலகத்தவர்கள் பின்பற்றவேண்டிய உயர்ந்த ஒழுக்கம் நடுநிலமையாகும். இனத்தவர்கள், நண்பர்கள், பகைவர்கள், விருப்புக்குரியவர்கள் என்று பக்கம் சாராது நடுநிலையோடு ஒரு பிரச்சினையை அணுகுவதே உயர்ந்த, சிறந்த, போற்றுதற்குரிய அறமாகும். அப்படி வாழ்பவர்களுக்கு அழியாத செல்வம் வந்து சேரும். எப்போதும் நன்மைகளைத் தருகின்ற செல்வத்தை ஒருபோதும் தீயவழிகளில் தேடக்கூடாது. அப்படித் தேடுபவர்களுக்குப் பிற்காலத்தில் பெரும் துன்பங்கள் வந்து சேரும். இன்பமும் துன்பமும் செல்வமும் வறுமையும் வாழ்வில் அடிக்கடி வந்துபோகும். ஆனால் நடுவுநிலைமை மனவுறுதியில் உண்டானது. மனதை அடக்கியவன் பற்றுக்கொள்ள மாட்டான். பற்றுக்களே ஒருவனை நல்லவனாகவும், தீயவனாகவும் மாற்றுகிறது. அதனால் மனதைக் கட்டுப்படுத்தினால் என்றும் இன்பமாக வாழலாம். நடுநிலைமையைப் பேணி வாழ்பவனுக்குத் துன்பங்கள் ஏற்பட்டால் சான்றோர் முன்வந்து உதவுவார்கள். நடுநிலைமை என்பது தராசைப் போன்றது. தராசுள் பொன்னைப் போட்டாலும், மண்ணைப் போட்டாலும் வேறுபாடு காட்டாது நடுநிலைமையோடு செயற்படும். ஒரு நடுநிலையாளன் சொல்லிலும், செயலிலும் ஒரே மாதிரியாக நடந்து கொள்வான். பிறர்பொருளையும் தன்பொருளாக எண்ணி வர்த்தகர்கள் வாணிபம் செய்தல் வேண்டும். அந்தநிலை வணிகர்களுக்குப் பெரும் சிறப்பைக் கொடுக்கும்’’.

‘‘அரவிந்தன் என்ற யானை படிப்பை முடித்துவிட்டு அரசாங்க வேலைகளுக்கு விண்ணப்பித்தபோதும் வெகு நாட்களாக வேலை கிடைக்கவில்லை. அரவிந்தனின் குடும்பம் வசதியானதல்ல. அதனால் எந்த வேலையைச் செய்தாவது பணம் சம்பாதிக்க வேண்டுமென்று நினைத்தான். அவனுக்கு முருகேசன் என்ற ஒரு முதிய மானின் நட்புப் பிடித்திருந்தமையால் வெகு காலமாக ஓய்வுநேரங்களில் முருகேசனிடம் சென்று கதைப்பான். முருகேசன் ஒழுக்கமானவர், தீயவற்றைப் பேசமாட்டார். அரவிந்தன் முருகேசனிடம் சென்று தனது மனக் கருத்தைச் சொன்னான். ‘‘பெரியவரே, எனக்குக் காலம் நன்றாக இல்லை. பல தொழில்களுக்கு விண்ணப்பித்தேன். நேர்முகப் பரீட்சைக்குக்கூட எனக்கு அழைப்பு வரவில்லை. அதனால், ஏதாவது ஒரு தொழில் செய்யலாமென்று நினைக்கிறேன். என்ன தொழில் செய்யலாமென்று கூறுங்கள்’’ என்றான்.



''மகனே, எந்தத் தொழிலும் இழிவான தொழிலல்ல. அர்ப்பணிப்பும், முயற்சியும் தான் தொழிலை உயர்த்துவது. ஒழுக்கம் உயிரினும் மேலானது என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எந்தத் தொழிலையும் முறைப்படி செய்தால் முன்னேறலாம். நீ நன்றாகக் கற்றவன். அதனால் வியாபாரஞ் செய். வியாபாரி பிறர்பொருளைத் தன்பொருளாகக் கருதி நடுவுநிலை தவறாது தனது தொழிலைச் செய்தால் பெரும் முன்னேற்றமடையலாம். அதிக லாபம் வரவேண்டும் என்று நினைக்கக்கூடாது. கலப்படம் செய்யக்கூடாது. நிறையைக் குறைக்கக்கூடாது. வாடிக்கையாளனோடு முரண்படக்கூடாது. அவ்வாறு இருந்தாயேயானால், நீ விரைவில் பெரும் வியாபாரியாகலாம். நான் கமக்காரன். என்னிடம் கீரைவகைகள், காய்கறி வகைகள், பழங்கள், கிழங்குகள் உண்டு. அவற்றை நான் உனக்குத் தருகிறேன். ஊருக்குள் சென்று விற்பனை செய்'' என்றார் முருகேசன்.

''முருகேசன் கொடுத்த பொருட்களை வாங்கிக்கொண்டு கால்நடையாகப் புறப்பட்டான் அரவிந்தன். காய்கறிகள் வாங்குவதற்காகச் சந்தைக்குப் புறப்பட்ட வடிவேலு என்ற கரடியார், காய்கறிகளுடன் வந்த அரவிந்தனை மறித்து அவற்றின் விலைகளைக் கேட்டார்''.

''பெரியவரே, இன்றுதான் நான் வியாபாரத்தை ஆரம்பிக்கிறேன். தாங்கள் தான் எனது முதல் வாடிக்கையாளர். தயவுசெய்து வாங்குங்கள். கீரைப்பிடி பத்து ரூபா, இந்தப் பப்பாப்பழம் எழுபது ரூபா. ''அரவிந்தன் விலைகளைச் சொல்லும்போது வடிவேலு ஆச்சரியப்பட்டார். அப்பொழுது தான் பறித்தவை போலக் காய்கறிகள் மிகவும் குளிர்மையாக இருந்தன. அத்துடன் சந்தைவிலையைவிடக் குறைவாகவும் இருந்தன''.

''மகனே, இன்று எனது தாயாரின் திவசம். ஆகையால் எல்லாவற்றையும் நான் வாங்கிக் கொள்கிறேன். இதை எனது வீட்டில் கொண்டுவந்து தருவாயா?'' என்று வடிவேலு கேட்டதும் அரவிந்தன் அவற்றைத் தூக்கிக்கொண்டு வடிவேலு வீட்டுக்குச் சென்றான். அங்கு பலர் குழுமி நின்றனர். வடிவேலுவின் தாய் கேட்டாள், ''மகனே, இப்போது தானே சந்தைக்குப் புறப்பட்டாய். அதற்குள் எப்படி காய்கறிகளை வாங்கி வந்தாய்'' என்று கேட்டாள்.

''அம்மா, இன்று ஒரு புதிய வியாபாரி எமது வனத்திற்கு வந்தார். பொருட்களை மலிவாக விற்றார். அவர் கொண்டுவந்த முழுக்காய்கறிகளையும் வாங்கி வந்தேன்'' என்று வடிவேலு கூற அங்கிருந்த அனைவரும் அங்குவந்து பார்த்துவிட்டு, ''தம்பி, தினமும் எல்லாப் பொருட்களையும் கொண்டு வா. இங்குள்ள முதியவர்கள் சந்தைக்குச் செல்ல முடிவதில்லை. வேலைக்குச் செல்வோர் வேலை முடியச் சந்தைக்கு வந்து மற்றவர்களால் கழித்துவிடப்பட்ட வாடிய காய்கறிகளையே வாங்கி வருகிறார்கள். மறுநாள் அவற்றைச் சமைக்கும்போது அதன் சுவை கெட்டு விடுகிறது'' என்றனர்.



வடிவேலுவின் தாய் அரவிந்தனிடம் வந்து, ‘‘மகனே, இன்று எனது தாயாரின் திவசம். இருந்து சாப்பிட்டுவிட்டுச் செல்’’ என்றாள். அரவிந்தன் அங்கிருந்தவர்களுடன் உரையாடிவிட்டு மதிய உணவை உண்டுவிட்டுப் புறப்பட்டு முருகேசனிடம் வந்து சொன்னான், ‘‘பெரியவரே நான் கொண்டுசென்ற பொருட்கள் அனைத்தையும் நீங்கள் கூறிய விலைப்படி விற்றுவிட்டேன். இந்தாருங்கள் காய்கறிகள் விற்றபணம் என்று சொல்லிப் பணத்தைக் கொடுக்க முருகேசன் ஐந்நூறு ரூபா கொடுத்தார்.

‘‘நாளுக்கு நாள் வியாபாரம் பெருகிறது. அவன் இப்பொழுது மொத்த, சில்லறை வியாபாரி. பெரியவரே, பாகுபாடு காட்டாமலும், நடுநிலையோடும் தராசுபோல நான் வாழவேண்டும் என்று சொன்னீர்கள். அப்படி வாழ்ந்தமையால் தான் என்னால் இந்நிலையை அடைய முடிந்தது’’. என்று கூறி முருகேசனை வணங்கினான் அரவிந்தன்’’.

‘‘மகனே, மனம் உறுதியாகவும், சுத்தமாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் சொல்லிலும் அடக்கமும், ஒழுக்கமும் இருத்தல் வேண்டும். நீ அடக்கமானவன். அடக்கம் ஒருவனைத் தேவனாக்கும். அடக்கம் உயிருக்கு மேன்மையையும், சிறப்பையும், குறைவிலிலாத பொருளையும், புகழையும், பெரியவர்களது ஆசியையும் பெற்றுத்தரும். அவ்வாறு வாழ்பவனின் மேன்மை மலையைவிட உயர்ந்ததாகும். பணிவோடு வாழ்வது அனைவருக்கும் மேலான சிறப்பைக் கொடுத்தாலும், அது தனவந்தர்களுக்கும், வணிகர்களுக்கும் பெரும் செல்வமாக மாறிச் சிறப்பையும், உயர்வையும் கொடுக்கும். வாழும்போது ஆமையைப்போல ஐம்பொறிகளையும் அடக்கி வாழ்ந்தால், அது அவனுக்கு எடுக்கவிருக்கும் பிறவிகளுக்கும் பாதுகாப்பாக அமையும். வர்த்தகர்கள் ஐம்பொறிகளையும் அடக்கிவாழ வேண்டும். பொருட்களின் விலைகள் சில சமயங்களில் அதிகரிக்கும்போது பொறிகளின் தூண்டுதலால் ஆசைவசப்படுவோர் தான் அதிகம். அவ்வாறு செயற்படாதிருக்க மனவலிமை வேண்டும். மனவலிமையால் பொறிகளை அடக்க வேண்டும். அத்துடன் எதைக்காக்காவிட்டாலும் நாவைக் காக்க வேண்டும்’’.

‘‘நாக்குத்தான் உலகிலுள்ள பயங்கரமான ஆயுதம், ஒரு தீயசொல் ஒருவன் முன்செய்த புண்ணியங்கள் அனைத்தையும், அழித்துவிடும். அறநெறியுடன் வாழ்பவனோடு எந்நேரமும் அறக்கடவுள் கூடியிருந்து அவனுக்கு வரும் துன்பங்களை நீக்கிப் பெரும் புகழ் அடைய வைப்பார். அதனால் அனைவரும் அறநெறிப்படி வாழவேண்டும். பெரியோர்களே, குறளிற்பெரியது எதுவும் இல்லை. அது போலக் குறளில் சிறியதும் எதுவும் இல்லை. பெரிதும் சிறிதும் அதுதான். குறள் தேவைக்கேற்ப பொருள் மாற்றம் பெற்று விடயத்தை ஆணித்தரமாக விளக்கும்’’.

‘‘எமது வனத்தில் இரண்டு வருடங்களாக மழை பெய்யவில்லை. அதனால் மரம், செடிகொடிகளெல்லாம் காய்ந்து விட்டன. குடிக்கக்கூடத் தண்ணீர் இல்லை.



உணவுப் பொருட்களுக்கு முழுமையான தட்டுப்பாடு ஏற்பட்டது. வியாபாரிகள் ஐந்து ரூபா விற்ற பொருளை ஐம்பது ரூபாவுக்கு விற்பனை செய்தனர். பலர் உணவுப் பொருட்களைப் பதுக்கிவிட்டனர். வனவாசிகள் பெரும் துன்பப்பட்டனர். குழந்தைகள் பால்மா இன்மையால் நோய்வாய்ப்பட்டன. அந்தநேரம் அரவிந்தன் தன்னிடமிருந்த உணவுப் பொருட்களை முன்பு விற்றவிலைக்கே விற்றான். ஏழைகளுக்கு இவற்றை இலவசமமாகக் கொடுத்தான். அயல் வனங்களில் இருந்து கொண்டுவந்த உணவுப் பொருட்களை அதிக லாபம் வைக்காது விற்றான். கடனாகவும் பொருட்களைக் கொடுத்தான்.

"அரசாங்கம் பொருட்களை மக்களுக்கு நியாயவிலையில் விற்பனை செய்யுமாறு கொடுத்த பொருட்களைப் பல வியாபாரிகள் பதுக்கி வைத்துவிட்டு விலையைக்கூட்டி விற்றனர். ஆனால் அரவிந்தன் அவ்வாறு செய்யாது அரசாங்கம் விற்கச் சொன்ன விலையிலும் குறைவாக விற்றான். அதனால் அரசாங்கம் பதுக்கிய பொருட்களைப் பறிமுதல் செய்து, அரவிந்தனுக்குக் கொடுத்தது. அத்துடன் வனவாசிகளுக்குக் கொடுக்க வேண்டிய பொருட்களையெல்லாம் அரவிந்தனிடமே கொடுத்தது. ஒருநாள் அரவிந்தனைச் சந்தித்த அரசாங்க உயர் அதிகாரி ஆச்சரியத்துடன் கேட்டார். "அரசு நிர்ணயித்த விலையிலும் குறைவாக விற்கிறாயே, உனக்குப் பணத்தின்மீது ஆசையில்லையா....?"

"ஐயா, பணம், பொருள், பொன் என்பவற்றைச் சேர்த்து வைத்துப் பயன் எதுவும் உண்டாக மாட்டாது. நல்ல உணவை உண்ண வேண்டும், நல்ல உடைகளை அணிய வேண்டும். இதற்கான பணத்தைச் சேமித்தால் போதும். கோடிகோடியாகச் சேர்த்த பணத்தையும், சொத்துக்களையும் இறந்தபின்பு கொண்டுசென்று வாழும் இடத்தில் வைத்துச் செலவு செய்யலாமென்றால் கொண்டு செல்லலாம். எதையும் கொண்டு செல்ல முடியாது. அறுநாண் கொடியையும் கொண்டுபோய்விடுவார்களென்று நினைத்து அறுத்து விடுவார்கள் பிறகேன் சொத்து என்றான் அரவிந்தன். உயர் அதிகாரி எதுவும் பேசவில்லை".

"அறநீதிப்படி வாழ்பவன் சொத்துச்சேர்க்கத் தேவையில்லை. அவனுக்கு அறக்கடவுள் தேவையானவற்றைத் தேவையான நேரம் கொடுப்பார் என்கிறார் வள்ளுவர். இது உண்மை" என்றார் கவிராசர்.

**(10)**

கவிராசர் பேசி முடித்துவிட்டுத் தனக்கென ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் வந்தமர்ந்தார். மகாநாட்டிற்குத் தலைமைதாங்கிய கதிரேசன் எழுந்துவந்து "சபையோர்களே, திருக்குறள் மகாநாடு நாம் எதிர்பார்த்ததைவிடச் சிறப்பாக நடைபெறுகிறது. எமது பேச்சாளர்களை நாம் அன்புடன் கேட்டுக் கொண்டபடியே தயார் செய்து பேசுகின்றனர். எமது மூத்தவரான திருமூலரின் விருப்பத்தைக்கூறி அதன்படி



பேசுமாறு சொன்னோம். சிறுவர்கள்தான் எதிர்காலச் சிற்பிகள். அதனால் அவர்களுக்குச் சைவத் தத்துவங்களை இலகுபடுத்தி முடியுமானால் சிறு சிறு கதைகளாக்கிச் சொல்லுங்கள். ஒரு மணித்தியாலம் பேசுவதைவிட ஓரிரு நிமிடங்களில் சொல்லப்படும் சித்தாந்தக் கதைகள் மாணவர்களின் மனங்களில் நிலையாகப் பதியும் என்றவர். அதை ஏற்றுப்பேச வந்தோர் கதைகள் மூலம் சைவசித்தாந்தக் கருத்துக்களைக் கூறியுள்ளனர்''.

''நேற்று இரவு சில ஆசிரியர்களும், அவர்களது மாணாக்கர்களும் எனது வீட்டிற்கு வந்து பாராட்டினார்கள். முன்பு திருக்குறளைச் சமணநூலென்றே பல்கலைக்கழகத்தவரும் பேசி வந்தனர். திருமந்திரத்தில் கூறப்பட்ட வழிபாட்டு முறைகளைத் திருவள்ளுவர் நீக்கிவிட்டு மிகுதியைத் திருக்குறள் என்ற நூலாக்கியுள்ளார் என்று தமிழறிஞர் கூறியிருப்பது உண்மை. அதன் அடிப்படையில்தான் இம் மகாநாடு நடைபெறுகிறது. அடுத்துத் தமிழறிஞர் வேலவன் அவர்கள் பேசுவார்கள். வேலவன் திருக்குறளைக் கேலிச்சித்திரமாக எழுதியவர். உலகில் எலிகள் இல்லாத இடங்கள் இல்லை. அவை ஒவ்வொரு இடங்களிலும் இருந்து ஒவ்வொருவரையும் விமர்சிக்கும் முறை சுவையானது. பாடசாலையில் இருக்கும் எலிகள் கற்பித்தல் முறைகளைப்பற்றி விமர்சிக்கின்றன. கோவிலில் இருக்கும் எலிகள் சைவசித்தாந்தக் கருத்துக்கள் பற்றி விமர்சிக்கின்றன. இது ஒரு வித்தியாசமான இலக்கிய வடிவம். அடுத்துத் தமிழறிஞர் பேசுவார்''.

''சபையோர்களே, இம் மகாநாட்டின் ஏற்பாட்டாளர்கள் எதிர்காலத்தைச் சிந்தித்துச் செயற்பட்டுள்ளனர். சிறுவர்களுக்குத் திருக்குறளைச் சைவசித்தாந்தக் கதைகளாக்கிச் சொல்ல வேண்டும் என்றார்கள். அதை நான் புரியாது தடுமாறினேன். மகாநாட்டிற்கு வந்த பின்புதான் அதன் அர்த்தம் விளங்கியது. பல மகாநாடுகளில் நான் கலந்து பேசியுள்ளேன். அங்கெல்லாம் கற்ற பெரும் பெரும் அறிஞர்கள் தான் வந்திருப்பார்கள். இங்கு ஏராளமாகச் சிறுவர்கள் வந்திருக்கிறார்கள். அத்துடன் அமைதியாக இருந்து கதைகளைக் கேட்கின்றனர். இந்த நிலை எங்கும் ஏற்பட வேண்டும். தற்பொழுது மாணவர்கள் சில தீய பழக்கங்களுக்குட்படுவதாகப் பெரியவர்கள் குறை கூறுகிறார்கள். இப்படியான மகாநாடுகள் சிறுவர்களைச் சீர்திருத்தும்''.

''அன்பான சிறுவர்களே, நீங்கள்தான் எதிர்காலப் பெரியவர்கள். அதனால் ஒழுக்கமுடையவர்களாக வாழுங்கள். ஒழுக்கம் உயிரைவிட மேலானது. அதனால் துன்பங்கள் வந்துவிட்டதே என்று எண்ணி தீயசெயல்களைச் செய்யாதீர்கள். தீயசெயல்கள் ஒருவரைப் பெரும் துன்பத்துக்காளாக்கும். ஒழுக்கமாக வாழ்பவர்கள் தான் உயர்குடிப்பிறந்தவர்கள். ஏனையோர் இழிந்த குடியிற் பிறந்தவர்கள். ஒருவர் முக்கியமாக பிராமணர்கள் வேதத்தை மறந்தால் அதனைக் கற்கலாம். ஒழுக்கநெறி தவறினால் அந்தக் குலத்தவனாக மாட்டான். ஒழுக்கமில்லாதவர்கள் எவ்வளவுதான்



கற்றாலும், அவர்களால் உயர்வையோ, சிறப்பையோ பெற்றுவிட முடியாது. நல்லொழுக்கம்தான் பூரணமான நல்வாழ்வுக்குரிய வித்தாகும்''.

"அரவிந்தன் ஒழுக்கத்தை உயிராக மதிப்பவர். எந்தத் துன்பம் வந்தாலும் அவர் உண்மையையே பேசுவார். நீதியானவர், பிறருக்குக் கெடுதல் செய்யாதவர். துன்பப்படுவோர் கேளாவிட்டாலும் அவர்களது குடும்பநிலையை உணர்ந்து வலியச்சென்று உதவுவார். அதனால் அவ் வனத்தில் வசிப்போர் மட்டுமல்லாது அயலில் உள்ள வனங்களில் வசிப்போரும் அவரது வியாபார நிலையத்திற்கு வந்து பொருட்களை வாங்குவர். அத்துடன் சிறிய வியாபாரிகள் அவரிடம் தான் பொருட்களை வாங்கி விற்பார்கள். அவர்களுக்கு அவர் தேவையான பொருட்களைக் கடனாகக் கொடுப்பார். அவர்கள் விற்றபின்பு தாம் வாங்கிய பொருட்களுக்கான முதலைக் கொடுப்பார்கள்.''

இதனால் சிவானந்தன் என்ற எருமை அரவிந்தனின் மீது பொறாமை கொண்டது. எப்படியாவது அரவிந்தனைப் பழிவாங்க வேண்டும் என்று நினைத்து ஒரு நாள் ஒரு பெட்டிக்குள் கற்களை வைத்துக் கட்டிப் பாதுகாப்பிற்காக அதைப் பூட்டி அரவிந்தனிடம் கொண்டுசென்று அதைக் கொடுத்துவிட்டு, "ஐயா, இந்தப் பெட்டிக்குள் பெறுமதியான நகைகளும், மாணிக்கக்கற்களும், வைரங்களும் உள்ளன. உங்களது வனத்தில் வசிக்கும் சோமசுந்தரத்தின் மகனுக்கு அடுத்தவாரம் திருமணம் நடைபெற உள்ளது. அதேநாளில் எனது மனைவியின் தம்பிக்கும் திருமணம் நடைபெற உள்ளது. அதனால் என்னால் இதைக் கொண்டு சென்று கொடுக்க முடியவில்லை. யாரிடமாவது கொடுத்தனுப்பலாமென்றால் என்னால் உங்களைத் தவிர வேறு யாரையும் நம்ப முடியவில்லை. எமது வனவாசிகள் மட்டுமன்றிப் பிற வனவாசிகளும் உங்கள் மீது மிக்க நம்பிக்கை வைத்துள்ளனர். அதனால் இந்த நகைப்பெட்டியைச் சோமசுந்தரத்திடம் தயவு செய்து கொடுத்துவிடுங்கள். திருமணம் என்பதால் தாமதித்துக் கொடுக்க முடியாது'' என்று சொல்லிப் பெட்டியின் திறப்பையும் கொடுத்தார்''.

"அரவிந்தன் யார் எந்த உதவியைக் கேட்டாலும், மறுக்காது செய்து கொடுப்பவர். அதனால் அவர் அதை ஏற்றுக் கொண்டார். சிவானந்தன் தான் செய்யப் போவதை முன்பே சோமசுந்தரத்திற்குச் சொல்லி அவர் பெட்டியைத் திறந்ததும், அதற்குள் சிவானந்தன் கொடுத்தனுப்பிய பெறுமதியான நகைகள், வைரங்கள் இல்லையென்று கூறுமாறு கூறியிருந்தார். சிவானந்தன் பெட்டியை அரவிந்தனிடம் கொடுக்கும்போது அழகான வெள்ளை நாயொன்று அரவிந்தனின் அருகே வந்து வாலையாட்டி தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தது''.

"அரவிந்தன் தனது வாகனத்தில் உணவுப் பொதிகளை எவ்வேளையிலும் வைத்திருப்பார். யாராவது பசியோடு வந்தால் கொடுக்கலாம் என்றே வைத்திருப்பார்.



அந்த வெள்ளை நாய் அடிக்கடி வந்து அவரிடம் உணவு பெற்று உண்ணும். அன்று அது அவர் கொடுத்த உணவை உண்டுவிட்டு அவர் வந்த வாகனத்தில் ஏறிப்படுத்தது. அவரின் ஊழியர் அதைத் துரத்தியபோது அரவிந்தன் சொன்னார், ‘‘ஒரு செயல் காரணமின்றி நடைபெறாது. அது படுத்தமைக்கு ஏதோ ஒரு காரணம் இருக்கும். அதனால் அதைத் துரத்தாதே’’ என்றார்.

‘‘அரவிந்தன் தனது வீட்டிற்குச் செல்லாது நேரே சோமசுந்தரத்தின் வீட்டிற்குச் சென்று சிவானந்தன் கொடுத்த பெட்டியையும், அதன் திறப்பையும் கொடுத்துவிட்டு இப் பெட்டியில் உள்ள பொருட்களின் பட்டியலைப் பெட்டிக்குள்ளேயே வைத்திருப்பதாகச் சிவானந்தன் சொன்னவர். திறந்து எல்லாப் பொருட்களும் உள்ளனவா என்று பாருங்கள்’’ என்றார் அரவிந்தன்.

‘‘சோமசுந்தரம் பெட்டியைத் திறந்தபோது அதற்குள் பொருட்களின் பட்டியல் இருந்தது. பத்து வைரக்கற்கள், காப்பு ஐந்து சோடி, அட்டியல், சங்கிலி இரண்டு, முத்தாரம் ஒன்று அதை வாசித்தபடி பொருட்களை எண்ணிக் கணக்கிட்ட சோமசுந்தரம் திகைத்துப் போனார். சிவானந்தன் கற்களை நிரப்பிக் கொடுத்துவிட்டு பொய்யாக ஒரு பட்டியல் வைத்திருப்பதாகக் கூறியிருந்தார். ஆனால் பட்டியலில் உள்ளபடி பொருட்கள் இருந்தமையால் தடுமாறியபடி, ‘‘உரிய நேரத்தில் கொண்டுவந்து தந்தீர்கள் மிக்க நன்றி’’ என்றார். அரவிந்தனுக்குப் பின்னால் நடப்பதை அறிய ஆவலோடு வந்த சிவானந்தன், சோமசுந்தரம் சொல்வதைக்கேட்டுப் பயந்து போனார். அவர் அரவிந்தன் சென்றபின் சோமசுந்தரத்திடம் வந்தபோது சோமசுந்தரம் பெட்டியைப் பார்த்தார். முன்பு இருந்த எவையும் பெட்டியில் இருக்கவில்லை. சிவானந்தன் வைத்த கற்களே இருந்தன. இருவருக்கும் பயம் உண்டானது. அப்போது அங்கு வந்த வெள்ளைநாய் பலமாகக் குரைத்தது’’.

‘‘இருவருக்கும் பெரும்பயம் உண்டானது. அரவிந்தன் ஒழுக்கமானவன், நீதிமான். அதனால் தர்மதேவதை நாயுருவில் வந்திருக்கிறது. இனி என்னென்ன நடக்கப் போகிறதோ என இருவரும் பயந்தனர். அரவிந்தனிடம் சென்று நடந்தவற்றைக்கூறி மன்னிப்புக் கேட்டனர். அது அரவிந்தனுக்கு அதிசயமாக இருந்தது’’.

‘‘சிவானந்தா, எப்போதும் நல்லவற்றைச் செய்யாவிட்டாலும், நல்லவற்றை நினை. அது உனக்குத் துன்பத்தை வரவிடாது. வர்த்தகர்கள் ஆசைகள் அற்றவராகவும், மனதையும், உடம்பையும் அடக்கியவர்களாகவும், உடமைகள் அனைத்தையும் இறைவன் தந்துள்ளான். அவற்றைத் துறந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். கிடைத்தவற்றை மகிழ்வுடன் ஏற்க வேண்டும். அதில் திருப்தியும் அடைதல் வேண்டும். ஆசைகளைக் கடக்க வேண்டும். பொறாமை இல்லாது வாழ வேண்டும். வெற்றியையும், தோல்வியையும் மகிழ்வுடன் ஏற்க வேண்டும். அப்படி வாழ்பவர்கள் எதற்கும்



அஞ்சமாட்டார்கள். இது நான் கற்றபாடம். உனது வாழ்க்கையை நினைத்துப்பார். உன்னுடன் சேர்ந்தவர்களது வாழ்க்கையையும் நினைத்துப்பார். எப்போதும் அடுத்தவர்களைக் கெடுக்க வேண்டும் என்று நினைத்துச் செயற்படுவாய். உனது தங்கை ஐநூறு ஏக்கர் வயலை விற்க விரும்பியபோது எத்தனைபேர் அதை வாங்கப் போட்டி போட்டனர். நீயும் அதை வாங்க விரும்பினாய். ஆனால் அவள் என்னிடம் வந்து அந்த வயலை வாங்கும்படி வற்புறுத்தினாள்''.

''மூச்சைவிட்ட அரவிந்தன் சிறிது நேரம் பொறுத்துச் சொன்னார். ''அம்மா என்னிடம் ஏராளமான நிலம் உள்ளது. தேவைக்கு அதிகமாக எதையும் வைத்திருப்பது தர்மம் ஆகாது. அதனால் பலர் உங்கள் நிலத்தை வாங்க விரும்புகின்றனர். முக்கியமாக உங்களது சகோதரன் சிவானந்தன் அதை வாங்க விரும்புகிறார். அவருக்குக் கொடுக்கலாம் தானே''.

''ஐயா, அதை நான் பணத்திற்காக விற்கவில்லை. எனது வாழ்க்கை உங்களுக்குத் தெரியும். எனக்குப் பிள்ளைகள் இல்லை. நான் ஒரு முடிவெடாது இறந்தால் எனது சொத்துக்காகப் பலர் அடிபடுவார்கள். இறந்தபின்பும் வசைகளையோ, குற்றங்குறைகளையோ கேட்க நான் விரும்பவில்லை. இதை விற்றுப் பெறும் பணத்தை ஒரு அநாதை ஆச்சிரமத்திற்குக் கொடுக்கவுள்ளேன். எனது வயலைப் புண்ணியவானான உங்களுக்கு விற்றால், அதை நீங்கள் புண்ணிய காரியங்களுக்குச் செலவு செய்வீர்கள். அதனால் வரும் பயன் என்னையும் வந்தடையும். அப்படி வந்தமைந்தால்தான் எனது அடுத்தடுத்த பிறப்புக்கள் சிறக்கும் என்று சொன்னதால் அதை வாங்கினேன். அந்த நிலத்தில் வரும் வருமானம் முழுவதையும், நான் ஓர் அநாதை இல்லத்திற்குக் கொடுத்து வருகிறேன். இதனால் தர்மதேவதை என்னுடன் கூட இருந்து பெரும் பெரும் உதவிகளைச் செய்கிறாள். எனக்கு வரும் ஆபத்துக்களில் இருந்து காப்பாற்றுகிறாள்''. என்றார் அரவிந்தன். சிவானந்தன் எதுவும் பேசாது தலைகுனிந்தபடி சென்று விட்டார்''.

''சபையோர்களே, ஒழுக்கமாக வாழ்பவர்களுக்கு அறக்கடவுள் எப்போதும் கூட இருந்து வேண்டிய உதவிகளைச் செய்வாரென்று வள்ளுவர் கூறியுள்ளார். என்னைப் பொறுத்தவரை இப்படியான மெய்மையான கூற்றுக்களை இறைவனால் மட்டுமே சொல்ல முடியும். அதனால் வள்ளுவரும் இறைவன்தான். இறைவனின் அவதாரமான வள்ளுவன் சொன்னவை யாவும் இதுவரை யாரும் சொல்லாதவை. வள்ளுவன் சொன்னதையே ஒவ்வொருவரும் சிறிது மாற்றி அல்லது அப்படியே சொல்கின்றனர்.''



## (11)

“சபையோர்களே, சபையில் கற்றவர்கள், அறிஞர்கள், பேரறிஞர்கள், பேராசிரியர்கள் எனப் பலதரப்பினரும் நிறைந்துள்ளனர். பேச்சாளரின் பேச்சுக்களை மதிப்பீடு செய்யுங்கள், விமர்சியுங்கள். நீங்கள் மதிப்பீடு செய்து விமர்சித்தாலும் பேச்சுக்களைத் திருத்தி நூலாக வெளியிடலாம். விமர்சனம் என்பது பெயருக்காகப் புகழுக்காகச் செய்யப்படுவதில்லை. திருந்துவதற்காகவே செய்யப்படுகிறது. அடுத்து வள்ளுவர் பொறை உடைமை பற்றிச் சொல்கிறார். பூமியானது வெட்டிக் கொத்தி தீய பொருளைத் தாட்டாலும் அதை எதிர்க்காது, ஏற்றுக் கொள்ளும். வெடிவைத்துப் பிளந்தாலும் ஏற்றுக் கொள்ளும். அதுபோல நல்லவர்களும் தமக்கு யாராவது பெரும்தீங்கு செய்தாலும் பொறுத்துக் கொள்வர். தமக்குச் செய்யப்படும் தீமைகளைப் பொறுத்துக் கொள்வதைவிட மறந்துவிடுவது தான் மேலானது. அறியாமையால்தான் ஒருவர் மற்றவர்களுக்குத் தீங்குகளைச் செய்கிறார். மனவுறுதியுள்ளவர்கள் எத்தகைய தீமைகளையும் மனம் கோணாது ஏற்பர். தீமை செய்வோரைத் தண்டிப்பது மிக மிக சுலபமானது. அதனால் வரும் இன்பம் அற்பமானது. ஒரு சில நாட்களில் அது பெரும் தீமையாக மாறிச் செய்தவரை வருத்தும். அதனால் யாருக்கும் தீங்கு செய்யாது வாழ்வதே அறமாகும். அவ்வாறு பொறுத்துக் கொள்பவர் துறவிகளைவிட மேம்பட்டவராவர். அவர்கள் கடவுளை நினைத்து நோன்பிருப்பவர்களைவிட மேலானவர்” என்கிறார் வள்ளுவர்.”

“ஒரு செயலைப் பற்றோடும், பயன்கருதியும் செய்யலாகாது. அப்படிச் செய்தால் அகங்காரம் இராது. அத்துடன் அச்செயலுக்குக் கர்த்தா தான் என்றும் எண்ணலாகாது. செய்யும் செயல்களில் பற்றில்லாமலும், எவ்வேளையிலும் திருப்தியுள்ளவனாகவும், எதையும் சாராமலும் செய்யப்படும் செயல்கள் பெரும் வெற்றியைத் தரும். அதனால் புகழும் கிட்டும். ஆசைகளை நீக்கி, மனதையும் உடலையும் அடக்கிக் கடவுளின் நினைவோடு செயலாற்றுபவனை எப்பாவமும் வந்தடையாது. இவற்றிற்கெல்லாம் மூலகாரணியாக இருப்பது பொறுமை. பொறுமையை இழந்த மனம் சுழற்காற்றில் அகப்பட்ட சருகுபோலாகிவிடும்”.

“சபையோர்களே, தூய்மை, ஞானம் என்பது பொறுமையைத்தான் குறித்து நிற்கிறது. அதற்கு ஒப்பானதாக எதையும் கூறமுடியாது. மன உறுதியுள்ளவர்களால் தான் இந்த ஞானத்தைக் கட்டிக்காக்க முடியும். அறிவில்லாதவர்கள், முயற்சியில்லாதவர்கள், சந்தேகப்படுபவர்கள், ஆசை உள்ளவர்களால் இந்த ஞானத்தைப் பெறமுடியாது. துணிவும், மனத்திடமும் தான் இந்த ஞானத்தின் எருவும் நீருமாகும். இந்த ஞானத்தைப் பெறாதவர்களுக்கு இவ்வுலக இன்பமும் இல்லை, அவ்வுலக இன்பமும் இல்லை. பொறுமை என்ற ஞானத்தைக் கொள்பவர்களைக் கர்மங்கள் பற்றிப் பிடிக்கா. கர்மத்தைப் பொறுமையே நிஷ்காமிய கர்மமாக்குகிறது.”



“விருப்பும் வெறுப்பும் இல்லாதவன் எதிலும் பற்று வைக்கமாட்டான். அவனுக்கு மண்ணுக்கும், பொன்னுக்கும், பெண்ணிற்கும் வித்தியாசம் தெரியாது. அத்தகையதோர் பொறுமைமிக்கவர்களாக இருப்பார்கள். சகல பந்தங்களிலிருந்தும் விடுபட்டவராவர். இந்த நிலையில்தான் அரவிந்தன் இருந்தார். அப்படி வாழ்ந்தும் அவர்மீது ஏராளமானோர் பொறாமை கொண்டிருந்தனர். அடிக்கடி அவருக்கெதிராக நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சிவானந்தனின் தந்தை பெரும் வர்த்தகர். அவரிடம் பாரவூர்த்திகள் பல இருந்தன. அவருக்கு நூற்றுக்கு மேற்பட்ட வர்த்தக நிறுவனங்கள் இருந்தன. அவர் விலைகளைக் கூட்டிக் கலப்படங்கள் செய்தாலும், அவ்வனத்தில் வேறு வியாபார நிலையங்கள் இல்லை. மேலும் யாராவது வர்த்தக நிலையங்களை அமைத்தால், இரவோடு இரவாக அவற்றைக் கொழுத்தி விடுவார். அவரிடம் ஏராளமான அடியாட்கள் இருந்தமையால், அவர் நினைத்தவற்றைச் செய்து வந்தார்”.

“வியாபாரத்தைத் தொடங்கியபோது அரவிந்தன் பொருட்களைத் தலைச்சுமையாகவே கொண்டு சென்று விற்பனை செய்து வந்தான். அதில் இலாபம் கிடைத்ததால் ஓலையால் ஒரு சிறு கொட்டில் அமைத்து வியாபாரத்தை ஆரம்பித்தான். நாட்செல்லச் செல்ல வனவாசிகளில் அதிகமானோர் அவனது வர்த்தக நிறுவனத்திற்குச் சென்று பொருட்களை வாங்கி வந்தனர். அதனால் அவன் தனது வர்த்தக நிலையத்தைப் பெருப்பித்தான். அவன் அவ்விடத்தைத் துப்பரவு செய்தபோது ஒரு பாம்புப்புற்று இருந்தது. அதனால் அவன் முருகேசனிடம் அதை சொன்னான். முருகேசன் வந்து பார்த்துவிட்டு, “அரவிந்தா, நாம் சின்னஞ்சிறு பூச்சிகளுக்குக்கூடத் துன்பம் செய்தலாகாது” அதனால் இவ்விடத்தை விட்டுவிட்டு வேறு இடத்தில் கட்டு” என்றார்.

“அவரின் சொல்லைக்கேட்ட அரவிந்தன் பாம்புப்புற்றுக்கு நூறு யார் தள்ளி ஒரு கட்டிடத்தை அமைத்து ஓலையால் வேய்ந்தான். தினமும் பாம்புக்குப் பால் வைப்பான். அதைக் கண்ட அவனது வாடிக்கையாளர்களும் பால் வைப்பர். பூக்களால் அர்ச்சிப்பர். நாளுக்கு நாள் அவனது வியாபாரம் பெருகியது. அவனை விட்டு வைத்தால் தனக்கு ஆபத்து என்றுணர்ந்த சிவானந்தன் தனது அடியாட்களை அன்று அழைத்துச்சென்று அரவிந்தனது வியாபார நிலையத்தை தீ வைத்து அழிக்க எண்ணினார். அதற்காக தனது கையாட்களுடன் அரவிந்தனது வியாபார நிலையத்திற்குச் சென்றார்”.

“பாம்புப்புற்றைக் கடந்து சென்றபோது நாகம் பெரிதாகச் சீறியது. சிவானந்தனும், அவனுடன் சென்றவர்களும் பேசாது நின்றனர்.” ஐயா, அரவிந்தன் பெரும் பக்திமான், நேர்மையானவன், நாகத்தை வணங்குபவன். அதனால் தான் நாகம் வெளிப்பட்டு இருக்கிறது. வாருங்கள் திரும்பிச் செல்வோம்” என்றது பகீரதன் என்ற நரி.



“உனக்கென்ன விசரே, பாம்பாவது, பழிவாங்குவதாவது. அது சீறுவது எனக்குக் கேட்கவில்லை. பேசாமல் வா” என்றான் சிவானந்தன். பகீரதன் அவ்வாறு சொன்னமையால் கூடவந்த இருவர் பயத்தால் பின் வாங்கினர். சோமசுந்தரமும் முன்னே சென்றார். திடீரென்று சோமசுந்தரம், “பாம்பு கடித்து விட்டது” என்று பலமாகக் கத்தினான். அவன் பலமாகக் கத்திய சத்தத்தைக்கேட்ட அரவிந்தன், அங்கு வந்தான். யாரோ வரும் சத்தத்தைக் கேட்ட சிவானந்தன் ரோச்சை அடித்துப் பார்த்தான். அரவிந்தனும் வேறு சிலரும் வந்து கொண்டிருந்தனர்”.

“அரவிந்தனைக் கண்ட சிவானந்தன் சொன்னான், “அரவிந்தா, இரவில் கனவில் வந்து பாம்பு என்னைப் பயமுறுத்துகிறது, அதனால் அதனைக் கும்பிட்டு விட்டுப் போகலாமென்று வந்தேன். சோமசுந்தரம் பயத்தால் கத்தி விட்டான். பாம்பு கடித்ததற்கான காயம் எதுவும் இல்லை” என்றான் சிவானந்தன்.

“அதைக் கேள்விப்பட்ட முருகேசன் சொன்னார்”, அரவிந்தா, சிவானந்தன் நல்லவனல்ல. அவன் ஏதோ ஒரு திட்டத்துடன் தான் வந்திருப்பான். அவனை விட அவனது மனைவி கொடியவள். அவளுக்குத் தனது சகோதரர்களே நல்லாய் இருப்பது பிடிக்காது. எனக்கென்றால் அவன் ஏதோ ஒரு சதித்திட்டத்துடன் தான் வந்திருப்பான் எனத் தோன்றுகிறது” என்றார்.

“ஐயா வாழ்க்கையில் பணம், பொருள் யாவும் வருவது சகசம். அவை வந்தபோது பொறுமையாக இருந்து தனது கடமைகளை விதிப்படி செய்பவர்கள் தான் உயர்ந்தவர்கள். ஒருவர் நினைப்பவை எல்லாம் நடந்தா விடுகின்றன.? சிவானந்தன் இந்த வனத்தில் உள்ள பலருக்கு ஆராயாது தீமைகளையே செய்து வருகிறான். ஒழுக்கமாகவும், பொறுமையாகவும் வாழ்பவனுடன் தெய்வமும் கூடி வாழ்கிறது என்று நீங்கள் சொல்வீர்கள். அவனுக்குப் பிறருக்குத் தீமைகள் செய்வது தான் இலாபம். எனக்குப் பிறர் எந்தத் தீமையைச் செய்தாலும், அதைப் பொருட்படுத்தாது வாழ்வது தான் எனக்கின்பம். விதிப்படிதான் யாவும் நடக்கும். அவன் தீமைசெய்தாலும் நான் அதைப்பற்றிச் சிந்திக்க மாட்டேன். ஏனென்றால் அது அவனது குலப்பண்பு” என்றான் அரவிந்தன்.

“சபையோர்களே, இவற்றிற்கெல்லாம் மூலகாரணமாக அமைவது பொறாமை. யாரும் ஒருவன் மற்றவர்கள் மீது பொறாமை கொள்ளாது வாழ்வதே மேலான வாழ்வாகும். பொறாமை என்ற கொடிய தீ நல்லவற்றையெல்லாம் அழித்துவிடும். அத்தகைய பொறாமை பகைவனைவிடக் கொடியது. பொறாமை கொண்டவன் தனக்குத் தானே பகைவனாகிறான். பொறாமை கொள்ளாதவன் தன்னைத்தானே வென்றவனாகிறான். சுத்தமான மனமுடையவன் நண்பர், பகைவர், தன்னை மதிக்காதவர்கள், சுற்றத்தார்கள், தீயவர்கள் என்று யாரையும் ஒதுக்கி வைக்கமாட்டான்.



அவன் உள்ளத்தையும், உடலையும் அடக்கி, பற்றுக்களை நீக்கி, தனக்கென எப்பொருட்களையும் ஒதுக்காதவனாக வாழ்வான். அவனது மனம் எப்போதும் ஒடுங்கியே இருக்கும்''.

''சபையோர்களே, விதியை மாற்ற முடியாது. விதி என்பது ஒவ்வொருவரும் செய்யும் செயல்களேயாம். சாதாரணமாக இதை விளக்குவதானால், ஒருவன் மாமரத்தை நட்டுப் பராமரித்தால் அது மாங்காயைத்தான் அவனுக்குக் கொடுக்கும். தேங்காயைக் கொடாது. செயல்களை வித்துக்கள் என்பார்கள். எந்த வித்தை நட்டால் எது முளைக்குமோ, அது போல எந்தச் செயலைச் செய்தால் என்ன பயன் கிடைக்குமென்பதை வித்துக்குள் மரங்களைப் புகுத்தியதுபோலச் செயல்களுக்குள்ளும் இறைவன் பயன்களைச் செலுத்தியுள்ளான். வித்துக்குள் மரங்களைக் காணமுடியாததுபோலச் செயல்களுக்குள் பலன்களைக் காண முடியாது. ஆனால் வித்திற்குள் என்ன மரம் உள்ளதென்று எல்லோருக்கும் தெரிவதுபோலச் செயல்களுக்குரிய பயன்கள் என்னவென்றும் எல்லோருக்கும் தெரியும். தெரிந்தும் உணர்வாரில்லை, பட்டும் தெளிவாரில்லை''.

''இத்தகைய ஒருவர்தான் சிவானந்தன். சோமசுந்தரம் அவரது செயல்களுக்கு எல்லாம் துணை செய்பவர். ஆரம்பத்தில் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசையால் அவரோடு சேர்ந்து, அவர் சொல்லும் செயல்களைச் செய்யுமாறு தூண்டுவார். சிவானந்தனுக்கு சோமசுந்தரத்தின் மீது பெரும் நம்பிக்கை இருந்தது. அதனால் சோமசுந்தரம் எதைச் சொன்னாலும் செய்து விடுவார். ஆனால் இப்போது அவரது மனம் சற்றுத் தடுமாற ஆரம்பித்தது. எப்படித்தான் திட்டமிட்டு அரவிந்தனுக்கு எதிராகச் செயற்பட்டாலும், அதை நிறைவு செய்ய முடியவில்லை. சிவானந்தனுக்குப் பெட்டியில் கற்களையிட்டுக் கட்டிக் கொடுக்குமாறு சொன்னவர் சோமசுந்தரம். பெட்டியை வாங்கித் திறந்து பார்த்தபோது தங்கக் கட்டிகளாகவும், மாணிக்கக் கற்களாகவும் இருந்தவை யாவும், பின்பு கற்களாக மாறியதால், சோமசுந்தரத்திற்குப் பயம் உண்டானது''.

''அவரால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. படுத்தால் கனவில் நாய் வந்து துரத்திக் கடிக்கிறது. அதனால் காட்டுப் பிள்ளையார் கோவில் பூசாரியான கஜேந்திரன் என்ற யானையிடம் சென்றார். சிவானந்தனுக்கு கடவுள், விதி என்பவற்றில் நம்பிக்கை இல்லை. அதனால் அவர் கோவில்களுக்குச் செல்வதில்லை. அதனால் சோமசுந்தரமும் அவரைப் போலவே வாழ்ந்து வந்தார். அன்று அவர் கோவிலுக்கு வந்தது கஜேந்திரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அத்துடன் என்நேரமும் அவருடன் கூடத்திரியும் சிவானந்தனைக் காணாமையால் ஏதோ ஒரு மாறுதல் நடந்துவிட்டதென்று கஜேந்திரன் நினைத்தார்''.

''சோமசுந்தரம் விரைவாக வந்து கஜேந்திரனின் கால்களில் விழுந்து விம்மி விம்மி அழுதார். ''சுவாமி, என்னுடைய விதி என்னைப் பிடித்தாட்டுகிறது. என்னால்



அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இதற்கொரு பரிகாரம் செய்யுங்கள்'' அழுதார் சோமசுந்தரம்.

''மகனே, விதியை ஒவ்வொருவரும் தாமே உருவாக்கிவிட்டு, அதற்கும் தமக்கும் தொடர்பில்லாதபடி பேசுகிறார்கள். இது மிகப்பெரிய தவறு. தீய செயல்களை மனதால்கூட நினைக்கக் கூடாது. மாறாக நினைத்தால் அத் தீயசெயல்கள் மனதை ஆட்கொண்டுவிடும். பின் மனதை விடுவிக்க முடியாது. நல்லனவற்றை மட்டும் செய்யும் அரவிந்தனுக்கு எப்போதாவது துன்பம் வந்ததா.....? அவனது செயல்களை கடவுளே விரும்பி அவனோடு கூட இருந்து உதவி செய்கிறார். அதுபோல நீயும் நல்லவற்றை மட்டும் செய். உனக்கும் கடவுள் உதவுவார்''. என்ற கஜேந்திரன் கண்களை மூடினார்.

''அவர் கண்களை மூடித் திறந்தபின்பு தான் அவருடன் கதைக்க முடியும். காட்டுப் பிள்ளையாருக்கு காலையில் பூசை செய்து விட்டார். ஒரு நாளைக்கு ஒரு தரம்தான் பூசை செய்வார். பூசை முடிந்ததும் யாருடனாவது பேசுவார். அதன்பின் கண்களை மூடினால் சில சமயங்களில் மறுநாள் பூசை நேரம் தான் கண்களைத் திறப்பார். அவரைத் தரிசிக்க வரும் பக்தர்கள் அவருடன் பேசுவதற்காகக் காத்திருப்பார்கள். அவர்களின் தேவைகளை அவரின் உதவியாளர்கள் பூர்த்தி செய்வர்''.

''இரவு பத்து மணிக்கு கஜேந்திரன் கண் விழித்தார். ''சோமசுந்தரம், உனது மனதில் பொறாமை என்ற அழுக்குச் சூழ்ந்து உன்னைத் தன்போக்கில் ஆட்டிப் படைக்கிறது. பொறாமைதான் எல்லாத் தீய செயல்களுக்கும் காரணமாக அமைவது. அது கொலையைக்கூடச் செய்விக்கும். நீயும் சிவானந்தனும் பலமுறை அரவிந்தனைக் கொன்றால் தான் நாம் வாழலாம் என்று நினைத்தீர்கள். நினைவுகளும் செயல்களுள் தான். செயல்களுக்கு உண்டான பாவம் நினைவுகளுக்கும் உண்டு. அதனால் உனது அழுக்கடைந்த மனதைச் சுத்தமாக்க வேண்டும். மனதைச் சுத்தமாக்குவது தியானம். அதனால் மடத்திற்கு வா, எனது சீடர்கள் உனது மனத்தைச் சுத்தப்படுத்துவர். சுத்தமான மனதில் தான் நல்லெண்ணங்கள் உருவாகும். அளவாக உண்டு, மனதை அடக்கித் தியானம் செய். உறக்கத்திலும், விழிப்பிலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவர்களால் தான் தியானம் செய்ய முடியும். தியானத்தால் மனம் ஒரு நிலைப்படும். அந்நிலை காற்று இல்லாத இடத்தில் வைத்த தீபம் போன்றது. அந்நிலையில் மனம் ஒடுங்கும். அந்நிலை ஏற்பட்டால் மனதில் தீய எண்ணங்கள் உருவாகாது. மனம் பேதலிக்காது. மன உறுதியுடன் தொடர்ந்து தியானத்தில் ஈடுபட்டால் ஐம்புலன்களும் அடங்கிவிடும்''.

''பற்றுக்களுக்காட்பட்டு அலையும் மனம் எச் செயலின்மீது பற்று வைக்கிறதோ அதை அதிலிருந்து மீட்டெடுக்க தியானம் உதவி செய்யும். தியானத்தால் சுத்தமடைந்த மனதில் பொறாமை உண்டாகாது. பொறாமைதான் எல்லாவற்றிற்கும்



காரணி. அதனால் நீ மடத்திற்கு வா'' என்றார் கஜேந்திரன். சபையோர்களே, உங்களுக்கு எந்தவொரு பிரச்சினை ஏற்பட்டாலும் தியானம் செய்யுங்கள். அது அற்றுச் சென்றுவிடும்'' என்றார். அடுத்து மதியநேர இடைவேளை விடப்பட்டது.

**(12)**

மதியநேர இடைவேளை முடியுமுன்பே சபையோர் வந்து மண்டபத்தில் அமர்ந்தமையால், கதிரேசன் வந்து பேசினார். ''சபையோர்களே, குறிக்கப்பட்ட நேரத்திற்கு முன்பே வந்து கூடியமையால் மகாநாட்டைத் தொடக்கி வைக்கிறேன். அடுத்து மிகமிக அழகாக அனைவருக்கும் விளங்கும்படி பேசிச் சபையோரைக் கவர்ந்தீர்க்கும் காயத்திரிதேவி என்ற கிளியார் பேசுவார். அவர் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் பேசுபவர். அவரது பேச்சைக் கேட்க, அவர் பேசுமிடமெங்கும் ஏராளமானோர் செல்வர். அடுத்து அவர் பேசவுள்ளமையைத் தெரிந்தமையால் உணவைக்கூட ஆற அமர்ந்து உண்ணாமல் நேரத்திற்கே வந்துவிட்டீர்கள். அதற்கும் ஒரு குறள் சொல்ல வள்ளுவன் தயங்கவில்லை. செவிக்கு உணவுள்ளபோது வயிற்றுக்கு உணவு தேவையில்லை என்று வள்ளுவன் சொன்னது உண்மையானது என்று இன்று புரிந்து கொண்டோம். அந்தப் பெருமகிழ்வுடன் காயத்திரிதேவி அம்மையாரை மேடைக்கு அழைக்கிறேன்'' என்று கூறிய கதிரேசன் தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

காயத்திரிதேவி பறந்துவந்து பேச ஆரம்பித்தார். ''சபையோர்களே, எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் எல்லோரும் கடவுளை வாழ்த்தி வணங்கியபின்பு பேசத் தொடங்குவார்கள். நான் கடவுளை வணங்கியபின் வள்ளுவரின் கடவுள் வாழ்த்தைப் பாடிவிட்டே பேச்சைத் தொடங்குவேன். சிவன் தான் வள்ளுவராக அவதாரம் எடுத்தார் என்பது எனது தீர்க்கமான முடிவு. அதனால் சபையோர் குறை நினைக்காது எழுந்து நின்று வள்ளுவனை வணங்குங்கள்'' என்றதும் பக்கவாத்தியக் கலைஞர்கள் மேடைக்கு வந்தனர். காயத்திரி கண்களை மூடிப்பாட ஆரம்பித்தாள். இனிமையான குரலும், அதற்கேற்ற இசையும் மண்டபமெங்கும் பரவியது. படிப்படியாக அனைவரும் கண்களை மூடினர். கதிரேசன் மெய்மறந்து போனார். அப்படியான ஓர் இசையை அவர் இதுவரை கேட்டதில்லை. பாடல் முடிந்தபின்பும் அனைவரினதும் செவிகளில் அந்த இனிமையான பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது''.

''அன்பானவர்களே, வள்ளுவனது குறள்கள் முக்காலத்திற்கும் பொருத்தமானவை. அத்துடன் கடவுளால் படைக்கப்பட்ட அண்டங்கள் அனைத்திற்கும் பொருத்தமானவை. அதனால்தான் உலகெங்கும் வாழும் பல்வேறு மொழியைப் பேசும் பல்வேறு நாட்டினரும் திருக்குறளைத் தத்தம் மொழிகளில் மொழிபெயர்த்துப் படிக்கின்றனர். இது தமிழருக்குக் கிடைத்த பாரிய வெற்றியாகும். தமிழில் இருந்து பதினாறு மொழிகள் தோன்றின என்று திருமந்திரம் கூறுகிறது. அத்திருமந்திரம் கூறும் நீதிக்கருத்துக்கள் அனைத்தையும், வள்ளுவர் குறளாகச் சுருக்கிச் சொல்கிறார். இதைப்



பலர் ஏற்கமாட்டார்கள். திருமந்திரத்தை அதன் உரையை உணர்ந்து படித்தால்தான் அதன் உட்பொருளை உணரலாம்''.

''திருமந்திரத்தைத் தமிழறிஞர் முழுமையாக ஆய்வுசெய்து எழுதியுள்ளார். அதை ஒருமுறை படியுங்கள். திருக்குறளில் உள்ள 1330 குறள்களும் சொல்லாமற் சொல்லுவது ஒழுக்கம் பற்றியே. ஒழுக்கம் உயிரினும் மேலானது என்று சொல்லும் வள்ளுவன் ஒவ்வொரு குறளிலும் ஒழுக்கத்தைப் பற்றிச் சொல்கிறான். ஒழுக்கமாக வாழ்பவரிடம் போட்டி, பொறாமை, அவா, சினம், மகிழ்வு, பக்கம் சார்தல் என்பன இராது. ஒழுக்கமில்லாதவர்களிடம் மேற்சொன்னவை இராது. அதனால் தான் வள்ளுவன் மேற்சொன்ன ஒவ்வொன்றையும் தனித்தனி அதிகாரங்களாகக் கூறியுள்ளார்''.

''பாண்டவர்கள் ஒழுக்கசீலர்களாக வாழ்ந்தமைக்குத் தருமனே காரணமாவான். சந்தணமரத்திற்கு அருகே உள்ள மரங்கள் யாவும் சந்தணவாடை வீசும். அதற்குக் காரணம் சந்தண மரத்திலுள்ள மாறாத தன்மை. ஒரு பொருள் தனது இயல்பை மாற்றினால், அப் பொருளின் சகல நடவடிக்கைகளும் மாறும். ஓர் உயிர் ஒழுக்கத்திலிருந்து மாறுபடுமானால் அதனுடன் இயல்புகளும் மாறிவிடும். ஒழுக்க மீறுதலுக்குக் காரணம் ஆசை என்ற பற்று. மனம் ஒரு பொருளின்மீது ஆசைகொண்டால், அவ்வாசை பேராசையாக மாறிவிடும். பேராசையான அவாவை நீக்கமுடியாது. அதனால் பற்றற்று வாழப் பழக வேண்டும். உள்ள பொருள் ஒன்று. அது கடவுளாகும். எல்லாப் பொருட்களிலும் கடவுள் வீற்றிருக்கிறார் என்று எண்ணுபவர்கள் கடவுளின்மீது பற்றுக் கொள்வார்களே தவிரப் பொருளின்மீது பற்றுக் கொள்ளார். அத்தகையோர் இன்பத்தையும், துன்பத்தையும் எப்போதும் சமமாகவே கொள்வர். மனம் பலவீனமானது, அலையும் தன்மை கொண்டது, வலிமையற்றது, கனத்திற்குக்கணம் மாறும் தன்மை கொண்டது. அதனால் அதை அடக்கப் பயிற்சியும், மன வைராக்கியமும் வேண்டும்.

''மனதை அடக்கமுடியாதவர்கள் எச் செயலிலும், வெற்றியடையமாட்டார்கள். திருப்திப்படவும் மாட்டார்கள். மனதை அடக்கியவனுக்கே சகல ஐஸ்வரியங்களும் கிட்டும். ஒழுக்கமுள்ளவன் எப்போதும் நலஞ்செய்பவனாகவே இருப்பான். அவனுக்கு இம்மையிலும், மறுமையிலும் துன்பங்கள் வந்தணுகாது. அவன் ஒருபோதும் துன்பப்பட்டதில்லை. அவன் பூவுலகில் வாழ்ந்தாலும் தேவரிலும் மேலான ஞானியாவான். அப்படியான ஒருவரைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்லலாமென நினைக்கிறேன்''.

''இங்குவாழும் அரவிந்தனின் இளைய சகோதரனான சுந்தரலிங்கம் எமது வனத்தில் வாழ்கிறார். பெரும் வர்த்தகர். ஏரானமான தோப்புகளுக்கும், சேனைகளுக்கும், வயல்களுக்கும் சொந்தக்காரர். எனினும் அவை எதுவும் தன்னுடன்கூட வரப் போவதில்லை. நான் செய்யும் தர்மம் தான் என்னுடன் கூட வரும் என்று சொல்பவர். அவருக்கு எங்கெங்கு எவ்வளவு நிலம் இருக்கிறதென்று தெரியாது. அவர் வாழ்ந்து



வரும் வேதவனம் என்ற காட்டின் நடுவே ஒரு பெரிய குளம் உள்ளது. அதன் அருகில் நாகரத்தினத்திற்கு ஒரு தென்னந்தோப்பு இருந்தது. அத்தோப்புக்கு நாகரத்தினம் செல்வதில்லை. ஊழியர்கள் தான் சென்று வேலை செய்வர். தேங்காய்களைப் பறித்து விற்பனை செய்வர். அவர் தமது ஊழியர்களுக்குச் சொல்வார், ‘‘ஒருவன் நடுநிலையில்லாது பிறரது பொருட்களைக் கவர்ந்தால் அவனது குடும்பம் கெட்டழிந்துவிடும். அத்துடன் பழிக்கும் ஆளாகும். ஒழுக்கமாக வாழ்பவர்கள் பிறரின் பொருளை விரும்பமாட்டார்கள். பிறரின் பொருளைக் கவருதல் சிற்றின்பம். அது வரவிருக்கும் பேரின்பத்தை அழித்துவிடும். பிறரின் பொருளை விரும்புகின்றவர்கள் உயர்கல்வியைப் பெற்றாலும் அதனால் பாவமேமிகுந்து வரும். அத்துடன் அவர்கள் அழிந்து போவார்கள். பிறர் பொருளை விரும்பியடைந்தால் தான் கஷ்டபட்டுத் தேடும் பொருட்களும் அழிந்து விடும். பிறரின் பொருளை விரும்பாது ஒழுக்கமாக வாழ்பவர்களுடன் திருமகள் எப்போதும் கூடியிருந்து அவர்களுக்கு வரும் கஷ்டங்களைப் போக்குவாள். இன்பமாக வாழ்ந்து செய்யும் செயல்களில் வெற்றியடைய வேண்டுமானால் பிறரின் பொருளை விரும்பக் கூடாது’’ என்பார்.

‘‘அதனால் அவரின் ஊழியர்கள் எவரும் களவெடுப்பதில்லை. அவரிடம் கேட்டே பெறுவார்கள். குளக்கரையில் இருந்த தென்னந்தோப்புக்கு அருகே ராகவன் என்ற பன்றிக்கு நிலம் இருந்தது. அதில் ராகவன் தென்னைகளைப் பயிரிட்டிருந்தான். அன்று அவன் தனது தென்னந்தோட்ட வேலிகளை வெட்டி சுந்தரலிங்கத்தின் ஒரு பகுதியையும் சேர்த்து அடைத்து விட்டான். தேங்காய் பறிக்கும் போதுதான் அங்கே தொழிலாளர்கள் வருவார்கள். அங்கு வேலை செய்யும் ஸ்ரீ என்ற குரங்கு வந்து முன்பக்கத்தைப் பார்த்துவிட்டுச் சென்றுவிடும். அத்துடன் மிக மிக நேர்மையாக யாருக்கும் துன்பம் செய்யாது வாழும் சுந்தரலிங்கத்தின் தோட்டத்தில் யாரும் தேங்காய்களைக் களவெடுக்கமாட்டார்கள் என்றும் ஸ்ரீ க்குத் தெரியும்’’.

‘‘ஒரு மாதம் கழியத் தேங்காய் பறிக்கும் தொழிலாளர்களுடன் வந்த ஸ்ரீ தென்னந்தோட்டத்தின் ஒரு பகுதியை ராகவன் கைப்பற்றி அடைத்திருப்பதைக் கண்டு அதைக் கேட்டது. ராகவன் ஸ்ரீயுடன் சண்டைக்குப் போனான். அத்துடன் ராகவனின் பிள்ளைகள் பத்துப்பேரும் ஆயுதங்களுடன் வந்து ராகவனை வெருட்டினர். அதைப்பற்றிச் ஸ்ரீ பலமுறை சுந்தரலிங்கத்திற்குச் சொல்லியும், அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. ஒழுக்கமாக வாழும் ஸ்ரீக்கு ராகவன் செய்தது கோபத்தை வரவழைத்தது. அவர்களுடன் கதைக்கவும் முடியாது. சண்டைக்குப் போகவும் முடியாது என்று உணர்ந்த ஸ்ரீ தந்திரமாக அவர்களைத் துரத்த நினைத்தது’’.

‘‘நாகலிங்கத்தின் தென்னந்தோப்புள் ஒரு பெரிய வேப்பமரம் நின்றது. அதற்குக் கீழ் ஒரு கல்லை வைத்த ஸ்ரீ அம் மரத்தின் மீது முனி இருக்கிறதென்றும், அது இரவில் வெளிப்பட்டு உலாவுவதாகவும், அவன் வேலைக்குச் சேர்ந்தபோது ஒரு செய்தியைப் பரப்பியிருந்தான். சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன் பரப்பப்பட்ட அச்



செய்தியால் இரவு வேளைகளில் தென்னந்தோட்டத்திற்கு அருகாகச் செல்லும் பாதையால் மக்கள் பிரயாணம் செய்வதில்லை. ஸ்ரீ அட்டமி நவமி, அமாவாசைத் தினங்களில் நடுச்சாமத்தில் பந்தம் ஒன்றைக் கொழுத்திக்கொண்டு தென்னந்தோப்பில் நடமாடுவான். அதைப்பற்றியும் அவன் தனது நண்பர்களுக்குக் கூறியுள்ளான். தென்னந்தோப்பில் பந்தத்தைக் கொழுத்தி வைத்துவிட்டு தனது நண்பர்களை அழைத்து வந்து காட்டுவான். அதனால் அவன் இரவில் காவல் காப்பதில்லை''.

''அயலில் குடியிருப்போரும், தொழிலாளர்களும் வருடத்தில் ஒருமுறை முனியப்பருக்குப் பொங்கிப் படைப்பர். ஆரம்பத்தில் தனது தோட்டத்தில் கோவில் அமைப்பதை விரும்பாத சுந்தரலிங்கம் பின்பு முனியப்பரின் பக்தரானார். புதுவிடயங்கள் ஏதாவது தொடங்க விரும்பினால் அவர் முனியப்பரின் கோவிலுக்கு வந்து பூக்கட்டிப் பார்த்த பின்பே தொடங்குவார். ஸ்ரீ ஐந்தாவது தடவையாக சுந்தரலிங்கத்திடம் வந்தபோது அவர் சொன்னார். ''ராசுவா நீ ஒழுக்கமாக வாழ்பவன். அதனால்தான் துயரப்படுகிறாய். இவ்வுலகில் துயரப்பட வேண்டிய விடயங்கள் எதுவும் எனக்கு இல்லை. அத்தோப்பு முனியப்பரின் உடைமை. அவர் பார்த்துக் கொள்வார். இதற்காக உனது மனதை வருத்தாதே. உனக்கு முனியப்பர் மீது நம்பிக்கை இல்லையா....? நம்பிக்கை உள்ளவனாக இருந்தாய். அந்நிலை ஏன் எப்படி மாறியது. கவலைப்படாமல் செல். நடப்பவையாவும் நன்மையானவையே'' என்று கூறியபின் அவன் எதுவும் கதைக்கவில்லை''.

''இரண்டு தினங்கள் கழிய அத் தென்னந்தோப்பின் நடுவே உயரமான ஒரு தீப்பந்தம் தோன்றியது. அவ் வீதியால் சென்றவர்கள் அதைக் கண்டு பயந்து அலறினர். ராகவனும் பிள்ளைகளும் வெளியே வந்தனர். தீப்பந்தம் பிரகாசித்தபடி அவர்களது வீட்டைநோக்கி வந்தது. அதைக்கண்டு பயந்து நடுங்கியபடி ராகவனும் அவனது மனைவியும், பிள்ளைகளும் அவ்விடத்தைவிட்டு ஓடினர். அதைக் கேள்விப்பட்ட சுந்தரலிங்கம் தோப்புக்கு வந்தார். ராகவன் அவரின் கால்களைப் பற்றிப் பிடித்தவாறு பலமாக அழுதான். பின், ''ஐயா எனது தந்தை சொல்வார், பிறரின் பொருளைக் கவர்வதால் குடும்பம் கெட்டழியும், பாவமும், பழியும் வந்து சேரும். கவரப்பட்ட பொருள் உள்ள பொருளையும், அறத்தையும், புண்ணியத்தையும் அழித்துவிடும் என்பார்''. அது உண்மை என்பதைத் தெரிந்து கொண்டேன். அவர் எந்நாளும் திருக்குறளையே படிப்பவர். அப்படியானவருக்குப் பொருத்தமில்லாத நான் பிள்ளையாகப் பிறந்து விட்டேன்'' என்று அழுதான்.

அதைக்கேட்ட சுந்தரலிங்கம் சொன்னார், ''ராகவா, உனது தந்தையை எனக்குத் தெரியும். அவர் ஒழுக்கம் மிகுந்தவர். அவர் தான் முனியப்பரின் உருவில் வந்து உன்னைத் திருத்தியுள்ளார். அதனால் இனிமேலாவது நீ ஒழுக்கமாக வாழ்'' என்று கூறி அவனுக்குப் பணம் கொடுத்தார். ஸ்ரீ சொன்னான், ''ராகவாதான் தேடிய



சொத்தே தனக்குரிமையாகாதபோது பிறரிடம் இருந்து கவர்ந்த சொத்து உதவுமா? அல்லது கூட வருமா? நீ தேடியதையும் சேர்த்துக் கொண்டு சென்றுவிடும். தருமவானின் சொத்தின் பெறுமதி கூட அவருடன் சென்று அவருக்குச் சொர்க்கத்திலும் உதவும் என்று புராணங்கள் கூறுகின்றன. தருமவானுக்குப் பழியேற்படத் தெய்வம் ஒரு போதும் விடமாட்டாது'' என்றவன். இதை வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்து சொல்லிவிட்டார். அதனால் ஒழுக்கமாக வாழ்ந்து சுவர்க்கத்தை அடைந்து பேரின்பமாக வாழுங்கள்'' என்றார் காயத்திரிதேவி.

**(13)**

தொடர்ந்து காயத்திரிதேவி பேசினாள். ''சபையோர்களே, வள்ளுவனின் குறள்களைப்பற்றி தொடர்ந்து பேசிக் கொண்டே இருக்கலாம். குறளுக்கு முடிவில்லை. அதைப் பேசப்பேசப் புதுப்புது கருத்துக்கள் மனதில் உதயமாகிக் கொண்டேயிருக்கும். மனதை அடக்காதவர்களால் எச் செயலையும் பூரணமாகச் செய்ய முடியாது. அடங்காத மனத்துக்குள் தீய எண்ணங்கள் ஊற்றுப்போலப் பெருகிக் கொண்டேயிருக்கும். மனதை அடக்காதவின் நினைவுகள் சிதறுண்ட மேகம்போல அலைந்து கொண்டேயிருக்கும். நன்றும் தீதும், அறிவும் அறிவின்மையும் மனத்தில் இருந்தே வெளிப்படுகிறது. அதை வாக்கு என்று சொல்கிறோம். வாக்கு என்பது ஓர் ஆருயிரின் எண்ணங்களை வெளிப்படுத்தும் சாதனமாகும். அதனால் எந்த ஓர் உயிரும் தனது பேச்சால் ஏனைய உயிர்களைக் கவர முடியும், வெறுப்புண்டாக்கவும் முடியும். அதனால் பேசும்போது கவனமாகப் பேசுதல் வேண்டும். ஒரு சொல் தவறாகப் பேசினாலும், அது பல தீமைகளை உருவாக்கிப் பேசுபவனை அழித்துவிடும்''.

''ஓர் உடலை இயக்குவதும், இயங்க வைப்பதும் மனம். அதனால் மனம் எப்பொழுதும் பரிசுத்தமாக இருத்தல் வேண்டும். ஒருவர் கோவிலுக்குச் செல்லும்போது குளித்துப் புனிதமாகப் புனித உடையுடன் செல்கிறார். ஆனால் மனம் அசுத்தமாக இருக்கிறது. இறைவனை அடைய முற்படும் யோகிகளும், ஞானிகளும் உடையைப் பற்றியோ, உடலைப்பற்றியோ சிந்திப்பதில்லை. மனத்தைப் பற்றித்தான் சிந்திப்பார்கள். மனதை அலையவிடாது கட்டுப்படுத்து என்றுதான் கடவுளை வணங்குவர். பரிசுத்தமான மனதையுயை அடியார்களைத் தேடிக் கடவுள் சென்றதை நாம் புராணங்களில் படித்திருந்தும், மனதைக் கட்டுப்படுத்துவது பற்றி அக்கறை கொள்வதில்லை''.

''மனம் கொடிய பேயைவிடக் கொடியது. பேயின் மனதை மாற்றலாம். ஆனால் உயிர்களின் மனதை மாற்றமுடியாது. மனம் தான் நினைத்ததுதான் சரியானது, உண்மையானது, நீதியானது என்று எண்ணி முடிவெடுக்கும். இரவில் உறக்கத்தில் ஒடுங்கும் மனம் பகலில் உறக்கத்திலிருந்து விடுபட்டுச் செயலாற்றும் அப்போது மனம் சொல்வதை மூளை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும். ஆராயாது ஆசைப்பட்ட மனம் சொல்வதைச் செய்பவர்கள் துன்பங்களிலிருந்து மீள முடியாது அவதிப்படுவர். அதனால் தான் குறைகூறுதல், புறங்கூறுதல், பொறாமை கொள்ளல் என்பன மனதால் செய்யப்படும்



குற்றங்களாகும். செய்யும் பாவங்களில் கொடிய பாவம் புறங்கூறுதலாகும். ஏனென்றால் ஒருவர் அறச் செயல்களைச் செய்யாது வாழ்வதால் கேடு வராது. ஆனால் புறங்கூறுவதால் பெரும் கேடுகளும், துன்பங்களும் வந்து சேரும். அதைவிட ஒருவர் இல்லாதபோது அவரைப்பற்றித் தரக்குறைவாகப் பேசுவதும், அவரைக் கண்டதும் உயர்வாகப் பேசுவதும் அறத்தை மீறும் செயல்களாகும். இவ்வாறு போலியாக வாழ்வதைவிட இறப்பதே மேலானது என்று வள்ளுவர் கூறுகிறார்''.

''ஒருவன் மீது கோபமாக இருந்தால் அவரைச் சந்திக்கும்போது சுடுசொற்களால் ஏசலாம். ஆனால் அவன் இல்லாதபோது அவனைப் புகழ்ந்தும் பேசலாகாது. ஏனெனில் சொற்கள் மாறுபாடு அடையத் தக்கவை. ஒருவர் நல்லவரா தீயவரா என்பதை அவர் பேசும் பேச்சுக் காட்டிக் கொடுக்கும். ஒருவர் தன்னுடன் நெருங்கிப் பழகிப் பல உதவிகள் செய்பவரைப் பற்றிப் புறங்கூறினால், அவர் நெருங்கிப் பழகாது, உதவி செய்யாது வாழ்பவரைப்பற்றி எவ்வாறெல்லாம் கூறுவார்...? இப்படியானவர்கள் நல்ல நண்பர்களையும் பிரித்து விடுவார்கள். இப்படியானவர்களின் பாரங்களைச் சுமக்க வேண்டியது தனது அறம் என்று நினைத்துத்தான் நிலம் அவர்களைச் சுமக்கிறது. மற்றவர்களிடம் குறைகளையும், குற்றங்களையும் காண்போர் தனது குற்றங்குறைகளைக் கண்டு திருந்தி வாழ்ந்தால் பூமி சொர்க்கபுரியாகி விடும் என்று வள்ளுவர் கூறுகிறார்''.

''சபையோர்களே, தீய எண்ணங்களை உடையவர்கள், பயனில்லாத சொற்களைப் பேசி, பயனில்லாத செயல்களைச் செய்பவர்கள். முரண்பாடுடைய எண்ணத்தைக் கொண்டவர்கள். அறிவில்லாதவர்கள். எப்போதும் தமக்கு லாபம் அளிக்கும் என்ற எண்ணத்துடன் மற்றவர்களைப்பற்றிப் புறங்கூறி மகிழ்கின்றனர். இது நிரந்தரமான மகிழ்வல்ல. பெரும் துன்பங்களை வரவழைக்கும் தீயசெயல், நல்லவர்கள், கடவுளை நம்பியவர்கள், தமது செயல்களையும், பேச்சுக்களையும் நன்கு ஆராய்ந்த பின்பே பேசுவர், செயற்படுவர். அதனால் அவர்கள் நித்தமும் இன்பமாகவும், மகிழ்வாகவும் வாழ்வர்.''

''அரவிந்தன் மிகமிக நல்லவர். எல்லோருக்கும் பாகுபாடு காட்டாது உதவி செய்பவர். அவரை எல்லோரும் மதித்தபோது சிவராசா என்ற நரிக்கு ஏனோ அவரைப் பிடிப்பதில்லை. இருந்தபோதும் சிவராசா அரவிந்தனிடம் சென்று தனது வறுமைநிலையைக் கூறி உதவி பெற்றுச் சென்று மதுபானத்தைக் குடித்துவிடுவார். அவருக்கு ஐந்து பின்ளைகள், சிவராசா வீட்டைக் கவனிக்காமையால் சிவராசாவின் மனைவி பகீரதி அரவிந்தனின் உணவுக் களஞ்சியத்தில் துப்பரவுத் தொழிலாளியாகப் பணியாற்றி வந்தாள். அவளுக்கும், பிள்ளையளுக்கும் அரவிந்தன் உதவி செய்வார். சிவராசாவின் மூத்த மகள் ஆரணி பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கல்வி பயின்று வந்தாள். அதனால் அவளுக்கு வேண்டிய உதவிகள் அனைத்தையும் அரவிந்தனே செய்து வந்தார்''.



''அரவிந்தனிடம் பல குடும்பங்கள் உதவிபெற்று வந்தன. அரவிந்தனின் தந்தைவழி உறவினன் குமரன். அவன் இளமைக்காலத்தில் நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டான். அவனுக்கு மூன்று பெண்பிள்ளைகள். அவர்களை மிக மிக அக்கறையாக அரவிந்தன் கவனித்து வந்தார். சிவராசா அரவிந்தனிடம் பணம்பெற்றுக் குடிப்பதைக் கேள்விப்பட்டு மனம் வருந்திய பகீரதியும், ஆரணியும் அரவிந்தனிடம் சென்று, ''ஐயா, தாங்கள் தரும வள்ளல். அதனால் எல்லோருக்கும் உதவி செய்கிறீர்கள். எனது கணவரைப் போன்ற தீயவர்கள் உங்களிடம் பணம்பெற்றுக் குடித்துவிட்டு வந்து மனைவியையும், பிள்ளைகளையும் துன்புறுத்துகின்றனர். அதனால் எனது கணவனைப் போன்ற தீயவர்களுக்கு உதவி செய்யாதீர்கள்'' என்றாள். அதைக் கேட்டுக்கொண்டிருந்த முகாமையாளரான மணியம் என்ற வரிக்குதிரை, ''நான் இதைச் சொல்ல வேண்டும் என்று பல நாட்கள் நினைத்திருந்தேன். சொல்லப் பயமாக இருந்தது. சிவராசா உட்படப் பலர் உங்களிடம் பணத்தைப்பெற்றுக் குடித்துவிட்டுக் குடும்பத்தினரையும், வாசிகசாலையில் பத்திரிகை படிப்பவர்களையும் துன்புறுத்துகின்றனர்'' என்றார்.

''சில நாட்களின் பின் சிவராசா, அரவிந்தனிடம் வந்து தனது இளைய மகனுக்குப் பரீட்சைக்கட்டணம் கட்டக்காசு தருமாறு கேட்டான். ''நான் மணியத்திடம் வழமையாகப் பரீட்சைக்கட்டணம் கட்டுபவர்களைக் கட்டுமாறு கூறிவிட்டேன். நீ போ'' என்றார். அவன் போகாமையால் அரவிந்தன் சொன்னார், ''உழைப்பவனுக்குத்தான் பணம் சம்பாதிப்பதில் உள்ள கஷ்டம் தெரியும். நீ குடிப்பதற்காகப் பணம் கேட்கிறாய். தீயவற்றைச் செய்யாத ஒருவர் தீயவர்களுக்கு உதவினால் அவர்கள் செய்யும் தீமைகளுக்கும் உதவி செய்பவரே காரணகர்த்தாவாவார். அதனால் உனக்கு நான் இனிமேல் பணம் தரமாட்டேன் போ'' என்றார். அவனைப் பின்தொடர்ந்த சென்ற மணியம், ''பொய் சொல்லிப் பிழைப்பதைவிடப் பிச்சையெடு'' என்று கூறினான். சிவராசாவுக்குக் கடுங்கோபம் வந்தது. எனினும் பேசப் பயமாக இருந்தது. மணியம் எதைச் சொன்னாலும் அரவிந்தன் நம்பிடுவார். அதனால் மணியத்துடன் கோபப்பட்டால் ஆபத்து என்று நினைத்துப் பேசாமல் சென்று விட்டான்''.

''அதன்பின் சிவராசா மணியத்தின் மீதும், அரவிந்தன் மீதும் கோபம் கொண்டு பலரிடமும் அவர்களைப் பற்றிப் புறங்கூறிவந்தான். ஒருநாள் அவன் கள்ளுக்குடிக்கும் இடத்தில் பலர் கூடியிருந்த வேளை, ''மணியம் படுகள்ளன், அரவிந்தனை ஏமாற்றிப் பிழைக்கின்றான். ஏழைகளுக்குக் கொடுக்கும் பொருட்களில் ஒரு பகுதியைத் தான் எடுத்துவிடுவான். பணம் கொடுக்கும்போது குறைத்துக் கொடுப்பான் என்றும், அரவிந்தன் குமரனின் மனைவி சௌமியாவுடன் தொடர்பு வைத்திருப்பதாகவும் கூறினான். அன்று இரவு அவன் குடித்துவிட்டு வீதியால் வரும்போது வேகமாக வந்த ஒரு மோட்டார்வண்டி அவனை மோதிவிட்டுச் சென்றுவிட்டது. வீதியோரத்தில் இரத்த



வெள்ளத்தில் கிடந்த சிவராசாவை கண்டவர்கள் காணாதவர்கள் போலச் சென்றுவிட்டனர்’’.

“சிவராசா விபத்துக்குள்ளானதையும், படுகாயங்களுடன் வீதியில் கிடப்பதையும் கேள்விப்பட்ட மணியம் அதை அரவிந்தனிடம் சொன்னபோது, அவர் துடிதுடித்துப் போனார். “மணியம், வாகனத்தை எடுத்து வா. சிவராசாவைக் கொண்டு சென்று வைத்தியசாலையில் அனுமதிப்போம்’’ என்றார். அதைக்கேட்ட மணியம் தயங்கினார். அதை உணர்ந்த அரவிந்தன் சொன்னார், “மணியம் கொடிய பகைவன் ஆனாலும் அவன் உயிருக்குப் போராடுகையில் உதவாவிட்டால் செய்த புண்ணியம் அனைத்தும் பாவமாகிவிடும். ஒருவரைப் பழிவாங்கக்கூடாது. அதிலும் ஆபத்தான வேளைகளில் பழிவாங்க நினைப்பதே பாவம். ஒருவர் நினைப்பவற்றைக்கூட கடவுள் அறிவார். குற்றஞ் செய்பவர்களுக்குத் தண்டனை வழங்கவும், நன்மை செய்பவர்களுக்குப் பரிசு வழங்கவும் இறைவன் இருக்கிறார். அவர் பார்த்துக் கொள்வார், நீ வா’’ என்று கூறியபோது மணியம் எதையும் கூறவில்லை. “மணியம், புறங்கூறுதல் என்பது பொய்யானவற்றை மெய்யென்று தான் கண்டதாகக் கூறுதல். இதற்கு மன்னிப்பே இல்லை. பாவங்களிலெல்லாம் கொடியபாவம் புறங்கூறுதலாகும். நேற்று எனது மனைவியும், குமரனின் மனைவியான சௌமியாவும் வந்தனர். சௌமியா சிவராசா தன்னைப்பற்றிக் கேவலமாகப் பேசியதைச் சொல்லி விம்மி விம்மி அழுதாள். அதற்கான தண்டனையைத்தான் அறக்கடவுள் சிவராசாவுக்குக் கொடுத்துள்ளார்’’.

“அவர் கூறியது மணியத்திற்கு ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. அவருக்கு யாராவது துரோகம் செய்தால் கடவுள் பார்த்துக் கொண்டிரார் என்று அவருக்குத் தெரியும். அவர்கள் சென்றபோது அதிக இரத்தம் வெளியேறியமையால் சிவராசா மயங்கிக் கிடந்தார். அரவிந்தன் அறிவித்தமையால் நோயளரைக் காவிச் செல்லும் வண்டி வந்து அவரை ஏற்றிச் சென்றுவிட்டது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் மூன்று நாட்கள் சிவராசா உணர்வின்றி மயங்கிக் கிடந்தான். அவனுக்கு வேண்டிய வைத்தியச்செலவை அரவிந்தன் கொடுத்துவிட்டு மணியத்திற்குச் சொன்னார்.’’

“மணியம் நீ எனது கணக்கு வழக்குகளை எவ்வாறு நிதானமாகவும், நேர்மையாகவும் நடைமுறைப்படுத்துவதைவிட நூறுமடங்கு சிறப்பாக கடவுள் ஒவ்வொருவரினதும் கர்மங்களைப் பதிவு செய்து வைத்திருக்கிறார். ஒருவர் செய்வதைவிட நினைப்பதுதான் கொடிய பாவம். உனது மனம் இன்னும் சமாதானமடையவில்லை என்பதை உனது முகம் காட்டுகிறது. பயனுள்ள சொற்களை மட்டும்தான் பேச வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். ஆனால், பயனுள்ள சொற்களைத்தான் ஒவ்வொருவரும் நினைக்கவும் வேண்டும். ஏனென்றால் நினைவுதான் பின்பு செயலாக மாறுகிறது. பயன் இல்லாத சொற்களை எண்ணுவதும், சொல்வதும்



தீமை செய்வதைவிடக் கொடியது. அப்படி எண்ணினாலோ பேசினாலோ அறம் மனதில் இருந்து பிரிந்து சென்றுவிடும். அதனால் தீமைகள் தான் உண்டாகும். புகழும், செல்வமும் இல்லாது போய்விடும். சமூகத்தவர் இழிவாகப் பேசுவர். பயனில்லாத சொற்களை எண்ணுவதும், பேசுவதும் தர்மவானுக்குச் சிறப்புத் தராது. அதனால்தான் நான் எனக்குத் தீமை செய்தவர்களுக்கும் நன்மைகளைச் செய்கிறேன். மறந்தும் பயனில்லாத சொற்களைப் பேசுவதில்லை. அறிவுள்ள ஒருவர் பயனில்லாத சொற்களைப் பேசினால் நான் அதைப் பெரிதுபடுத்துவதில்லை. அத்துடன் கேட்டதாகக் காட்டிக் கொள்வதுமில்லை''.

''தீயவர்கள் தாம் பேசுவது தீய சொற்களன்று உணர்ந்தாலன்றித் திருந்த-மாட்டார்கள். அவர்களுக்குக் கடவுள் நேரில் வந்து சொன்னாலும், வந்தவர் கடவுள் இல்லை என்றே சொல்வர். அவர்களைத் திருத்த நினைப்பது கடலினுள்ளால் தீப்பந்தத்தைக் கொண்டு செல்வது போன்றது. மணியம் நீ உத்தமன், ஒழுக்கமானவன், அப்படியிருக்க பயனில்லாத சொற்களைப் பேசுவோரைத் தண்டிக்க வேண்டும் என்று ஏன் நினைக்கிறாய்?. சிவராசாவை உனக்குப் பல வருடங்களாகத் தெரியும். அவன் ஒரு நல்ல செயல் இதுவரை செய்திருக்கிறானா...? அல்லது நல்ல சொற்களையாவது பேசியிருக்கிறானா...? அப்படியிருக்க அவனது செயல்களை ஏன் நினைக்கிறாய். நல்லவர்களைப் படைத்த கடவுள்தான் தீயவர்களையும் படைத்துள்ளார். காலம் வரும்போது அவர்கள் திருந்துவர். அதைப்பற்றி நினைப்பது தவறு. அதை நினைத்தது உனது மனம் மாறியதை உனது முகமே காட்டுகிறது'' என்றார் அரவிந்தன்.

''மணியம், ஒருவன் எண்ணுவது தான் அவனது வாழ்க்கை. அதைத் தடுக்க முடியாது. அத்துடன் அவனுக்கு அறிஞர்கள், ஆசிரியர்கள், பெரியவர்கள் கூறுபவையெல்லாம் பயனற்ற சொற்களாகவே அமையும். நீ முன்னொரு முறை சிவராசா தனது தாய்க்குக் கடும் சுகயீனம் என்று சொல்லிக் காசு வாங்கிச்சென்று சூதாடியதை எனக்குச் சொல்லி, அவனுக்குக் காசு கொடுக்க வேண்டாம். நீங்கள் கொடுக்கும் காசு அவனைக் கெட்ட வழியில் வாழ வைக்கிறது என்றாய். அப்போது நான் உனக்குச் சொன்னவையைத்தான் இப்போதும் சொல்லவேண்டி இருக்கிறது. பெரும்பாலானவர்கள் தாம் நினைத்தவற்றை யார் சொன்னாலும் மாற்றமாட்டார்கள். நான் பணம் கொடுக்காவிட்டால் அவர்கள் தீயவழியைத்தான் நாடுவார்கள். அதற்காக நான் சொல்வது சரியென்று கூறவில்லை. சிவராசா மகளின் காப்பைத் திருடினான். மைத்துனனின் மாட்டைக் களவாக அவிழ்த்து விற்றான். ஊரில் களவெடுத்தான். இதற்காக ஊரவர்களும், காவல்துறையினரும் தண்டித்தபோதும் திருந்தினானா....? இல்லையே''.

''நல்ல பண்புள்ளவர்கள் தீய செயல்களைச் செய்யமாட்டார்கள். தவறிச் செய்தால் அதைச் சுட்டிக் காட்டினால் திருந்தி விடுவார்கள். பயனில்லாத சொற்களைப் பேசினால் தமது மானம், மரியாதை போய்விடும் என்று எண்ணுபவன் பயனில்லாத



சொற்களைப் பேசமாட்டான். மானம், மரியாதையைப் பற்றிக் கவலைப்படாதவனுக்கு செக்கும் சரி, சிவலிங்கமும் சரி என்பார்கள். அதனால் பயனில்லாதவற்றை ஒருபோதும் நினைத்துக் கலங்காதே. அது உனது மனதைக் கெடுத்து வாழ்க்கையைக் கெடுத்துவிடும்'' என்றான் அரவிந்தன்.

''நீங்கள் சொல்லும்போது அதை உண்மையானதாக எனது மனம் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் தீய சம்பவங்கள் நடைபெறும்போது, மனம் தடுமாறுகிறது. இனிமேல் இவ்வாறு நடக்காது''. என்றான் மணியம். இதுவரை நான் பேசியவற்றை அமைதியாக இருந்து கேட்டமைக்கு நன்றி. எனக்குத்தந்த நேரத்தைவிட அதிகமாக நேரத்தை எடுத்து விட்டேன். அதற்காக என்னை மன்னியுங்கள்'' என்று கூறிக் காயத்திரிதேவி தனது உரையை முடித்ததும், அன்றைய மகாநாடு நிறைவடைந்தது.

**(14)**

காலை ஏழு மணி. அன்றைய மகாநாடு எட்டு மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவித்திருந்த போதும், அன்றைய பேச்சாளரான மானார் எட்டுமணிக்கு முன்பே மகாநாட்டு மண்டபத்திற்கு வந்துவிட்டார். மகாநாடு தொடங்கினால் பேச்சாளர்களுடன் பேசமுடியாது. அதனால் பேரறிஞர் எப்போதும் நேரத்திற்கு வந்து மகாநாட்டில் கலந்து கொண்டவர்களிடம் மகாநாட்டைப் பற்றி விசாரிப்பார். அவர்களின் கருத்துக்களைக் கேட்டபின், அவர்கள் விரும்பியவாறு தனது பேச்சை மாற்றிப் பேசுவார். அவரது பேச்சை விரும்பிக் கேட்கும் ஆரூரன் என்ற மயில் பேரறிஞரிடம் வந்து அவரை வணங்கிவிட்டுச் சொன்னது, ''பேரறிஞரே, தாங்கள் பேசுமிடங்களுக்கெல்லாம் வந்து தங்களது பேச்சை விருப்புடன் கேட்பேன். இங்கு நடைபெறும் பத்துநாள் திருக்குறள் மகாநாட்டில் தாங்கள் மூன்று நாட்கள் பேசவிருப்பதாக அறிந்தேன். திருக்குறளை மட்டுமன்றிப் பல பழந்தமிழ் நூல்களையும் கற்றுள்ளீர்கள். தாங்கள் குபேர வனத்தில் 'திருமந்திரமே திருக்குறள்' என்று உறுதிபடப் பேசினீர்கள். பின் நீங்கள் பேசிய பேச்சு நூலாகவும் வெளிவந்தது. அப்படியான ஓர் எண்ணம் உங்களுக்கு எப்படி உருவானது?''

''இதில் விளக்கமாகக்கூற எதுவுமில்லை. ஒருவர் எதைப் பேசினாலும், அல்லது எழுதினாலும் அதை அர்ப்பணிப்புடன் செய்ய வேண்டும். நான் திருமந்திரத்தையும், திருக்குறளையும் பலமுறை படித்தேன். பலரும் அந்நூல்கள் பற்றி எழுதியவற்றைப் படித்தேன். பொருத்தமான கல்வியியலாளர்களுடன் கலந்துரையாடினேன். பேசும்போதும், எழுதும்போதும் கர்ம பந்தங்களில் இருந்து விடுபட வேண்டும். விடுபடாவிட்டால் பக்கம்சார வேண்டியநிலை உருவாகும். பக்கம் சார்ந்தால் நியாயமான கருத்துக்களைக்கூற முடியாது. அத்துடன் மனதில் உள்ளவற்றைப் பயப்படாது சொல்லுதல் வேண்டும். இம் மகாநாட்டில் பேசிய அனைவரும் துணிவு மிக்கவர்கள். தமது கருத்தை அச்சமின்றி வெளியிட்டனர். பல குறள்களின் உரை பிழையானது என்று இம்மகாநாட்டின் பேச்சாளர்கள் கூறினார்கள். பிழையான கருத்தென்றாலும் ஆணித்தரமாகக் கூறினால் அது ஆராயப்பட வேண்டும். அவ்வாறு



ஆராய்வோர் சிலர்தான். பலர் மௌனமாக இருக்கின்றனர். சிலர் கருத்துக்கூறப் பயப்படுகின்றனர்''. என்று பேரறிஞர் கூறிக்கொண்டிருக்கும்போது கதிரேசன் வந்து மேடையில் ஏறப் பேரறிஞர் 'இன்னொருமுறை சந்திப்போம்' என்று கூறி விடைபெற்றார்''.

மகாநாடு கதிரேசனின் தலைமையில் ஆரம்பமானது. கதிரேசன் தனது தலைமையுரையில் ''அன்பானவர்களே, மகாநாட்டின் ஆரம்பநேரத்தில் மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. பேச்சாளர்களின் உரையைத் தொழிலுக்குச் செல்லும் பலர் கேட்க விரும்புவதால் நாளை தொடக்கம் மகாநாடு பிற்பகல் நான்கு மணிக்கு ஆரம்பமாகும். தயவுசெய்து இதை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றார். அடுத்து பேரறிஞர் மானார் தனது உரையை ஆரம்பித்தார்.

''வள்ளுவர் சொல்லாமல் விட்டவை எதுவும் இல்லை. எந்த மொழியிலும் இல்லை. அதனால்தான் இன்று குறள் உலகமொழியாகி விட்டது. வள்ளுவர் தீவினை, அச்சம் என்ற அதிகாரத்தில் கர்மத்தைப் பற்றிச் சொல்கிறார். கர்மத்தைவிடச் சிறந்தது எதுவும் உலகில் இல்லை. கர்மத்தின் மூலம்தான் சகலரினதும் வாழ்வு நிர்ணயிக்கப்படுகிறது. நன்மை செய்பவர் கர்மத்தின் பயனடைவார்கள். தீமை செய்பவர்கள் பெரும் துன்பம் அடைவார்கள் என்று அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும் வள்ளுவன் மறைந்து நின்று கூறுகிறான். ஒவ்வொரு குறளும் கர்மத்தை அடிப்படையாகக் கொண்டது. கர்ம அனுட்டானங்களை முறையாகச் செய்தால் அதைக் கர்மயோகம் என்பர். உலகில் பிறந்த அனைத்து உயிர்களும் ஒரு கணப்பொழுது கூடச் செயலாற்றாது இருப்பதில்லை. உறக்கத்திலும் கனவுகள், நினைவுகள் மூலம் கர்மம் செய்யப்படுகின்றன. உயிர்கள் யாவும் தன்னை அறியாமலே பல கர்மங்களைச் செய்கின்றன. பொறிகளை மனவலிமையால் அடக்கிப் பற்றில்லலாமல் செய்யப்படும் கர்மங்கள் மேலானவை. அதன்மூலம் பிறப்புக்கள் அறும். ஒவ்வொரு உயிருக்கும் இறைவனால் நித்திய கர்மங்கள் வகுக்கப்பட்டுள்ளன. முறைப்படி கர்மம் செய்யாதவர்களால் தனது உடலைக்கூட நன்கு பேண முடியாது''.

''கர்மங்களாலேயே உயிர்கள் கட்டுண்டுள்ளன. அதனால் கர்மங்களை நீதியாகவும், முறைப்படியும் செய்தல் வேண்டும். இதை வள்ளுவர் மிகவும் விரிவாகக் கூறுகிறார். தீய செயல்கள் (கர்மங்கள்) தீயைவிடக் கொடுமையானவை என்று புரிந்து கொள்ளல் வேண்டும். தனக்குத் தீங்கு செய்பவர்களுக்கும் தீங்கு செய்யாதிருப்பது மேலான தர்மமாகும். வறுமைப்பட்டவர்கள், நான் மிகவும் வறியவன் என்று நினைத்து தீங்கு செய்யக்கூடாது. மாறாகத் தீங்கு செய்தால் வறுமை மேலோங்குமே தவிரப் புண்ணியம் கிடையாது. தீவினை கொடியது. ஒருபோதும் அழியாதது. அதனால் பிறவிகள் தோறும் கூடியிருந்து வருத்தும். கொடிய பகையை உடைய அரசர்கள் அதிலிருந்து தப்பி நண்பர்களாகலாம். ஆனால் தீவினையால் வரும்பகை பிறவிகள் தோறும் தொடர்ந்து வந்து வருத்தும். தீவினை என்பது செய்பவனது நிழல். அது அவனது காலடியில் தங்கியிருந்து துன்பங்களைக் கொடுக்கும். ஆணவமுடையவர்கள்



பிறருக்குத் தீங்குகள் செய்ய அஞ்சமாட்டார்கள். தன்னைத்தான் விரும்பி வாழும் உயிர்களும், தவறான வழியில் சென்று பிறருக்குக் கேடு செய்யாது இருப்பவர்களும் கடவுளுக்கு இனியவராவார். அவர்கள் கேடில்லாதவர்கள். இவ்வாறு வள்ளுவர் சொல்கிறார்’’.

‘‘ஆணவத்தால் திமிராக வாழ்வோர் தீமைகளை விருப்புடன் செய்வார்கள். மேருவனத்தில் நாகராசா என்றொரு கொடிய நாகபாம்பு வாழ்ந்து வந்தது. அதைக்கண்டு அது கடவுளின் வாரிசு என நினைத்து அவ் வனவாசிகள் அதைப் பக்தியுடன் வணங்குவர். அதற்குப் பால் வைப்பர். சிவபெருமானின் கழுத்தில் மாலையாக வீற்றிருக்கும் தனது பரம்பரையின் மகிமைகளை நாகராசன் அடிக்கடி ஏனைய பாம்புகளுக்குக் கூறி அவற்றை வெருட்டிக் கொண்டிருக்கும். அத்துடன் அவ்வனவாசிகள் எவ்வாறு வாழவேண்டும், என்னென்ன செய்ய வேண்டும் என்றெல்லாம் கட்டளையிட்டிருந்தது. தனது கட்டளைகளை மீறினால் கடிப்பேன் என்று வெருட்டியது. திடீரென்று அது முன்புபோட்ட சட்டங்களை மாற்றும். காட்டுக்கு வெளியே ஒரு சிவன்கோவில் இருந்தது. அவ்வனவாசிகள் வெள்ளிக்கிழமைகளில் சிவபெருமானுக்குப் பொங்கிப் படைப்பார்கள். ஒரு நாள் நாகராசன் ஒரு வாரத்திற்கு அந்தப் பாதையூடாக யாரும் பிரயாணம் செய்யக்கூடாதென்று கட்ளையிட்டுவிட்டு ராஜன் என்ற நரியைக் காவலுக்கு வைத்தது’’.

‘‘அப்பாதையால் வந்தவர்களை ராஜன் கடும்சொற்கள் பேசி விரட்டியது. அதனால் வந்தவர்கள் எல்லோரும் திரும்பி வேறொரு பாதையால் சென்றனர். ராஜனுடன் கதைக்கவே எல்லோரும் பயப்படுவர். அவர்கள் ஏதாவது சொன்னால் அதை ராஜன் மாறி நாகராசாவுக்குச் சொன்னால் நாகராசா மிகவும் பயங்கரமாகப் பழிவாங்கிவிடும். அதனால் எல்லோரும் நாகராசாவைவிட ராஜனுக்கே அதிகம் பயந்தனர். அதைப் பயன்படுத்தி ராஜன் வனவாசிகளை அச்சுறுத்தி வந்தது’’.

‘‘ஒருநாள் ஶ்ரீ, கோவிற்பூசாரியான கஜேந்திரனிடம் வந்து, பூசாரியாரே, இப்பாதையால் கோவிலுக்குச் செல்லக்கூடாதென்று கட்ளையிட்டிருக்கிறார். நாகராசாவுக்குப் பயந்து யாரும் இப்பாதையால் வருவதில்லை. இதற்கு ஏதாவது ஒரு தீர்வு வேண்டும்’’ என்றான். அதைக் கேட்ட பூசாரி சொன்னார், ‘‘தீயவர்களுக்குப் புத்தி சொல்ல முடியாது. நல்லவர்கள் தீய வார்த்தைகளை மறந்துங்கூடப் பேசமாட்டார்கள். இதற்கு நான் என்ன சொல்வது. நான் பூசை செய்யும் தெய்வத்திடம் தான் முறையிடலாம்’’ என்றபோது ஶ்ரீ சொன்னான், ‘‘எங்கும் நடைபெறுவதை இறைவன் அறிவார். நாமும் எத்தனையோ முறை முறையிட்டு விட்டோம் எதுவும் நடக்கவில்லை’’.

‘‘ஶ்ரீ எதற்கும் அவசரப்படாதை, அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். எதற்கும் ஒரு காலம் இருக்கு. காலம் கனிந்தால்தான் எதுவும் நடைபெறும். இதை உணர்ந்தவர்கள் மகிழ்வுடன் வாழ்வர்.



அசுரர்கள் எத்தனை கொடுமைகளைச் செய்தனர். இறுதியில் இறைவனால் அழிக்கப்பட்டனர். நாகராசா வனவாசிகள், மனிதர்களை அச்சுறுத்திப் பயமூட்டியதுபோலக் கடவுளையும் பயமுறுத்துகிறான். இதுவே அழவின் ஆரம்பம், பயப்படாதே'' என்றார் பூசாரி.

''ஒருவாரம் கழிந்தது. கஜேந்திரன் பூசை செய்யும்போதெல்லாம் நாகராசாவிடமிருந்து வனவாசிகளைக் காப்பாற்றுங்கள் என்று மன்றாடுவார். அன்று வெள்ளிக்கிழமை காலைநேரப் பூசைக்கு யாரும் வரவில்லை. கடந்த ஒரு வருடகாலமாகத் தீர்த்த யாத்திரை சென்ற சுகுணன் என்ற கீரி கோவிலுக்கு வந்தது. கோவிலில் பூசாரியைத் தவிர வேறு யாரும் இல்லை. அதனால் சுகுணன், பூசாரியை வணங்கி, ''முன்பு வெள்ளிக்கிழமைக் காலைப்பூசைக்கு நூற்றுக்கணக்கானோர் வருவார்கள். குறைந்தது பத்துப்பேராவது பொங்குவார்கள். இன்று வெள்ளிக்கிழமை ஏன் யாரும் வரவில்லை'' என்று கேட்க, பூசாரியார் நடந்தவற்றை விபரமாகச் சொன்னார். சுகுணன் எதுவும் பேசாது சென்று விட்டான். அது பூசாரியாருக்குக் கவலையாக இருந்தது''.

''சுகுணன் குளக்கரைக்குச் சென்று அங்கிருந்த சேற்றில் உருண்டு பிரண்டுவிட்டு நாகராசன் செல்ல வேண்டாம் என்ற பாதையால் சென்றான். காவலுக்கு நின்ற ராஜன், ''ஏய் நீ யார் வனத்திற்குப் புதியவனா..? இப்பாதையை எமது அரசன் தடை செய்துள்ளார். திரும்பிவந்த வழியே போ'' என்றான்.

''அதைக்கேட்டுக் கெக்கட்டம் விட்டுச் சிரித்த சுகுணன் 'ராஜாவென்றாலென்ன, மந்திரியென்றாலென்ன என்னைத் தடைசெய்ய முடியாது. ஒதுங்கி நில். இல்லாவிட்டால் உன்னையும் கொன்று உன் ராசைவையும் கொன்றுவிடுவேன்''.

''ராஜன் பயப்படவில்லை, சிறிது நேரம் இங்கேயே இரு, நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டு நாகராசாவிடம் சென்று நடந்தவற்றைக் கூறியது. அதைக்கேட்டுக் கோபங்கொண்ட நாகராசா பலமாகச் சீறியபடி சுகுணன் நின்ற இடத்திற்கு வந்தது. அங்கு நின்ற சுகுணனை நாகராசா அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அதனால் முன்னரைவிட ஆவேசத்துடன் சுகுணனை நெருங்கியது. சுகுணன் பதுங்கிவிட்டுப் பாய்ந்து, நாகராசாவின் கழுத்தைக் கடித்தது. ''நீ நான் சுயவுருவுடன் வந்தால் ஒளித்துவிடுவாய் என்பதற்காகவே உடலெங்கும் சேறு பூசி வந்தேன். அதனால் உனது காவலாளிக்கும் என்னை யாரென்று தெரியவில்லை'' என்றவாறு பிடியை இறுக்கியது. ''உன்னைக் கடவுளும் காப்பாற்ற மாட்டார். அசுரத்தனமான செயல்களைப் புரிந்த நீ உயிரோடு இருக்கக் கூடாது'' என்றான் சுகுணன். அதன்பின் வனவாசிகள் நாகராசா இறந்த நாளைத் திருநாளாகக் கொண்டாடினர்.''



**(15)**

தொடர்ந்தும் பேரறிஞரே உரையாற்றினார். ‘‘சபையோர்களே, வள்ளுவர் ஒவ்வொரு குறளிலும், ஒரு செய்தியைப் பலவாறு கூறுகிறார். ஒப்புரவு அறிதல், ஈகை என்றும் இரு அதிகாரங்களை எடுத்து நோக்கினால், நல்லவர்கள் தாம் தேடிய பொருட்கள் அனைத்தையும் பிறருக்குக் கொடுப்பதற்காகவே தேடுகின்றார்கள் என்றும், அப்பொருளைப் பயனை எதிர்பாராது கொடுக்க வேண்டும் என்றும் அதுதான் ஈகை என்றும் கூறுகிறார். இதை ஓர் ஒப்புரவாளனால் மட்டுமே கொடுக்க முடியும். உலகில் பயனை எதிர்பாராது எதையும் செய்வதில்லை. கடவுள் வழிபாடும், பூசைகளும், ஆராதனைகளும் செய்வோர் நேர்த்தி வைத்த பின்பே செய்கின்றனர். அதன் பின்னர் தாம் நினைத்தவை நடைபெறாவிட்டால் தெய்வங்களைக் குறைகூறுகின்றனர். எவ்வளவு செலவு செய்து பூசைகள், ஆராதனைகளைச் செய்தாலும், கர்மவினைப்படிதான் பயன் ஏற்படும். முற்பிறப்பில் செய்தவை பற்றி யாரும் அறியமாட்டார்கள். அவ்வாறிருக்க வினைப்பயன் எவ்வாறு வந்துசேரும் என்று கேட்பாரும் உளர்’’.

‘‘முற்பிறப்பென்று ஒருவர் பிறப்பதற்கு முன் எடுத்த பிறப்புக்கள் என்று கொள்ளாது நாற்பது வயதுடைய ஒருவர் குழந்தைப்பருவம் நீங்கிய பின்பு செய்த பாவங்கள் பற்றிய நினைவு உங்களிடம் இல்லையா? கர்மம் என்பது செயலைமட்டும் குறிப்பதல்ல. அது எண்ணங்களையும் குறிக்கிறது. ஒருவர் இன்னொருவரைத் தாக்கும்படி பணம் கொடுத்தால், பணத்தைப் பெற்றவர் மறைந்திருந்து தாக்கினாலும், தாக்குதலுக்கு உள்ளானவருக்குத் தன்னைத் தாக்கியதுயாரென்று தெரியும். அவருக்கே தெரிந்ததனால், அது கடவுளுக்குத் தெரியாமல் விடுமா...? பிறந்தபின் செய்கின்ற பழிபாவங்களும், செய்தவனை வந்து சேரும்’’.

‘‘ஒருவர் ஒரு நாயை வளர்த்து வந்தார். அது பொல்லாத நாய். அயலவர்கள் பலரைக் கடித்தது. அதனால் அவர்கள் அவருடன் முரண்பட்டனர். அதனால் அவர் அந்த நாயை ஐம்பது மைல்களுக்கு அப்பால் கொண்டுசென்று விட்டுவிட்டு வந்து நிம்மதிப் பெருமூச்சு விட்டார். மூன்று நாட்கள் கழிய அந்த நாய் திரும்பி வந்துவிட்டது. அத்துடன் அங்கு நாய் இல்லை என்ற துணிவோடு வந்தவரைக் கடித்தும் விட்டது. அது போன்றது தான் செயல்களும். ஒரு போதும் செய்தவனை விட்டுச் செயல்கள் நீங்கிச் செல்வதில்லை. பிறருடன் அன்பாகப் பழகி எல்லோருக்கும் உதவிசெய்து வாழ்பவனே உயிருள்ளவன் ஆவான். ஏனையோர் உயிரற்றவர்கள் என்கிறார் வள்ளுவர். இப்படியானவர்கள் எல்லா உறுப்புகளுக்கும் மருந்தாகப் பயன்படும் மரங்களுக்கு ஒப்பானவராவார். இவர்கள் தம்மிடம் பொருள் இல்லாதபோதும் உதவுவதற்குத் தயங்கமாட்டார்கள். அவ்வாறு உதவ முடியாமைதான் அந்த ஒப்புரவாளனுக்கு வந்த வறுமையாகும். இவர்கள் பிறருக்கு உதவமுடியாத ஒரு நிலை ஏற்பட்டால் தன்னை விற்றாவது உதவுவர்’’.



“உயிர்கள் சுயநலம் மிக்கவை. அவை தன்நலம் கருதாது எவற்றையும் கொடுப்பதில்லை. சிவானந்தன் தன்னைப் புகழ்ந்து பணிபவர்களுக்கு உதவிகள் செய்வார். அதற்குப் பிரதியுபகாரமாக எதையாவது கொடுக்க வேண்டும் அல்லது சொல்ல வேண்டும். எதையும் எதிர்பாராது கொடுப்பது தான் ஈகை. கடவுளை வணங்கும்போதும் இலஞ்சம் பேசப்படுகிறது. இன்னது செய்தால் இன்னது செய்வேன் என்று கடவுளிடம் பேரம் பேசுகின்றனர். பகைவரைப் பழிவாங்கச் சொல்லியும் இறைவனை வற்புறுத்துகின்றனர். ஒருவர் இரக்கு முன் அவரது முகபாவனையை அறிந்து கொடுப்பது தான் ஈகை. பசியை யாராலும் பொறுத்துக்கொள்ள முடியாது. அதனால் பசித்தவர்க்குதவுவது தவவலிமையைவிட மேலான வலிமையாகும். பொருளுள்ளவன் அதைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் இடம் பசித்தவனது வயிறாகும்”.

“கிடைத்த உணவைப் பகிர்ந்துண்பவனுக்கு பசி என்ற கொடி நோய் தாக்காது. அத்துடன் பசித்தவனுக்கு உணவு கொடாது விடுவது யாசிப்பதைவிட கொடுமையானதாகும். பசித்தவனுக்கு உணவு கொடுக்கமுடியாத நிலை ஏற்பட்டால் இறப்பது இன்பமானது” என்கிறார் வள்ளுவர்.

“ஒருவர் கடவுளை வணங்கும்போது கூட பரபரப்பும் விருப்பும் வெறுப்பும் இல்லாது வணங்குவதில்லை. கோரிக்கைகளை முன்வைத்து நிபந்தனைகளுடன் தான் பலர் வணங்குகிறார்கள். ஒருவர் எதைச் செய்தாலும் பற்றற்றுச் செய்தல் வேண்டும். பற்றுக்கள் எப்போதும் பாசத்தையே உண்டாக்கும். கர்ம பந்தங்களில் இருந்து விடுபட்டு, மனதை உறுதியாக்கி, கடவுளின்மீது பற்றுவைத்து வணங்குபவன் ஒருபோதும் அச்சப்படவேண்டியதில்லை. ஒருமுறை சிவானந்தன் கடலின் மத்தியில் இருக்கும் தீவில் இருக்கும் கோவிலுக்குச் செல்ல விரும்பினார். அங்கு வீற்றிருக்கும் இறைவன் தன்னை வணங்குபவர்களுக்கு நினைத்தவற்றையெல்லாம் கொடுப்பார் என்ற செய்தி பலகாலமாக நிலவி வருகிறது. அவர் கடற்கரைக்கு வந்தபோது சிலர் அக்கோவிலுக்குச் செல்வதற்காக வந்திருந்தனர். அவர்களுடன் சேர்ந்து சிவானந்தனும் புறப்பட்டார்”.

“அவர்கள் சிறிது தூரம் சென்றதும் காற்று வேகமாக வீசியது, மழை பெய்தது, கடல் அலைகள் குமுறிக் கொந்தளித்தன. அனைவரும் பயத்தால் கதற ஆரம்பித்தனர். தமது குலதெய்வங்களைப் பிரார்த்தித்தனர். சிவானந்தன் திகைத்துத் திகிலடைந்து போனார். தன்னால் தப்பமுடியாது என்று நினைத்தார். அவர் வட்டிக்குப் பணம் கொடுப்பவர். தானில்லாவிட்டால் அவர்கள் பெற்ற பணத்தைத் திருப்பிக் கொடுக்கமாட்டார்கள் என்றும், தனது முதலீடுகள் பற்றியும் எண்ணினார். படகில் வந்த ஒருவர் வெளியே நடப்பவைபற்றி எண்ணாமல் ஒரு புத்தகத்தைச் சுவாரஸ்யமாக வாசித்துக் கொண்டிருந்தார். மாலுமி, “இவ்வாறு கடல் பயணங்களின்போது பல சம்பவங்கள் நடைபெறும். ஆனால், ஆபத்து வராது, பயப்படாது உங்கள் குலதெய்வங்களை நினையுங்கள்” என்றான்”.



“அப்போது புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தவர் சொன்னார், “நண்பர்களே அழுவதாலோ, கத்துவதாலோ எந்தப் பயனும் உண்டாகாது. ஒருவரது தலைவிதி கருவிலேயே நிச்சயிக்கப்படுகிறது. நடப்பதை தடுக்கவோ, நடக்கவிருப்பதை உணர்ந்து கொள்ளவோ யாராலும் முடியாது. நான் வணங்கும் குலதெய்வம் என்னைக் காப்பாற்றும் என்று நம்புங்கள். கடவுள் எல்லா உயிர்களது உள்ளத்திலும் சமமாகவே இருக்கிறார். அவர் விருப்பு வெறுப்பு இல்லாதவர். அவரிற்கு நண்பர்களும் இல்லை, பகைவர்களும் இல்லை. அடியார்கள் ஒவ்வொருவரும் தம்மீது கடவுள் அன்பும், கருணையும் கொண்டுள்ளார் என்று நினைக்கிறார்களே தவிரச் செயற்படுகிறார்களில்லை”.

“இப்போது நீங்கள் எல்லோரும் செல்லும் தீவுதான் எனது இருப்பிடம். இரண்டு வாரங்களுக்கு முன் நான் ஊரிலிருந்து புறப்பட்டு ஓர் ஊருக்கு வந்தேன். நான் பிரயாணம் செய்யும்போது எதையும் எடுத்துச் செல்வதில்லை. எல்லாவற்றையும் அந்தந்த ஊரில் நான் வணங்கும் இறைவன் வைத்திருப்பான். என்னால் அல்லது உங்களால் என்ன செய்ய முடியும்...? இந்தப் புயலும் மழையும் நிற்கும். எல்லோரும் சுகமாகக் கோவிலுக்குச் செல்வோம். எம்மால் புயலையும், மழையையும் நிறுத்த முடியாது. ஆனால் அதைவிட மோசமான பசியைப்போக்க முடியும். பசி எவ்வளவு கொடியது என்று எல்லோருக்கும் தெரியும். அதனால் வீடு தேடிவந்து பசிக்கிறது என்று ஒருவர் கேட்டு முன்பயன் கருதாது, எதையும் உணராது போதனை செய்வதை நிறுத்துங்கள். பசிக்கு உணவு கொடாத பாவிகள் இருக்கும் இடத்தில் தீயவைதான் நடைபெறும்”.

“சென்றவாரம் ஒரு பெரும் தனவந்தரின் வீட்டுக்கு கடும்பசி காரணமாகச் சென்றேன். அவர் எனது உறுதியான உடலமைப்பைக் கண்டுவிட்டு, பலமுள்ளவன் இரப்பது பாவம், கொடுப்பது அதைவிடப் பாவம். நான் பாவத்தைச் செய்ய விரும்பவில்லை. நீ சாப்பிட்டுவிட்டு எனது வீட்டில் வேலை செய்வதானால் தருகிறேன்” என்றார். அதனால் நான் கதிரேசனின் வீட்டிற்குச் சென்றேன். அங்கு பலர் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். சபை பரிமாறுவோர் என்னைக் கண்டதும் மகிழ்வுடன் அழைத்துச் சென்று உணவு தந்தனர். திருமந்திரம் இரப்பவர்க்கெல்லாம் உணவு கொடு என்கிறது. உணவு கொடுக்கும்போது தகுதியோ தராதரமோ பாராதே. முகத்தைப் பார் அதில் பசியின் கொடுமை தெரியும் என்கிறது. அப்படியான ஒருவர் இங்கிருப்பதால்தானோ படகு ஆட்டம் காண்கிறது’ என்றான். சிவானந்தன் அவன் தன்னைத்தான் குறிப்பிடுகிறான் என நினைத்தார்”.

“இரவு பத்து மணிக்கு படகு அமைதியாகக் கரையை அடைந்தது. கடற்கரையில் சிலர் கூடிநின்றனர். படகில் இருந்து இறங்கியவர்களிடம் வந்து, “மதியமும், இரவும் சாப்பிட்டிருக்க மாட்டீர்கள். வாருங்கள் சாப்பிட்டுவிட்டுக் கோவிலுக்குச் செல்லலாம்” என்றனர். சிவானந்தன் எதுவும் பேசாது மடத்திற்குச் சென்று சாப்பிட்டுவிட்டு பணம் கொடுத்தார். அப்போது உணவு பரிமாறுபவன் சொன்னான், “ஐயா,



வருடம் முழுவதும் இங்கு வரும் பக்தர்களுக்கு வேண்டிய உணவு கொடுக்குமாறு பட்டணத்திலுள்ள அடியார்கள் எமக்கு கட்டளையிட்டுள்ளனர். பசியோடு இருப்பவனுக்கு உணவு வழங்குபவனும் இறைவன் தான். நாம் பணம் பெறுவதில்லை. நீங்கள் ஏதாவது தரும நிலையத்திற்கு அல்லது பெரும் துன்பப்படும் ஏழைக்குக் கொடுங்கள்''.

''யார் உணவுக்கான பணத்தை வழங்குகின்றார்கள், வருடம் முழுவதும் ஒரு நாள்கூடத் தவறாது உணவு வழங்க முடியுமா...? சிவானந்தன் கேட்டார்''.

''ஐயா, உங்களைப் போன்ற பலர் இக் கேள்வியைக் கேட்கிறார்கள். யார் பணம் வழங்குகிறார்கள், யார் உதவி செய்கிறார்கள் என்பது இதுவரை யாருக்கும் தெரியாது. இக் கோவிலின் தலைவரை நாம் பலமுறை கேட்டோம். அவருக்கும் தெரியாது. அவர் சொன்னார், ''பொருள் இல்லாதவர்களின் பசியைப் பொருள்ளவர்கள் நீக்க வேண்டும். இது தனித்தீவு. பட்டணத்தில் இருந்து வெகுதூரத்தில் உளளது. அதனால் இங்கு பொருட்களின் விலை அதிகம். அதனால் கோவிலுக்கு வருவோர் பசியுடன் வணங்கலாகாது என்பதற்காக அனுப்புகிறோம். எமக்குப் பெயர், புகழ் தேவையில்லை. தானம் கொடுப்பவன் ஒருபோதும் தன்னை வெளிப்படுத்தக்கூடாது. யாவும் இறைவன் அறிவார்'' என்று கூறுகிறார்களாம். திருவிழா, விசேட தினங்களில் ஆயிரக்கணக்கான அடியார்கள் வருவார்கள். அனைவருக்கும் பால், மோர், நீர் என்பவற்றை வழங்குவோம். எமக்கு ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதி சம்பளம் கிடைக்கும். இவற்றைத் தவிர இங்குள்ள எவர்க்கும் எதுவும் தெரியாது'' என்றான்.

''காலையில் இடிமின்னலுடன் மழைபொழிய ஆரம்பித்தது. மாலைவரை விடவில்லை. படகோட்டி வந்து சென்னான். ''இங்கே மடத்தில் தங்கலாம், நாளை காலையில் இடி மின்னல் விட்டால்தான் புறப்படலாம்''. இரவு சுவையான உணவும், பாலும், வாழைப்பழங்களும் கொடுக்கப்பட்டன. மறுநாட்காலை கோவிலுக்குச் சென்று வணங்கிவிட்டுச் சிவானந்தன் புறப்பட்டார். அது மிகவும் இனிமையான பிரயாணமாக அவருக்கு இருந்தது. இத்துடன் இன்றைய மகாநாடு முடிவடைகிறது'' என்றார் பேரறிஞர்.

## (16)

மறுநாள் மகாநாடு பிற்பகல் நான்கு மணிக்கு ஆரம்பமானது. முன்பு வந்தவர்களைவிட இரண்டு மடங்கு ஆர்வலர்கள் வந்திருந்தனர். மகாநாடு சிறப்பாக நடைபெறுவதாகக் கேள்விப்பட்ட அயல் வனங்களில் வசிப்போரும் ஏராளமாக வந்தமையால் இடநெருக்கடி ஏற்பட்டது. கதிரேசன் விரைந்து செயற்பட்டு தளபாடங்களை வேறு இடத்தில் இருந்து எடுத்துவந்து நிலைமையைச் சமாளித்தார்.

அன்று முதலாவதாக காயத்திரிதேவி பேசினார். அவர் பேசுவதைக் கேட்கப் பலரும் ஆர்வமாக இருந்தனர். காயத்திரிதேவி சபையில் இருப்போரை அவதானித்துப் பார்த்தார். அவர் எப்பொழுதும் சபையின் தன்மையை அறிந்தே பேசுவார். அவர் பேசும்போது சபையில் சலசலப்பு உண்டானால் பேச்சை மாற்றுவார் அல்லது



நிறுத்துவார். காயத்திரிதேவி அறிஞர் சபையில் அறிஞர்களின் அளவு அறிவு தெரிந்து பேசுவார். சாதாரண மக்கள் உள்ள சபையில் அவர்களுக்கேற்றவாறு பேசுவார். சிறுவர்களின் சபையில், சிறுவர்கள் ரசித்துச் சிரிக்கக்கூடிய வகையில் பேசுவார். பேச ஆரம்பித்ததும் அவர் சபையின் அறிவுத்தன்மையை உணர்ந்து விடுவார். எந்தச் சபையிலும் அவர் வாய் தவறிக்கூடப் பிழையாகப் பேசமாட்டார். ஒரு முறை ஒரு சபையில் பேசியதை அவர் மறுமுறை அச்சபையில் பேசமாட்டார். புராணக் கதைகளானாலும் அவற்றை முன்பைவிட வித்தியாசமாகவே பேசுவார்''.

''போர்க்களத்திற்குச் சென்று போராடுவது சுலபம். ஆனல் அறிஞர் உள்ள சபையில் ஒரு விடயத்தை மறுமுறை பேசக்கூடாது. என்று விகடமாகச் சொல்லுவார். அவர் பேசுவது பசுமரத்தாணிபோலச் சகலரது மனத்திலும் பதியும் தன்மை வாய்ந்தது. சபையில் அறிஞர்கள் பலர் இருந்தனர். மாணவர்கள் பலர் இருந்தனர். சாதாரணமான பொதுமக்கள் பலர் இருந்தனர். அவற்றையெல்லாம் தெரிந்து கொண்ட பின்பே அவர் பேச்சை ஆரம்பித்தார்''.

''சபையோர்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம். முன்பைவிட இன்று ஏராளமானோர் வருகை தந்துள்ளீர்கள். பொதுவாக யாரும் பேச்சுக்களைக் கேட்பதில்லை என்றும், பரவலாகப் பேச்சாளர்களும், எழுத்தாளர்களும் சலித்துக் கொள்கின்றனர். இது இயலாமையின் வெளிப்பாடாகும். மக்கள் எதை விரும்பி வாங்குகிறார்களோ அதைத்தான் ஒரு வியாபாரி கொள்வனவு செய்வான். அந்த வியாபாரியைப் போலத்தான் பேச்சாளர்களும், எழுத்தாளர்களும் இருத்தல் வேண்டும். பேச்சாளர்கள் மக்களுக்குத் தெரிந்த கதைகளைச் சாப்பிடும்போது சுவைக்காகச் சேர்த்துக் கொள்ளப்படும் ஊறுகாயைப் போலவே கந்தபுராணம், பெரிய புராணக் கதைகளைக் குறிப்பிட வேண்டும். அதைவிட்டுவிட்டு அவற்றையே மாறிமாறிப் பாடசாலைகளிலும், கோவில்களிலும், தொலைக்காட்சியிலும் பேசினால் யார் கேட்பார்கள்?.

''பேசுவதற்கு எத்தனையோ ஆயிரம் நூல்கள் உள்ளன. அவற்றை விட்டுவிட்டுப் பேசுவதால் தான் கோவில்களுக்கும், விழாக்களுக்கும் மக்கள் வருவதில்லை. சமயத்தைப் பொறுத்தவரை சிவமகா புராணம், விஷ்ணு புராணம், தேவி பாகவதம் என்று பல புராண நூல்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் நூற்றுக்கணக்கான கதைகள் உள்ளன. அவற்றைப் பேசினால் மக்கள் கேட்பார்கள். உங்களது காட்டில் தமிழறிஞர் ஒருவர் இருக்கிறார். அவர் பல புதுமையான எழுத்துக்ளை எழுதுகிறார். திருமந்திரம், திருவருட்பயன், திருவாசகம், பகவத்கீதை எனப் பழந்தமிழ் நூல்களுக்கு ஆயிரக்கணக்கான கதைகளை எழுதி வெளியிட்டு வருகிறார். அவையாவும் நாயன்மார்கள் செய்த அற்புதங்களுக்கு நிகரானவை. உலகரீதியாகப் பாராட்டுப் பெற்றவை. அவற்றை வாசிப்பதற்கு இங்கு யாரும் இல்லை. வாசித்தால் விமர்சிப்பார்கள். ஆனால் விமர்சிப்பாரும் இல்லை''.



“சமூக நூலானாலும், சமய நூலானாலும் அதில் புதுமையைப் புகுத்த வேண்டும். தமிழறிஞர் சிவபுராணத்தில் உள்ள ஒவ்வொருவரிக்கும் கதை எழுதி வெளியிட்டுள்ளார். அற்புதமான அருமையான கதைகள். சிறுவர்களுக்கு உகந்த கதைகள். பல ஆயிரம் பிரதிகள் வருடாவருடம் விற்பனையாகின்றன. அதனால் வள்ளுவர் சொல்வது போல ஒரு செயலைச் செய்வதானால் புகழ் வரக்கூடியதாகச் செய்தல் வேண்டும். அதற்கு தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும், மனவலிமையும் வேண்டும். இம் மூன்றும் ஒருவரிடமிருந்தால் மலையைக்கூடத் தூக்கித் தலையில் வைக்கலாம்”.

“புகழைத்தராத எந்தச் செயலையும், செய்யத் தொடங்கக்கூடாது. ஏனென்றால் ஒருவர் பெற்ற உயர்ந்த புகழைத்தவிர, இவ்வுலகில் அழியாது நிலைத்திருப்பது வேறு எதுவுமில்லை. அவ்வாறான உயர்ந்த புகழைப் பெறுபவர்களைத் தேவர்களும் வாழ்த்தி வணங்கி உபசரிப்பார்கள். ஒருவர் இறந்தபின்பும் உலகில் நிலையாக நிலைத்திருந்து அவரது செயல்களை விமர்சிக்க உதவுவது அவர் பெற்ற புகழேயாகும். அப் புகழைத் தேடிக்கொள்ளல் வேண்டும்”.

“ஒருவர் பெரும் பேச்சாளர், எழுத்தாளர் என்று தாம் கருதலாம். பிறரைக் கருத வைக்கலாம். ஆனால் உண்மையான புகழை உலகே தீர்மானிக்கும். இப்போது பலர் பணம் கொடுத்தும், பணிந்தும் புகழைப் பெறுகின்றனர். இவர்களை உலகத்தவர் பழிப்பர். கொடையின் மூலமும் புகழைப் பெறலாம். வறியவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுப்பதன் மூலம் பெறும் புகழ் அழியாதது. உயிர்களுக்கு உறுதி தருவது. இவற்றை நினையாமல் தனக்குப் பிறரால்தான் புகழ் வராதிருக்கிறது என்று எண்ணுவது தன்னைப் பற்றித் தானே ஆராய்ந்து உணர்ந்து புகழைப் பெறுதல் வேண்டும்”.

“புகழைத் தேடிப் பலர் பல விழாக்களை நடத்துகின்றனர். பணத்தைச் செலவு செய்கின்றனர். பிரமுகர்களின் காலில் விழுகின்றனர். அவர்களை வானுயரப் புகழ்கின்றனர். அவர்களுக்கெல்லாம் புகழ் வரும். வந்த மறுகணம் போய்விடும். ஆனால் புகழ் சிலரைத் தேடிவரும். அது சாதி, சமயம், ஏழை, பணக்காரன் என்று பாராது. அவனது ஆக்கங்களினையே பார்க்கும். இந்த வகையில் நாம் பலரைச் சொல்லலாம். வள்ளுவன், கம்பன், காளமேகம், பாரதி, கண்ணதாசன் என்று பலர் இருக்கிறார்கள் அவர்கள் இறந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியும் அறிஞர்களினதும், பெரியவர்களினதும், மாணவர்களினதும் நெஞ்சில் நிலைபெற்று வாழ்கின்றனர்”.

“புகழைப் பெறாமல் வாழ்கிறவர்களின் வீடு, கிராமம், நாடு என்பன நல்ல பயனைப்பெற மாட்டாது. வாழ்கின்றவர்களும் உயிர்வாழாதவராவார். சபையோர்களே ஒருவர் புகழ்பெற வேண்டுமானால் நல்ல நூல்களை எழுத வேண்டும். அத்துடன்



தற்பெருமை கொள்ளாமை, செருக்கடையாமை, அகிம்சை, நேர்மை, தூய்மை, விடாமுயற்சி, அகங்காரமின்மை, பற்றின்மை, வேண்டியவை, வேண்டாதவை என்று பேதங்காட்டாது சமநிலையிலிருத்தல், நீங்காத கடவுள் பக்தி என்பன கொண்டிருத்தல் வேண்டும். இதில் ஒன்றைக் கைக்கொள்ளாமல் விட்டாலும் மனதைப் பற்றுக்கள் பற்றிப் பிடித்து விடும். அதன்பின் அவனது மனம் தடுமாற்றமடையும். அதனால் மெய்ப்பொருளை உணரமுடியாத நிலை உண்டாகிவிடும்''.

''நாம் கூறிய குற்றங்கள் எதுவுமில்லாதவர் தமிழறிஞர். அவர் விருதுகள் கிடைத்தாலும் மகிழமாட்டார். கிடைக்காவிட்டாலும் கவலைப்பட மாட்டார். அவர் நிறைய எழுதுவார். பிரசுர கர்த்தாக்கள் தேடிவந்து போட்டி போட்டு அவர் எழுதிய நூல்களைப் பெற்றுச் சென்று வெளியிடுகிறார்கள். அவர் பணம் கேட்பதில்லை. அவர்கள் கொடுப்பதை வாங்கிக் கொள்வார். அத்தொகை அவர் எதிர்பார்ப்பதைவிட பலமடங்கு அதிகமாக இருக்கும். உள்நாட்டு வனங்களில் வாழ்வோர் மட்டுமல்ல, வெளிநாடுகள் பலவற்றிலும் வாழ்வோர் தாம் வாழும் வனங்களிலுள்ள நூலகங்களில் அவரது நூல்களைப் பெற்று வாசிப்பர்''.

''அப்படியானவரை நான் சில மாதங்களுக்கு முன்பு சந்தித்தேன். அவரைப் புரிந்து கொள்வது மிகவும் கடினமானது. எல்லோருடனும் அன்பாகப் பழகுவார். எல்லோருக்கும் உதவி செய்வார். தகுதி தராதரங்களைப் பார்க்கமாட்டார். சரியானது எதுவோ, அதனையே பேசுவார். அதனால் உயர் அதிகாரிகளுக்கு அவரைப் பிடிப்பதில்லை. உயர் அதிகாரிகளுக்குப் பிடிக்காததால் ஏனையோரும் அவருடன் பேசப் பயப்படுவார்கள். அவருடன் கதைப்பதை அறிந்தால் உயர் அதிகாரிகள் சந்தேகப்படுவார்கள். சிலர் அவரைக் குறையாகக் கூறுகிறார். திமிராகப் பேசுகிறார். தான்தான் பெரியவர், தன்னைவிட நிர்வாகத் திறமையுள்ளவர்கள் வேறு யாரும் இல்லை என்றே பேசுவார். என்று கூறி அதிகாரிகளிடம் பல சலுகைகளைப் பெறுவார்கள். இவை யாவும் தமிழறிஞருக்குத் தெரிந்த போதும் அவர் கவலைப்பட்டதுமில்லை, அதைப்பற்றிப் பேசுவதுமில்லை. அதனால் எல்லோரும் தாம் விரும்பியபடி நடந்து கொள்வார்கள்''.

''ஒரு சில வருடங்களுக்கு முன்பு மாகாணக் கல்விப்பணிப்பாளரின் மனைவியின் தாயார் இறந்து விட்டார். அவர் ஓர் ஆசிரியர். இந்த வனத்தில் உள்ள பெரும்பான்மையானவர்கள் அவரிடம் கல்வி கற்றவர்கள். குறிப்பாகத் தமிழறிஞரும் அவரது பரம்பரையினரும் அவரிடம் கல்வி கற்றனர். அதனால் தமிழறிஞர் தான் அதிபராகக் கடமையாற்றும் பாடசாலை மாணவர்களிடம் காரணத்தைச் செல்லி ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு மாலை கொண்டுவர வேண்டுமென்று அன்புக் கட்டளையிட்டார்''.



‘‘அவர் எதிர்பார்த்ததைவிடப் பலமடங்கு மாலைகள் வந்து சேர்ந்தன. சுமார் ஐந்நூறு மாலைகள். மரணவீட்டுக்கு வந்தவர்கள் எல்லோரும் அதைப்பற்றிப் பெருமையாகப் பேசினர். ஆனால் மாகாணக் கல்விப்பணிபாளரும், அவரது மனைவியும் அவர் பெரிய பதவியைப்பெற நினைக்கிறார் என்றே நினைத்தனர். இருவரும் எல்லோருக்கும் அவர் தான் கற்ற ஆசிரியர் என்று நினைக்கவில்லை. பெரிதாக ஒரு திட்டம் போடுகிறார் என்று சிரித்தார்.

‘‘அதை மாகாணக் கல்விப் பணிப்பாளரின் விசுவாசி ஒருவர் வந்து தமிழறிஞரிடம் கை, கால், மூக்கு, காது வைத்துச் சொன்னார். ‘‘தமிழறிஞரே, நீங்கள் அதிபுத்திசாலி, மேதை பாடசாலைப் பிள்ளைகளைப் பயன்படுத்தி பெரிய திட்டம் ஒன்று போட்டுள்ளீர்கள். இந்த வனத்தில் மட்டுமல்ல, வேறு வனங்களுக்கும் இச் செய்தி பரவியதால் அவர்கள் அதிசயப்படுகிறார்கள். ஐந்நூறு மாலைகள் உலகத்தில் பெரும் பிரமுகர்க்கே போட்டதில்லை. நீர் நன்கு திட்டமிட்டுச் செயலாற்றியுள்ளீர்’’.

‘‘ஐயா, உலகில் உள்ள அனைவரும் தன்னைப் போலத்தாதன் பிறரும் இருப்பார்கள் என்று நம்புகிறார்கள். ஒரு திருடன் எல்லோரும் திருடன் என்றே நினைப்பான். அது போலத் திறமை இல்லாதவர்கள் உயரதிகாரிகளின் காலில் விழுந்து, கும்பிடுவர். இலஞ்சம் கொடுப்பர், வீட்டு வேலைகளைக் கூடச் செய்வர். கற்ற அறிவாளி யாவர்க்கும் பணியமாட்டான். நான் பரீட்சை எடுத்துச் சித்தியடைந்தவன். நேர்மையானவன், ஒழுக்கம் தவறமாட்டன். யாரிடமும் எதையும் இரக்கமாட்டன்’’ என்றார்.

‘‘ஒருவரது உடல் அழிந்தாலும், அவர் பெற்ற புகழ் யுகம் யுகமாக நிலைத்து நிற்கும். இங்குள்ளவர்கள் எப்படி எப்படியெல்லாம் புகழ் பெற்றனர் என்று உலகிற்குத் தெரியும். அவரை இவரைப்பிடித்து பெரிய பதவிகள் பெற்றவர்கள் அதைச் செய்ய முடியாது. பென்சன் எடுத்த வரலாறும் பலருக்குத் தெரியும். அவர்கள் மேடைகளில் பேசும்போது கேட்டுக் கொண்டிருப்போர் பேசுவோர்களது ஊழல்களைக் கதைத்துச் சிரிப்பார்கள். இதை நீர் அறியவில்லையா’’ என்று கேட்டார் தமிழறிஞர்.

‘‘சபையோர்களே, புகழ் அறிவுள்ளவனைத் தேடி வரும். ஆனால் பொருள் மிகமிக இழிந்தவனிடமும் வந்து சேரும். அதுபோல அருள் உயர்ந்தவரைத்தான் தேடிவரும். ஆராய்ந்துபார்த்தால் அருள்தான் வாழ்க்கைக்கு எவ் வேளையிலும் துணைபுரியும் என்பது தெரிய வரும். அருள் உள்ளவனாக வாழ்ந்தால் புகழ், செல்வம், மதிப்பு, மரியாதை என்பன தேடிவந்து சேரும். அப்படிச் சேர்ந்தால் எந்தக் குறைகளும் வந்து சேராது. பொருளை அருள்வழியில் தேடவேண்டும். ஏனென்றால் பொருளில்லாதவர்களால் அருளைப்பெற முடியாது. இவ்வுலக வாழ்வும் அவ்வுலக வாழ்வும் சிறக்காது. பொருளை இழந்தவன் முயற்சித்தால் பொருளைப் பெறலாம். ஆனால் அருள் இல்லாமல் வாழ்ந்தவன் அருளைப்பெற மாட்டான். அருளில்லாதவன் செய்கின்ற அறச்செயல், அறிவில்லாதவன் ஒரு நூலின் மெய்ப்பொருளை உரைப்பதை



ஒக்கும். அருளில்லாத ஒருவன் ஒரு தீயசெயலைச் செய்தால், அது தன்னைவிட மேம்பட்டவனின் முன் நாணிக்கோணி நிர்க்கவேண்டிய நிர்ப்பந்தத்தைக் கொடுக்கும். இவ்வாறு அருளுள்ளவனின் நிலையைப்பற்றி வள்ளுவர் கூறுகிறார்''.

''சிவானந்தன் பெரும் வர்த்தகன், தீயவன். அவனது தீய நண்பனான சிவலிங்கம் என்ற நரி சிவானந்தனின் நண்பன். இருவரும் கூட்டாக வியாபாரம் செய்து வந்தனர். சிவலிங்கம் எப்போதும் தீய யோசனைகளையே கூறுவான். அதை நடைமுறைப்படுத்துவதில் வல்லவன் சிவானந்தன். சிவலிங்கத்தின் தீய திட்டப்படி சிவானந்தன் பொருட்களில் கலப்படம் செய்வான். பொருட்கள் காலாவதியானதும் வியாபாரிகள் அவற்றை மலிவுவிலையில் விற்பர். அதை வாங்கிவந்து புதிய பைகளில் போட்டு காலாவதித்திகதியை மாற்றி விற்பான். நிறை குறைத்து விற்பான். ஆரம்பத்தில் அவற்றை அறியாது வாங்கியோர் பின் அவற்றை வாங்காது விட்டமையால் வாங்கிய பழைய பொருட்கள் யாவற்றையும் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் தீயிட்டுக் கொழுத்தினர். அதனால் சிவானந்தனுக்கும் சிவலிங்கத்திற்கும் பெரும் நஷ்டம் ஏற்பட்டது. அதனால் இருவரும் காட்டுப்பிள்ளையார் கோவில் பூசாரியான கஜேந்திரனிடம் சென்றனர்''.

கஜேந்திரன் சொன்னார், ''துன்பப்பட்டவர்கள் இறைநம்பிக்கையுடையவர்கள், புதிய தொழில்களை ஆரம்பிப்போர், தொழிலில் நட்டமடைவோர், அடியார்கள் இப்படிப்பட்டவர்கள் என்னைத்தேடி வருகின்றனர். இவர்களுள் எனக்குப் பிடித்தவர்கள் அருளுள்ளவர்கள் தான். ஏனென்றால் அவர்கள் ஒழுக்கமாக வாழ்ந்து இறைவனை அடைய விரும்புபவர்கள். அருளுள்ளவன் கடவுளுக்குச் சமமானவனாவான். அவன் விரும்பிய எல்லாவற்றையும் பெறுவான். பெற்றவற்றைத் தேவையானவர்களுக்குக் கொடுப்பான். ஊற்றுநீர்போலப் பொருட்கள் குறையக் குறைய அவை வந்து நிரம்பும். பல்வேறு விதமான ஆசைகளால் பீடிக்கப்பட்டவர்களின் நெஞ்சில் அருள் இராது. வஞ்சகம், பொறாமை, தீய எண்ணங்கள்தான் இருக்கும். அவை அவனை முன்னேறவிடாது. நீங்கள் இருவரும் எந்தத் தானதர்மங்களும் செய்ததில்லை. மாறாகத் தீமைகளையே செய்து வருகிறீர்கள். தீயவர்களையும் கடைத்தேற வைப்பது பெரியவர்களின் கடமை. அதனால் ஒன்பது நாள் விரதமிருந்து ஒன்பது ஏழைகளுக்கு உணவு கொடுங்கள்'' என்றார்.

''இருவரும் கஜேந்திரன் கூறியவாறு விரதமிருந்தனர். முதல்நாள் சமைத்து வைத்துவிட்டுக் கோவிலுக்கு வந்து அங்கு கூடியிருந்த பக்தர்கள் ஒன்பது பேரை தமது வீட்டுக்கு வந்து உண்ணுமாறு அழைத்தனர். அவர்கள் எதுவும் பேசவில்லை. மௌனம் சம்மதம் என்று நினைத்து அவர்கள் இருவரும் சென்று விட்டனர். இரவாகியும் யாரும் வரவில்லை. அவரது மனைவி சமைத்து முடித்துவிட்டுச் சொன்னாள். ''ஒவ்வொருவரும் தினமும் காகங்களுக்கு உணவு வைத்துவிட்டே தாம் உண்பர். இதை நான் திருமணமான புதிதில் சொன்னேன். நீங்கள் கேட்கவில்லை. இன்று விருந்தினர்கள்



வருகிறார்கள். அதனால் முதலில் காகங்களுக்கு உணவை வையுங்கள்'' என்று கூறி உணவைக் கொண்டு வந்து கொடுத்தாள். சிவானந்தன் உணவைக் கொண்டுவந்து உயரமான ஓர் இடத்தில் வைத்துவிட்டுக் 'கா, கா, கா' எனக் காகங்களை அழைத்தார். அவருக்குக் காகங்களைப் பிடிப்பதில்லை. சில சமயம் அவரது வீட்டில் உள்ள மரங்களில் காகங்கள் வந்து இருந்து கரையும். அச் சத்தத்தைப் பிடிக்காமையால் அவர் வெடிகொழுத்திக் காகங்களைக் கலைப்பார்''.

''சிவானந்தனின் பக்கத்து வீட்டில் லட்சுமி என்ற காட்டுப்பசு வசித்து வந்தது. அதற்கு நண்பர்கள் ஏராளம். காகங்களுக்கு அது மூன்று வேளையும் உணவு வைக்கும். அதனால் காகக்கூட்டம் அங்கே தங்கியிருக்கும். சிவானந்தன் பலமணி நேரமாக அழைத்தும் காகங்கள் செல்லவில்லை. அதனால் லட்சுமி சொன்னது, 'என்னருமை நண்பர்களே, பாவம் சிவானந்தன் பலமணி நேரமாக உங்களை அழைக்கின்றான். அவன் கொடியவன். காரணமின்றி உங்களைத் தண்டிப்பவன். எனினும் நல்லவர்கள் அவற்றைப் பெரிது பண்ணக்கூடாது. பாவம் அவன் திருந்த நினைக்கிறான். அதனால் சென்று சாப்பிடுங்கள்'' என்று இரந்தது''

''அம்மா, உங்களை நாங்கள் எல்லோரும் தாயாகத்தான் கருதுகிறோம். தாய் சொல்லைத் தட்டக்கூடாது. இருந்தும் தாயானவளுக்கு நீதிக்குப் புறம்பாகத் தனது பிள்ளைகள் வாழ்வது பிடிக்காது. சிவானந்தன் பஞ்சமாபாதகங்களை மகிழ்வுடன் செய்பவன். ஒருமுறை அவன் சோற்றில் நஞ்சுகலந்து வைத்து எம்மவர் பலரைக் கொன்றவன். இப்போது அவன் அவ்வாறு நடந்து கொள்ளமாட்டான் என்று எவ்வாறு நம்புவது. அத்துடன் அவன் நல்லவழியில் பொருள் தேடவில்லை. பொருளை வாங்கியவர் அவனைத் திட்டுவதை நான் நேரில் கண்டுள்ளேன். பாவம் செய்வதைவிடப் பாவப்பட்டவர்களுடன் உறவு கொள்வதோ, அவரிடம் உதவி பெறுவதோ பாவம் செய்வதைவிடக் கொடிய பாவமாகும். அதிலும் பாவப்பட்டவர்களிடம் உணவு பெற்று உண்டால் கொடிய நரகவாழ்வு கிட்டும் என்று புராணங்கள் கூறுகின்றன. தாயே இவற்றைத் தாங்கள் அறியவில்லையா'' என்று கேட்டது நக்கீரன் என்ற காகம். அதன் பின் லட்சுமி எதையும் பேசவில்லை. நக்கீரன் சொன்னது உண்மை என்று நினைத்தது''.

''தான் அழைத்தும் காகங்களும், விருந்தினர்களும் வராமையால் மனக்கிலேசமடைந்து சிவானந்தனும், சிவலிங்கமும் காட்டுப்பிள்ளையார் கோவில் பூசாரியான கஜேந்திரனிடம் மிகுந்த கவலையுடன் வந்தனர். 'மகனே, வினைவிதைத்தவன் தினையை அறுக்க முடியுமா...? எல்லாம் நீங்கள் விதைத்தவை தான். யார் யார் எதை எதைச் செய்கிறார்களோ, அவர்கள் செய்தவற்றைத்தான் பயனாகப் பெறுவார்கள். இது உலக நியதி. ஒருவர் சிரத்தையுடன் ஒழுக்கமாக வாழ்ந்து, கடவுளை வணங்கினால் வணங்குபவனின் விருப்பத்தை இறைவன் பூர்த்தி செய்வார். செயல்கள் ஒருவரது நீண்ட எதிர்காலத்தை நிர்ணயம் செய்கிறது.



இறைவனது எண்குணங்களை அறியாதவர்கள்தான் ஆணவமிடுக்கால் தீயவற்றைச் செய்கின்றனர். பூமியில் தீயவற்றைச் செய்து இன்பமடைவோர் ஒருபோதும் நன்மையைப் பெறமாட்டார்கள். அவர்கள் உலகின் போக்கைப் பார்த்தும் திருந்துவதில்லை. ஒழுக்கமாக வாழ்பவனைத் தேடிவந்து தெய்வங்கள் உதவி செய்வதாகப் புராணங்கள் கூறுகின்றன. புராணங்களை நம்ப வேண்டும். அதன்மூலம் தெய்வத்தின் இருப்பை உணர வேண்டும். இதற்காக ஒழுக்கமாக வாழவேண்டும். ஒழுக்கமாக வாழ்பவன் அறவானாவான். அப்படியானவர்களுக்குத் துன்பங்கள் வராது. ஏனென்றால் அவர்கள் குடிகொண்டிருக்கும் அருள் என்ற தெய்வம் ஒளிமயமானது. துன்பங்கள் இருளானவை. ஒளியின்முன் இருள் விலகுவதைப்போல அருளுக்குமுன் பாவங்கள் விலகிவிடும். அதனால் அருளுள்ளவனாக வாழ்ந்தால் யாவும் உன்னைத்தேடிவரும்'' என்றார். இருவரும் செய்வதறியாது அமர்ந்திருந்தனர். எனவே அருள் நெஞ்சினனாக வாழுங்கள்'' என்றாள் காயத்திரிதேவி.

## (17)

அன்று ஞாயிற்றுக்கிழமை அதனால் திருக்குறள் மகாநாடு காலை எட்டு மணிக்கு ஆரம்பமானது. முதலில் மகாநாட்டின் தலைவர் கதிரேசன் உரையாற்றினார். ''பெரியோர்களே, சபையோர்களே, இங்கு பேசவந்திருக்கும் முதுபெரும் அறிஞரான குதிரையார் அவர்களே. கடந்த ஐந்து நாட்களாகத் திருக்குறள் மகாநாடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பேச்சாளர்கள் பல்வேறு விதமான நூல்களைக்கற்று, அவைகளில் உள்ள திருக்குறட் கருத்துக்களை மிக விரிவாக ஆராய்ந்து பேசினர். முதுபெரும் அறிஞர் அவர்கள் திருமந்திரமே திருக்குறள் என்று பேசியது உலகளாவியரீதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உள்ளூரில் உள்ள தொலைக்காட்சிச் சேவை எமது மகாநாட்டை ஒளிபரப்புச் செய்யவில்லை. தமிழறிஞரின் மாணவன் ஒருவன் தொலைபேசி மூலம் அதைக் காட்சிப்படுத்தியமையால் உலகில் உள்ள அறிஞர்கள் அதைக்கேட்டு வியப்புற்று ஆய்வு செய்கின்றனர். அதனால் இப்போது பலர் மகாநாட்டை நேரில் பதிவு செய்கின்றனர். இன்றைய நவீன யுகத்தில் ஒருவருக்குத் தெரிந்தால், அது உலகமெங்கும் பரவிவிடும். அந்தவகையில் தமிழறிஞரின் மாணவருக்கு நன்றிகூறிக் கொள்கின்றேன். அடுத்து முதுபெரும் அறிஞர் பேசுவர்'' என்று கூறி விடைபெற்றார் கதிரேசன்.

முதுபெரும் அறிஞர் மேடைக்கு வந்ததும் கரகோசம் வானைப் பிளந்தது. ''பெரியோர்களே, மாணவர்களே, ஆர்வலர்களே தாங்கள் தரும் உற்சாகம் என்னை மேலும் மேலும் கற்கத் தூண்டுகிறது. ஒரு செய்யுளின் உண்மைத்தன்மையை யாரும் எவ்வாறும் பேசலாம். திருக்குறளை ஆய்வு செய்யச் செய்ய புதுமையான கருத்துக்கள் உள்ளத்துள் கிளர்ந்தெழுகின்றன. எண்ணங்கள் தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கின்றன. பகவத்கீதை சொல்கிறது, ''ஒருவனது எண்ணமே செயலாகிறது. அதனால் நல்லவற்றையே எப்போதும் எண்ணுங்கள். ஒருவர் மரணவேளையில் எதை நினைத்துக்கொண்டு உயிரை விடுகிறானோ அதை நினைத்தவன், அதையே



அடைகிறான். ஆகையால் எந்நேரமும் நல்லவற்றையே நினையுங்கள். மனதையும், புத்தியையும் அடக்கியவனால்தான் புனிதமான செயல்களை எண்ணமுடியும். இப்படியானவர்களால்தான் தவத்தை மேற்கொள்ள முடியும். தீய எண்ணங்களை உடையோர், பயனில்லாத செயல்களைச் செய்வோர், முரண்பட்ட அறிவுடையோர், விவேகமில்லாதவர்கள், உலக வாழ்க்கையில் மயங்குவோர் தவம் செய்ய முடியாது. இத்தகையோர் தவம் செய்தாலும் உரிய பயனை அடையமாட்டார்கள்''.

''மனதை அடக்கமுடியாதவர்கள் கொள்ளும் தவக்கோலம், பசு புலியின் தோலைப் போர்த்திப் பயிர்மேய்வதை ஒக்கும். அத்தகையோர் புதர் மறைவில் மறைந்திருந்து வலைவீசிப் பறவைகளைப் பிடித்துண்ணும் வேடனை ஒத்தவராவர். இத்தகைய பொய்யான ஒழுக்கம் துன்பங்களையே தரும்''.

''இவர்களைப் போன்ற கொடியவர்கள் உலகில் யாருமில்லை. இத்தகையோர் பெருமளவில் உலகில் இருக்கின்றனர். ஒருவர் நல்லவரா...? கெட்டவரா...? பொய் ஒழுக்கமுடையவரா என்பதை அவரின் சொல்லையும், செயலையும் வைத்தே முடிவெடுக்க வேண்டும். சில போலிவேடதாரிகள் மொட்டை அடிப்பார்கள். சிலர் சடை வளர்ப்பார்கள். இவர்களை நம்பக்கூடாது''.

''தவத்தை வீட்டில் இருந்து கொண்டே மனைவி, மக்களுடன் சேர்ந்து செய்யலாம். மன அடக்கம் தான் தவம். மனம் கட்டுப்பட மறுத்து உலகவிடயங்களை நாடுமானால் அம்மனம் மிருகத் தன்மையுடையது. கட்டுப்பட்ட மனம் தெய்வத் தன்மையானது. மனதை உறுதியாக்கி, அதைக் கடவுளின்மீது வைத்தால், அந்தநிலை பக்தியாக உருவாகும். அந்தப்பக்தி நாளாக நாளாக வளர்ந்து வரும். அதுபோல உலகவிடயங்களில் பற்றுக்கொண்டால் அதைக் கட்டுப்படுத்த இயலாது. கட்டுப்படாத மனம் எப்போதும் தீயதையே நாடும். நாளடைவில் தீயசெயல்களால் இன்பமடைந்த மனம் துன்பங்கள் வந்தபோதும் கலங்காது, அஞ்சாது தீயவற்றையே செய்யும். இறைவனை வணங்கக் காசு, பணம், பொருள் தேவையில்லை. திருமந்திரமும், பகவத்கீதையும் இறைவனுக்கு ஒரு பச்சிலை அல்லது நீர் அல்லது மலர்கள் வைத்து வணங்கு என்று சொல்கிறது. வள்ளுவரும் அதையே சொல்கிறார்''.

''தவவேடத்தைப் பலர் பிழைப்புக்காகப் போடுகின்றனர். தவவடிவம் அதற்கென வகுக்கப்பட்ட ஒழுக்கங்களில் இருந்து தவறுவோர்க்கு வீண் முயற்சியாகிறது. இல்லறம் தான் மேலான தவமந்திரம். ஏனெனில் இல்வாழ்வன் தனது மனைவியோடு கூடியிருந்து, துறவிகளுக்கும், ஏழை எளியவர்களுக்கும், இரப்போர்க்கும், பிதிர்களுக்கும் உணவு அளிக்கிறான். அத்தவத்தின் மூலம் விரும்பியதை விரும்பியபடியே பெற்றுக் கொள்கிறான். ஏனெனில், எல்லோர்க்கும் உணவளிப்பவன் அவன். அதனால் இறைவன் அவனைக் கெடுப்போரைத் தண்டிப்பான். அதனால் அவனை உலகில் உள்ள எல்லா உயிர்களும் போற்றும்''.



“சிவானந்தனும், சிவலிங்கமும் பலமுறை பலரைக் கேட்டும் அவர்கள் வீட்டுக்கு வராததால், மிக்க கவலை கொண்டனர். இதை அறிந்த போலிச்சாமியார் ஒருவன் சிவானந்தனிடம் வந்து, “உனக்கு ஏற்பட்ட துன்பங்களை நான் போக்குவேன். அதற்கு ஒரு பூசை செய்ய வேண்டும்” என்று கூறச் சிவானந்தன் அதற்குச் சம்மதித்தான். குறிப்பிட்ட நாளில் பூசை ஆரம்பமானது. பெரிய அளவில் பெரும் பணம் செலவிட்டு அப்பூசையைப் போலிச்சாமியார் செய்து கொண்டிருக்கும்போது அங்கே வந்த பலர் போலிச்சாமியாரைத் தாக்கினர். ஒருவர் சொன்னார். “ஐயா, இவன் போலிச்சாமி. எமது வனத்தில் உள்ளவர்களை ஏமாற்றிப் பூசைசெய்துவிட்டு பூசைக்கு வைப்பதற்காகப் பெறுமதியான தங்க நகைகளை வைக்கும்படி சொல்ல, பூசை செய்வோர் இவனைநம்பி வைத்தனர். அவற்றைக் களவாடி விட்டான். அதனால் இவனைத் தேடித்திரிந்தோம். இன்றுதான் அகப்பட்டான்” என்று அவனைத் தாக்கினர்.

“மறுநாள் சிவானந்தனும் சிவலிங்கமும் மிகுந்த துயரத்துடன் காட்டுப்-பிள்ளையார் கோவில் பூசாரியான கஜேந்திரனிடஞ் சென்றனர். அவர் நடந்தவற்றை அறிந்திருந்தமையால் சொன்னார், “இறைவனை மட்டும் நம்புங்கள். ஒழுக்கமாக வாழுங்கள். அருள் உள்ளவராக மாறுங்கள். அப்படி மாறினால் உயிர்கள் அடையும் துன்பங்கள் உங்களுக்குத் தெரியவரும். தாம் அவதாரம் என்றும், சுவாமி என்றும், நினைத்தவற்றைக் கூறும் வல்லமை உள்ளவரென்றும், தனது தவவலிமையால் எதையும் செய்வேனென்றும் கூறுவதெல்லாம் பொய்யாகும். இறைதூதர்களாக நாயன்மார்கள் இருந்தனர். ஒழுக்கமுள்ள பலர் வாழ்ந்தனர். அவர்கள் தம்மைப்பற்றிப் பெருமையாகப் பேசமாட்டார்கள். பணம், பொருள் வசூலிக்க மாட்டார்கள். தாம் செய்பவற்றை இறைபணியாகவே செய்வர். அரவிந்தனைப் பாருங்கள். அவர் ஒழுக்கமாகவும், தர்மமாகவும் வாழ்கிறார். அண்மையில் அவரது வியாபார நிலையத்திற்கு அருகே உள்ள பெரிய கட்டடம் ஒன்று மின்ஒழுக்கால் தீப்பற்றியது. அந்தத் தீ அரவிந்தனின் வியாபார நிறுவனத்தைத் தாக்கவில்லை. தீப்பிடித்ததும் ஊரவர் அனைவரும் சென்று தீயை அணைத்தனர். இது கடவுளின் செயல். அறநெறிப்படி வாழ்பவனையும், அவனது பொருட்களையும் கடவுள் காப்பாற்றுவார்” என்றார். சிவானந்தனும் சிவலிங்கமும் எதுவும் பேசவில்லை. அவர் கூறுவது உண்மை என்று அவர்களது மனம் சத்தமிட்டுச் சொன்னது”.

“பற்றுக்கள் இருக்கும்வரை பல்வேறுபட்ட துன்பங்கள் தொடர்ந்து கொண்டு வந்தே இருக்கும். மனம்தான் எல்லாவற்றிற்கும் காரணியாகும். எப்பொழுதும் நல்லவற்றை நினைப்பவனுக்குத் துன்பங்கள் இன்பங்களாகவே தோன்றும். தீய எண்ணங்களால் நிரம்பிய மனது வந்த இன்பங்களிலும் குறைகாணும். அதனால் இன்பங்களும் துன்பங்களாகவே தெரியும். கடவுளின் நினைவுடன் இன்ப துன்பங்களைச் சந்திப்பவன் இரண்டுக்கும் வேறுபாட்டைக் காணமாட்டான். தனது மனம் அறியக் குற்றங்களைச் செய்பவன் மேலானவனாக இருந்தாலும் அதனால் பலனடைய மாட்டான். நீங்கள் இருவரும் பெரும் வர்த்தகர்கள். ஏராளமான நிலபுலன்கள் உண்டு.



அவ்வாறிருக்க ஏன் வீணாகக் கவலைப்படுகிறீர்கள். வியாபாரத்தில் நட்டமும் வரும், இலாபமும் வரும். இலாபம் வரும்போது மகிழ்வடைவோர், நட்டம் வரும்போது துன்பப்பட்டால் அத்துன்பம் போய்விடுமா?''

''ஒருவன் பிறர்க்குரிய பொருளை விரும்புவதே களவு எடுத்தமைக்குச் சமமாகும். விரும்பும் மனம் அதை அடைய முயற்சிக்கும். அதனால் பெரும் துன்பங்கள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும். திருடும் பொருட்களால் உண்டாகும் மகிழ்ச்சி பெரும் துன்பமாகவே முடியும். திருட எண்ணிய ஒருவன் அதற்காகப் பலமணி நேரத்தை ஒதுக்குகிறான். அவனால் வருவாய்கேற்ற செலவு செய்ய முடியாது. அதனால் தொடர்ந்து திருடி அகப்படுவான். அவனது மனதைவிட்டு வஞ்சம் ஒருபோதும் நீங்கமாட்டாது. திருட நினைப்பவனுக்கு அவனது உடம்பே ஒத்துழைக்காது. சில சமயம் காட்டிக்கொடுத்து விடும்''.

''சிவானந்தனும் சிவலிங்கமும் பூசாரியார் தமக்குத் தான் சொல்கிறார் என நினைத்தனர். எனினும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. பூசாரியார் தொடர்ந்து சொன்னார், ''சிவானந்தா, நீ நல்லவற்றையும், தீயவற்றையும் நேரில் கண்டும் திருந்துகிறாய் இல்லை. சில வருடங்களுக்கு முன்பு நீ ஒரு கைதேர்ந்த திருடனை அழைத்து அரவிந்தனின் தங்க நகைக்கடைக்குள் சென்று தங்கநகைகளைக் கொள்ளையிடச் சொல்லிப் பணம் கொடுத்தாய். திருடனுக்குச் சரியான மகிழ்ச்சி. திருடுவதற்குப் பணம் கொடுத்ததை அவனால் நம்பமுடியவில்லை. அவன் தனது நண்பனை அழைத்துக்கொண்டு மதுபானசாலைக்குச் சென்று நன்றாகக் குடித்தான். மறுநாள் இருவரும் இரவு பத்துமணிக்கு அரவிந்தனின் நகைக்கடைக்குச் சென்று அக் கடையின் அருகில் நின்ற மரத்தில் ஏறி நகைக்கடையின் கூரையில் இறங்கி, ஓட்டைப் பிரித்து உள்ளே சென்றனர். உள்ளே சென்ற ஒருவனுக்குத் தும்மல் வந்தது. பெரும் சிரமப்பட்டு அடக்கியபோதும் அது பலத்த சத்தத்துடன் வெளிப்பட்டுவிட்டது. அச் சத்தத்தைக் கேட்ட காவலாளி ஊரவர் சிலரை அழைத்துவந்து இருவரையும் பிடித்து விட்டான். அவர்களை நீதான் அனுப்பியது என்று தெரிந்தும், அறவானான அரவிந்தன் நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் அவர் கெட்டுப்போகவில்லை. நீதான் ஓயாது துன்பப்படுகிறாய். திருடன் அறவான் வீட்டிற்கு களவெடுக்கச் சென்றால் அவனது உடம்புகூட ஒத்துழைக்காது''.

''திருடுவதும், அடுத்தவனிடம் அதிக பொருள் இருக்கிறது என்று பொறாமைப்படுவதும் பெரும் பாவத்தையே உண்டுபண்ணும். பேசும்போது கூட சிறிதும் தீங்கை உண்டாக்காத சொற்களைப் பேசுவதே புண்ணியமாகும். பொய் பேசக்கூடாதென்பதில்லை. சொல்லும் பொய்யால் நன்மை உண்டாகுமானால், சொன்ன அப்பொய்யும் வாய்மையாகும். மனமறிந்து சொல்லும் பொய் பல தீமைகளை உண்டாக்கும். பொய் சொல்லாது ஒழுக்கமாக வாழ்பவனுக்கு உலகில் வாழும் அனைவரும் சிறந்த நண்பர்களாவர். இப்படியானவர்கள் தானத்தையும், தவத்தையும் செய்வோரைவிட மிக உயர்ந்தவராவர். அவர்களைப் புகழ்தேடி வந்தடையும். பொய்



சொல்லாதவன் எந்த அறச்செயல்களையும் செய்யத் தேவையில்லை. அவனின் மனம் எப்போதும் புனிதமாகவே இருக்கும். அது அகவிருளை அகற்றி அவனுக்கு உண்மையானவற்றைப் புரியவைத்து என்றும் மகிழ்வாகவும், செல்வமாகவும் வாழ வழிவகுத்துக் கொடுக்கும். மனம் சுத்தமாக இருப்பதால் கடவுள் எந்நேரமும் மனதில் வீற்றிருந்து உதவிக் கொண்டிருப்பார். அதனால் அவர்கள் தம்மைத்தாமே உணர்ந்து கொள்வார்கள். அதனால் எப்பொழுதும் புனிதமானவனாக இரு என்று காட்டுப்பிள்ளையார் கோவில் பூசாரியான கஜேந்திரன் கூறினார்''.

''இருவரும் பேசாது இருந்தனர். பூசாரியாருக்கு அவர்களின் மனம் எதைச் சொன்னாலும் மாறாது என்று தெரியும். இருந்தபோதும் தன்னை நாடிவருவோரின் விருப்பங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைத்துச் சொன்னார், ''அன்பாக வளர்ந்த மிருகங்களை எங்கே கொண்டுசென்று விட்டாலும், அது வளர்த்தவனைத் தேடிவரும். சிவானந்தா என்னருகில் படுத்திருக்கும் இந்த நாயைப் பார். சிறுகுட்டியாக இருக்கும்போது யாரோ கோவிலில் கொண்டுவந்து விட்டுவிட்டார்கள். நான் அதை அன்புடன் வளர்த்து வந்தேன். ஒருமுறை ஒரு தனவந்தர் கோவிலுக்கு வந்தபோது இந்த நாயைக் கண்டுவிட்டு அதை தனக்குத் தரும்படி வேண்டினார். பற்றுப் பாசமில்லாத எனக்கு ஏன் நாய். அதனால் கொடுத்துவிட்டேன். பத்துநாட்கள் கழிய நாய் திரும்பி வந்துவிட்டது''.

''நாயைக் காணாத அவர் கோவிலுக்கு வந்தபோது அங்கே நாய் நின்றது. அதை அவர் பிடித்துச்சென்று கட்டிவைத்துவிட்டு அது விரும்பிய உணவுகளைக் கொடுத்தார். சில நாட்களில் நாய் கட்டிய சங்கிலியை அறுத்துக்கொண்டு இங்குவந்து விட்டது. பல மைல்களுக்கு அப்பால் அவர் இருப்பவர். நாயை அவர் தனது மோட்டார் வண்டியில்தான் ஏற்றிச் சென்றார். அப்படியிருந்தும் நாய் மோப்பசக்தியால் வந்து விட்டது. நாயைக் காணாது அந்த தனவந்தர் கோவிலுக்கு வந்தபோது நாய் எங்கோ சென்று விட்டது. பல மணிநேரத்தின்பின் அவர் சென்றுவிட்டார். அதன் பின்தான் அது வந்தது. பின்பு அவர் கோவிலுக்கு வரும்போது அவரது வாகனச் சத்தம் கேட்டதும் அது மறைந்துவிடும்''.

''நாய்க்கு வாகனத்தின் இரைச்சலை இனங்காண முடியும். தினமும் பல வாகனங்கள் இங்கு வருகின்றன. அந்த வாகனத்தில் வருபவரால் தனக்கு ஆபத்து வரும் என்று நாய் உணர்ந்து கொள்கிறது. வினையும் அவ்வாறானது தான். செய்தவனைத் தேடிச் சென்றடையும். இதற்கு நல்ல உதாரணம் அரவிந்தன். அடுத்தது நீ ஏன் அரவிந்தனுக்குச் செல்வம் வந்து குவிகிறது. சென்றவாரம் வெளிநாட்டில் இருந்து வந்த பெரும் தனவந்தரான தனபாலன் தனது நூறு ஏக்கர் வயலையும், நூறு ஏக்கர் தென்னந்தோட்டத்தையும் அரவிந்தனிடம் ஒப்படைத்து அதன் வருமானத்தை ஒரு ஆச்சிரமத்திற்குக் கொடுக்கும்படி கூறியுள்ளார். ஒழுக்கம் நம்பிக்கையை உருவாக்கும். அந்த நம்பிக்கைதான் கோடிக்கணக்கான சொத்தை ஒப்படைக்கக் காரணமாக இருந்தது.



நீ தனபாலனின் மைத்துனன். நீ நேர்மையாக வாழ்ந்திருந்தால் அவன் உன்னிடம் சொத்தை ஒப்படைத்திருப்பான். அரவிந்தன் தனபாலனுக்குத் தெரிந்தவன் அல்ல. இனத்தவனல்ல, ஒழுக்கமானவன் என்பதால் தான் ஒப்படைத்தான். களவெடுக்காது, பொய் சொல்லாது ஒழுக்கமாக வாழ்பவனைத் திருமகள் பெரிதும் விரும்புவாள். அரவிந்தன் தனக்கு வேண்டாம் வேறு யாரிடமாவது கொடுங்கள் என்றபோதும், வலுக்கட்டாயமாகத் தனபாலன் கொடுத்தவன். இதிலிருந்தாவது நீ உணரல் வேண்டும்'' என்று பூசாரியார் இருவருக்கும் எடுத்துக் கூறினார். அதை அவர்கள் இருவரும் அக்கறையுடன் கவனமாகக் கேட்டனர். அவர்கள் சென்றபின்பு கோயிலில் நின்றவர்களுக்கு பூசாரியார் சொன்னார், ''ஆலோசனை கேட்பதற்கென்று தினமும் பலர் என்னிடம் வருவார்கள். கேட்பதால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. செயற்பட வேண்டும்'' என்றவர். அதனால் இங்கு மகாநாட்டில் ஆர்வத்தோடு பங்குபற்றுவோர், பேச்சாளர் பேசுவதைக்கேட்டு அதன்படி வாழாவிட்டால் இம் மகாநாட்டால் எந்தப் பயனும் வராது. அதனால் அவ்வாறு வாழுங்கள். இத்துடன் இன்றைய மகாநாடு நிறைவடைகிறது'' என்று கூறிய முதுபெருமறிஞர் சபையோரைக் கரங்குவித்து வணங்கினார்.

**(18)**

ஐந்தாம் நாள் மகாநாடு பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமானது. மகாநாட்டிற்குத் தலைமைதாங்கிய கதிரேசன் தலைமையுரையை நிகழ்த்தினார். ''சபையோர்களே, இன்று மகாநாட்டில் பேசப்போவது யார் என்பதை நாம் இதுவரை தெரிவிக்கவில்லை. ஏனைய நாட்களில் முன்பே தெரிவித்திருப்போம். நீங்கள் உங்களுக்குள் பேசுபவரைப்பற்றிக் கதைத்து ஒரு முடிவோடு வருவீர்கள். இன்று உங்களுக்கு ஒரு அதிர்ச்சியைக் கொடுப்பதற்காகவே பேசுபவர் பற்றி எமது குழு எதுவும் சொல்லவில்லை. ஒரு பெரும் அறிஞர்தான் பேசுவார் என்ற நினைப்புடன் வந்துள்ளீர்கள். இன்று பேசுபவர் இன்றுதான் முதன்முதலாகப் பேச வருகிறார். அவர் பெரிதாகப் படிக்கவில்லை. பாடசாலைக்குச் சென்று நன்கு கல்விகற்று, பின் பல்கலைக்கழகங்கள் சென்று பட்டங்களைப் பெற்றவர்கள் தான் பேச வேண்டும் என்று எண்ணக்கூடாது. உங்களுக்குத் தெரிந்த ஒரு அறிஞர் தான் இன்று பேசப்போகிறார். இதன்பின் அவர் அடிக்கடி பேசுவார். இல்லை பேச அழைப்பீர்கள்''.

''சிலர் இதைக்கேட்டு ஆச்சரியப்படுகிறார்கள். சிலர் பேசுபவர் யாரென யோசிக்கிறார்கள். எப்படியோசித்தாலும் உங்களால் அவரை அறிந்து கொள்ள முடியாது. அவர் இனிமையாகப் பாடுவார். பல நூல்களை உதாரணமாகக் கூறுவார். படிக்க வேண்டிய அனைத்து நூல்களையும் கற்றுத் தேர்ந்தவர். குறிப்பிட்ட சில நூல்களைப் படித்துப் பட்டங்களைப் பெறலாம். பலர் பல நூல்களைக் கற்றும், எதுவும் தெரியாதவர்கள்போல வாழ்கின்றனர். அவர்களில் ஒருவரான எமது காட்டுப்பிள்ளையார் கோவில் பூசகரான கஜேந்திரன் தான் இன்றைய பேச்சாளர்'' என்று கதிரேசன் கூற சபை கைதட்டி ஆரவாரித்து மகிழ்ந்தது.



பூசகர் மேடைக்கு வந்து எல்லோரையும் வணங்கினார். பின், ‘‘இன்று எனது பேச்சைக் கேட்பதற்காகச் சபையில் கூடியிருக்கும் பெருமக்களே, மாணவர்களே அனைவர்க்கும் எனது மாலை வணக்கம். நான் சகல நூல்களையும் கற்றுணர்ந்த வசீகரமான பேச்சாளர் என்று நினைக்காதீர்கள். இம் மகாநாட்டின் தலைவரும் உறுப்பினர்களும் என்னைக் கட்டாயம் பேசச்சொல்லி வற்புறுத்தியமையால்தான் வந்துள்ளேன். குற்றங்கள், குறைகள் நிறைய இருக்கும். அதனால் அவற்றை மன்னியுங்கள் என்று கூறி எனது பேச்சை ஆரம்பிக்கின்றேன். இம் மகாநாட்டின் தலைவரான கதிரேசன் பாடசாலைக்குச் சென்றதில்லை. ஆனால் எல்லா நூல்களையும் பல ஆசிரியர்களின் உதவியுடன் கற்றுள்ளார். நன்கு கற்றவர்களைப் போற்றி மதித்து வாழ்ந்தால் அறிவு தானாக வளரும் என்று கதிரேசன் சொல்வார். நான் அவர் சொல்வதை வேதவாக்காக ஏற்று வாழ்ந்தமையால் உயர்ந்தவர்கள் பெற்ற கல்வியை நானும் பெற்றேன். கதிரேசன் சொல்வார் திருக்குறளைப்படி அறிவு முழுவதும் உன்னைத்தேடி வந்து சேரும்.’’ அது உண்மையான வேதவாக்கு. ஒருவர் தான் எந்த நிலையை அடைய வேண்டும் என்று எண்ணுகிறாரோ, அந்தநிலையை அடையத் தளராத ஊக்கத்துடன் செயற்பட வேண்டும். ஒருவர் உடையவர் என்று யாரைச் சொல்லாம் என்று வள்ளுவரே கூறியுள்ளார். உடையவர் என்று சொல்லத்தக்கவர் யாரென்றால் ஊக்கமுடையவரே எல்லாம் உடையவராவார். ஊக்கம்தான் ஒருவரது நிலையான செல்வம்’’.

‘‘ஊக்கமுடையவர்கள் எதை அடைய நினைக்கிறார்களோ அதை இலகுவில் அடைந்து விடுவார்கள். நான் எல்லா நூல்களையும் கற்க வேண்டும் என்று முடிவு செய்தேன். பலரின் உதவியுடன் கற்றேன், கற்று வருகிறேன். கற்பது பெரிதல்ல. கற்றவற்றை மற்றவர்களுக்கும் கற்பிப்பதே பெருமைக்குரிய செயல். கற்பவற்றை வெளிபடுத்தாது மனதுள் பூட்டி வைத்திருந்தால் கற்றமையால் என்ன பயன் உண்டாகும்?. தான் கற்றவற்றைச் சபையோருக்கு நன்கு புரியும்படி எடுத்துக்கூற வல்லவர்கள் கற்றவர்கள் அனைவரையும் விடக் கற்றவராவர். ஒருவர் அறிவில் மேம்பட விரும்பினால் சபையில் அஞ்சாமல் தான் கற்றவற்றைப் புரியும்படி கூற வேண்டும். அதைவிடத் தம்மைவிடக் கற்றவர்களிடம் சென்று கற்க வேண்டும். அவ்வாறு செய்ய அஞ்சுபவர்கள் படிக்காதவர்களைவிட மோசமான அறிவைக் கொண்டவர்களாவர். இவ்வாறு கதிரேசன் கூறியமையால்தான் இன்று பேச வந்துள்ளேன்’’.

‘‘வள்ளுவன் சொல்லாதது எதுவும் இல்லை. ஏனெனில் அவன் தனக்கு முன் எழுதப்பட்ட அனைத்து நூல்களையும் தெளிவாக விளங்கிக் கற்றுள்ளான். முக்கியமாகத் திருமந்திரத்திலுள்ள மூவாயிரம் பாடல்களையும் நன்கு படித்துத் திருமூலர் கூறிய சிவவழிபாட்டைத் தவிர்த்து ஏனைய கருத்துக்களைத் திருக்குறளாக்கியுள்ளான். இது தமிழறிஞரின் கூற்று. அதை நான் ஆராய்ந்தேன். அவர் கூறியது முற்றிலும் உண்மை. வள்ளுவர் சொன்ன வெகுளாமை, இன்னா செய்யாமை பற்றித்தான் நான் தங்களுடன் உரையாட வந்துள்ளேன். பலிக்கின்ற இடத்தில்



கோபங்கொள்ளாது இருப்பவர்தான் சினத்தைக் காப்பவராவார். சினங் கொள்வதற்கும், பிறருக்குத் துன்பம் செய்வதற்கும் காரணமாவது அன்பில்லாமையே. ஒழுக்கக் கோட்பாடுகளை மீறி ஆசைப்பட்டு பிறரின் பொருளைக் கவர நினைப்பவர்கள் தீயசெயல்களில் ஈடுபடுபவர்கள். மற்றவர்களின் துன்பங்களை உணராதவர்கள். தான் நினைத்தவைதான் சரியென்று நினைப்பவர்கள். மற்றவர்களைத் தரக்குறைவாக நினைப்பவர்கள் போன்றவர்கள் தான் தீயசெயல்களைச் செய்வார்கள். அதைச் சுட்டிக்காட்டினால் சினங்கொள்வர். கோபங் கொள்பவனின் அறிவு அழிந்து விடுவதால், புத்தி பேதலித்துச் செயற்படாது போய்விடும். அதனால் நன்மை, தீமைகளை எண்ணிப்பார்க்கும் தன்மை இல்லாது போய்விடும். ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பது இவற்றைக் குறித்துத்தான்''.

''இறைவன் பிறவியைக் கொடுத்து, அவன் முன்பு எப்படி வாழ்ந்தாலும் பரவாயில்லை. உடலெடுத்த இப்பிறவியல் ஒழுக்கமாக வாழ்ந்து பிறர்க்கு உதவிகள் செய்து தன்னை வந்தடைய வேண்டும் என்பதற்காகவே அதற்குத் தேவையான அனைத்தையும் இறைவன் படைத்துள்ளான். ஒருவர் தர்மமான முறையில் வாழ்ந்தால், இறையருள் அவரைத்தேடி வரும். அவ்வருளைப்பெற எந்த முயற்சியும் எடுக்கத் தேவையில்லை. தான தர்மம் தவம் கூடச் செய்யவேண்டியதில்லை. ஒழுக்கம் நிறைந்த வாழ்வு தேவையான அனைத்தையும் பெற்றுத்தரும். அதற்குத் தேவை அன்பு. அன்பே சிவமாகும். அன்புடைய மனதில் சிவன் மகிழ்வுடன் வீற்றிருந்து வழிநடத்துவார்''.

''அன்பு உள்ள மனம் எப்பொருளையும் நாடாது. உதவிகளைச் செய்யவே விரும்பும். அன்புள்ளம் கொண்டவர்களுக்கு இறையருள் உண்மைப்பொருளான இறைவனைக் காட்டும். அதனால் ஆன்மா பொய்யானவற்றை விலக்கி, உண்மையான பொருளைக்காட்டி அதன்வழியில் அவனை ஒழுகச் செய்யும். சினந்தான் அனைத்துத் தீயசெயல்களைனயும் செய்விக்கிறது. சினங்கொண்டவன் எதையும் ஆராய மாட்டான். நீதியை உணரமாட்டான். தான் நினைப்பவைதான் சரியானவை. நீதியானவை என்ற எண்ணத்தோடு செயற்பட வைப்பதால் மாயை நல்லவற்றை மறைத்துவிடும்''.

''சினத்தைத் தவிர்த்தவன் தேவையானவற்றைத் தேவையானபோது இறையருளால் பெற்றுக் கொள்வான். அன்புள்ளம் கொண்டவனை நண்பர்கள், சுற்றத்தவர்கள், உறவினர்கள் மற்றும் பலர் துன்பங்கள் ஏற்படும்போது தாங்கிக் கொள்வார்கள். அன்பு கடலைப் போன்றது. அது அள்ள அள்ள வற்றாதது, பெருகிச் செல்லும் ஆற்றலுடையது''.

''சினந்தான் அனைத்துத் தீயசெயல்களுக்கும் மூலகாரணியாக இருக்கிறது. நாம் ஒருவருக்கு உதவிசெய்ய விரும்பினால் அதற்குரிய பொருட்களை அனைத்தையும் இறைவன் கொடுத்தருளுவான். ஒருவருக்குத் தேவையான அனைத்தையும் இறைவன் பூமியில் படைத்துள்ளான். அதனால் கொடுக்க வேண்டியவையெல்லாம் கொடுப்பவரைச் சுற்றியிருக்கும் என்ற எண்ணம் மனதில் உருவானால் வேறு எதைப்பற்றிய எண்ணங்களையும் எண்ணத் தேவையில்லை. இறைவனால் படைக்கப்பட்ட பொருட்கள்



யாவும் சகல உயிர்களுக்கும் சொந்தமானவை. அவற்றை உயிருடன் இருக்கும்வரை நல்ல முறையிற் பயன்படுத்த வேண்டும். இறைவனாற் படைக்கப்பட்ட எந்தப் பொருட்களும் அழிவதில்லை. மாறாக அவை மாற்றமடைகின்றன. ஓர் உடலில் இருக்கும் உயிர் அவ்வுடலைவிட்டு நீங்கினால் இன்னொரு உடலைப் பெறுகிறது. அதுபோலப் பொருட்களும் அழிந்து மாற்றமடையும்''.

''பிறந்தவன் இறப்பதும், இறந்தவன் பிறப்பதும் உறுதியானது. மாற்ற முடியாதது. அதற்காகக் கவலைப்படுவதால் பயன் எதுவும் ஏற்படாது. அதனால் சினத்தைத் தவிர்த்து இன்னா செய்யாது வாழ வேண்டும் என்று வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறியுள்ளார். எவ்வளவு சிறப்புக்களையும், அளவிடமுடியாத செல்வத்தைத் தருவதாக இருந்தாலும்கூட பிறருக்குத் தீங்கு செய்யலாகாது. அத் தீங்கு சிறியதாக இருந்தாலும் வரவிருக்கும் பெரும் சிறப்புக்களையெல்லாம் நீக்கிவிடும். ஒருவர் மிகமிகத் தீய செயலைச் செய்தாலும், செய்தவருக்குத் தீங்கு செய்யாது வாழ்வது தான் அறவாழ்வு. தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்பவன் இறைவனால் ஆசீர்வதிக்கப்படுவான் என்று வேதங்களும், புராணங்களும் கூறுகின்றன. மற்ற உயிர்களுக்கு உண்டான துன்பத்தைத் தனது துன்பமாகக் கருதி அதை நீக்குபவன் பூமியில் சொர்க்கவாழ்வைப் பெறுவான். தனது உயிருக்குத் துன்பமானவை எவை எவையெனத் தெரிந்த ஒருவர் மற்றவர்களுக்குத் தீங்கு செய்தால், அத்தீங்கை அவர் வரவழைத்துக் கொள்வார். முற்பகல் செய்தால் பிற்பகல் அதற்கான பயன் வருமென்றுணர்ந்தவன் யாருக்கும் தீங்கு செய்ய மாட்டான்''.

''வாழ்க்கையில் இன்பம் துன்பம், இலாபம் நட்டம், வெற்றி தோல்வி என்பன அடிக்கடி வந்துபோகும். அவற்றை சமமாக மதிப்பவர்கள் தான் உலகைப் புரிந்தவர்களாவர். துன்பம் வரும்போது துயரப்படுவதாலோ அல்லது இன்பம் வந்தபோது மகிழ்ச்சியடையவோ தேவையில்லை ஏனென்றால் இரண்டும் நிலையானவை அல்ல. தற்காலிகமானவை என்று எண்ணுபவன்தான் வாழ்க்கையை வென்றவனாவான். துன்பம், நட்டம் என்பன யாருக்கு வருகின்றன? ஏன் வருகின்றன என ஆராய்ந்து பார்த்தால் அவை இரண்டும் ஒருவரை வலிய வந்தடைவதில்லை. அவரவரே கூவியழைக்கின்றனர்''.

''ஒருவருடன் முரண்பட்டவன் அல்லது ஒருவருக்கெதிராக தீய செயல்களைச் செய்தால் சினம் உண்டாகும். அதை அடக்கினால் நன்மைகள் உண்டாகும். வெளிப்படுத்தினால் துன்பங்கள் தொடர்ந்து வரும் என்று மேற்சொல்லப்பட்ட அதிகாரங்கள் மூலம் வள்ளுவர் தெளிவாகக் கூறுகிறார். கல்வியோ, பட்டங்களோ, பதவிகளோ, செல்வமோ வாழ்வில் வரும் துன்பங்களை இன்பமாக்காது. பொதுவாகப் பலரும் துயரப்படத் தகாதனவற்றிற்கெல்லாம் துயரப்படுகிறார்கள். கடவுளை நம்புவோர், அறிவுடையோர். தேடிவரும் துன்பங்களுக்காகத் துயரப்படமாட்டார்கள். ஏனென்றால் துயரப்படுவதன்மூலம் உடலுக்குப் பல கெடுதிகள் உண்டாகும். அதனால் நோய்கள்



அதிகரிக்கும் என்று அவர்களுக்குத் தெரியும். யாவும் விதிப்படி நடைபெறுகின்றன என்று புரிந்தவன் துயரப்படமாட்டான்''.

''செயல்கள் உயிருள்ள விதைகளாகும். அவை முளைத்துக் கட்டாயம் பலனைத் தரும் என்று உணர்ந்தவர்கள் தீயசெயல்களைச் செய்யமாட்டார்கள். தீய செயல்களைச் செய்விப்பது சினம். அதனால் சினத்தை அடக்குமாறு வள்ளுவர் கூறுகிறார்''.

''தீயசெயல்களைச் செய்து அதனால்வரும் துன்பங்களை அனுபவித்த போதும் திருந்தாது தொடர்ந்தும் தீய செயல்களைச் செய்வதில் விருப்பம் கொண்டவர்களைத் திருத்த முடியாது. அப்படியான ஒருவர்தான் சிவானந்தன். சிவானந்தனுக்கு அரவிந்தனைப் பழிவாங்க வேண்டுமென்று நினைத்து அவருக்கெதிராகப் பல தீய செயல்களைச் செய்தபோதும் அவற்றால் அரவிந்தன் பாதிக்கப்படவில்லை. அதனால் முன்பைவிடத் தீவிரமாக நடந்து கொண்டார். அரவிந்தனின் மூத்த மகனின் மகள் கவிதா. வனத்தில் உள்ள பிரபல பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். அவளுடன் அப்பாடசாலையில் கற்பிப்பவன் கௌதமன்''.

''கௌதமனுக்குக் கவிதாவைத் திருமணம் செய்ய விருப்பம். அதனால் அவன் தனது எண்ணத்தை வெளிப்படுத்தும் வகையில் அவளோடு கலகலப்பாக பழகி வந்தான். சகசமாகப் பழகிய பின்பு தனது விருப்பத்தைச் சொல்லலாமென நினைத்தான். முன்பு கலகலப்பாகச் சிரித்துப்பேசிய கவிதா, நாளடைவில் அவனைச் சந்திப்பதைத் தவிர்த்து வந்தாள். அது கௌதமனுக்குக் கவலையைக் கொடுத்ததால் அவன் அவளைத் தனிமையில் சந்தித்துப்பேச விரும்பினான். ஒரு நாள் அவளைக் காட்டுப்பிள்ளையார் கோவிலில் சந்தித்தபோது அவன் சொன்னான், ''கவிதா, நானென்ன பேயா, பிசாசா என்னைக் கண்டால் முன்பு மகிழ்வுடன் கதைப்பீர். இப்போது என்னைக் கண்டதும் மறைந்து விடுகிறீர்? ஏன் என்று சொல்லும்''.

''அவள் அவனைச் சில கணங்கள் உற்றுப் பார்த்தாள். ''நான் உங்களோடு கதைப்பதைச் சிலர் வேறுவிதமாக எண்ணுகின்றனர். சிவானந்தனின் மகள், நீ கௌதமனைக் காதலிப்பதாகப் பேசிக் கொள்கிறார்கள். அவன் சரியான குடிகாரன். கன்னிப் பெண்களோடு சிரித்துப் பேசுவது அவனது பொழுதுபோக்கு. அவனை நம்பாதை'' என்றவள் என்றாள்''.

''கவிதா, உங்களது குடும்பமும், எங்களது குடும்பமும் பரம்பரை பரம்பரையாக இந்த வனத்தில் தான் வசித்து வருகிறோம். உம்மைப்பற்றி எனக்குத் தெரியும். அதைப்போல என்னைப்பற்றியும் உமக்குத் தெரியும். அதை யாராவது கூறியா நீ அறிய வேண்டும் என்றான் கௌதமன்''.



“உங்களைப் பற்றியும் உங்களது குடும்பத்தைப்பற்றியும் எனக்குத் தெரியும். ஆனால் ஒரு பெண் ஒரு ஆடவனுடன் கதைத்துப் பேசுவது ஒழுக்கத்தை மீறிய செயலாகும். அதனால் என்னுடன் கதைப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்” என்றாள் கவிதா.

“அதைக்கேட்ட கௌதமன் சொன்னான், “கவிதா, உம்மை எனக்குப் பிடித்துவிட்டது. நீங்கள் விரும்பினால் நான் உங்களைத் திருமணம் செய்ய விரும்புகிறேன்” என்றதும் கவிதா சில கணங்கள் எதுவும் பேசாது நின்றாள். அதனால் கௌதமன் சொன்னான், “அடிக்கடி சந்தித்துக் கதைப்பதுதான் தவறு. காதலிப்பதும் தவறா...?”

“காதலிப்பதும் தவறு தான். ஆசையாக, அருமையாகப் பெற்று வளர்த்துக் கல்வியூட்டிச் சகல தேவைகளையும் நிறைவுசெய்த பெற்றோரின் விருப்பத்தைமீறி ஒரு பெண் தான் நினைத்ததைச் செய்யமுடியாது. அதனால் அப்பாவுடன் கதையுங்கள்” என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டாள். கௌதமனுக்குத் துக்கமாக இருந்தது. அடுத்து என்ன செய்யலாமென்று யோசித்தான்”.

“கவிதா, வீட்டுக்குச் சென்று அன்று நடந்த சம்பவத்தைத் தாத்தாவான அரவிந்தனுக்குச் சொன்னாள். அவள் பிறந்த பின்புதான் தனது வியாபாரம் பலமடங்கு பெருகியதாகக் கூறித் தாத்தா அவளின்மீது அளவில்லாத அன்பு வைத்திருந்தார். அவர் புதிதாகத் தொழில் தொடங்கும்போது அவளைக் கொண்டே தொடக்கி வைப்பார். அதனால் இருவரும் மிக நெருக்கமாகப் பழகி வந்தனர். அதனால் அவள் எதையும் முதலில் அவருக்குத்தான் சொல்லுவாள்”.

“கவிதா, கௌதமனை உனக்கு விருப்பமா...?” என்று அரவிந்தன் கேட்கக் கவிதா அவரைக் கட்டியணைத்து முத்தமிட்டாள். அரவிந்தன் சத்தமிட்டுச் சிரித்துவிட்டுச் சொன்னார். “இந்த முத்தம் கௌதமனை நினைத்தா....?” கவிதா நாணத்துடன் சிரித்தாள். “நல்ல குடும்பம். அவன் மிகமிக நல்லவன். நான் உனது அப்பாவுடனும், கௌதமனது தந்தையுடனும் பேசுகிறேன்” என்றார். கவிதாவின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. திருமணம் முடிந்துவிட்டதாகவே நினைத்தாள்....”

“அரவிந்தன் கௌதமனின் வீட்டுக்கு வந்தபோது, கௌதமனின் தந்தை மிகவும் மகிழ்வுடன் வரவேற்றார். பெரும் வர்த்தகரான அவர் வீடுதேடி வந்தது நடராசாவுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. “நாங்கள் இனத்தவர்கள். இருப்பினும் நல்லது கெட்டதின்போதுதான் சந்திப்போம். இப்போ ஒரு முக்கிய தேவை காரணமாக வந்துள்ளேன்” என்றார் அரவிந்தன்”.



“நடராசா, சொல்லுங்கோ ஐயா” என்றபோது அரவிந்தன் சொன்னார், “நான் உங்களவிட இளையவன், அதனால் ஐயா என்று இனி அழைக்காதீர்கள். தம்பி என்று அழையுங்கள்” என்றார். அரவிந்தன் சிரித்தவாறு, “சரி தம்பி என்று அழைத்துத் தான் வந்த விடயத்தைச் சொன்னார். அதைக்கேட்ட நடராசா மிக்க மகிழ்வுடன் தனது மனைவியையும், மகனையும் அழைத்துச் சொன்னார். கௌதமன் மிக்க மகிழ்வடைந்தான். அவன் முன்பே கவிதாவைப் பற்றிக் கூறியமையால் தாயும் மகிழ்ந்தாள். அரவிந்தன் திருமண நாள் குறித்து பேசிவிட்டுச் சென்றார்”.

“நடராசாவின் தம்பி வேலாயுதம் சிவானந்தனின் பள்ளித்தோழன். இருவரும் தீய செயல்களைச் செய்வதில் வல்லவர்கள். நடராசாவும் வேலாயுதமும் சேர்ந்தே வியாபாரம் செய்து கொண்டிருந்தனர். வேலாயுதம் தான் வர்த்தகத்தில் பெரும் பங்காளி. அடிக்கடி வேலாயுதத்திற்கும் அரவிந்தனுக்குமிடையே பிரச்சினைகள் வரும். நடராசா மிக மிக நல்லவர். அவருக்கு அரவிந்தனின் மேல் நல்ல மதிப்பும் மரியாதையும் உண்டு. எனினும் அவரால் தம்பியை எதிர்க்க முடியவில்லை. காட்டுப் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று அவரைத் திருத்துமாறு மன்றாடுவார்”.

“சிவானந்தனுக்குக் கல்யாண விஷயம் தெரிந்ததும், அதைக் குழப்பத் திட்டமிட்டான். வேலாயுதத்தைச் சந்தித்து அக் கல்யாணத்தை நடத்தவிடக்கூடாது என்று கூறிக் கவிதாவைப் பற்றிக் கேலமாகக் கதைகளைப் பரப்பினான். கல்யாண விடயத்தில் தனது சகோதரன் சொல்வது நியாயமாக இருப்பதாக வேலாயுதம் நம்பினான். வேலாயுதம், சிவானந்தனுக்குச் சார்பாக இருந்து அரவிந்தனுக்குப் பல தீங்குகள் செய்தபோதும், அரவிந்தன் அதற்காகக் கோபங்கொள்ளாது அவனுக்கு நன்மைகளையே செய்து வந்தார். அதனால் அரவிந்தனோடு சேர்ந்து வியாபாரம் செய்தால் தான் முன்னேறலாம் என வேலாயுதம் நினைத்தான்.”

“வேலாயுதத்திற்கு ஐந்து பெண்பிள்ளைகள். ஐந்தும் வயதாகியும் திருமணம் செய்யாதிருப்பது அவருக்குப் பெரிய கவலையை அளித்துக் கொண்டிருந்தது. சிவானந்தனதும் வேலாயுதத்தினதும் நட்பைப் பிரிக்க வேண்டும் என்று நினைத்த அரவிந்தன், வேலாயுதத்தை வீட்டுக்குச் சென்று சந்தித்தார். அப்போது அவர் கூறிய வார்த்தைகள் வேலாயுதத்தின் காதில் ஒலித்தன. “வேலாயுதம் நீயும் ஒரு வர்த்தகன். நானும் ஒரு வர்த்தகன். நான் யாரையும் ஒருபோதும் போட்டியாளராகக் கருதியதில்லை. கடவுளை முழுமையாக நம்புகிறேன். எம்மைப் படைத்த கடவுள் எமது விதியையும் படைத்துள்ளான். அதன்படி தான் யாவும் நடைபெறும். முயற்சி ஒருபோதும் வீண்போவதில்லை. செய்யும் தொழில் விருத்தியடையாமைக்கு முக்கிய காரணம், செய்யுந்தொழிலை நீதியான முறையில் செய்யாமையாகும்”.



‘‘ஒரு செயலைத் தர்மமான முறையில் செய்ய வேண்டும். பற்றுக் கொள்ளாது, அடுத்தவனைக் கெடுக்க நினைக்காது, இலாபத்தையும், நட்டத்தையும் சமமாக மதித்து கடவுள் எனக்கென ஒதுக்கியதைக் கட்டாயம் தருவார் என்ற நினைப்போடு செய்தால் எத்தொழிலும் விருத்தியாகும். நீ பற்றுக்களுடனும் இலாபத்தை மட்டும் நோக்கமாகக் கொண்டு செய்வதால்தான் உனது மனம் தீயவற்றை நாடுகிறது. அதனால் சமத்துவ புத்தியுடன் செயலாற்று. அப்படிச் செயலாற்றினால் நீ செய்யும் செயல் இலாபத்தைத் தரும்’’.

‘‘வாருங்கோ வாருங்கோ என முகமலர்வுடன் அரவிந்தனை வரவேற்றார் வேலாயுதம். வேலாயுதம் எனக்கு எதிரிகள் இல்லை. எதிரிகளாகப் பிறர் நினைப்பதை என்னால் தடைசெய்ய முடியாது. எல்லோரும் சகல சௌபாக்கியங்களுடனும் வாழவேண்டும் என்று விரும்புபவன் நான். நீ இப்பொழுது எனது சம்மந்தி. அதனால் நீயும் உனது குடும்பமும் இன்பமாக வாழவேண்டும் என்று நான் விரும்புகின்றேன். உனக்கு உனது மூத்த மகளை எனது தம்பியின் மகன் விரும்புகிறான். அவளும் விரும்புகிறாள். அதற்கு எனது தம்பி தடையாக இருக்கிறான். ஏனென்றால் நீ குடிப்பவன். தீயவர்களோடு சேர்ந்து தீய செயல்களைச் செய்பவன். எனது தம்பி தர்மவான் என்பது உனக்குத் தெரியும். அதனால் உனது பெண்பிள்ளைகளுக்காக உனது பழக்கவழக்கங்களை மாற்று’’ என்று அரவிந்தன் பேசிக் கொண்டிருக்கும்போது வேலாயுதம் சொன்னான். ‘‘ஐயா, நீங்கள் தெய்வம். அது தெரிந்தும் நான் உங்களுக்குப் பல துன்பங்களைச் செய்து விட்டேன். என்னை மன்னியுங்கள்’’ என்று கைகூப்பி வணங்கினான்.

‘‘வேலாயுதம், கடவுளையும், குருவையும், பெற்றோரையும் தான் ஒருவன் வணங்க வேண்டும். அத்துடன் எவருக்கும் தீங்கு செய்யக்கூடாது. ஏனென்றால் பிறருக்குச் செய்த தீங்கு செய்தவனையே இறுதியில் வந்தடையும். இது கடவுள் அமைத்த விதி. எனக்கு யாரும் தீங்கு செய்ய முடியாது. அதனால்தான் நான் யாரையும் எதிரியாக நினைத்துப் பழிவாங்குவதில்லை. யோசித்து முடிவைச் சொல்’’ என்று கூறிவிட்டுப் புறப்பட்டார் அரவிந்தன்.

‘‘கடவுள் மாதிரி எல்லோருக்கும் உதவுபவர். அவருக்கு நாம் சொல்லச் சொல்லக் கேளாது சிவானந்தனுடன் சேர்ந்து எவ்வளவு தீமைகள் செய்தீர்கள். அவர் அவற்றையெல்லாம் மறந்து உதவி செய்கிறார். இனியாவது ஒழுக்கமாக வாழுங்கள்’’ என்றாள் வேலாயுதத்தின் மனைவி’’. இத்துடன் இன்றைய நிகழ்வுகள் யாவும் நிறைவடைகின்றன. வணக்கம்’’ என்று விடைபெற்றார் காட்டுப்பிள்ளையார் கோவில் பூசகர்.



**(19)**

அன்றைய மகாநாடு பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமானது. மகாநாட்டின் தலைவரான கதிரேசன் தலைமையுரையாற்றினார். ‘‘சபையோர்களே, திருக்குறள் மகாநாடு நாம் எதிர்பார்த்ததைவிட மிகமிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதனால் நாம் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். ஏராளமான மாணவர்கள் மிகவும் உற்சாகமாக மகாநாட்டில் கலந்து கொள்கின்றனர். எதிர்காலப் பிரசைகளான மாணவர்களின் நலத்தை ஒவ்வொருவரும் பேண வேண்டும். வழமையைவிட இப்போது போதைப் பொருட்களின் பாவனை அதிகரித்து வருகிறது. தீயவர்கள் எதிர்காலச் சமூகத்தவரின் நலனில் அக்கறை கொள்ளாது மாணவர்களுக்குப் போதைப் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர். இதை வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறிவிட்டார். அது பற்றிப்பேச ஒரு அறிஞர் வந்திருக்கிறார். அவர் அது பற்றி விரிவாகப் பேசுவார்’’.

‘‘அடுத்துத் தமிழறிஞர் வேலவன் அவர்கள் நிலையாமை பற்றியும், துறவு பற்றியும் விரிவாகப் பேசுவார். அவர் திருக்குறளைப் பல்வேறுபட்ட பிரிவுகளில் ஆய்வுசெய்து நூல்களை வெளியிட்டவர். ஆயிரம் குறள்களுக்குத் தொலைக்காட்சியில் ஆயிரம் கதைகள் சொன்னவர். அத்துடன் சமய நூல்கள் பலவற்றைக் கதைநூலாக வெளியிட்டவர். அக்கதைகளைச் சமயப் பெரியார்கள் பலர் பாராட்டியுள்ளனர். இருந்தபோதும் அவருக்கு இல்லாத ஒரு கவலை எனக்கிருக்கிறது. சமயத் தத்துவ நூல்களுக்கு அவர் கதைகளை எழுதி எளிமையாக்கி மாணவர்களுக்குக் கொடுத்தமையால் மாணவர்கள் சமய உண்மைகளைப் புரிந்துள்ளனர். இதை எந்த அறிஞரும் விமர்சிக்கவில்லை. விருதுகள், பரிசுகள் வழங்கவில்லை. அதற்கு அவர் சொல்வார் கடவுளால் கொடுக்கப்பட்டவை அவரவரது விதிப்பலனுக்கேற்பவே அவரை வந்தடையும். வள்ளுவர் வாழும்போது அவர் இயற்றிய திருக்குறளை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இன்று குறள் உலகின் வேதமாக மாறியுள்ளது. அந்தநிலை எனக்கும் வரும் என்பார். ஒரு குறளுக்குப் பல விளக்கங்கள் கூறும் அவரை மேடைக்கு வருமாறு அழைக்கின்றேன்’’ என்று கூறிய கதிரேசன் தனது ஆசனத்தில் வந்தமர்ந்தார்.

மேடைக்கு வந்த தமிழறிஞர் சபையோரை மிகுந்த மகிழ்வுடன் பார்த்து வணங்கினார். சபையோர்களே, மிக்க ஆவலுடன் கூடியிருக்கும் உங்களைப் பார்க்க எனக்கு மகிழ்வாக இருக்கிறது. திருக்குறள் உலகின் வேதம். அது கூறுவது எதுவும் பொய்த்ததில்லை. இன்று நான் நிலையாமை பற்றியும், துறவு பற்றியும் வள்ளுவர் கூறியவற்றைக் கூறவுள்ளேன். கடவுளாற் படைக்கப்பட்டவற்றில் உயிரைத்தவிர மற்றெல்லாம் நிலையானவை அல்ல. அது குறிப்பிட்ட நாள்வரை பூமியில் வாழும். பின் அழிந்து வேறொன்றாக மாறிவிடும். அழிவடையாத உயிரும் காலவோட்டத்தில் வேறு பல உடலைகளை எடுக்கும் என்று வள்ளுவர் கூறுகிறார். இதையே வைதீக சமயங்களும் கூறுகின்றன’’.



“இறைவனை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளல் வேண்டும். பக்தியில் உறுதி கொண்டவரது புத்தி தடுமாறாது. தடுமாறாத புத்தியுடையவர்கள் தான் இறைவனை அடைய முடியும். இறைவனை அடைந்தவர்கள்தான் பிறப்பை நீக்குவார்கள். புத்தி தடுமாறாதவர்கள் தான் நன்மை தீமை ஆகிய இரண்டையும் வாழும்போதே துறப்பார்கள். மனம் மாறாதிருப்பது தான் பக்தியோகம். இந்நிலையில் இருந்து செயற்படுவோர் வினைப்பயனைத் துறக்கிறார்கள். அதனால் அவர்களுக்குப் பிறவிகள் ஏற்படுவதில்லை. அவர்கள் கேடில்லாத பேரின்பத்தை அனுபவிப்பார்கள். அறிவால் பற்றுக்களான அழுக்குகளை அகற்றுவார்கள். யோகநிலைக்குட்படுவார்கள்”.

“இத்தகையோர் துன்பங்கள் வந்தபோது துயரப்படமாட்டார்கள். இன்பங்கள் வந்தபோதும் மகிழமாட்டார்கள். பற்று, அச்சம், சினம், பரபரப்பு என்பன இல்லாமல் குடும்பத்தவனாக வாழ்ந்தபோதும் ஞானிகளாகவே இருப்பர். இவ்வாறு வாழ்வோரது அறிவு உறுதியானது. பிளவுபடாதது. கலவரம் அடையாதது. பொருட்களால் உண்டாகும் ஆசைகளை விலக்கிப் பொறிகளை அடக்கியவர்கள் நிறைஞானிகளாவர். இவர்கள் தமது கடமை என உணர்ந்தாற்றையெல்லாம் சிறப்பாகச் செய்வார்கள். இப்படியானவர்களுக்குக் குடும்பப்பற்றும், சமூகப்பற்றும் இருக்கும். ஓர் உயிர் வாழும்வரை என்னென்ன தேவையோ அதற்கான பற்றுக்கள் மட்டும் இருக்கும்.”

“நிலையில்லாதவற்றை நிலையானவையென்று எண்ணி வாழ்வது அறியாமையாகும். செல்வம் நிலையாகத் தங்காது. அதனால் செல்வம் வரும்போது நிலையான அறங்களைச் செய்தல் வேண்டும். நாள் என்பது ஒரு கால அளவாகும். ஒரு நல்ல நிகழ்வை நிட்சயித்துவிட்ட அந் நிகழ்வுக்கான நாளை ஆவலோடு எதிர்பார்க்கிறோம். நாள் என்பது ஒரு கால அளவு. அது உயிரைத் தினமும் தேய்த்து அறுத்துக் கொண்டிருக்கிறது. அது எப்போது உயிரை முழுமையாக விழுங்கும் என்று யாருக்கும் தெரியாது. அதனால் மகிழ்வுடன் சுபநிகழ்வுக்கு நாள் குறித்தபின் அச் சுபநிகழ்வுக்கு முன்பும் காலம் உயிரை விழுங்கிவிடலாம். ஒரு மணி நேரத்திற்கு முன்பு தன் எதிர்காலத்தைத் திட்டமிட்டவர் மறுநிமிடம் இல்லாமல் போகலாம். உடம்பென்பது நோய்களின் இருப்பிடம். மாறி மாறி ஒவ்வொரு நோயும் வந்துபோகும். உடம்பினுள் நிலையான இருப்பிடம் இல்லாத உயிர் உடம்மைபிட்டு எப்போது செல்லும் என்று கூட யாருக்கும் தெரியாது”.

“உயிர்கள் கர்மத்தின் (செயலின்) தன்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் விலக்கப்பட்ட கர்மங்களைச் செய்ய விரும்பலாகாது. செயல்கள் தான் ஒருவரைப் பாவியாக்குவதும், புனிதனாக்குவதும். புலன்கள் அடங்காமையால்தான் துன்பங்கள் வந்து சேர்கின்றன. செயலால் மட்டுமல்ல ஓர் உயிர் ஐம்பொறிகளாலும் கர்மம் செய்து கொண்டிருக்கிறது. ஓர் உயிரைக் கர்மமாற்ற வைப்பது மனம். அதனால்



தான் கர்மங்களில் இருந்து உயிர்களால் விடுபட முடிவதில்லை. அதனால் தான் அவை பாவம் செய்கின்றன''.

''மனவுறுதியுள்ளவர்கள் பற்றுக்களை அடக்கி ஒழுக்கமாக வாழ்வார்கள். பற்றுக்களால் மனக்குழப்பம் உண்டாகும். அதனால் ஞாபகசக்தி குறையும். இந்த இரண்டும் புத்தியை நாசஞ்செய்யும். அதனால் ஓயாது துன்பங்கள் வந்து கொண்டேயிருக்கும். மனத்தைக் கட்டுப்படுத்தியவன் மனத்தை ஆளும் மன வேந்தனாகின்றான். அதனால் மனம் புனிதமடையும். புனிதமடைந்த மனதில் பற்றுக்கள் இராது. மனதைக் கட்டுப்படுத்தியவனின் அறிவு இறைவனின்மீது நிலைத்திருக்கும். அதனால் அவனுக்கு வரும் துன்பங்களை இறை உணர்வு அழித்துவிடும். அடங்காத மனத்தினையுடையவனுக்கு எல்லாப் பொருட்களிலும் பற்றுண்டாகும். அது பின் அவாவாக மாறும். அதனால் அவனுக்கு இன்பம் இராது. நங்கூரமிட்டிருக்கும் கப்பலை காற்று தனது போக்கிற்கேற்ப தள்ளிச் செல்வதுபோல புலன்களால் கவரப்பட்ட மனதை பற்றுக்கள் தமக்கேற்றவாறு செயற்பட வைக்கும். அதனால் மனதைப் பொறிகளில் இருந்து விலக்கி வைக்க வேண்டும்''.

''உலகில் உள்ள அனைத்துப் பொருட்களும் நிலையானவை அல்ல என்று தெரிந்தவர்கள்தான் நிலையான பொருளான இறைவனை அடையத்தவம் செய்கிறாகள். ஆசைதான் பிறப்புக்களுக்கு முக்கிய காரணி என்று தெரிந்தவர்கள் பொருட்களின்மீது பற்றுக்கொள்ள மாட்டார்கள். ஒருவர் ஒரு பொருளின்மீது வைத்த ஆசையை நீக்கினால் அப்பொருளால் எந்தத் துன்பமும் அவருக்கு வராது. ஆசைதான் துன்பத்துக்குக் காரணி. அதனால் ஆசையை நீக்கினால் இன்பமாக வாழலாம். தவம் செய்வதானால் மனதில் எந்தப் பற்றும் இருக்கக்கூடாது. பற்று என்று சொல்லப்படும் ஆசை மனத்தில் தோன்றினால் அது கணப்பொழுதில் மலையாக வளர்ந்துவிடும். பற்றற்றவனுக்கு தன் உடம்பே பெரும் பாரமாக இருக்கும். அவனே துறவியென்று வள்ளுவர் கூறுகிறார்''.

''பற்றுள்ளவன், அகங்காரமுள்ளவன், உறுதியும் ஊக்கமும் இல்லதாதவன். இன்பதுன்பங்களால், தோல்விகளால் துன்பப்பட்டு மனக் குழப்பமடைவான். இவன் தானே அனைத்திற்கும் கர்த்தா என்று நினைப்பதால் கனவு நிலையில் இன்பதுன்பங்களை அனுபவிக்கின்றான். அந்த இனிய எண்ணங்களைத் தனது சுற்றத்தவருடன் கலந்து பேசி மட்டற்ற மகிழ்வை அடைகிறான். இரவில் அந்த இன்பமான நினைவுகளுடன் உறக்கத்திற்குச் செல்வதால் பகலில் நிகழ்ந்தவை கனவாக வந்து அவனை மகிழ்விக்கின்றன. அதை உண்மை என நம்பி மகிழ்கிறான். சிலசமயம் அவன் விழித்தெழுந்த பின்பு அவை ஞாபகத்திற்கு வருவதில்லை. அவை ஒருபோதும் நடக்கப் போவதுமில்லை. விதிப்படி தான் யாவும் நடக்கும் என்பதை அறியாத மூடர்கள் கனவில்தான் இன்பத்தை அனுபவிக்கின்றனர்''.



“இத்தகையோர் காட்டுக்குச் சென்று தவம் செய்வதால் எந்தப் பயனும் வராது. ஒருவரது பொறிகள் புலன்களிலிருந்து பிரிக்கப்படுமேயானால், அவ் அறிவு உறுதியானதாகிறது. உயிர்கள் அனைத்தும் அடங்கியிருக்கும் வேளையில் துறவி விழித்திருப்பான் அவ்வேளை இறைவனோடு இணைவதற்குரிய வேளையாகும். அதனால்த்தான் துறவிகள் இரவில் விழித்திருப்பர். ஆர்ப்பரித்துக் கரைபுரண்டோடும் ஆறுகள், சமுத்திரத்தை அடையும்போது தன்நிலையை இழந்து அடங்கிச் சங்கமமாவது போல, உலக ஆசைகள் அனைத்தையும் மனதுள் அடக்கி ஒடுக்குபவனே துறவியாவான். ஆசைகளை அறுக்காதவன் சபலபுத்தியுள்ள கேலமானவனாவான்”.

“தெளிந்த உறுதியான அறிவை உடையவர்களால் மட்டும்தான் மனதை அடக்க முடியும். மனத்தை அடக்கியவன் போர்க்களத்திலும் தவம் செய்வான். அதனால் தவம் செய்வதற்கென தனியான இடம் தேவையில்லை என்று வள்ளுவர் கூறுகிறார். உலகில் உள்ள உயிர்கள் யாவும் உயிருள்ளவரை தன்னை அறியாமலே இயக்கப்படுகின்றன. இந்திரிய இன்பங்களை மனத்தால் எண்ணி மகிழ்வதும் தவமாகாது. இவர்கள் பொய்யொழிக்க முயன்றவர்களாவர். பொறிகளை மனத்தால் அடக்கிப் பற்றில்லாது தனக்கென ஒதுக்கப்பட்ட நித்திய கர்மங்களை தவறாது செய்வதும் தவமாகும். அதை வீட்டில் இருந்து செய்வது சாலச்சிறந்தது”.

“உலகப் பற்றுக்கள் முழுவதையும், துறந்தவர்தான் துறவி. முற்றும் துறப்பதற்கு எல்லாப் பற்றுக்களையும் துறந்தவனான இறைவன்மீது பற்று வைத்தல் வேண்டும். சிவானந்தனின் வீட்டுக்கு வந்த சிவலிங்கம் சொன்னார், “சிவா, நந்தவனத்தில் ஆரூரன் என்பவருக்குச் சொந்தமாக இருநூறு ஏக்கர் வயல் இருக்கிறது. ஆரூரன் குடிகாரன். அதைச் சுந்தரனிடம் பத்து இலட்சம் ரூபாவுக்கு பத்து வருடங்களுக்கு முன் ஈடு வைத்தான். இப்போது வட்டியும் முதலுமாக இருபது இலட்சம் ரூபாவாகி விட்டது. ஆரூரன் பரம ஏழை. அதனால் இருபது இலட்சம் ரூபாவை ஆரூரனுக்குக் கொடுத்து அந்த வயலை வாங்குவோம். அது ஐம்பது இலட்சம் பெறும்” என்று கூறக் கள்ளத்தொழிலைச் செய்துவரும் சிவானந்தன் அதற்குச் சம்மதித்து இருபது இலட்சம் ரூபா கொடுத்து அந்த வயலை வாங்கிவிட்டான்”.

“சிவானந்தன் அந்த வயலை அடைக்க முற்பட்டபோது, ஒருவர் வந்து தடுத்துவிட்டுச் சொன்னார், ஆரூரன் இந்தவயலைச் சாட்டி ஒரு கடிதத்தை தந்துவிட்டு ஐந்து இலட்சம் ரூபா வாங்கியவன். அதற்கு ஆதாரமாக இந்தக் கடிதத்தை தந்தவன்” என்றார். அக்கடிதத்தில் வனத்தில் உள்ள வெளியார் இருவர் சாட்சிக்கையெழுத்து இட்டிருந்தனர். அதைப் பார்த்துவிட்டு சிவானந்தனும் சிவலிங்கமும் ஆரூரனின் வீட்டுக்குச் சென்றபோது ஆரூரன் மாரடைப்பால் இறந்திருந்தான். இருவரும் திரும்பி வயலுக்கு வந்தபோது, அங்கு அரச அதிகாரிகள் சிலர் நின்றனர். “இது அரசாங்கத்திற்குரிய காணி, முன்பு விவசாய உத்தியோகத்தராகப் பணியாற்றிய அதிகாரி ஒருவர்



ஆரூரனுக்குப் பணத்தை வாங்கிக்கொண்டு விற்றிருந்தார். ஆரூரன் அது கள்ள உறுதியென்று தெரியாது வாங்கி விட்டான்'' என்று வந்த அதிகாரி கூறினார்.

''சிவானந்தன் பெரும் கவலையோடு வீட்டுக்கு வந்தான். வீட்டில் சிவானந்தனது சகோதரன் வந்திருந்தான். அவன் ஒரு சாதாரணமான தொழிலாளி. ஒருபோதும் துக்கப்பட்டதில்லை. எப்போதும் மிக்க மகிழ்வுடன் காணப்படுவான். அவனுக்கு ஐந்து பிள்ளைகள், மூவர் பெண்கள். அவன் மிக்க மகிழ்வுடன் இருப்பதைப் பார்க்கச் சிவானந்தனுக்கு அதிசயமாக இருக்கும். ''ஒரு நாள் சிவானந்தன் தனது சகோதரனான சிவபாலனைக் கேட்டான், ''தம்பி நீ ஒரு சாதாரண தொழிலாளி, வருமானம் பெரிதாக இல்லை. ஐந்து பிள்ளைகள். எப்படி எந்நாளும் மகிழ்ச்சியாய் இருக்கிறாய்? உனக்குப் பொருளைத்தேட வேண்டும் என்ற நினைவில்லையா?''.

''சிவபாலன் சிரித்தான். பின்பு சொன்னான், ''வாழ்க்கையை மகிழ்வுடன் கழித்தல் வேண்டும். வள்ளுவர் சொர்க்கமும் நரகமும் அவரவர் வீட்டில்தான் உள்ளது என்று கூறியுள்ளார். அன்பான மனைவி, அறிவுள்ள பிள்ளைகளைப் பெற்ற அனைவரும் தமது வீட்டில்தான் சொர்க்கமான இன்பங்களைப் பெறுகின்றனர். எனது வருமானம் குடும்பத்திற்குப் போதும். தேவையான பொருட்களை வீட்டிலேயே உற்பத்தி செய்துள்ளேன். கனிகளைத் தரும் மரங்கள் பல உண்டு. அவற்றின் மூலமும் வருமானம் வருகிறது. எனது மனைவி சுவையாகச் சமைத்துத் தருவாள். பிள்ளைகள் நன்றாகப் படிக்கின்றனர். அண்ணா, வீட்டில் உள்ள பெரியவர்கள் எதைச் செய்கிறார்களோ அதையே அவனது குடும்பத்தவரும் செய்வர். அதை நல்லவர்களும் பின்பற்றுவர்''.

''எனது ஆசிரியர் எப்போதும் தர்ம உபதேசம் செய்வார். அவருக்கு ஆறு ஆண்பிள்ளைகள். அவர் பெறும் வேதனத்தில் பெரும் பகுதியை தான் கற்பிக்கும் ஏழை மாணவர்களுக்குக் கொடுப்பார். ஓய்வு நேரங்களில் இலவசமாகக் கற்பிப்பார். அதனால் அவரது ஆறு பிள்ளைகளும் உயர்ந்த உத்தியோகத்தில் உள்ளனர். அவரைப் பின்பற்றித் தான் நான் வாழ்கிறேன். எனக்கு எந்தக் குறையையும் இறைவன் வைக்கவில்லை. எனது மூத்த மகள் ஆசிரியை. அவள் தன்னுடன் கற்பிக்கும் ஓர் ஆசிரியரை விரும்பித் திருமணம் செய்தாள். இப்போது அவளது கணவன் கல்வி நிர்வாகசேவைப் பரீட்சை எழுதிச் சித்தியடைந்து உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றுகிறார். இன்னும் இரண்டு வருடங்களில் அவர் கல்விப் பணிப்பாளராகி விடுவார். எனது மகன் பொறியியலாளன். அடுத்த மகன் மருத்துவபீடத்திற்குத் தெரிவாகியுள்ளார். ஏனையோர் படிக்கின்றனர்''.

''எனக்குச் சொத்துச் சேர்க்க வேண்டும். காணி, பூமி வாங்க வேண்டும் என்ற ஆசையில்லை. நீ ஏராளமான சொத்தை உண்ணாமல், உறங்காமல் சேர்த்து வைத்துள்ளாய். இறக்கும்போது சேர்த்த சொத்துக்களையெல்லாம் நாம் வாழப்போகும்



நரகத்திற்கோ அல்லது சொர்க்கத்திற்கோ கொண்டு சென்று அனுபவிக்கலாமென்றால் சொத்துக்களைச் சேர்க்கலாம். ஒவ்வொருவரும் வீட்டில் இருந்தே தவம் செய்தல் வேண்டும். நான் எனது என்ற பற்றுக்களை நீக்குவதே துறவாகும். செய்யவேண்டிய கர்மங்களைப் பற்றின்றிச் செய்தால் அடையவிரும்பியவற்றை அடையலாம். பொய், களவு, பொறாமை என்பவைதான் வாழ்க்கையைக் கெடுக்கின்றன. எனக்குரிய தேவைகள் என்ன என்பது என்னைப் படைத்த இறைவனுக்குத் தெரியும். தேவையேற்படும்போது இறைவன் அத்தேவைகளை நிறைவேற்றி வருகிறான். அதனால்தான் எனக்கு எந்தக் குறையும் வந்ததில்லை. நீயும் என்னைப்போல வாழ். உனக்குத் தேவையானவை யாவும் உன்னைத்தேடி வரும்'' என்றான். சிவானந்தன் எதுவும் பேசவில்லை. இவ்வளவு நேரமும் அமைதியாக இருந்து எனது பேச்சைக்கேட்ட அனைவருக்கும் நன்றிகூறி விடைபெறுகின்றேன். இத்துடன் இன்றைய மகாநாடு நிறைவடைகிறது. நாளை வாருங்கள் வணக்கம்'' என்றார் தமிழறிஞர் வேலவன்.

## (20)

அன்று பிற்பகல் மூன்று முப்பதிற்குத் திருக்குறள் மகாநாடு ஆரம்பமானது. முதலில் மகாநாட்டின் தலைவர் உரையாற்றினார். ''சபையோர்களே, அறத்துப்பால் மகாநாடு இன்றுடன் முடிவடைகிறது. கடந்த ஐந்து தினங்களாகப் பெருந்திரளாக வருகை தந்து எம்மை உற்சாகப்படுத்தி, எம்மையும் பல நூல்களைப் படித்துப் பேசவைத்த உங்களுக்குத்தான் நான் நன்றி சொல்வேன். திருக்குறள் இன்று உலகில் வாழும் அத்தனைபேராலும், விரும்பிக் கற்கக்கூடிய நூலாகியுள்ளது. நேரடியாக இம் மகாநாட்டை ஒளிபரப்புச் செய்தமையால், உலகில் உள்ள மக்களில் பலர் திருக்குறளைப்பற்றி விரிவாக அறிந்துள்ளனர். அடுத்துப் பொருட்பால் பற்றிய மகாநாடு விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம். அபபோதும் நீங்கள் வந்து ஆதரவளித்து உற்சாகப்படுத்தல் வேண்டும். இன்று நீங்கள் நன்கு அறிந்த காயத்திரிதேவி அம்மையார் மெய்யுணர்தல், அவா அறுத்தல், ஊழ் என்ற அதிகாரங்களின் சிறப்புப்பற்றி உரையாற்றுவார்...'' என்று கூறி அமர்ந்தார்.

''சபையோர்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம். திருக்குறளைப்பற்றிப் பேசி முடிக்க முடியாது. அது சமுத்திரங்களைவிட ஆழமானது. பேசப்பேசப் புதுப்புதுக் கருத்துக்கள் மனதில் உருவாகிக்கொண்டே இருக்கும் என்பதற்கு தமிழறிஞர் வேலவனார் சாட்சியாக இருக்கிறார். அவர் ஒரு குறளுக்குப் பத்துக்கு மேற்பட்ட வித்தியாசமான கதைகளை எழுதியுள்ளார். சமூகத்தைத் திருத்தவேண்டும் என்ற நோக்கில், எலிகளைக் கதாநாயகர்களாக வைத்து பல கேலியான கதைகளை எழுதியுள்ளார்''.

''எலிகள் இல்லாத இடமே இல்லை. பாடசாலையின் முகட்டில், கோயில் கோபுரங்களில், சந்தை, கடை போன்ற இடங்களில் இருந்து அங்கு வருவோரின் நடைமுறைகளைப் பற்றி எலிகள் கேலியாகவும், கிண்டலாகவும் பேசுகின்றன.



தமிழறிஞர் எலியாக மாறி, நல்லபல சீர்திருத்தக் கருத்துக்களைச் சொல்கிறார். இது ஒரு புதிய இலக்கிய வடிவம். தமிழறிஞர் வேலவன் திருக்குறளை மக்கள்மயப்படுத்திப் புதுப்புதுக் கருத்துக்களையும், உரைகளையும் சொல்லியுள்ளார். அவரது திருக்குறள் ஆய்வு நீண்டது. அற்புதமானது. இதுவரை யாராலும் செய்யாதது. அதற்காக இம்மகாநாட்டில் அவரைப் பாராட்டுகின்றேன்''.

''அடுத்து எனக்குத் தரப்பட்ட தலைப்புக்கு வருகிறேன். மெய்ப்பொருட்களைப் பொய்யான பொருட்கள் என்று எண்ணுவதால்தான் பிறப்புத் தனது மதிப்பை, உயர்வை இழக்கிறது. மயக்கம் இல்லாத அறிவை உடையவர்களிடம் அறியாமை இராது. மெய்யுணர்ந்தவர்கள் வாழும் இப் பூவுலகிலேயே சொர்க்க இன்பத்தை அடைகின்றனர். மெய்யுணர்வில்லாதவர்கள் அழகு, பெருமை, கல்வி, திரவியங்கள் முதலியவற்றைப் பெற்றிருந்தாலும், அதனால் பயனையோ, இன்பத்தையோ அயை மாட்டார்கள். பல்வேறு விதமான பொருட்கள் தோற்றத்தில் ஒத்திருக்கும். அத் தோற்றத்தில் மயங்காது அப் பொருட்களின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்வதே அறிவாகும். அப்படியானவர்கள் மீண்டும் பிறப்பெடுக்கமாட்டார்கள். பிறவியைக் கொடுத்து அறியாமை, அறியாமையை நீக்கி, செம்பொருளை அறிவதே அறிவாகும். அடுத்துப் பற்றுக்கள் தான் துன்பங்களைத்தரும் பிறப்புக்களையும் கொடுக்கின்றன. அத்தகைய ஆசை, சினம், அறியாமை ஆகிய மூன்றையும் ஒழித்துவிட்டால் அவற்றால் வரும் துன்பங்கள் வந்து சேராது''.

''புலன்களால் வந்துசேரும் இன்பங்களையும், துன்பங்களையும் சமமாக உணர்பவர்கள் மெய்யுணர்வை அடைந்தவர்களாகக் கருதப்படுவார்கள். நிலையில்லாத பொருட்களுக்கு இருப்புக் கிடையாது. இருப்பது (உயிர்) இல்லாமற் போகாது. இவ் உண்மையை அறிந்தவர்களும் மெய்யுணர்வாளர்களே. உடலில் குடிகொண்டிருக்கும் உயிர் அழிவதில்லை. அழியாத பொருட்களை யாராலும் அழிக்க முடியாது. அழிவடையாத உயிர் எடுக்கும் உடல்கள் யாவும் அழிந்துவிடும். நடைமுறையில் வரும் ஆபத்துக்கள், துன்பங்கள், துயரங்கள் யாவும் உடலைத் தாக்குமே தவிர உயிரைத் தாக்காது. அதனால் உயிர் நோய்வாய்ப்படாது, காயப்படாது, துன்பப்படாது. இவையாவும் உடலுக்கே உண்டாகும். இதனால் இன்பம் துன்பம், இலாபம் நட்டம், வெற்றி தோல்வி ஆகியவற்றின் பயனை ஆராயாது இறைசிந்தனையுடன் வாழும் மெய்யுணர்ந்தவர்கள் இறைவனோடு சேர்ந்து மகிழ்ந்திருப்பர்''.

''குழப்பமில்லாத மனதையுடைவர்களது புத்தி ஒன்றுமட்டுமே. குழப்பமுள்ளவர்-களின் புத்தி பல கிளைகளைக் கொண்டதால் அது ஒரு நிலைப்பட்டதாகாது. கர்மத்தைச் செய்து கொண்டிருத்தல் வேண்டும். பயனைப்பற்றிச் சிந்திக்கக் கூடாது. ஊழ்வினைப்படி வந்து சேரக்கூடிய பயனே வந்துசேரும். பற்றுக்கள் எவையுமின்றிப் பலனையும் எதிர்பாராது செய்யும் கர்மம் பிறப்பை அழிக்கக்கூடியது. அத்தகையோர் வாழும்போதே இறைவனடியில் வாழ்கின்றனர். எப்பொழுதும் மன அழுக்காக அவிவிவேகத்தை அகற்ற வேண்டும். அந்த அழுக்கு அகன்றால் இறை



நினைவைத்தவிர வேறெந்த நினைவும் உண்டாகாது. அந்த நினைவே மெய்யுணர்தலாகும். யார் எதிலும் பற்றில்லாமலும், இன்பதுன்பங்கள் வந்தபோதும் மகிழாமலும், கலக்கமுறாமலும் இருக்கிறாரோ அவரது அறிவு உறுதியானது''.

''ஆசை முதலில் மனக்குழப்பத்தை உண்டாக்கும். பின் அது சினமாக மாறும். சினத்தின் மூலம் புத்தி மாறுபாடடையும். மாறுபாடான புத்தி தீயசெயல்களைச் செய்ய ஊக்குவிக்கும். அதனால் கொடிய ஆசையை மனதில் இருந்து அகற்ற வேண்டும். ஆசையற்ற மனம் பாலைப் போன்றது. அதில் சிறிது மாசேற்பட்டாலும் அது பாலைப்போல நஞ்சாகிவிடும். அதனால் மெய்யுணர்வு உண்டாகாது. பூமியில் அவதரித்த உயிர்கள் யாவும் இன்பமாக வாழ்ந்து தன்னை வந்தடைந்து பேரின்பமாக வாழவேண்டுமென்றே இறைவன் விரும்புகின்றான். இறைவனை அடையச் சுத்தமான மனம் மட்டும் போதும். கிரியைகளோ, பூசைகளோ, யாகங்களோ, பரிகாரங்களோ செய்யவேண்டியதில்லை. தூய்மையான மனம் சுத்தமான பாலைப் போன்றது. அது எப்போதும் சுத்தமாக இருந்தால் மெய்யுணர்வு உண்டாகும்''.

''இன்று மாணவர்கள் பலர் வந்திருக்கின்றனர். அவர்களுக்காக ஒரு கதை சொல்கிறேன். எல்லோரைப் போலவும் அழகான திடகாத்திரமான உடல் ஐம்புல உணர்வுகளை முழுமையாகப் பெற்றிருந்தாலும், அதனால் பயன் ஏற்படாது. பூங்காவனம் என்ற காட்டில் தாமோதரச்செட்டியார் என்ற நரி பெரும் அறிஞர். வர்த்தகர். அழகான திடகாத்திரமான தேகம். இரண்டு மூடை அரிசியைத் தூக்கிச் சுமக்கும் பலம். அவரிடம் இருந்தது. பட்டதாரி ஆசிரியரான அவர் தனது தந்தையார் செய்த வயலையும், தோப்புக்களையும் வேலையாட்களை வைத்துப் பராமரித்து வந்தார். அவரது செல்வாக்கிலும், செல்வத்திலும் ஆசைகொண்ட சுந்தரமூர்த்திச் செட்டியார் தனது ஒரே ஒரு மகளைத் தாமோதரம் செட்டியாருக்குத் திருமணம் செய்து வைத்தார்''.

''அவர்கள் மிகவும் வசதியாக வாழ்ந்தபோதும் ஏழை எளியவர்களுக்கு உதவுவதில்லை. ''நானும் ஒரு ஏழையின் மகன், அப்பா வியாபார நிலையத்தில் சிப் பந்தியாக வேலை செய்தவர். தனது அயராத முயற்சியால் செல்வத்தைத் தேடியவர். நான் ஓர் ஆசிரியன். பாடசாலை முடிவடைந்ததும் இரவு முழுவதும் உழைத்துத்தான் பொருளைத் தேடினேன். என்னிடம் இரக்க வருவோர் தமது இயலாமையைக் கூறுகின்றனர். அவை போலியான காரணங்கள், அவற்றை என்னால் நம்பமுடியாது. நன்றாக உழைக்க வேண்டும் என்று தன்னிடம் உதவிகோரி வரும் வறியவர்களுக்குச் சொல்வார். ஊனமுற்றவர்கள் வந்தால், உங்களுக்குப் பொது நிறுவனங்களும், வெளிநாட்டில் உள்ளவர்களும், அரசாங்கமும் உதவுகிறது. பிறகு ஏன் என்னிடம் வருகிறீர்கள்'' என்று ஏசுவார்.



‘‘தாமோதரச் செட்டியாரது தங்கை கௌசல்யா படிக்கும்போது குமாரனை விரும்பி விட்டாள். வீட்டுக்காரர் ஏற்றுக் கொள்ளாமைமால் அவர்கள் தனியாக வாழ்ந்து வந்தனர். குமாரன் விபத்தில் சிக்கி இறந்து விட்டான். அதனால் கௌசல்யா இரண்டு பிள்ளைகளுடன் தாமோதரச் செட்டியாரிடம் வந்தபோது அவர், அவளைத் துரத்திவிட்டார். அதனால் அவள் கூலிவேலைசெய்து இரண்டு பிள்ளைகளையும் வளர்த்து வருகிறாள்’’.

‘‘ஒருநாள் கௌசல்யாவின் மூத்தமகன் காலையில் உணவு உண்ணாமல் வந்தமையால் மயங்கிவிழுந்து விட்டான். அதனால் மிக்க கவலையடைந்த கௌசல்யா இரண்டு பிள்ளைகளோடு தற்கொலை செய்ய முயன்றபோது ஊரவர்கள் காப்பாற்றி வைத்தியசாலையில் சேர்த்தனர். அப்படியிருந்தும் தாமோதரச்செட்டியார் உதவி செய்யவில்லை. அந்த வனத்தில் வாழ்ந்து வந்த செந்தூரன் என்ற மான் வறியவர்கள், நோயாளர்கள், விதவைகள் போன்றோருக்குத் தேவையான உதவிகளைச் செய்து வந்தது. செந்தூரன் கௌசல்யாவும் பிள்ளைகளும் தற்கொலை செய்ய முயன்றதைக் கேள்விப்பட்டுக் கௌசல்யாவின் குடிசைவீட்டுக்கு வந்தது’’.

‘‘அம்மா, தாங்கமுடியாத கஷ்டங்கள் வந்தாலும் ஒருபோதும் தற்கொலை செய்ய வேண்டும் என்று எண்ணக்கூடாது. தற்கொலை செய்வது மகாபாவம். தற்கொலை செய்தவர்களின் ஆன்மா பிறப்பெடுக்காது, ஆவியாக அலைந்துதிரியும் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைவிட இறைவன் ஏழை எளியவர்களுக்கு உதவிசெய்ய எனப் பலரைப் படைத்துள்ளான். அழகான, பலமான, அறிவுடன் கூடிய உடலைப் பெற்றிருந்தாலும், மெய்யுணாவு இல்லாதவர்கள் உதவிகளைச் செய்யமாட்டார்கள். எந்தப் பொருளானாலும், அதன் கவர்ச்சியான தோற்றத்தைக்கண்டு மயங்கலாகாது. அதன் உண்மையான தோற்றத்தினை மெய்யுணர்வினால் அறிய வேண்டும். உனது சகோதரன் அழகானவன், பலசாலி, பணக்காரன், எப்போதும் சிரித்துச் சிரித்துப் பேசுவார். அப்படியிருப்போரைச் சிலர் நல்லவர்கள் என்று நினைக்கின்றனர். உனக்கும் பிள்ளைகளுக்கும் வேண்டிய உதவிகளை நான் செய்து தருகிறேன். விபரீதமான முடிவுகளை எடுக்காதே’’ என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

‘‘இரக்க சுபாவம், உயிர்கள் மீது அன்பு, இயன்றதைக் கொடுத்தல் என்பன மெய்யுணர்ந்தவர்களின் பண்பாகும். உடம்போடு உடம்பாகச் சேர்ந்திருக்கும். ஆன்மா அருளோடு கூடி ஒன்றுபட்டு நிற்கும்நிலை, உடம்பினுள் உயிர் வேறாகக் கலந்து நிற்கும் தன்மையைப் போன்றது. அதாவது உடம்பினுள் உயிர் எவ்வாறு கலந்திருக்கிறதோ அதுபோலவே திருவருள் என்று சொல்லப்படும் அருளும் ஆன்மாவுக்குள் கலந்து நிற்கின்றது’’.



“தீ விறகைச் சாம்பராக்குவதுபோல அருள் பாவங்களைச் சாம்பராக்கும். அருளுக்கு ஒப்பானது எதுவும் உலகில் இல்லை. அன்பு, கருணை, இரக்கம், துன்பப்படும் உயிர்களது துன்பங்களை நீக்குதல் முதலியன அருளாளர்களின் நோக்கமாகும். ஆசைகள்தான் அனைத்துத் துன்பங்களுக்கும் காரணியாகும். ஆசை என்ற நச்சுவித்து ஒருவரது மனதில் முளைத்தால் எல்லாத் தீயபண்புகளும் வந்து சேர்ந்துவிடும். ஆசைகளைத் தவிர்க்க வேண்டும். ஆசையைத் தவிர்க்க வேண்டுமானால் எந்த ஒரு பொருளையும் விரும்பக்கூடாது”.

“ஆசை இல்லாது இருப்பதுதான் சிறந்த செல்வம். இது மிகவும் தூய்மையான, புனிதமான நிலையாகும். அது உண்மைபேசுவதால் வந்துசேரும் பெரும் செல்வமாகும். ஆசைகளை முழுமையாக நீக்கியவரே அவாவற்றவராவார். ஆசைகள் பூவுலகில் உள்ள இன்பங்கள் யாவற்றையும் அழித்து மேலுலக வாழ்வையும் அழித்துவிடும். ஆசைகளை அகற்றிவிட்டால் துன்பங்கள் வந்து சேரா. ஆசைகளை அடக்கமுடியாமையால் தான் உயிர்கள் துன்பமடைகின்றன” என்று வள்ளுவர் கூறுகிறார். அடங்காத ஆசை அவாவாக மாறி ஏராளமான துன்பங்களைக் கொடுக்கிறது”.

இந்திரியங்கள் உயிர்களைத் தமது விருப்பத்திற்கேற்ப ஆட்டிப் படைக்கின்றன. தீமையானவற்றைக் கண்கள் நல்லவையென்று காட்டும். அழகென்பது மனதைப் பொறுத்தது. மனம் ஒரு பெண்ணைக்கண்டு அவளை விரும்பினால் அவளைவிடச் சிறந்த அழகி உலகில் வேறு யாரும் இல்லையென முடிவுகட்டும். அவளை இன்னொரு மனம் பார்த்தால் அவலட்சணமானவர் என்று கருதும். கண்கள் காட்டினாலும் பாதிக்கப்படுவது உடல். தண்டனைகளும் உடல்களுக்குத்தான் கிடைக்கும். பெரும்பாலானோர் இந்திரியங்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்துவிட்டுத் தாம்தான் அச் செயலைச் செய்ததாக இறுமாப்படைவர்”.

“விவேகம், வைராக்கியம், உறுதி ஆகியவற்றால் அறிவு தெளிவடையும். அத்துடன் நித்திய கர்மங்களை முறைப்படி செய்து வந்தாலும் அறிவு தெளிவடைந்து உறுதியாகும். தெளிவடைந்த மனம் ஆசைப்படாது. ஆசைப்படாத மனதில் ஞானம் பிறக்கும். உயிர்கள் மனதை அடக்காது இந்திரியங்களின் போக்கிற்கேற்பச் செயற்படுவதால் எப்போதும் பாவம் செய்துகொண்டே இருக்கும். பொய்யான ஒழுக்கங்களை மறைத்து வாழ்வோர் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வாழ்ந்து பாவிகளாகின்றனர். செயல்களால் செய்யமுடியாத பலவகையான தீயசெயல்களை மனதால் செய்து மகிழ்கின்றனர். இது செயலைவிடப் பாவமானது. நிறைவேறாத தீய எண்ணங்களை மனது தினந்தோறும் பல்லாயிரம் முறை நினைத்து இன்புற்றால் காலப்போக்கில் அத் தீயசெயல் மனதுள் நல்லசெயலாக மாறிவிடும். பின் அதை



செய்வது தர்மம் என்ற நிலை உருவாகும். அதனால் மனதுள் ஆசைகளை வளர்ப்பது பாவமாகும்''.

''இறை நினைவுடன் எதையும் சிந்திக்காது தனது நித்தியகர்மங்களை முறைப்படி செய்தால் சகல சௌபாக்கியங்களையும் இறைவன் மகிழ்வுடன் அளிப்பார். உணவு உண்ணும்போதும் அது இறைவனின் அருளால் கிடைக்கப்பெற்றது என்றும், தான் பாடுபட்டு உழைக்கும் பணமும் இறைவனிடமிருந்து தனக்குக் கிடைத்தது என்றும், நினைப்பவர்கள் மனநிறைவோடும், ஆசைகள் அற்றும் வாழ்வர். ஆசை, அச்சம், சினம் என்ற மனத்தின் அழுக்குக்களை நீக்கியவர்கள் இறைவனிடம் பக்தர்களாகி விடுவர். கர்மங்கள் பற்றோடு சேர்ந்திருக்கும்போது அந்த உயிரால் இறைவனைத் துதித்துப் பாடியாடினாலும், பற்றுக்கள் இறைவனுடன் சேரவிடா. பற்றற்றவர்கள் இறைவனின் திருவடியில் சேர்ந்திருப்பர். பற்றுக்களையுடையவர்கள் பாசங்களுக்கு அடிமையாகி அதனால் வரும் துன்பங்களை அனுபவிப்பர். பற்றற்றோர் இறைநினைவுடன் என்றும் மகிழ்வுடன் இருப்பர். அவர்கள் வேறு எதிலும் கவனம் செலுத்தமாட்டார்கள். அவர்களுக்கு நான் தான் கர்த்தா என்ற நினைவு ஒரு போதும் வராது. நான் இறைவனின் அடிமை, எனக்கு வருபவற்றை இறைவனே அனுப்பி வைக்கிறார் என்று நினைப்பானே தவிர அந்த இன்பமும் துன்பமும் வேறு எவராலும் தரப்பட்டதல்ல என்று நினைப்பான்''.

''உடலால், மொழியால், மனதால்கூட உயிர்கள் கர்மமாற்றுகின்றன. உயிர்களைக் கர்மம் செய்ய வைப்பது மனம். அதனால் தான் கர்மத்தை உயிர்களால் நீக்கமுடியாதுள்ளது. மனம் ஒன்றின்மீது ஆசைப்பட்டால் அதை யாராலும் நீக்க முடியாது. தான் நினைத்ததை அடைய மனம் செயலாற்றிக் கொண்டே இருக்கும். அதற்காகப் பல திட்டங்களைத் தீட்டும், தேவை ஏற்படின் தனது நண்பர்களையும் சேர்த்துக் கொள்ளும். திட்டம் தீட்டிய மனம் அத்திட்டம் நிறைவேறும்வரை ஓயாது. சுகுணவனத்தில் வாழ்ந்த குரங்கான சற்குணனுக்கு பாலன் என்ற நரி நண்பனாக இருந்தது. சற்குணன் மிகவும் நேர்மையானவன். பிறருக்கு பிரதியுபகாரம் கருதாது உதவி செய்பவன்''.

''சுகுணவனத்தில் பழமரங்கள் ஏராளமாக நின்றன. சுவையான கனிகளையுடைய மரங்கள் பல நின்றன. சுகுணவனத்திற்கு அருகே ஒரு கிராமம் இருந்தது. அதில் பல மனிதர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் அடிக்கடி வனத்துள் புகுந்து பழங்களைப் பறிப்பர், மிருகங்களைக் கொல்வர். மாமரங்களில் ஏராளமான பழங்கள் இருந்தமையால் அவற்றைப் பறிக்க வந்த ஒரு மனிதன் பழங்கள் சிலவற்றைப் பறித்து மூட்டையாகக் கட்டிவிட்டு, மிகுதியாக இருந்த பழங்களை மிருகங்களும், பறவைகளும் உண்ணாதிருப்பதற்காகப் பல இடங்களில் பொறிகளை வைத்திருந்தான்''.



“வழக்கமாக வந்து பழங்களைப் பறித்துண்ணும் சற்குணன் அன்று பொறிக்குள் அகப்பட்டு விட்டான். அவனால் அசைய முடியவில்லை. என்ன செய்யலாமென சற்குணன் நினைத்துத் தனது குலதெய்வமான காட்டுப்பிள்ளையாரை மனம் உருக நினைத்தான். அவன் தினமும் காலையும் மாலையும் பூக்கள் கொண்டு சென்று வைத்து காட்டு விநாயகரை வணங்குவான். அப்போது அந்த வழியால் பாலன் வந்தான். அவன் பழங்களை விரும்புவதில்லை. எதேச்சையாகப் பார்க்கும்போது சற்குணன் பொறிக்குள் அகப்பட்டு இருந்தது தெரிந்தது. அதற்கு உதவி செய்ய விரும்பியபோதும் எங்கெங்கு பொறிகள் இருக்குமென்று தெரியாது சற்று பின்வாங்கினான்”.

“சற்குணனைப் பாலனுக்குத் தெரியும். சற்குணன் மிகமிக நல்லவன் என்றும் தெரியும். அதனால் உதவி செய்ய விரும்பினான். அவன் சற்குணன் அகப்பட்ட பொறியை நோக்கி மிக அவதானமாகச் சென்றான். “பாலா மனிதர்கள் பல இடங்களில் பொறிகளை வைத்துள்ளனர். அவதானமாக வா” என்றான் சுகுணன். மிகவும் அவதானமாகச் சென்ற பாலன், பொறியை நீக்கினான். பொறிக்குள்ளால் விடுபட்ட சற்குணன், “பாலா நீ எனது உறவினன் அல்ல. நண்பனும் அல்ல. மிகவும் ஆபத்தான பொறியில் அகப்பட்டு இறக்க இருந்த என்னை உன் உயிரைப்பாராது கஷ்டப்பட்டுக் காப்பாற்றியுள்ளாய். இதை நான் எனது உயிருள்ளவரை மறக்கமாட்டேன்” என்றான். அதன்பின் இருவரும் நண்பர்களாகி விட்டனர்”.

“சுகுணவனத்தின் கரையோரங்களில் ஏராளமான பனைமரங்கள் நின்றன. அக் கிராமத்தில் வாழும் பலர் காலைவேளையிலும், மதியவேளையிலும், மாலைவேளையிலும் அங்கு கூடுவர். கூடி பனையில் இருந்து எடுக்கும் கள்ளைக் குடிப்பார்கள். பின்பு ஆடிப்பாடி மகிழ்வர். இதைத்தினமும் பார்க்கும் பாலனுக்கு கள்ளைக் குடித்துப் பார்க்க வேண்டும் என்ற ஆசை மனதில் தோன்றியது. நாளாக நாளாக அவ் ஆசை அவாவாக மாறியது. என்ன செய்யலாம் என்று பாலன் யோசித்துப்பார்த்து சற்குணம் மரம் ஏறுவான். அவனைக் கொண்டு மரத்தில் கட்டப்பட்ட கள்ளுமுட்டிகளில் ஒன்றை எடுத்துவந்து குடித்துப் பார்ப்போம் என்று நினைத்தான்”.

“தான் விரும்பியதைப் பாலன் சற்குணத்திற்குச் சொன்னபோது சற்குணன் சொன்னான்.” நண்பா, பஞ்சமாபாதகங்களில் ஒன்று மது அருந்துதல். கள்ளருந்துபவர்களைப் பெற்ற தாயே விரும்பமாட்டாள். பாவங்களிலும் அது கொடிய பாவம். கள்ளருந்தினவரால் பயப்படாது எந்தத் தீயசெயல்களையும் செய்யத் தோன்றும். நல்லவர்கள், பெரியவர்கள் கள்ளருந்துபவர்களை விரும்பமாட்டார்கள். நாம் பாடுபட்டு உழைத்த பணத்தைக் கொடுத்துக் கள்ளைக் குடித்தால் அதன்பின் என்ன சொல்கிறோம் என்று புரிந்துகொள்ளமுடியாத நிலை ஏற்படும். கள்ளருந்துபவர் செத்தவரைவிட வேறுபட்டவரல்ல. கள்ளென்பது விஷம். அது உயிரை அறுக்கும் வாள்.



துன்பங்களைக் கொடுக்கும் பானம். கள்ளைக் குடிக்கத் தொடங்கினால் அது உயிர்களைத் தம் போக்கிற்கேற்ப மாற்றும். ஒருநாள் குடித்துச்சுவை கண்டால் தினமும் குடிக்கச் சொல்லும். அதனால்  கள்ளைக் குடிக்க நினைக்காதே'' என்றான்.

''மனிதர்கள் கற்றவர்கள், அறிவு மிக்கவர்கள், அவர்கள் இவற்றை அறியாமலா குடிக்கிறார்கள். எதிர்காலச் சமூகத்தை உருவாக்க வேண்டிய ஆசிரியர்களே கள்ளைக் குடித்து இன்புறுகின்றனர். காட்டுவாசியாகிய நாம் குடித்தால் என்ன? அதற்குச் சற்குணத்தால் பதில்கூற முடியவில்லை. பணம் கொடுத்தால் கள்ளை வாங்கலாம் என்றபோது பாலன் சொன்னான், ''நீ மரம் ஏறுவதில் வல்லவன். அதனால் யாருமில்லாத இரவு வேளையில் ஏறிக் கள்ளை எடுத்துவா''.

''பிறரின் பொருளை அவர் அறியாது கவர்வது களவாகும். அது எல்லாப் பாவங்களையும் விட மிகவும் கொடியது. ஒருவன் தன் உடலை வருத்தி உழைக்க அதைக் கவர்வது தீயசெயலாகும். ஒரு முறை திருடி அப்பொருளால் வந்த இன்பம் தொடர்ந்து திருடச் சொல்லும். அது மிகுந்த ஆபத்தைத் தரும்'' என்று சற்குணன் சொன்னபோது பாலன் சொன்னான், ''இவ்வளவு காலமும் நான் எதிலும் ஆசைப்பட்டதில்லை. கற்றவர்களும், உயர்ந்த பதவிகளை வகிப்பவர்களும் கள்ளைக் குடிக்கும்போது நாம் ஏன் குடிக்கக் கூடாது? கற்றவர்கள் தீயவற்றைச் செய்வார்களா? கள்ளுக் குடிப்பது பாவம் என்று கற்றவர்களுக்குத் தெரியாதா? நீ விருப்பமில்லாவிட்டால் சொல். அதற்காக உபதேசம்செய்யாதே'' என்று கோபமாகச் சொன்னான் பாலன்''.

''அதனால் வேறு வழியின்றி இரவானதும் சற்குணன் பனைமரத்தில் ஏறிக் கள்ளை எடுத்துவந்து பாலனுக்குக் கொடுக்க அவன் குடித்துவிட்டு, ''நண்பா, அமிர்தம்போல இனிக்கிறது. இப்படியான ஓர் இனிப்பான பானத்தை நான் இதுவரை குடித்ததில்லை. இதன் இனிப்புச்சுவைதான் கற்றவர்களைக் கவர்கிறது. நீயும் குடித்துப் பார்'' என்றான் பாலன். முதலில் மறுத்த சற்குணன் பாலனின் இனிமையான பேச்சைக் கேட்டு அதில் மயங்கிச் சிறிது குடித்துப் பார்த்தான். உண்மையில் அது தேனாகத் தித்தித்தது. அதனால் மீண்டும் குடித்தான். திடீரென உடலில் ஓர் உணர்ச்சி உருவாகிப் பெரும் இன்பத்தைக் கொடுத்தது''.

''கள்ளின் சுவையைப்பற்றிப் பாலன் தனது நண்பர்களுக்குக் கூற அவர்கள் வந்து சற்குணனிடம் தமக்கும் கள்ளைத் தரும்படி கேட்டனர். முதல் நாள் உண்டதால் உண்டான இன்பத்தால் சற்குணன் மரத்தில் ஏறிக் கள்ளை எடுத்துவந்து கொடுத்தான். அதன் பின் சற்குணன் தனது நண்பர்களுடன் தினமும் கள்ளை எடுத்து வந்து குடிக்கலானான்''.



“சற்குணன் இரவில் வந்து கள்ளைத் திருடிக் குடிப்பதைக் கண்ட கள்ளைச் சீவுவோர் திட்டமிட்டு இரவில் காவல் இருந்தனர். சற்குணன் திருட வந்தபோது பலர் ஒன்று சேர்ந்து சற்குணனைத் தாக்கினர். சற்குணன் மரங்களில் பாய்ந்து தப்பியபோதும் அதன் முன்னங்கால் முறிந்துவிட்டது. சற்குணனின் தந்தை சொன்னார். “இவ்வளவு காலமும் ஒழுக்கமாக வாழ்ந்தாய். இப்போது பலருடன் சேர்ந்து திருடியமையால் உனது முன்கால் முறிந்துவிட்டது. இனி என்ன செய்யப் போகிறாய். ஆசைப்பட்டால் துன்பங்கள் பல வந்து சேரும். தகாத ஆசை உயிரையும் பறிக்கும். பொறிகள் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் தான் துன்பங்களுக்குக் காரணிகளாகின்றன. அதனால் விருப்பு வெறுப்புக்களில் இருந்து விடுபட்டு, மனதை அடக்கி கடவுளை வணங்கினால் பொறிகள் கட்டுப்படும். ஒருபோதும் அடங்காத நிலையை உடையது ஆசை. அதை அடக்கி அழிக்க வேண்டும். இல்லாவிட்டால் உலகில் உள்ள துன்பங்கள் யாவும் வந்து சேர்ந்து மனதைக் கெடுத்துவிடும். உங்களுக்கு வந்த ஆசை அவாவாகிவிட்டது. அதனால்தான் இந்தநிலை உண்டானது” என்றார் சற்குணனின் தந்தை. சபையோர்களே இத்துடன் இன்றைய மகாநாடு நிறைவு பெறுகிறது. நாளை நிறைவு நாளாகும். நாளை உங்களுக்கேதாவது சந்தேகங்கள் இருந்தால் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். வணக்கம் என்றாள் காயத்திரிதேவி.

## (21)

அன்று காலை திரவியவனத்தில் ஆரம்பமான திருக்குறள் மகாநாட்டில் அதன் தலைவர் கதிரேசன் தலைமையுரையை ஆற்றினார். “சபையோர்களே, கடந்த ஐந்து தினங்களாகத் திருக்குறள் மகாநாடு இங்கு நடைபெற்றது. இன்று நிறைவு நாளாகும். ஐந்து தினங்களும் திருக்குறளைப் பல்வேறு தலைப்புக்களில் ஆய்வு செய்த அறிஞர்கள் உரையாற்றினார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் திருக்குறளைப் பல்வேறு தலைப்புக்களில் ஆய்வுசெய்து அவற்றை இலகுபடுத்திச் சிறுவர்களுக்கும் விளங்கத்தக்கவகையில் பேசினார்கள். ஒரு நூலைப்பற்றிப் பேசுவதானால் அந்நூலைப்பற்றி விரிவாக அறிந்து கொள்ள வேண்டும். அத்துடன் அந்நூலைப்பற்றிப் பலர் விமர்சித்திருப்பர். அவர்களின் விளக்கங்களையெல்லாம் விளங்கிக் கற்க வேண்டும். அதன்பின் தனது கருத்துக்களைக் கோவைப்படுத்திச் சபையோர்குப் புரியும்படி பேச வேண்டும், எழுத வேண்டும்”.

“மாணவர்கள் தான் எதிர்காலச் சிற்பிகள். அதனால் பேசுவோர் மாணவர்களின் மனங்களைக் கவரும் வகையில் பேச வேண்டும். மாணவர்களின் மனம் பரபரப்பானது. அதைக் கட்டுப்படுத்துவது மிகவும் சிரமமானது. ஆனால் இங்கு பேசிய ஒவ்வொருவரும் மாணவர்களை மையப்படுத்தி அவர்களுக்கு விளங்கும் வகையில் பேசியமையால் அவர்கள் மிகமிக அமைதியாக இருந்து அவதானமாகக் கேட்டனர். இது மகாநாட்டுக்கு கிடைத்த பாரிய வெற்றியாகும். பலர் மேடைகளில் தமது வித்துவத் தன்மையைக் காட்டுவதாலும், பேசியவற்றையே திரும்பத் திரும்பப் பேசுவதால் கேட்போர் சலிப்படைந்து பேசுமிடங்களைவிட்டு வெளியேறுவதை நாம் கண்டதால்



புதுவிதமாக மகாநாட்டை நடத்த எண்ணினோம். அந்த எண்ணம் நிறைவேறியுள்ளது. பேச்சாளர்கள் கேட்போரைக் கவரும்படி பேசினர். இன்னும் சில நிமிடங்கள் பேசமாட்டாரா என்ற எண்ணமே சபையோரின் மனதில் இருந்தது. இன்றுடன் அறத்துப்பால் மகாநாடு நிறைவடைகிறது. விரைவில் பொருட்பால் மகாநாடு ஆரம்பமாகும்''.

''கடந்த ஐந்து நாட்களும் நடைபெற்ற மகாநாட்டில் குறைநிறைகளைப் பற்றிச் சபையோர் நிகழ்வுகள் முடிந்த பின்பு பேசலாம். அடுத்துத் தமிழறிஞர் வேலவன் ஊழ் பற்றி வள்ளுவர் கூறியவற்றை விரிவாக பேசுவார். அவரைப் பேசவருமாறு அன்புடன் அழைக்கின்றேன்'' என்று கூறிய கதிரேசன் தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். தமிழறிஞர் பேச எழுந்ததும் சபையோர் கரகோசம் செய்தனர். அது அடங்கச் சில நிமிடங்கள் எடுத்தன.

''சபையில் கூடியிருக்கும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எனது காலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றுடன் மகாநாடு நிறைவு பெறுவதால், மகாநாடு காலையிலேயே ஆரம்பித்துள்ளது. வள்ளுவர் கூறிய 133 அதிகாரங்களும் மிகவும் சிறப்பு வாய்ந்தது. ஊழ் என்ற அதிகாரம். அந்த அதிகாரம் கூறியபடிதான் முதலில் உள்ள நூற்று முப்பத்து இரண்டு அதிகாரங்களும் செயற்படுகின்றன. ஊழ் என்றால் விதி, முறை, ஒழுங்கு என்பவற்றைக் குறிக்கும். நம் முன்னோர் ஊழ் என்ற விதியை மாற்றமுடியாது என்று கூறியுள்ளனர். விதியை அமைத்தது இறைவன். அதை இறைசக்தியாக மாற்றலாமே தவிர வேறு எதனாலும் மாற்ற முடியாது''.

''உலகில் உள்ள அனைத்தும் விதியின்படிதான் இயங்குகின்றன. இதற்கு ஆயிரக்கணக்கான உதாரணங்களைச் சொல்லலாம். உதாரணமாக ஒரு தென்னைமரத்தை நடுவதாக இருந்தாலும் அதற்கென வகுக்கப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றாது நட்டால் உரிய பனைப்பெற முடியாது. எல்லாச் செயல்களும் பயன்கருதியே செய்யப்படுகின்றன. உலகப் பற்றுக்கள் யாவற்றையும், நீக்கித் தவம் செய்யும் முனிவன்கூடப் பயன்கருதியே செய்கின்றான். பிறப்புக்கள் துன்பமானவை. அப்பிறப்பை நீக்கப் பற்றுக்களை அகற்றி இறைவனை வணங்க வேண்டும். அவ்வாறு விதிமுறைப்படி வணங்கினால் இறைவனது திருவடியை அடைந்து இன்பமாக வாழலாம். அப்போ தவம் செய்வதும் பயன் கருத்தித்தானே''.

''இறைவனை அடைந்தால் துன்பமில்லாத இன்பமான வாழ்வு வாழலாம் என்று துறவி நினைக்கிறான். கடும் முயற்சி செய்தால் பணம் சம்பாதிக்கலாம். பணத்தின் மூலம் உலக இன்பங்களை அனுபவிக்கலாம் என்று ஒரு குடும்பத்தவன்



நினைக்கிறான். இவ்வாறே இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களும் நினைக்கின்றன. எந்த உயிரும் காரணமின்றி ஒரு செயலைச் செய்வதில்லை''.

''ஓர் உயிர் வாழுங்காலம் வரை விதியைப் பின்பற்றியே வாழவேண்டும். விதியைப் பின்பற்றுவதென்பது தாம் செய்யும் செயல்களை உரிய முறைப்படி ஒழுக்கமாகச் செய்தலாகும். விதியைப் பின் பற்றி ஒழுக்கமில்லாது செயற்பட்டால் பெரும் தீமைகள் தான் வந்துசேரும். வாகனம் ஓட்டுவோர் விதிகளைப் பின்பற்றாவிட்டால் காவல்துறையினர் அவர்களுக்குத் தண்டனை அளிப்பர். மதுபானம் குடித்துவிட்டு வாகனங்களைச் செலுத்தக்கூடாது. அதனால் பல துன்பங்கள் வந்து சேரும். இது போலவே எல்லாச் செயல்களையும் விதிப்படி ஒழுக்கமாகச் செய்தல் வேண்டும்''.

''ஒருவரது செயல்கள்தான் பலனைக் கொடுக்கின்றன. நல்ல செயல்கள் தீய பலனைத் தராது. அதுபோலத் தீயசெயல்கள் நல்ல பலனைத்தராது. செல்வத்தைக் கொடுப்பதும் விதிதான். கொடுத்த செல்வத்தை அழிப்பதும் விதிதான். இதற்கு உதாரணமாக நான் அறிந்த கதையொன்றைக் கூறுகின்றேன். சிவானந்தன் பெரும் வர்த்தகன் என்பது உங்களுக்குத் தெரியும். அவர் ஆரம்பத்தில் ஒழுங்கான முறையில் வியாபாரம் செய்தார். கலப்படம் செய்யமாட்டார். பொருட்களின் விலையைக்கூட்டி விற்கமாட்டார். நிறைகுறைத்து விற்கமாட்டார். அதனால் எல்லோரும் அவரிடமே பொருட்களை வாங்கினர். தூர இடங்களில் வாழ்வோரும் நெடுந்தூரம் வந்து அவரிடம் பொருட்களை வாங்கினர். இதனால் செல்வம் குவிந்தது. அதனால் ஆசைவசப்பட்ட சிவானந்தன் பொருட்களில் கலப்படம் செய்தார். விலைகூட்டி விற்றார். பொருட்களைப் பதுக்கித் தட்டுப்பாட்டை உருவாக்கினார். நிறை குறைத்து விற்றார். அதனால் வியாபாரம் குறைந்தது. பெரும்பணம் கொடுத்துக் கொள்வனவு செய்த பொருட்கள் வாடிக்கையாளர் வாங்காமையால் பழுதடைந்தது. அதனால் அவரது செல்வம் அழிந்தது. இதற்குக் காரணம் ஊழ் என்று சொல்லப்படும் விதியாகும்''.

''வாழ்க்கை முக்காலங்களைக் கொண்டது. அவையாவன இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம். இறந்தகாலமான முன்பு வாழ்ந்த காலத்தில் செய்யப்பட்ட செயல்கள் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் பாதிக்கும். நம் முன்னோர் இறந்தகாலம் என நினைப்பது மரணமடைந்த காலமாகும். ஓர் உயிர் மரணமடையும்வரை செய்யும் நல்வினை, தீவினையே விதி என்ற ஊழாக வரும் என்கின்றனர். ஆனால் வள்ளுவன் ஓர் உயிர் முன்பு செய்த செயல்களால் வரும் இன்பதுன்பங்களையே ஊழ் என்று குறிப்பிடுகின்றார். வாழும்போது செய்த செயல்கள் அதாவது நேற்றுவரை செய்த செயல்கள் தான் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் மேன்மையுறவும், பாதிப்படையவும் செய்கின்றன'' என்கிறார்.



“அதாவது ஒரு வாரத்திற்கு முன்பு கோபத்தால் உண்மையான நிலையை ஆராயாது ஒருவரைக் கடுமையாகத் தண்டித்தால் அவர் காத்திருந்து சமயம் வரும்போது தாக்குவார். இது உலகின் இயல்பு. இதைத்தான் வள்ளுவர் கூறுகிறார். ஒருவர் இறந்தபின்பு அவர் உயிரோடு இருக்கும் காலத்தில் செய்த தீவினையும், நல்வினையும் அவரது பிறப்புக்குக் காரணம் என்றும், அதுவே ஊழ் என்றும் சமயம் கூறுகிறது. வள்ளுவர் பொய்யாமொழிப்புலவர். அவரது நாவில் சரஸ்வதிதேவி மகிழ்வுடன் அமர்ந்திருந்து முக்காலங்களைப் பற்றியும் கூறியுள்ளாள். வள்ளுவர் கூறும் ஊழலை நாம் வாழும்போது கண்களாற் கண்டு உணர்கிறோம்”.

“ஒருவருக்குவரும் இன்பங்களும், துன்பங்களும் அவரவரின் செயல்களால்தான் வருகின்றதே தவிரப் பிறரின் செயல்களால் வருவதில்லை. இதை ஒரு புலவன் மிக அழகாகவும், ஆணித்தரமாகவும் “நன்றும் தீதும் பிறர்தர வாரா” என்று கூறியுள்ளான். அதனால் அன்பான என் உடன்பிறப்புக்களே, நல்லதையே செய்யுங்கள், நல்லதையே எண்ணுங்கள் என்றும் நல்லதே நடக்கும். இவ்வாறு நான் சொல்லவில்லை, வள்ளுவன் சொல்லுகிறான். அவன் சொன்னதை நான் உங்களுக்குச் சொல்கிறேன்”.

“விதியென்றால் ஊழ் என்றும், ஒழுங்கு என்றும் பொருளைத் தருகிறது. ஒருவன் தீயவழியில் பொருளைத்தேட முயன்றால் ஊழ் என்கின்ற விதி ஒருவரை அறிவற்றவராக்கும். அறிவுள்ளவன் தீயவழியில் பொருள்தேட விரும்பமாட்டான். அதனால் விதி அவனை அறிவாளியாக்கும். சிவானந்தன் வியாபாரத்தை முறைப்படி விதிகளுக்கமையச் செய்தபோது விதி அவனை அறிவாளியாக்கியது. அவன் பொருளாசையால் தீயவழியில் பொருள் தேடியபோது விதி அவனை அறிவற்றவனாக்கியது. அதனால்தான் அவன் தான் முறைப்படி சம்பாதித்தவற்றையும் இழந்தான். நன்மைக்கும் தீமைக்கும் காரணியாவது விதி என்ற ஊழே. ஊழ் என்கின்ற விதி ஒருவரது வாழ்க்கை முறையை அனுசரித்தே பலன்களை வழங்குகிறது”.

“திருமந்திரம் கூறியவற்றையே திருக்குறளும் கூறுகிறது. திருமந்திரம் 2803ஆவது செய்யுளில் இருந்து 2808ஆவது செய்யுள்வரை ஊழ் என்ற விதியைப் பற்றிக் கூறுகிறது. ஆறு பாடங்களில் திருமூலர் கூறுவதைத் தொகுத்து வள்ளுவர் பத்துக் குறள்களில் கூறுகிறார். இருவரும் கூறும் சொற்கள் வேறுபாடானவையாக இருக்கின்ற போதும் பொருளில் எந்த மாற்றமும் இல்லை. உயிர் தான் முன்செய்த வினைக்கீடாகவே சிவபெருமான் அதற்கான பலனைக் கொடுக்கிறார். அதுவே ஊழ் என்ற விதியாகும். சிவனின் திருவாணைப்படி அவரவர் செய்த வினைப்பயனை அவரவரே அனுபவிப்பர். கூடு பழுதடைந்தால் மற்றொரு கூடு கட்டுவது உயிர்களது இயல்பான குணம். அதுபோலவே எடுத்த உடல் பழுதடைந்தால் இன்னோர் உடலை வினைக்கீடாகச் சிவன் அளிப்பான். உயிர் உடலோடு சேர்த்துப் படைக்கப்படுவதில்லை.



உடல் பழுதடைந்ததும் சிவபெருமான் வினைக்கீடாகப் புதிய உடலை வழங்குவான்''. ''ஒருவர் எதைச் செய்கிறாரோ அதற்கான பலனையே அனுபவிப்பார்'' என்றும் கூறுகிறது.

''ஒருவர் அறிவைத் தரக்கூடிய நூல்கள் பலவற்றை முறைப்படி அதாவது விதிப்படி படிக்காவிட்டால் அந்நூலின் பொருளும், அருளும் விளங்காது. அறியாமைதான் ஏற்படும். எதையும் அதற்கான விதிகளின்படிதான் படிக்க வேண்டும். முறைப்படி குருவிடம் சென்று விளங்கிப் படித்தால் தான். அந்நூலின் உண்மையான பொருளைக் விளங்கிக் கொள்ளலாம். பழந்தமிழ் நூல்கள் எவ்வாறு குருவிடம் செல்ல வேண்டும், குருவிடம் எப்படி இருந்து கற்க வேண்டும் என்றெல்லாம் கூறுகிறன. ஒரு பிள்ளைக்கு வித்தியாரம்பம் செய்வது எவ்வாறு என்று பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன''.

''ஆசாரக்கோவை என்ற பழந்தமிழ் நூல் ஒருவர் தனது வாழ்நாளில் செய்யவேண்டிய செயல்களை எவ்வாறு செய்யவேண்டும் என்று கூறுகிறது. உதாரணமாக ஆசாரக்கோவை என்ற நூல் கைகழுவுவது எப்படி என்று விளக்கமாகக் கூறுகிறது. அதையே மேல்நாட்டவர் இப்போது கைக்கொள்கின்றனர். எல்லா வனங்களிலும் கைகழுவுதல் நிகழ்வு ஓர் ஆடம்பர நிகழ்வாகக் கொண்டாடப்படுகிறது. செல்வத்தைத் தேடும்போது அதற்குரிய விதிமுறைகளைப் பின்பற்றியே தேட வேண்டும். விதிகளை முறைப்படி பின்பற்றாவிட்டால் நல்லவை தீயவையாக மாறிவிடும். முறைப்படி தேடினால் தீயவை நல்லவையாகிவிடும். இதைத்தான் வள்ளுவர் ஊழ் என்ற விதி என்கிறார்''.

''விதிப்படி தேடாத பொருட்கள் பெருமளவில் வந்து குவிந்தாலும், அவை நமக்குரியன அல்ல. அவை வந்த வழியே பல்வேறு வகையான துன்பங்களைத் தந்துவிட்டுச் சென்றுவிடும். விதிப்படி ஒழுக்கமாகத் தேடிய செல்வம் கடலில் கொண்டு சென்று கொட்டினாலும் அது உரியவரை வந்தடைந்துவிடும் என்று வள்ளுவர் சொல்கிறார். அது உண்மை, எனது வாழ்வில் நடைபெற்றது. ஆறு மாதங்களுக்கு முன் நான் வெளிநாட்டில் இருக்கும் எனது மகனைப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்தேன். வரும்போது எனது மகன் பெறுமதிமிக்க பல பொருட்களைப் பொதியில் வைத்துக் கட்டித் தந்துவிட்டான். அது தவறிவிட்டது. எங்கே எப்படித் தவறியது என்று எனக்குத் தெரியாது. அதை நான் எனது மகனுக்குச் சொன்னபோது அவன் கவலைப்படவில்லை. ''அப்பா, நான் நீங்கள் கூறியபடி ஒழுக்கமாக உழைத்துத்தான் அப்பொருட்களை வாங்கினேன். பயப்படாதீர்கள் அது வந்து சேரும்'' என்றான்.

''சில நாட்கள் கழிந்தன. எனது மகன் என்னுடன் தொடர்பு கொண்டு நீங்கள் கொண்டு சென்றபொதி வழியில் தவறிவிட்டது. அதைக் கண்டெடுத்தவர் எனக்கு அனுப்பியுள்ளார். நான் அதை உங்களுக்கு அனுப்பியுள்ளேன்'' என்றான். இரண்டு நாட்களின் பின் அப்பொதி எனது வீட்டிற்கு வந்து சேர்ந்தது. இதிலிருந்து விதிப்படி



தேடிய பொருள் எங்கு தொலைந்தாலும் வந்து சேரும் என்று வள்ளுவர் கூறியது நடந்துவிட்டது. எனவே வள்ளுவன் சொன்னவை யாவும் பொய்யாமொழிகள்''.

''வள்ளுவன் சொன்னவை யாவும் உண்மையானவை. கோடி கோடியாகச் செல்வத்தைச் சேர்த்தாலும் அதை அனுபவிப்பதற்கு விதி இருந்தால் தான் அனுபவிக்க முடியும். இது சாதாரணமாக ஊரில் நடைபெறும் ஒரு நிகழ்வு. சிவானந்தன் பெரும் தனவந்தன். அவனிடம் நூறு ஏக்கர் வயல்நிலம் உண்டு. ஆறு ஏக்கரில் தென்னந்தோப்பு உண்டு. பத்தேக்கரில் கரும்புத்தோட்டம் உண்டு. இவற்றைவிட எவ்வளவு சொத்துக்கள் அவனிடம் உள்ளது என்று என்னைவிட உங்களுக்கு அதிகமாகத் தெரியும். அத்துடன் சலரோகம், இரத்த அழுத்தம், இரத்தத்தில் கொழுப்பு என்பன உண்டு. இவ்வளவு சொத்திருந்தபோதும் வைத்தியர் அதிகம் சோறு உண்ணக்கூடாது. எண்ணெய் வகை, இனிப்புக்கள் எதுவும் உண்ணக்கூடாது. ஒரு நாளைக்கு ஒரு வாழைப்பழம் மட்டும் சாப்பிடலாம். மாம்பழம், பலாப்பாழம் உண்ணக் கூடாது என்று கட்டளையிட்டிருந்தார். ஒரு நாள் முற்றத்தில் நூற்றுக்கு மேற்பட்ட காய்களுடன் ஒரு பலாமரம் நின்றது. அதில் ஒரு பழம் நன்றாகப் பழுத்து நிலத்தில் விழுந்திருந்தது''.

''அதைச் சிவானந்தன் கண்டுவிட்டான். அன்று காட்டுப்பிள்ளையார் கோவில் தேர். அதற்குக் குடும்பத்தினர் அனைவரும் சென்றுவிட்டனர். அது அவருக்கு வாய்ப்பாக இருந்தது. அது மிகுந்த சுவையுடைய பலாப்பழம். அதில் ஒரு சுழையை எடுத்து உண்டார். அதன் இனிமை அவரைக் கவர்ந்ததால், தனது நோயை மறந்து ஐந்து சுளைகளை உண்டார். ஒரு மணித்தியாலத்தில் அவர் நினைவு தடுமாறி மயங்கிவிட்டார். வெகுநேரத்தின் பின் கோவிலால் வந்த வீட்டார் அவர் மயங்கிக் கிடந்ததை அறிந்து வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். அவரைப் பரிசோதித்த வைத்தியர் அவர் அளவுக்கதிகமாக இனிப்பை உட்கொண்டு விட்டார். அதனால்தான் மயக்கம் உண்டானது என்றார். அவர் தொடர்ந்து ஐந்து நாட்கள் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றார்''.

''அது அவருக்குப் பெரும் துன்பத்தைக் கொடுத்தது. அவருக்கு உதவியாக வைத்தியசாலையில் நின்ற கூலியாள் இன்னொருவருக்குச் சொன்னான், ''நான் அவரின் வீட்டில் கூலிவேலை செய்பவன். அம்மா பிட்டுத்தந்தால் பத்துப் பதினைந்து சுளை பலாப்பழத்தையும் சேர்த்துத் தருவா. எனக்கு ஒன்றும் செய்யாது. ஐயா ஐந்துசுளை பலாப்பழம் தின்றவராம். மயங்கிப் போனார். அத்தோடு பத்தியச் சாப்பாடுகள் தான் சாப்பிடுவார். கோடிக்கணக்கானக சொத்திருக்கு. அவற்றால் என்ன பயன்? என்னிடம் சொத்தில்லை. நான் கண்டதெல்லாவற்றையும் சாப்பிடுவேன்'' என்று சொன்னது சிவானந்தனுக்குக் கேட்டது. அவர் கண்களை மூடி இறைவனை நினைத்து அழுதார். அதனால் சபையோர்களே, எந்தச் சொத்தும் ஒரு போதும் உதவாது. விதிமுறைகளைக் கடைப்பிடித்து ஒழுக்கமாக வாழ்ந்தால் நோய் நொடிகள் வராது''.



''விதியைவிட வலிமையானது வேறு எதுவும் இல்லை. விதியை விலக்குவதற்காகப் பணம், பொருள் செலவு செய்து வேறு வழிகளை நாடினாலும் அங்கும் விதியே வந்து நிற்கும். விதிப்படிதான் யாவும் நடைபெறுவதால் ஒவ்வொரு குறளுக்கும் ஒரு கதைகூறி வருகிறேன். ஏனென்றால் விதியை விளங்கிக்கொள்ள வேண்டும். விதியைப் பற்றி முழுமையாக விளங்கிக் கொண்டால் வாழ்வில் எந்தத் துன்பமும் வராது''.

''சிவானந்தனின் ஒரே மகள் கௌரி. அதனால் அவன் அவளைப் பட்டணத்திலுள்ள தனியார் பாடசாலையில் பெரும்தொகைப் பணத்தைச் செலவு செய்து படிப்பித்தார். அவளால் ஏஎல் சித்தியடைய முடியவில்லை. அது சிவானந்தனுக்குப் பெரும் கவலையைக் கொடுத்தபோதும், தனது நண்பர்களிடம் ''என்னிடம் போதிய சொத்து உண்டு. காணி பூமி நகை உண்டு. அறிவுக்காகக் கற்பித்தேன். படிப்பு முடிந்துவிட்டது. எங்காவது நல்ல உத்தியோகத்தில் ஒரு மாப்பிளையைப் பார்த்துத் திருமணம் செய்து வைத்துவிட்டால் எனது கடமை முடிந்துவிடும்'' என்பார். அவரிடம் வேலை செய்வோரின் பிள்ளைகள் ஊர்ப்பாடசாலையில் கற்று நல்ல நிலையை அடைந்ததை எண்ணி, வேதனைப்படுவர், ஆனால் வெளிக்காட்டமாட்டார்''.

''கௌரி திமிர் பிடித்தவள். யாரையும் மதிக்க மாட்டாள். பணத்தை ஆடம்பரமாகச் செலவு செய்வாள். அதனால் அவளை யாரும் விரும்புவதில்லை. காட்டுப்பிள்ளையார் கோவிலுக்கு அவள் வந்தால் தனியாகவே நிற்பாள். யாராவது கதைகேட்டால் திமிராகக் கதைப்பாள். அதனால் அவளருகே யாரும் செல்வதில்லை. இப்போது அவளுக்கு இருபத்தெட்டு வயது. பதினெட்டு வயதில் சிவானந்தன் அவளுக்குத் திருமணம் பேசத் தொடங்கினவர். அவரிடம் பெரும் செல்வமிருந்தும், அவரினதும், மகளினதும் நடத்தையால் யாரும் அவளைத் திருமணம் செய்ய விரும்பவில்லை''.

''இருபத்திரண்டு வயதில் மாதவன் என்ற ஆசிரியரைக் கல்யாணத்தரகர் பேசிவந்தார். மாப்பிளைக்கு ஐந்து பெண் சகோதரிகள். அதைவிட அவர்கள் ஏழைகள். அதனால் சிவானந்தன் சொன்னார். ''தரகரே மாப்பிள்ளைக்கு ஐந்து சகோதரிகள் இருக்கிறார்கள். அதனால் எனது மகளின் சொத்தைக் கவரத்தான் மாப்பிள்ளை விரும்புகிறார்'' என்று கூறியபோது கல்யாணத்தரகர் அவரின் பேச்சைக் கேட்காது சென்றுவிட்டார். மாப்பிள்ளை ஆசிரியர் என்றதும், கௌரி சொன்னாள், ''எனக்கு நல்ல உத்தியோகத்தில் உள்ள மாப்பிளை தான் தேவை. கேவலம் ஆசிரியரைத் திருமணம் செய்ய மாட்டன்''.



அதன்பின் பல்வேறு இடங்களில் இருந்தும் பல்வேறு தொழில்களில் இருப்போரைக் கல்யாணத்தரகர்மார் பேசிவந்தபோதும், கௌரி அவர்களில் ஒவ்வொரு குறைகண்டுபிடித்து அவர்களை விலக்கி வந்தாள். ஆதவனின் குடும்பம் வசதியானது. ஒரே ஒரு பிள்ளை. பிற்காலத்தில் ஆதவனின் பெற்றோரைப் பாதுகாக்க வேண்டிவரும். அதனால் விருப்பமில்லை'' என்றாள். இவ்வாறு பேசிவரும் மாப்பிள்ளை மீதும், மாப்பிள்ளையின் பெற்றோர், உறவினர் மீதும் குற்றம் குறைகளைக் கண்டுபிடித்து ஒவ்வொருவராக விலக்கி வந்தாள்''.

''மாதவன் தனது ஐந்து சகோதரிகளையும் வெளிநாட்டில் வசிக்கும் யாழ்ப்பாணத்தவர்களுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். அவர்கள் எல்லோரும் தாம் வசிக்கும் நாடுகளில் தனவந்தர்களாக வாழ்கின்றனர். மாதவனின் மூத்த சகோதரியான சகுந்தலையும் கணவனும் பிள்ளைகளும் விடுமுறையின்போது மாதவனின் வீட்டுக்கு வந்தனர். தனது சகோதரனான மாதவன் தமக்காக உழைத்துவிட்டு இப்போது தனியே இருந்து கஷ்டப்படுவதை நினைக்க அவளுக்குக் கவலையாக இருந்தது. அவள் மாதவனுக்குச் சொன்னாள். ''அண்ணா உங்களுக்கு இப்போது முப்பத்தெட்டு வயதாகிறது. திருமணம் செய்யாது இருக்கிறீர்கள். கேட்டால் இனியென்ன திருமணம் என்கிறீர்கள். திருமணத்திற்கு வயது கிடையாது. இளமையில் இன்பத்தைத் தரும் திருமண உறவு பிற்காலத்தில் துணையாக இருந்து ஆறுதல், மனமகிழ்ச்சி, பல்வேறு உதவிகள், பேச்சுத்துணை என்பவற்றைத் தருகிறது. நாம் வாழும் நாட்டில் வாழ்வோர் எண்பது வயதிலும் திருமணம் செய்கின்றனர். அவ்வுறவு பாலியலுக்கானதா...? நிம்மதிக்கு, மகிழ்ச்சிக்கு, துணைக்காகச் செய்கிறார்கள். நீங்கள் முப்பத்தெட்டு வயதில் பயப்படுகிறீர்கள்''.

''நான் ஒரு ஆசிரியன். எல்லாம் எனக்குத் தெரியும். இருந்தபோதும், திருமணத்தில் எனக்கு நாட்டமில்லை'' என்றான் மாதவன்.

''அண்ணா, நித்தியகர்மங்களை எல்லோரும் தவறாது செய்தல் வேண்டும். செயலின்றி இருப்பதைவிட செய்வது மேலானது. நீ திருமணம் செய்யாததால் நித்திய கர்மங்களைக்கூடச் சரியாகச் செய்வதில்லை. அம்மா இருக்கும்வரை சமைத்துத் தந்தா. அவா இறந்தபின்பு நீ சமைத்து உண்கிறாய். இது தேவைதானா...? இப்போது எந்த ஒரு வேலையையும் நீ சரியாகச் செய்வதில்லை என்று கேள்விப்பட்டேன். முன்பு ஏழு மணிக்கு முன் என்ன வேலை இருந்தாலும் விட்டுவிட்டுப் பாடசாலைக்குச் செல்லும் நீ இப்போது நேரம் பிந்திச் செல்கிறாய். இவ்வாறு வாழ்ந்தால் உனது உடலைக்கூடப் பேணமுடியாதநிலை ஏற்படும்''.

''மாதவன் ஏதும் பேசாததால் சகுந்தலை சொன்னாள், ''அண்ணா, உயிர்களைப் படைக்கும்போதே இறைவன் அவற்றிற்கான கர்மங்களையும் சேர்த்தே



படைக்கிறான். திருமணம் என்பது வம்சத்தை வளர்ப்பது மட்டுமல்ல, மதைச் சமநிலைப்படுத்துவது, உலகில் உள்ள இன்பதுன்பங்களை அனுபவிக்க வைக்கிறது. இன்பத்தையும் அதனோடு சார்ந்த மகிழ்வுகளையும் ஒன்றாகக் கொடுக்கிறது. ஓர் உயிருக்கு எல்லா உறவுகளையும் கொடுக்கிறது. அதற்காகத்தான் எமது இறைவர்கள் திருமணம் செய்து குடும்ப வாழ்வு வாழ்ந்திருக்கின்றனர். இறைவன் எல்லாவகையிலும் தன்னைப்போலவே வாழ்ந்து, தன்னை வந்தடைய வேண்டும் என்று வேதங்களிலும், புராணங்களிலும் கூறியுள்ளான்''. சகுந்தலா பேசுவதை நிறுத்திவிட்டுச் சகோதரனின் முகத்தைப் பார்த்தாள். அதில் மாற்றத்தைக்காண முடியவில்லை''.

''அதனால் சகுந்தலா சொன்னாள், ''அண்ணா, ஆசிரியர்கள் எல்லா விடயங்களிலும் சமூகத்திற்கு முன்மாதிரியாக இருத்தல் வேண்டும். ஆசிரியர்கள் செய்வதைத் திருந்தச் செய்யாவிட்டால் உன்னிடம் கற்கும் மாணவர்களும் உன்னைப் பின்பற்றியே வாழ்வர். இது மிகப்பெரிய தாக்கத்தை உண்டுபண்ணும். நான் நேற்றுக் கௌரியின் வீட்டுக்குச் சென்றேன். கௌரி என்னுடன் படித்தவள். பணத்திமிரால் யாரையும் அவள் மதித்ததில்லை. ஆனால் இப்போது தனது நடத்தையை எண்ணிக் கவலைப்படுகிறாள். ஏற்கெனவே அவளது தாய் இறந்துவிட்டாள். தந்தை பெரிய நோயாளியாகிவிட்டார். அதனால் அன்பாகக் கதைத்துப் பேசக்கூட யாருமில்லாது துன்பப்படுகிறாள். என்னோடு படித்த உனக்கு நான்கு பிள்ளைகள். மூத்த மகளுக்குத் திருமண வயது வந்துவிட்டது. நானும் திருமணம் செய்திருந்தால் எனக்கும் பிள்ளைகள் பிறந்து உதவியாக இருந்திருப்பர். எனது திமிர் எனது வாழ்வைக் கெடுத்துவிட்டது. கற்கும்போது திமிருடன் தான் உன்னுடன் பழகினேன். நீ ஏழையாக இருந்தமையால் கிண்டலாகவும், வேடிக்கையாகவும் கதைத்து உனது மனதைப் பலமுறை புண்படுத்தியிருப்பேன். இதற்கெல்லாம் மன்னிப்பே கிடையாது. அதற்கான தண்டனையை அனுபவிக்கின்றேன்'' என்று அழுதாள்.

''அவள் மாயக்காரி, கூசாமல் எதையும் சொல்வாள், பேசுவாள். நீ இதையெல்லாம் நம்பாதே'' என்றான் மாதவன்.

''அண்ணா, ஒருவரைக் காலம் திருத்தியே தீரும். அப்போது பணத்திமிரால் திமிராக நடந்தாள். இப்போ காலம் அவளைத் திருத்திவிட்டது. திருமணம் செய்ய விரும்புகிறாள். உங்களை அவள் மிகவும் விரும்புகிறாள். ஆனால் அதைச் சொல்லமுடியாது தவித்தவள் என்னைக் கண்டதும் அழுது புலம்பி உன்னைத் தனக்குத் திருமணம் செய்து தருமாறு இரக்கிறாள். எல்லாப் பொருத்தமும் இருப்பதால் அவளை நீ திருமணம் செய். உனக்கு வந்த துன்பங்கள் யாவும் தீரும்'' என்றாள்.

''சபையோர்களே, ஊழ் என்ற தலைவிதியை உங்களுக்கு விளக்கினேன். உண்மையாக நடந்த கதைகள் இவை. இன்னாருக்கு இன்னாரென்று இறைவன் தீர்மானிக்கின்றான். அத் தீர்மானம் ஒருபோதும் மாறாது. அதனால் தான்



பலவருடங்களாகத் தடைப்பட்ட மாதவன் கௌரியினது திருமணம் நடைபெற்றது. இப்போது அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். இருவரும் மிகவும் மகிழ்வுடன் வாழ்கின்றனர். வள்ளுவனது வாய்ச்சொல் வேதம், பகவத்கீதை போன்றது. அதனால் என்றும் நாம் வள்ளுவனுக்கு விசுவாசம் உள்ளவர்களாக வாழ்ந்து அவனது பாதங்களைத் தொழுவோம். இத்துடன் காலைவேளை மகாநாடு நிறைவு பெறுகிறது. மாலை வேளை மீண்டும் கூடுவோம். வணக்கம்'' என்று கூறி விடைபெற்றார் தமிழறிஞர் வேலவன் அவர்கள்.

**(22)**

பிற்பகல் இரண்டு மணிக்கு மதியநேர இடைவேளை முடிவடைய மகாநாடு ஆரம்பமானது. முதலில் மகாநாட்டின் தலைவர் கதிரேசன் உரையாற்றினார். ''சபையோர்களே, ஐந்து நாள் மகாநாடு மிகவும் சிறப்பாகவும், மகிழ்வுடனும் முடிவடைந்தது. இங்கு பேசவந்த அனைத்து அறிஞர்களும், நல்லமுறையில் திருக்குறளை ஆய்வுசெய்து சிறப்பாகப் பேசினார்கள். திருக்குறளைப் பற்றிய புதுப்புதுக் கருத்துக்களை உதாரணங்களுடன் பேசினார்கள். வெளிநாட்டு, உள்நாட்டு ஊடகங்கள் இம் மகாநாடு பற்றிப் பெரிதாகப் பேசவில்லை. ஆனால் தனிப்பட்டமுறையில் பலர் தமது முகநூலூடாக இம் மகாநாடு பற்றித் தெளிவாக ஒளிபரப்புச் செய்தமையால், மகாநாட்டின் கருத்துக்கள் உலகெங்கும் நல்லமுறையில் சென்றடைந்துள்ளன. அதனால் வெளிநாடுகளிலுள்ள தமிழறிஞர்கள், பேச்சுக்களைக்கேட்டு உடனுக்குடன் விமர்சனம் செய்தனர்''.

''வெளிநாட்டில் உள்ள சுந்தரமூர்த்தி என்ற அறிஞர் திருக்குறளைப்பற்றிப் பல ஆய்வுகள் செய்தவர். பல நூல்களை வெளியிட்டவர். மகாநாட்டில் கேட்டவற்றைப் பல உலகநாடுகளில் வாழும் அறிஞர்களுடன் கலந்துரையாடுபவர். அவர் பலமுறை இரவு நேரங்களில் தொடர்பு கொண்டு அன்றைய பேச்சுக்களைப்பற்றி விமர்சிப்பார். விளக்கம் கேட்பார். நான் அன்று பேசிய பேச்சாளர்களின் தொலைபேசி இலக்கங்களைக் கொடுப்பேன். அவர்களுடன் அவர் உரையாடுவார். இன்றைய மகாநாட்டில் பேசிய தமிழறிஞர் வேலவன் அவர்கள் ஊழ் என்ற அதிகாரத்தைப் பற்றிப் பேசுகையில் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றிப் பேசிய கருத்துக்களுக்கு விளக்கம் கேட்டார். அதைத் தமிழறிஞருக்குக் கூறியுள்ளேன். நான் பாடசாலைக்குச் சென்று படித்தவன் அல்ல. நிறைய வாசிப்பேன். கற்றவர்களிடம் சென்று விளக்கம் கேட்பேன். அறிவைத்தரும் நூல்களைத் தேடியெடுத்துக் கற்பேன். அந்த அறிவைக் கொண்டுதான் நான் பேசுவேன்''.

''என்னைப்பற்றி முழுமையாக அறிந்த மகாநாட்டின் செயற்குழு என்னைத் தலைமை தாங்கும்படி வற்புறுத்தியமையால் தலைமை தாங்கினேன். மகாநாடு மிகமிகச் சிறப்பாக நடைபெற்று முடிந்துவிட்டது. குறளையும், குறள்கூறும் கருத்துக்களையும் அறிந்தபோதும், தமிழறிஞர் பேசியவற்றை என்னாலும் விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஊழ் என்ற விதி முற்பிறப்பில் செய்த வினையென்றுதான் உலகில் உள்ள அனைவரும்



தெரிந்து வைத்துள்ளனர். ஆனால், தமிழறிஞர் அதை வேறுவிதமாகப் பேசியுள்ளார். காலங்கள் மூன்று. ஒருவர் பிறந்ததில் இருந்து நேற்றுவரை இறந்தகாலம் என்றும், இன்று நடைபெறுவது நிகழ்காலம் என்றும், நாளையில் இருந்து மரணம் வரை எதிர்காலம் என்றும் கூறப்படுகிறது. முக்காலங்களையும் ஒருவர் உயிரோடு இருந்து அனுபவிக்கிறார். ஆனால் ஊழ் என்பது முற்பிறப்பில் செய்த தீவினை என்று சமயமும், பழந்தமிழ் நூல்களும் கூறுகின்றன''.

''இதற்கான சரியான விளக்கத்தைத் தமிழ் அறிஞர்தான் தரவேண்டும். அத்துடன் பல குறள்களின் உரை குறளுக்குப் பொருத்தமில்லாது உள்ளது என்பதும் தமிழறிஞர்களின் வாதமாகும். அவர் மகாநாட்டில் பேசும்போது குறளுக்குப் பொருத்தமில்லாத உரைகள் பற்றித் தகுந்த காரணங்களுடன் விளக்கியுள்ளார். அவர் பேசியது சரியென்று பலர் கூறியுள்ளனர். குறள் ஒரு புதுமையான நூல். அதில் இடைச்செருகல் செய்ய முடியாது. வேறு சொற்களைச் சேர்க்க முடியாது. அது உலகெங்கும் பரந்து வாழும் சகலருக்கும் எவ்வகையிலும் பொருத்தமான நூல். அதனால்தான் குறளை உலகில் உள்ள அனைவரும் தமது வேதநூல் என்று ஏற்றுள்ளனர்''.

''சபையோர்களே, இது உங்களுக்கான நேரம். நேரத்தை வீணாக்காது எல்லோருக்கும் பயன்தரக்கூடிய கேள்விகளை மட்டும் கேளுங்கள். முதலாவதாகத் தமிழறிஞர் இறந்தகாலம் பற்றி விரிவாகக் கூறுவார்'' என்று கூறி அமர்ந்தார் கதிரேசன்.

''தமிழறிஞர் பேசுவதற்காக மேடைக்கு வந்தபோது சபையோர் மிகுந்த உற்சாகத்துடன் கைதட்டி அவரை வரவேற்றனர். ஒருவர் விசில் அடித்தார். அதைத் தொடர்ந்து பலர் விசிலடித்தனர். கலகலப்பு அடங்கச் சிறிது நேரம் எடுத்தது. தமிழறிஞர் சபையோரை இருகரங்கூப்பி வணங்கினார். பின் ''சபையோர்களே, மிகவும் ஆர்வமாகவும், உற்சாகமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. இம் மகாநாட்டில் பேசிய பின்பு உலகத்தில் உள்ள அறிஞர்கள் பலருடன் நட்புக்கொள்ள முடிந்தது. அதுபெரும் பாக்கியமாகும். இப்போது பலர் இறந்தகாலம் பற்றிய திருக்குறளின் விளக்கத்தைக் கேட்டிருக்கின்றார்கள். உடலைவிட்டு நீங்கிய உயிரை அவ்வுடலுள்ச் செலுத்த முடியாது. அதாவது இறந்தவரை உயிர்ப்பிக்க முடியாது. அதுபோல இறந்தகாலத்தை மீளப்பெற முடியாது. கழிந்தகாலம் கழிந்ததுதான்''

''உயிர் இறப்பதில்லை. அது வினைக்கேற்ப புதிய உடலைப் பெறுகின்றது என்று சைவசித்தாந்த நூல்களும், பிறசமய நூல்களும் கூறுகின்றன. உயிர் அறிவற்றது. ஏனென்றால் முன்பு எந்தெந்த உடல்களை எடுத்தேன். அவ்வுடல்களில் வாழ்ந்து என்னென்ன செய்தேன் என்று உயிருக்குத் தெரியாது. மனிதப்பிறப்பெடுத்தாலும் தான் என்னென்ன செய்யவேண்டும் என்றும் தெரியாது. ஒருவர் அறுபது வயதுவரை வாழ்கின்றார் என்றால், அந்த அறுபது வயதும் இறந்தகாலமாகும். ஒருவரின் வாழ்நாளில்



இறந்தகாலமே கூடுதலான காலமாகும். நிகழ்காலம் என்பது அப்போது நடைபெறுவது. ஒரு நாளை மட்டும் கொண்டது. மறுநாள் அது இறந்தகாலமாகி விடும்''.

''எதிர்காலம் வயதைப் பொறுத்து நீண்டது. எனினும் இறந்த காலத்தைவிடக் குறைவானது. நிகழ்காலம் பெறுமதிமிக்கதாக இருந்தால் தான் இறந்தகாலம் சிறக்கும். எதிர்காலத்தில் எதைச் செய்வோம், எப்படி வாழ்வோம் என்று அறுதியிட்டுக்கூற முடியாது. இறந்தகாலம்தான் பெறுமதி மிக்கது. அக்காலத்தில் ஒழுக்கமாக வாழ்ந்து, பற்றுக்களின்றிக் கடவுளை வணங்கித் தானதர்மங்கள் செய்தால், எதிர்காலம் சிறப்புறும். எதிர்காலம் என்று சைவசமயம் கூறுவது ஒருவர் இறந்த பின்பு வாழும் வாழ்க்கையையே அந்த வாழ்க்கை இறந்தகாலத்தைக் கொண்டே இறைவனால் தீர்மானிக்கப்படுகிறது''

''வாழ்க்கையை எப்படி வாழவேண்டும் என்று திருக்குறளில் வள்ளுவன் விபரமாக எடுத்துக் கூறியுள்ளான். கடவுளை வணங்கும் முறை, கடவுளின் இயல்பு, அறன் வலியுறுத்தல், இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணைநலம், மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்நன்றி அறிதல், நடுவுநிலைமை, அடக்கம் உடைமை, ஒழுக்கம் உடைமை, பிறன்இல் விழையாமை, பொறை உடைமை, அழுக்காறாமை, வெ.்.காமை, புறங்கூறாமை, பயன்இல் சொல்லாமை, தீவினை அச்சம், ஒப்புரவறிதல், ஈகை, புகழ், அருள் உடைமை, புலால் மறுத்தல் தவம், கூடாத ஒழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை, நிலையாமை, துறவு, மெய் உணர்தல், அவா அறுத்தல், ஊழ் என்ற அதிகாரங்களில் கூறப்பட்டவற்றைப் பின்பற்றி நடந்தால் இம்மையிலும், மறுமையிலும் துன்பம் வராது''.

''அறத்துப்பாலில் உள்ள முப்பத்தெட்டு அதிகாரங்களையும் ஆழ்ந்து ஆராய்ந்தால் ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒழுக்கமான வாழ்வே மேலோங்கியுள்ளது. இறந்தகாலத்தில் வாழ்ந்த வாழ்வுதான் எதிர்காலத்தை நிர்ணயிக்கிறது. சொர்க்கத்தையும், நரகத்தையும் சென்று பார்த்ததில்லை. தவறி அவற்றைப் பார்த்தாலும், பார்த்தவர் அதை இங்கு வந்து சொல்வதில்லை. அது பற்றிய நூல்களை எழுதியோரும் அங்கு சென்றதில்லை. அதனால் எவற்றைப்பற்றியும் கவலைப்படாது ஒழுக்கமாகவும், தர்மமான முறையிலும் வாழ்வோர் பூமியில் சொர்க்கத்தை அனுபவிப்பர். தீயவற்றைச் செய்து திமிருடன் வாழ்ந்தோர் பூமியிலே நரகத்தை அனுபவிப்பர். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருடார்த்தங்களைச் சமயம் கூற, வள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையுமே கூறியுள்ளார். அறவழியில் பொருள்தேடி, அதை அறவழியில் செலவு செய்து வாழ்வோர் வீட்டிலேயே சொர்க்கத்தை அனுபவிக்கின்றனர். அன்பான மனைவி, அறிவு நிரம்பிய பிள்ளைகள், அக்கறை உள்ள சுற்றத்தவர்கள் இருப்போர் வாழும்போதே சொர்க்க வாழ்வு வாழ்கின்றனர் என்று வள்ளுவர் கூறுகிறார்''.

''இங்கும் ஒருவரின் இறந்தகால வாழ்வே முன்னின்று சொர்க்கவாழ்வைக் கொடுக்கிறது. மனைவி, மக்கள், சுற்றத்தவருடன் முரண்படுவோர் ஒருபோதும்



இன்பத்தை அனுபவித்ததில்லை. அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் ஒருவர் வாழும் வீட்டிலேயே உள்ளது. இதைச் சரியானபடி உணர்பவர்கள் தான் வீட்டின்பத்தை வீட்டிலேயே அனுபவிக்கின்றனர். அதனால் தான் மோட்சம் பற்றி வள்ளுவன் கூறாது தான் எழுதிய ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஒழுக்கமாக வாழ்வோர் இவ்வுலகத்திலும், அவ்வுலகத்திலும் இன்பமாக வாழ்வர் என்று குறிப்பிடுகிறான். அவ்வுலகம் என்பது இறந்தவர்களுக்கு தாம் வாழ்ந்த வீடு என்ற நினைப்பு வரல் வேண்டும். இதற்காகத்தான் வள்ளுவர் நீத்தார் பெருமை என்ற அதிகாரத்தைச் சேர்த்துள்ளார்''.

''நிறைந்த அறிவுடையவர்களின் பெருமைகளை, அது உலகில் நிலைத்து நிற்கும் வண்ணம் அவர்கள் எழுதிய, கூறிய மந்திரத்தை ஒத்த சொற்கள் உலகிற்கு எப்போதும் காட்டி நிற்கும். உண்மையான தத்துவங்களைக் கூறும் திருக்குறள், திருவருட்பயன், பகவத்கீதை, திருமந்திரம் போன்ற நூல்கள் பல நூற்றாண்டுகள் கடந்தும் அவற்றை எழுதியவர்களைப் போற்றிப் புகழ்ந்து வாழவைப்பதை நாம் காண்கிறோம். இன்னும் பல நூற்றாண்டுகள் கடந்தாலும் அவை நிலைத்து நின்று எழுதியவர்களது பெருமைகளைப் பறைசாற்றும்''.

''குறள் பொய்யாமொழியாகும். ஆனால் உரையும், விளக்கமும் சொல்வோர் முதன்முதலாகச் சொன்ன உரையையே இன்றும் சொல்கின்றனர். விளக்கம் அளிக்கின்றனர். முதல் சொல்லப்பட்ட உரை தேவ உரையா அது மாறாதிருக்க. உதாரணமாக ஒரு பிழையான உரையை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். வாழ்க்கைத்துணை நலம் என்ற அதிகாரத்தில் உள்ள ஐந்தாவது குறள்.

''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவார்
பெய்யெனப் பெய்யும் மழை''

''பிற தெய்வங்களை வணங்காமல் காலையில் எழும்போது கணவனை வணங்கி எழுகின்றபெண், பெய் என்று சொன்னால் உடனே மழை பெய்யும்''.

''இது சரியான உரையாயின் பாலைவனங்களில்கூடப் பெண்களைக் கொண்டு மழையைப் பெய்விக்கலாம். மழையை வருவிக்க முடியாத பெண் கற்புடையவள் அல்ல என்ற கருத்து உருவாகி அப்பெண் ஒதுக்கிவைக்கப்படுவாள். ''பெண்களின் பெருந்தக்க யாவுள'' என்று பெண்களின் பெருமையைக் கூறிய வள்ளுவன் இப்படிப் பெண்களைக் கேவலப்படுத்துவானா? இங்கு உரைதான் பிழை. கணவனைத் தெய்வமாகக் கருதும் பெண் பெய்ய வேண்டிய வேளையில் பெய்யும் மழையைப் போன்றவள்'' என்பதே சரியான உரையாகும். பேசத் தொடங்கினால் பேசிக் கொண்டேயிருக்கலாம். எனக்கு இட்டபணி இறந்தகாலத்தில் செய்யப்பட்ட நன்மை தீமைகளைத்தான் எதிர்காலத்தில் அனுபவிக்கிறோம் என்பதாகும். அதற்கான விளக்கத்தைத் தந்துள்ளேன். மீண்டும் பொருட்பால் மகாநாட்டில் சந்திப்போம். வணக்கம்'' என்றுகூறி விடைபெற்றார் தமிழறிஞர்.



தமிழறிஞர் வந்து அமர மகாநாட்டின் தலைவரான கதிரேசன் உரையாற்றினார். ‘‘தமிழறிஞருக்கு ஓர் ஆதீனம், தமிழறிஞர் என்ற பட்டத்தை சைவசித்தாந்தப் பெருநூலான திருவருட்பயன் என்ற நூலில் உள்ள அனைத்துக் குறள்களுக்கும், சிறுவர்களுக்கும் விளங்கக்கூடிய இலகு தமிழில் கதை எழுதியமைக்காக வழங்கிக் கௌரவித்தது. அதை அவர் பாவிப்பதில்லை. நாம் தான் மகாநாட்டில் தமிழறிஞர் என்ற அவரை அறிமுகம் செய்தோம். இப்போதுள்ள பலர் சில நிறுவனங்களுக்குப் பணம் கொடுத்துப் பட்டங்களை, விருதுகளை, கௌரவப் பெயர்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். சிலர் தமக்குத் தாமே கௌரவப் பெயர்களைச் சூட்டிக் கொள்கின்றனர். சபையோர்களே, காலம் பொன்னை விடப் பெறுமதியானது. அதனால் மிகவும் முக்கியமான மகாநாட்டில் பேசப்பட்ட கருப்பொருளுக்கமையக் கேள்விகளைக் கேளுங்கள். தற்பொழுது உங்கள் கேள்விகளுக்கான பதிலைத் திருமதி. காயத்திரிதேவி சொல்வாள். அவரை ஏற்கெனவே அறிமுகப்படுத்தியுள்ளோம். அதனால் கேள்விகளைக் கேளுங்கள்’’ என்றார் கதிரேசன்.

அப்போது கம்பீரமாகச் சிங்கம் ஒன்று எழுந்து நின்று கர்ச்சித்தது. பின்பு, ‘‘அம்மா, நான்தான் சிங்கராச வனத்தின் அரசபிரதிநிதியாகக் கலந்துகொள்ள வந்தேன். எனது பெயர் முருகானந்தம். எமது அரசர் திருக்குறளைத் தனது வேதமாகக் கொண்டவர். திருக்குறளைப்பற்றி யார் பேசினாலும், அப்பேச்சைக் கேட்கத் தவறமாட்டார். எமது வனத்தில் பொருளுக்காகவும், தமது திறமைகளை வெளிப்படுத்துவதற்காகவும் பலர் அரச சபைக்கு வந்து திருக்குறளைப்பற்றிப் பேசுவார்கள். எல்லோரும் பேசியதையே பேசுவர். நான்குநாள் மகாநாடு நடைபெற்றால் முதல்நாள் அனைவரும் வருவர். பின்பு வரமாட்டார்கள். முடிவுநாளன்று அரசரைத் திருப்திப்படுத்த வருவார்கள். அறிஞர்கள், சமயப் பிரசங்கிகள், பேராசிரியர்கள் எல்லோரும் திருக்குறளைப் பற்றிப் பிறர் பேசியதையே பேசுவர். புதுமையாக எதுவும் பேசமாட்டார்கள். திருக்குறள் ஓர் அரிய பொக்கிஷம். அள்ள அள்ள நவீனமான திரவியங்களைத் தரும் அட்சய பாத்திரம். இங்கு பேசியவர்கள் மிக அற்புதமான கருத்துக்களைக் கூறினார்கள். தமிழறிஞர், பேரறிஞர், மூதறிஞர் மட்டுமன்றி காட்டுவிநாயகர் கோவில் அர்ச்சகர்கூடப் பல புதுக் கருத்துக்களைக் கூறினார்கள். தமிழறிஞர் இறந்தகாலத்தைப்பற்றிப் பேசினார். மிகமிக அற்புதமான பேச்சு. எமது அரசர் வீடியோ மூலம் உங்களுடன் தொடர்பு கொள்ளப் காத்திருக்கிறார். எல்லோரும் அவரை நேரடியாகச் சந்தித்து அவரின் கருத்துக்களைக் கேளுங்கள். அதற்கு மகாநாட்டின் தலைவரின் அனுமதியைக் கேட்கிறேன்’’ என்று முருகானந்தம் கூற கதிரேசன் ஒப்புக் கொண்டார்’’.

‘‘பெரியதிரையில் சிங்காரசவனத்தின் அரசர் நரசிங்கன் தோன்றி, ‘‘சபையோர் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம். கடந்த ஐந்து நாட்களாகத் திரவிய வனத்தில் நடைபெற்ற திருக்குறள் மகாநாடு புதிய விடயங்கள் பலவற்றை எமக்கு எடுத்துரைத்தது. பேச்சாளர் ஒவ்வொருவரும் திருக்குறளை நல்லமுறையில் ஆய்வுசெய்து



புதிய பல கருத்துக்களை வெளியிட்டனர். பல குறள்களின் உரையில் மாற்றம் செய்வேண்டும் என்று கூறியது ஒப்புக்கொள்ள வேண்டிய முக்கிய விடயமாகும். குறிப்பாக ஐம்பத்து ஐந்தாவது குறளின் கருத்து பெண்களை மிக மோசமாக இழிவுபடுத்துகிறது. பெண்களைவிடப் பெருமையானவை எவையும் இல்லை என்று கூறிய வள்ளுவன் உலகில் வாழும் அனைத்துப் பெண்களையும், இழிவுபடுத்துவானா? இது பற்றி நான் பலரிடம் விளக்கம் கேட்டபோதும், யாரும் எனக்குச் சரியான விளக்கத்தைத் தரவில்லை''.

''எங்கும் திருக்குறள் மகாநாடுகள், ஆய்வரங்குகள், கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன. அங்கு பேசுவோர் உரையைத்தான் விரிவாகப் பேசுகின்றனர். பயன்தரக்கூடிய தகவல்களைச் சொல்வதில்லை. அதனால் எமது வனத்தில் இப்படியான மகாநாடுகள் நடத்துவதை நிறுத்திவிட்டேன். கடந்த ஐந்துநாள் மகாநாட்டையும் நான் கேட்க விரும்பவில்லை. எனது ஆலோசகர்கள் கட்டாயம் கேட்கும்படி வற்புறுத்திக் கூறியதால் கேட்டேன். மிகவும் அருமையான பயன்கள் பல கொண்ட சிறந்த மகாநாடு. எமது வனத்தில் புராணங்களைப் பற்றிப் பேசும்படி அறிஞர்கள், பேராசிரியர்கள், சொற்பொழிவாளர்களைக் கேட்டால் பெரியபுராணத்தைப் பற்றியும், கந்தபுராணத்தைப் பற்றியும் தான் பேசுவார்கள். பல புராணங்கள் இருக்க இவை இரண்டையும் பற்றிச் சகல கூட்டங்களிலும் பேசுவதாலும், பேசியவற்றையே திரும்பத் திரும்பப் பேசுவதாலும் பேச்சைக் கேட்க வருவோர் தொகை படிப்படியாகக் குறைந்து செல்கிறது''.

''இந்த நிலை உங்கள் மகாநாட்டின் மூலம் திசை திரும்பியுள்ளது. அதனால் இம் மகாநாட்டில் பேசிய அனைவரையும், அழைத்து வந்து எமது வனத்தில் பேசுங்கள். வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்து தருகிறோம். உங்கு பேசிய பேச்சுக்களை நாம் ஒளிப்பதிவு செய்து வைத்துள்ளோம். எமது பாடசாலைகளிலும், சனசமூக நிலையங்களிலும், மகளிர் அமைப்புக்களிலும் அவற்றை ஒளிபரப்ப நினைத்துள்ளோம். அப்பேச்சை நூலுருவாக்கினால் ஆயிரம் பிரதிகள் எமக்குத் தரவும். இல்லாவிட்டால் நூலுருவாக்கும் பொறுப்பை எமக்குத் தரவும். ஆவலுடன் தங்களின் பதிலை எதிர்பார்க்கின்றேன், வணக்கம்''. அரசரின் பேச்சு முடிவடைந்ததும் பத்துப்பேர் எழுந்துநின்று எல்லோரையும் வணங்கினர். ஒருவர் சொன்னார், ''நாங்கள் சிங்கராச வனத்தில் இருந்து மகாநாட்டுக்கு வந்துள்ளோம். எமது அரசரின் விருப்பத்தை பூர்த்தி செய்யுங்கள். மிகவும் அருமையான பெரும் பலன்களைத் தரும். புதுமையான மகாநாடு எமது வனத்திலிருந்து நெடுந்தூரத்தில் திரவியவனம் இருப்பதால் அதிகமானோர் வரவில்லை. அவர்கள் திருக்குறளை விரும்பிப் படிப்பவர்கள். அவர்களிற் பலர் தமது பிள்ளைகளுக்கு வள்ளுவன் என்றும் வாசுகி என்றும் பெயர் சூட்டியுள்ளனர். வள்ளுவரின் உருவப்படம் இல்லாத வீடே இல்லை. அதனால் எம் அரசரின் கோரிக்கையை இம் மகாநாட்டைப் பொறுப்பாக நின்று நடாத்தியவர்கள் ஏற்க வேண்டும் வணக்கம்''.



அடுத்து, சபையில் இருந்த ஒருவர் எழுந்து, ‘‘நான் செம்பகவனத்திலிருந்து வந்திருக்கிறேன். எனது பெயர் நாகராஜன். ஓர் எழுத்தாளன். ‘‘குறளும் வாழ்வும்’’ என்றொரு நூல் எழுதினேன். என்னிடம் போதிய வசதியில்லாமையால் அந்நூலை ஒரு வெளியீட்டு நிறுவனத்திடம் கொடுத்தேன். அவர்கள் கடந்து ஐந்து வருடங்களுக்கு முன் வெளியிட்டனர். பின் பதினைந்து முறை மறுபதிப்பிட்டு வெளியிட்டனர். கருத்தாளம் மிக்க நூலென்பதால்தான் பதினைந்து பதிப்புக்கள் வெளிவந்தன’’ என்று கூறும்போது காயத்திரிதேவி சொன்னாள், ‘‘அருமையான நூல்’’ அதற்கு நாகராஜன் சொன்னான், ‘‘பலரும் நல்ல நூல் என்கிறார்கள். ஆனால் யாரும் விமர்சிக்கவில்லை. எனது நண்பன் பெரிய அரச அதிகாரி. அவர் ஒரு நூலை வெளியிட்டார். ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டன. வெளியீட்டு விழா மிகவும் கோலாகலமாக நடந்தது. ஆனால் விற்பனை படுமோசம். நூறு பிரதிகள்கூட விற்பனையாகவில்லை. அதற்கு அரசவிருதும், பாராட்டுக்களும், பரிசுகளும் கிடைத்தன’’ என்று நாகராஜன் கூறும்போது, காயத்திரிதேவி சொன்னார், ‘‘அன்பரே, இங்கு மகாநாடு மட்டும் பற்றிப் பேச வேண்டும். இன்னொருவரை விமர்சிப்பதோ, விருதுகொடுத்தவர்களை விமர்சிக்கவோ கூடாது. நானும் பல நூல்களை எழுதியுள்ளேன். அதன் விற்பனை ஆயிரக்கணக்கு. ஆனால் விருதோ, பரிசோ, விமர்சனமோ கிட்டவில்லை.’’

‘‘இன்றும் எம்மவர் சங்ககாலப் பண்புகளையே கைக்கொள்கின்றனர். சங்க காலத்திலும் இந்த நிலைதான் இருந்தது. அரசர்களைப் புகழ்ந்தவர்கள், அவர்களது கொடைளைப் பாராட்டியவர்களுக்கு தான் பரிசும், விருதும் கொடுக்கப்பட்டன. திருக்குறளை யாரும் விமர்சிக்கவில்லை, பாராட்டவில்லை, விருதும் கொடுக்கவில்லை. ஆனால் அந்நூல் தான் காலங்கடந்தும் நின்று உலகை வாழ்விக்கிறது. அரசர்கள் அனுப்பிய தண்டிகைகளில் வென்று புகழ்ந்தவர்களின் நூல்கள் எவையும் இன்று நடைமுறையில் இல்லை. திருக்குறள், திருமந்திரம், திருவாசகம், திருவருட்பயன் போன்றசில நூல்களே காலத்தால் அழியாது நிலைத்து நிற்கின்றன. ஒரு நூலின் தரத்தை நிர்ணயிப்பது காலம். அவர் காலம் தொடக்கம் இன்றுவரை பல புலவர்கள் வாழ்ந்தனர். இவர்களில் சிலர் திருக்குறளை விமர்சித்தனர். அப்படி விமர்சித்த புலவர்களின் பெயர்களும், விமர்சனங்களும் திருக்குறள் பாமாலையில் உள்ளமையால் தான் அவர்களும் புலவர்கள் என்று எண்ணுகின்றோம். அன்று பெரும் பெரும் புலவர்களாக அரசர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எந்தப் புலவனின் ஆக்கமும் இன்று இல்லை. இராமாயணம், மகாபாரதம். கந்தபுராணம், ஏனைய புராணங்கள் யாவும் வடமொழியில் எழுதப்பட்டவை. அவை பின் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. அதுபோலப் புராணங்களும் மொழிபெயர்க்கப்பட்டன. அவையே இன்றும் நடைமுறையில் உள்ளன’’.

‘‘தமிழ்ப்புலவர்கள் பரிசுக்கும், புகழுக்கும் ஆசைப்பட்டவர்களே தவிர நல்ல ஒரு நூலை எழுதவில்லை. சங்கம் அமைத்து தமது வித்துவத்தன்மைதான் உயர்ந்தது, சிறந்தது என்று வாதிட்டுச் சண்டையிட்டே பொழுதைப் போக்கினர். நாகராஜரே, உமது



நூல் சிறந்த நூலானால் காலத்தால் அழியாது நின்று உமது பெயரைச் சொல்லும். அதனால் கவலை கொள்ளாது உமது பணியைத் தொடரும். காலம் பதில் சொல்லும்'' என்றாள் காயத்திரிதேவி.

''வேறு யாராவது கேள்வி கேட்கலாம். கேட்காவிட்டால் மகாநாட்டை இத்துடன் நிறைவு செய்யலாம். சிங்கராசவன அரசரின் வேண்டுகோளை எமது சபையைக் கூட்டித்தான் தீர்மானம் எடுத்தல் வேண்டும்'' என்று கதிரேசன் கூறியபோது, ஒருவர் எழுந்து, ''நான் திரவிய வனத்தைச் சேர்ந்தவன். எனது பெயர் சுப்பிரமணியம். தமிழறிஞர் வேலவன் எமது வனத்தைச் சேர்ந்தவர். அவர் பல அரிய நூல்களை வெளியிட்டுள்ளார். அவர் அண்மையில் ''திருமந்திரமே திருக்குறள்'' என்ற தலைப்பில் நூலொன்றை வெளியிட்டார். திருமந்திரப் பாடல்கள் மூவாயிரம். மூவாயிரம் பாடல்களில் பெரும்பான்மையான பாடல்கள் சிவபெருமானின் அரும்பெரும் செயல்களையும், பெருமைகளையும், வழிபாட்டால் பெறும் பயன்களையும் கூறிவிட்டுத்தான் பொதுக்கருத்துக்களைப் பற்றிக் கூறுகின்றன''.

''திருக்குறள் கடவுள் வாழ்த்தில் மட்டும் கடவுளை வணங்கிவிட்டு ஏனைய பாடல்களில் பொது வணக்கத்தையே கூறுகிறது. அத்துடன் திருமந்திரம் திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் பலவற்றை அதே பெயரில் குறிப்பிடுகிறது. அவ்வாறு கூறும் திருமந்திரப் பாடல்களின் பொருளும் குறளின் பொருளாகவே உள்ளது. அத்துடன் இயற்கை மாற்றங்கள், பஞ்சபூதங்களின் செயற்பாடுகள் பற்றியும் கூறுகிறது. கரு உற்பத்தியைப்பற்றியும் கூறுகிறது. இத்தகைய பெருமைமிக்க நூலைப்பற்றிய விமர்சனத்தைக் கட்டாயம் இம்மகாநாட்டின் பேச்சாளர்கள் பேசியிருக்க வேண்டும். பேசாதது பெருங்குறையாகும்'' என்றார்.

கதிரேசன் அதைக்கேட்டதும் எழுந்து சொன்னார், ''திருமந்திரம் பெரும் சமுத்திரத்தைப் போன்றது. திருக்குறளும் அத்தகையதே. இப்போது திருக்குறளைப் பற்றிப் புதிய கோணத்தில் ஆராய்ந்தோம். ''திருமந்திரமே திருக்குறள்'' என்ற நூல் வெளியிடப்பட்டு ஆறு மாதங்கள் கூடக்கழியவில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட திருக்குறளுக்கு உரையைத்தான் இன்றுவரை சொல்கின்றனர். திருமந்திரத்தையும் திருக்குறளையும் ஒப்பீடு செய்த அந்த நூலை உலகில் உள்ளோரில் சிலராவது வாசித்த பின்புதான் அதுபற்றி ஆராயவுள்ளோம். அதற்குச் சில வருடங்கள் தேவை''.

அடுத்து இன்னொருவர் எழுந்து, ''மகாநாட்டை ஏற்பாடு செய்த குழுவினர் தமிழுக்குப் பெரும் தொண்டாற்றியுள்ளனர். இதுவரை சொல்லப்படாத உரைகளும், விளக்கங்களும் கூறப்பட்டன. நான் பாக்கியவனத்தில் வாழ்பவன். எனது பெயர் பத்மநாதன். எனக்கு எழுத்துவன்மை இல்லை. ஆனால் வாசிப்பில் பெரும் நாட்டம்



கொண்டவன். திருக்குறளைப்பற்றி வெளியிடப்படும் நூல்களைத் தேடிப்பெற்றுப் படிப்பேன். பெரும்பான்மையானவர்கள் உரையைத் தழுவி முன்னோர் கூறிய கருத்துகன்களையே எழுதி வருகின்றனர். பேச்சாளர்களும் மேடைகளில் பிறர் பேசியதையே பேசி வருகின்றனர். புதியவர்களுக்கும், மாணவர்களுக்கும் அது தேவை. ஆனால் அவற்றை ஏற்கெனவே தெரிந்தவர்கள் பேச்சு நடைபெறும்போது எழுந்து சென்றுவிடுகின்றனர். நான் முன்பு திருக்குறள் பற்றிக் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் நடைபெறும் இடங்களுக்குச் செல்வேன். இப்போது செல்வதில்லை''.

''திரவிய வனத்தில் நடைபெறும் மகாநாடும் அவ்வாறு தான் நடைபெறும் என நினைத்து வரவில்லை. எனது நண்பரான குமாரசாமியும் திருக்குறளை விரும்புகின்றவன். அவன் மகாநாட்டிற்கு வந்து பேச்சுக்களைக் கேட்டபின்பு என்னை வருமாறு அழைத்தான். அவனது வேண்டுகோளுக்கு இணங்க வந்தமையால் பெரும் பயன் அடைந்தேன். உரையும், பேச்சுக்களும் வித்தியாசமாக இருந்தன. பல்கலைக்கழகங்கள் திருமந்திரம், திருக்குறள், திருவாசகம் போன்ற நூல்களுக்கு மகாநாடுகள் நடத்துகின்றன. திருமந்திரம் என்றால் திருமூலரின் கதையைத்தான் கூறுகின்றனர். திருக்குறள் என்றால் உரையை மட்டும் கூறுகின்றனர். திருவாசகம் என்றால் இனிமையைப் பற்றிப் பேசுகின்றனர். அதன் மெய்ப்பொருள் பற்றிப் பேசப்படுவதில்லை. அந்தளவிற்கு அவர்களுக்கு அறிவும் இல்லை''.

''இங்கு ஊழ் என்ற அதிகாரத்தில் உள்ள குறள்களுக்குத் தமிழறிஞர் கதைகள் கூறி விளங்கப்படுத்தினார். நான் ஒரு பட்டதாரி ஆசிரியன். எனது பாடசாலையில் இருந்து நூற்றிமூன்று மாணவர்களை அழைத்து வந்தேன். பல மாணவர்களுக்கு வர விருப்பமில்லை. காரணம் பாடசாலையில் திருக்குறளைப்பற்றிப் பேசுவோர் கவர்ச்சியாகப் பேசுவதில்லை. அவர்கள் பேசும்போது மாணவர்களும் தமக்குள் பேசுவார்கள். மிகமிக அமைதியாக இருந்து ஐந்துநாட்களும் பேச்சைக் கேட்டார்கள். பாடசாலை முடிவடைய முன்பே அதிபரிடம் வந்து மகாநாட்டிற்குச் செல்ல தம்மை அனுமதிக்கும்படி கேட்பர். அதனால் அதிபர் அவர்களைப் பன்னிரண்டு மணிக்கே அனுப்பி விடுவார். முக்கியமாக மாணவர்களைக் கவரும்படி பேசுவதுதான் சிறந்த பேச்சு''.

''தற்போது ஒரு புதிய கலாச்சாரம் தொடங்கப்பட்டுள்ளது. தமிழறிஞர்களாகிய நாம் வாசிக்கும் பெரும்பாலான நூல்கள் மொழிபெயர்ப்பு நூல்கள். தமிழில் வெளிவந்த தரமான பயன்தரும் நூல் திருக்குறள். அது உலக மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. அப்படியிருக்க பிரசங்கிகள் அதைவிட்டு விட்டு இராமாயணத்தைப் பற்றி அளவுக்கதிகமாகப் பிதற்றுகிறார்கள். இராமாயணத்தில் அப்படி என்ன இருக்கிறது? சகோதர உறவு, ஒருவனுக்கு ஒருத்தி என்ற உறவு, நட்பு என்று பேசுகின்றனர். இவற்றைத் திருக்குறளை விடவா சிறப்பாக இராமாயணம் கூறுகிறது''.



“திருக்குறளைக் கதைகளாக்க வேண்டும். தமிழறிஞர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்வந்த திருக்குறள்பாக்கள் அனைத்திற்கும், பல கதைகள் எழுதியுள்ளார். காமத்துப்பால் கதைகளை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. அவருக்கு எனது வனத்தின் சார்பாக வாழ்த்திப் பொன்னாடை போர்த்தித் தங்கச்சங்கிலி அணிவித்துக் கௌரவிக்க விரும்புர்கிறேன். அதற்கு அனுமதி தரவும்”. கதிரேசன் அனுமதிக்க பத்மநாதனும் அவருடன் வந்த மாணவர்களும் மேடைக்குச் சென்று அவரை வாழ்த்திப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

கௌரவிப்பு முடிந்ததும், தமிழறிஞர் நன்றிகூற மேடைக்கு வந்தார். அவரால் சில கணங்கள் பேசமுடியவில்லை. சபையோர் கைதட்டி ஆரவாரித்தனர். தமிழறிஞரின் உடல் நடுநடுங்கியது. தடுமாறியபடி, “சபையோர்களே, பத்மநாதன் ஆசிரியரும், அவரது மாணவர்களும் என்னைக் கௌரவித்தமைக்கு மிக்க நன்றி. “ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் தாயின் நிலையில் நான் தற்போது இருக்கிறேன். குறள்கள் அனைத்திற்கும் பல கதைகள் எழுதியுள்ளேன். சொல்லியும் உள்ளேன். என்னால் குறளுக்கு மட்டுமல்ல வேறு எந்த நூலுக்கும் கதைசொல்ல என்னால் முடியும். ஆனால் தொலைக்காட்சி நிறுவனங்கள் தமக்குத் தேவையானவர்களுக்குத்ததான் இடங்கொடுக்கின்றன. அதனால் என்னால் எதுவும் சொல்ல முடியவில்லை. இதை நான் கூறுவது ஏனென்றால் பலர் என்னைத் தொலைக்காட்சிகளில் பேசும்படி வற்புறுத்துகிறார்கள். அதனால் தான் சொன்னேன். வணக்கம்” என்று கூறி விடைபெற்றார் தமிழறிஞர்.

அடுத்து மகாநாட்டின் தலைவரான கதிரேசன் உரையாற்றினார், “எனக்குத் திருக்குறளின்மீது பெரும் பற்றுண்டு. அது தமிழில் எழுதப்பட்ட உலக வேதம். அதை உணரத் தமிழர்கள் தவறிவிட்டனர். இம்மகாநாடு இவ்வகை சிறப்புப்பெறும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. உலகெங்கும் இருந்து பல தமிழர்கள் பாராட்டியுள்ளனர். இதைப் பார்த்த சிலர் கம்பனுக்கும் விழா எடுக்க வேண்டும் என்கின்றனர். திருக்குறளோடு எந்த மொழியில் வெளியிட்ட எந்த நூலையும் ஒப்பிட முடியாது. கம்பன் எதையும் பெரிதாகக் கூறவில்லை. அப்படியிருக்க அதற்காக ஒரு விழா எடுக்கத் தேவையில்லை. ஏழை எளியவர்களில் இருந்து கோடீஸ்வரர் உட்படத் தேவலோகத்தில் வாழும் தேவர்களும் கற்கவேண்டிய நூல் திருக்குறள். இராமாயணத்தில் கடவுள் மனிதனாகப் பிறந்த கதை கூறப்படுகிறது. திருக்குறள் சாதாரண மனிதனைத் தெய்வமாக மாற்றும் வழிகளைக் கூறியுள்ளது. மனிதர்கள் தான் தெய்வமாகி உயிர்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதே வள்ளுவனது விருப்பமாகும். அதற்கான செயற்பாடுகளைச் செய்வோமே தவிரக் கடவுளை மனிதனாக்கித் துன்பப்பட வைக்க நாம் விரும்பவில்லை. அடுத்து விரைவில் நாம் பொருட்பால் மகாநாட்டையும் நடாத்துவோம். அதைப் பல வனங்களில் உள்ளோர் தத்தம் வனங்களில் நடத்துமாறு கோருகின்றனர். அதுவும் பரிசீலனையில் உள்ளது. விரைவில் முடிவை அறிவிப்போம். அடுத்துச் செயலாளர் நன்றியுரை கூறுவார்” என்று கூறிக் கதிரேசன் விடைபெற்றார்.



செயலாளரான காயத்திரிதேவி மேடைக்குவந்து, ‘‘சபையோர்களே, திருக்குறள் மகாநாடு ஒன்றை நடத்த வேண்டுமென்ற தனது விருப்பத்தைத் தமிழறிஞர் வேலவன் தான் முன்வைத்தார். அவரின் விருப்பத்தைப் பூர்த்திசெய்ய எண்ணி எமது குழு வர்த்தகரான அரவிந்தனைச் சந்தித்தபோது, அவர் மிகுந்த மகிழ்வுடன் மகாநாட்டிற்கான முழுச்செலவையும் ஏற்றுக் கொண்டார். கதிரேசன் மகாநாட்டிற்கு வருகை தருவோருக்கான உணவு, இருப்பிட வசதிகளைச் செய்து தருவதாகவும் ஒப்புக் கொண்டார். அவர்கள் இருவருக்கும் மகாநாட்டு ஏற்பாட்டுக்குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது. பிறவேலைகள் அனைத்தையும் எமது திரவியவன இளைஞர்களும், பெண்களும் செய்தனர். அவர்களுக்கும் நன்றி சொல்கிறேன். அடுத்து பேச்சாளர்களைச் சந்தித்து, ‘‘திருக்குறளைப் பலரும் பேசுகின்றனர். அவர்கள் அனைவரும் பேசியவற்றையே திரும்பத் திரும்ப பேசி வருகின்றனர். அதனால் அவர்களைப் பேச நாம் அழைக்கவில்லை. காரணம் அவர்களிற் பலர் தாம் திருக்குறளை நன்கு ஆராய்ந்து பேசி வருகிறோம். இதைத் தவிர வேறு எதுவும் இல்லை என்று மேடைகளில் பேசுகின்றனர். அதனால் புதியவர்களைச் சந்தித்து ‘‘நீங்கள் எல்லாக் கர்மங்களையும் சிலகாலம் விட்டுவிட்டு, மனதைத் திருக்குறளில் பதியவைத்து, உண்மையான பொருள் எதுவென ஆராய்ந்தறிந்து பேசுங்கள். இலக்கிய சம்பந்தமாக எந்தக் கருத்தையும் கூறும் உரிமையை நாங்கள் உங்களுக்குத் தருகிறோம். நன்கு ஆராய்ந்து பேசுங்கள்’’ என்று கட்டளை இட்டோம். அதை அவர்கள் நல்லமுறையில் நிறைவேற்றிப் பலரின் பாராட்டுக்களைப் பெற்றுவிட்டனர்’’.

‘‘புலன்களுக்கு ஆசையும், அவாவும் உண்டு. அதனால் விருப்பும் வெறுப்பும் உண்டாகும். புலன்கள்தான் ஒருவருக்குச் சத்துருக்களாகும். அவற்றிற்கு அடிமையாகாது பேச்சாளர்கள் மனந்திறந்து பேசியுள்ளனர். அதற்காக அவர்களுக்கு நன்றி சொல்கிறேன். மனம் ஆசைகளின் இருப்பிடம். அதைவிடப் பெரியபொருளோ, உயர்ந்த பொருளோ எதுவும் இல்லை. ஆசைகள் எப்பொழுதும் மனதுள் விழித்திருந்து உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கும். எனது மனம் புதியதைக் கண்டுபிடிக்கும் ஆசையைக் கொண்டிருந்தமையால் தான் என்னால் ஆராய்ந்து திட்டமிட முடிந்தது. அதற்காக முக்கியமாக கதிரேசனையும், விழாக்குழுவையும் பாராட்டுகிறேன். நன்றி கூறுகிறேன். திருக்குறள் மகாநாடு தத்துவம் மிக்கதாக இருப்பதால் மக்கள் அதற்கு விரும்பிவர மாட்டார்கள் என்று நினைத்தோம். ஆனால் மக்கள் தினமும் பெருந்திரளாகக்கூடி எம்மை உற்சாகப்படுத்தினர். ஏனைய நிகழ்வுகளில் வேடிக்கை விநோதப் பேச்சுக்களும், இரட்டை அர்த்தமுடைய பேச்சுக்களும் கூடுதலாக இருக்கும். அப்படியான பேச்சுக்கள் பேசக்கூடாதென்றும் அன்புடன் கேட்டோம். எமது பேச்சுக்களை ஏற்று அதன்படி திருக்குறளை ஆய்வுசெய்து விரிவாகப் புதிய கருத்துக்களைக்கூறிய பேச்சாளர்களுக்கும், அவற்றை மகிழ்வுடன் கேட்டு மகிழ்ந்த சபையோருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்’’ என்று வணங்கினாள் காயத்திரிதேவி.



